# அணிந்துரை

“கல்வியே கண்” என்ற பாரம்பரியத்தில் மிளிரும் யாழ்ப்பாணத்தின், நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளராக விளங்கும் திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் ஆசிரியராக, அதிபராக, கல்வி நிருவாகியாகப் பன்முகப் பரிமாணம் கண்டவர். இப் பரிமாணங்களுக்கு அப்பால் அவர் தன்னை நாடறிந்த படைப்பாளியாக இனங்காட்டிக்கொண்டவர். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், மற்றும் சிறுவர் நாடகம், சிறுவர் கதை என்றவாறு பல்துறைகளில் தனது கால்களைப் பதித்தவர். தனது எழுதுகோலின் ‘அவிழாத முடிச்சுக்கள்’ மூலம் இறுகப் பிணைத்தது. அத்துறை சார்ந்தவர்களது கவனத்தைத் தன்பால் ஈர்த்தவர்.

தனது பட்டறிவினூடாக நாம் கண்முன்னே விரிந்த நிகழ்வுகளைத் தன் கதைகளினூடாக உலாவவிட்டவர். தனது படைப்புக்கென்றே வெறும் புனைகதைகளாயன்ற யதார்த்தப் படைப்புக்களாக எம் கண்முன்னே உலா வர வழி சமைத்த படைப்பாளியாக மிளிருகின்றமை அவரது எழுதுகோலின் தனித்தன்மை.

படைப்பிலக்கியம் யதார்த்தங்களது பிரதிமையாக, இயங்கியல் தன்மையினதாகப் பரிணமிக்கும் பொழுதுதான் அவை வாழும் இலக்கியமாகும். அல்லாவிடின் அவை வெறும் புனை கதைகளாகவே அமையும். இதுவே இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் இன்றும் எம் வாழ்வியல் ஆதாரங்களாகக் கொலுவிருக்கக் காரணமாகின்றது. இந்த நிலையில் தனது படைப்புக்களில் நிதர்சனக் கருத்துக்களை முகிழ்த்து வாசகர்களைத் தன்வயம் ஈர்த்துக் கொண்ட பெருமைக்குரியவர் திரு.கே.வி. குணசேகரம் அவர்கள்.

கல்வி நிருவாகி என்ற வகையில் கல்விசார் பிரச்சினைகளை முன்வைத்துப் புனையப்பட்ட இவரது படைப்புக்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தவை, இவற்றில் உலாவரும் பாத்திரங்கள் என்றென்றும் எம்முடன் ஒன்றித்துள்ளன என்ற உணர்வே என்றும் ஏற்படுவதுண்டு. கல்விப்புலத்தில் இருப்பதால். இத்துறைசார்ந்த அனுபவங்களது சிறந்த வெளிப்பாடகவே இவரது பாத்திரப் படைப்புக்கள் அமைந்துள்ளன. கல்வியியல்சார் பிரச்சினைகளை இயல்பாகவே இனங்காட்டி வாசகர்களது மனச்சாட்சியை விழிப்புறச் செய்யும் படைப்பாளியாகவே திரு.கே.வி. குணசேகரம் காட்சி தருகின்றார். இதன் மூலம் படைப்பாக்கமானது வாழ்வியல் பற்றிய விமர்சனம் மட்டுமல்ல, சமூகத்தை விழிப்புறச் செய்யும் சாதனம் என்பதைத் தனது எண்ணக் கருத்துக்களுக்கூடாக வெளிப்படுத்துகிறார்.

இன்று விடய ஆய்வு, சம்பவக்கற்கை அணுகுமுறை, வாண்மை சார் துறைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. கல்வித்துறையைப் பொறுத்தவரை, பாடசாலைகள், திணைக்களங்கள் போன்றவற்றின் யதார்த்த நிலைகளையும், பிரச்சினைகளையும் நன்கு விளங்கிக் கொண்டவர்களாலேயே கல்வித்துறைசார்ந்த விடயங்களைப் படைப்பாக்கம் செய்ய முடியும். திரு.கே.வி. குணசேகரம் தனது பட்டறிவின் மூலம் பாடசாலைகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கிப் பல படைப்பாக்கங்களை ஆக்கியுள்ளனர். இவை

கல்வித்துறையில் முகாமைத்துவத் திறன்களை வளர்க்க விரும்பும் சகலருக்கும் பயன்தரத்தக்கதாகும். இவற்றுக்கு மேலாக அவை கல்விசார் விடயக்கற்கைக் (ஊழயளவ ளுவரனல) குரிய வழிகாட்டி நூலாக (புரனைந டீழழம) கொள்ளுமளவிற்கு அமைத்துள்ளமை அவரது எழுத்துக்களிலுள்ள தனித்தவமான பண்பு எனலாம்.

படைப்பாளி என்பவன் சமூகப் போராளி, அந்தவகையில் திரு.கே.வி. குணசேகரம் சமூக மாந்தரை வழிப்படுத்தும் சாதனமார்க்கமாகத் தனது படைப்புக்களைப் பயன்படுத்தியுள்ளார். எளிய நடை, தான் கொண்ட கருத்துக்களை, அதன் உணர்வு நிலைகளை அடையாளம் காட்டப் பேச்சு வழக்கு மொழி நடையூடாக வாசகர்களைத் தம்முடன் அக்கணத்தில் ஒன்றிணைத்துவிடுகின்றமை இவரது எழுத்துக்களின் சிறப்பம்சமாகும்.

''ஒரு நாள் எழுதுகோல் நிற்கும் இலக்கியம்
வாழ்விற்கு இட்டுச் செல்லும்''

என்பது இவரது படைப்புக்களை நோக்குமிடத்து தீர்க்க தரிசனமாகின்றது. குறுகத்தறித்த குறளுக்குப் பலரும் பல்வேறு விளக்கவுரை பதவுரை, தெளிவுரை,ஆய்வுரை, என்றவாறெல்லாம் எழுதியுள்ளனர். சிறுகதைகள் கூட வெளிவந்துள்ளன. ஆனால் திருக்குறளில் 1330 குறள்களுக்கும் கதை எழுதுவதென்பது வரலாற்றில் இடம் பெற வேண்டியதொன்று.

''இதனை இதனால் இவன் முடிப்பானென்றாய் இது
அதனை அவன் கண் விடல்''

என்ற குறள் வரிக்கேற்ப திரு.கே.வி. குணசேகரம் இதனை நிறைவேற்றியுள்ளார். அதுவும் ஒவ்வொரு குறளுக்கும் பொருள் நயம் சிந்தாமல், சிதறாமல், எழுதுவதென்பது இலகுவானதல்ல. இந்நிலையில் இருவரிக் கவிதைக்கு, இனிதாய், மூன்று பக்க, இனிய கதைகளை எளிய நடையில் எழுதிய வகையில் திருக்குறள் பற்றிய விமர்சனத்தின் பொழுதெல்லாம் திரு.கே.வி. குணசேகரத்தின் திருக்குறள் கதைகளும் பேசப்படும். இது இவன் தந்தை (ஈழத்துப் படைப்பாளிகள்) என்நோற்றான் என்றவாறு புகழ் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. இது ஈழத்து படைப்பாளிகளுக்கு இவர் வழங்கும் உயர் கௌரவமாகும்.

யோ. ரவீந்திரன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாண வலயம் ,
ஸ்ரீலங்கா.

# என்னுரை

நாவலரது கல்விப்பணியை நல்ல முறையில் செய்து முடித்துள்ளேன். அதன்பின் நாவலரது இலக்கிய, சமயப்பணியைகளைத் தொடர்கின்றேன். அதற்கு மக்களின் ஆதரவு என்றும் வேண்டும்.

திருக்குறள் கதைகள் என்ற எனது நூலுக்கு ஆதரவு பெருகிவருவதை எண்ண மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தழிழகத்திலும் இலங்கையிலும் உள்ள அறிஞர்கள் பலா் திருக்குறள் கதைகளைப் போற்றியுள்ளனா். அதற்குச் சான்றாக மணிமேகலைப் பிரசுரத்தின் பதிப்புரை விளங்குகிறது. பேராசிரியா் கலாநிதி அ. சண்முகதாஸ், பணிப்பாளா், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம். பேராசிரியா் நா. சுப்பிரமணியன், பேராசிரியா், எஸ். சிவலிங்கராசா, தமிழ்துறைத் தலைவா் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் பிரிவுத் தலைவா் டாக்டா் மா. வேதநாதன், கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி, திரு. பா. தனபாலன் போன்றோரும், ஈழத்தின் தலைசிறந்த நாவலாசிரியா் செங்கை ஆழியான் அவா்களும் தந்த அணிந்துரைகள் சாட்சியாக மிளிர்கின்றன.

இக்கதைகளை நல்ல முறையில் கணினியில் பதிவு செய்து தந்த கந்தா்மடம் யாழ்ப்பாணத்தைச் சோ்ந்த ராஜ் கொம்பியூட்டா் பிறிண்டிங் சென்ரருக்கும், கணனி உதவி புரிந்த யாழ்ப்பாண வலய ஆசிரியா் வள நிலையக் கருத்திட்ட முகாமைத்துவ உதவியாளா் திரு.கி. துஷ்யந்தனுக்கும் இதை உலகெங்கும் பெரு விழாக்களில் வெளியீடு செய்து வரும் மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும், , அதன் முகாமைப்பணிப்பாளா் திரு. ரவி தமிழ்வாணன் அவா்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்.
கோட்டக்கல்விப் பணிப்பாளா்,
நல்லூா்,
ஸ்ரீலங்கா.

# காலம்

சாய்வு நாற்காலியில் படுத்திருந்தபடி பரமேஸ்வரன் தணிகாசலம் கொடுத்த புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். மாலை நேரத் தென்றல் இதமாக வீசியது. இது நாள் வரையும் பணம் தேடுவதல்லாது வேறு எதைப் பற்றியும் நினைக்காத பரமேஸ்வரன் வத்சல்யனின் திருமணத்திற்குப் பின்பு தணிகாசலத்தின் வீட்டுக்கு அடிக்கடி வருவதால் ஓய்வு நேரம் அவருக்கு நிறைய இருந்தது. காலையிலும் மாலையிலும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்று வணங்குவார். பின் சுவாமியாரோடு உரையாடுவார். முன்பு இயந்திரமாக வேலை செய்த அவரது இதயம் தற்பொழுது இயல்பாக இயங்கிக் கொண்டிருந்தது. முன்பில்லாத நிம்மதியும் மகிழ்ச்சியும் மனதில் குடி கொண்டிருந்தமையால் அவருக்குப் புது வாழ்வு வாழ்வது போல இருந்தது. பகல் உணவை உண்டு விட்டு மனைவியுடன் கதைத்துக் கொண்டிருந்தவர் அப்படியே நித்திரையாகி விட்டார். விழித்தெழுந்த போது மனைவி சூடான தேநீருடன் நின்றாள். இதற்கு முன்பு இவற்றை அனுபவித்திராமையால், அவருக்கு அந்த வாழ்வு இனித்தது. இனிமேல் பொறுப்புக்களைக் குறைக்க வேண்டுமென்று நினைத்தார்.

மேசையில் இருந்த புத்தகம் காற்றில் பட படத்தது. அதை எடுத்துப் பிரித்தார்; ‘‘தணிகாசலம் அவற்றையெல்லாம் வாசித்ததால் தான் நிறைவான மனிதனாக இருக்கிறார். நான் இரவு பகலாக உழைத்தேன், தணிகாசலம் இரவு பகலாகச் சேவை செய்து ஒழுக்கமான மனிதனாக வாழ்ந்தார். நான் பல கோடி ரூபாக்களைத் தேடினாலும் இன்றுள்ள நிலைமையில் அவர் தானே பணக்காரன் பெரியமனிதன்’’ என்று நினைக்க அவருக்குச் சிரிப்பு வந்தது. மகிழ்வுடன் புன்னகைத்தபடி புத்தகத்தை எடுத்து வாசித்தார்.

மருத நாட்டின் அரசனான ராஜசிங்கனுக்கு அந்நாட்டு முதலமைச்சர் அருள்நந்திதேவர் சொன்னார்; ‘‘அரசே சிங்கபுரி மன்னன் மகேந்திரன் எமது நாட்டின் மீது படையெடுத்து வந்து எம்மை வென்றதால் நாம் பல ஆண்டுகளாக அவனுக்குத் திறை செலுத்தி வருகிறோம். பல சிறிய நாடுகளை அவன் வென்றமையால் அந்நாட்டுத் திரவியங்கள் முழுவதையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளான். நாமெல்லோருஞ் சேர்ந்தாலும் அவனை வெற்றி கொள்ள முடியாது. அவ்வளவு பலசாலி அவன் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் அவனுக்கு மிகப் பெரியதொரு பலவீனமுண்டு. அழகிய பெண்களைக் கண்டால் சரணாகதியடைந்து விடுவான். ஏற்கனவே அவனுக்குப் பத்து மனைவியர் உள்ளனர். சில மாதங்களுக்கு முன்னர் கடம்ப நாட்டுச் சிற்றரசனான தேவதீசனின் சேனாதிபதியின் மகள் அகல்யாவைக் கண்டு அவளின் அழகில் மயங்கி விட்டான். சேனாதிபதி தனது மகளைத் திருமணம் செய்வதானால் பட்டத்துரிமை தர வேண்டும் என்கிறான். இதனால் பட்டத்தரசிக்கும் மகேந்திரனுக்கும் பிரச்சினை. மகேந்திரன் பட்டத்தரசியைத் துன்புறுத்துகிறான். இதனால் பட்டத்தரசியின் தந்தையான சூரபுரியரசன் மிகவும் மனம் வருந்துகிறான். மகேந்திரன் இரவில் மாறு வேடம் பூண்டு சென்று அகல்யாவைச் சந்தித்து வருகிறான். இந்த விடயம் அரன்மனையில் உள்ளவர்களுக்கே தெரியாது’’ என்று நிறுத்திய முதலமைச்சர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

‘‘அரசே பலசாலிகளான நூறு வீரர்களுடன் நாம் நாளை இரவு எமது நாட்டின் எல்லையில் மறைந்திருப்போம். எமது நாட்டின் துவாரகா ஆற்றோரமாகத் தான் மகேந்திரன் கடம்ப நாட்டிற்குச் சென்று வருகிறான். அவனைச் சிறைப்பிடித்தால்

சிங்கபுரியைக் கைப்பற்றி விடலாம். எமக்கு உதவப் பல சிற்றரசர்கள் காத்திருக்கிறார்கள்''.

ராஜசிங்கனுக்கு அதைக் கேட்க வியர்த்தது. மகேந்திரன் பலசாலி; சிறந்தவீரன் தற்செயலாகத் திட்டம் பிழைத்தால் கூண்டோடு அழிய வேண்டும்.

''பயப்படத் தேவையில்லை மன்னா, காக்கை தன்னை விட வலிமையுடைய கோட்டானைப் பகல் வேளையில் வென்று விடும். அதே போல பகைவனை வெல்ல நினைக்கும் அரசனும் காலத்தை அறிந்து செயற்படல் வேண்டும். தைரியமாக எந்த ஒரு காரியத்தைத் தொடங்கினாலும் அதில் வெற்றி பெறலாம். எமது குறிக்கோளை அடைய வேண்டுமானால் முயற்சி செய்தல் வேண்டும். கடும் முயற்சி செய்தல் வேண்டும். எப்பொழுதும் எம்மை நாம் தாழ்த்திக் கொள்ளல் கூடாது. வெற்றி என்பது மீண்டும் மீண்டும் செய்யப்படும் முயற்சியால் உருவாவது. கோளைகளாக வாழ்வதை விட போரிட்டு தோல்வியில் இறப்பது மேல். அச்சம் தான் மரணம். அஞ்சியஞ்சி நித்தம் சாவதை விடத் துணிவுடன் போரிட்டு அழிவது மேல். தோல்வியடைந்து கோளைகளாக எலும்பும் தசையும் பொருந்திய இந்தக் கேவலமான உடலைச் சுமந்து கொண்டு திரிவதிலும் பார்க்க வீரமுடன் போரிட்டு சாவது மேலானது'' என்றார் அருள்நந்திதேவர்.

ராஜசிங்கன் சம்மதித்தான். அன்று இரவு தேர்ந்தெடுத்த படை வீரர்களுடன் ராஜசிங்கன் துவாரகா நதிக்கரையில் மறைந்திருந்தான். நடுச்சாமம் கழியும் வேளை குதிரையில் இருவர் வந்தனர். ராஜசிங்கனின் படைவீரர் அவர்களை வழிமறித்தனர்.

மறுநாள் சிங்கபுரி மன்னன் மகேந்திரன் மருதநாட்டு மன்னனான ராஜசிங்கனால் கைது செய்யப்பட்டான் என்ற செய்தி நகர் முழுவதும் பரவியது. பொழுது புலர முன் சிங்கபுரிக்குள் மருத நாட்டுப் படைகளும் நுழைந்தன.

ராஜசிங்கன் சிங்கபுரிக்கு அரசனாக முடி சூட்டப்பட்டான்.

அக்கதையை வாசித்த பரமேஸ்வரன் புத்தகத்தை மூடி வைத்து விட்டுப் பெருமூச்சு விட்டார். எல்லாம் காலம் தான். காலத்தை அனுசரித்து நடப்பவனால் தான் உலகத்தில் வாழ முடிகிறது. மற்றவர்களால் வாழ முடியாது என்று நினைத்தார்.

**481. பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**

காக்கை தன்னை விட வலிமையுள்ள கோட்டானைப் பகலில் வென்று விடும்; அது போல் பகைவனை வெல்லக் கருதும் அரசனுக்கும் அதற்கேற்ற காலம் வரவேண்டும்.

## கயிறு

சாய்வு நாற்காலியில் பரமேஸ்வரன் படுத்திருந்தார். முன்பு வாசித்த கதையின் சாரம் அவரது மனதில் தோன்றிக் கொண்டிருந்தது. ஆண்கள் எவ்வளவு தான் நிதானமாக நடந்து கொண்டாலும் சில பெண்கள் ஆண்களைக் கரைத்து

அவர்களைத் தம்வசமாக்கி விடுவார்கள். மகேந்திரனுக்குப் பத்து மனைவியர் இருந்தும் பதினொராவது பெண்ணின் மீதும் ஆசை வந்ததென்றால் அவனது பெண் பித்தை நினைத்துப் பார்த்தார் பரமேஸ்வரன். அகல்யாவின் அழகைப் பற்றி மகேந்திரன் கூறிய வார்த்தைகளை மீண்டும் ஒரு முறை எடுத்து வாசித்துப் பார்த்தார்;

''கட்டழகாய் என்முன்னே
தோன்றும் சிற்பம்
கனியமுதாய் நெஞ்சினுள்
இனிக்கும் அமிர்தம்
சொல்லாமல் மனதுக்குள்
புகுந்த சொர்க்கம்
கலைகள் பல உருவாகும்
கலை அரங்கம்''

''உண்மையில் மகேந்திரன் மகாரசிகன்தான். எனினும் அகல்யாவின் தந்தை பத்து மனைவிகளையுடைய ஓர் அரசனை ஏன் தனது மகளுக்குத் திருமணஞ் செய்ய விரும்பினான். மனிதர்களுக்குப் பெரும் புதையல் கிடைத்தாலும் இன்னு மொன்று கிடைக்காதா என ஏங்குபவர்களே பலர். அவர்களது ஆசையை அடக்கவே முடியாது. நானும் அப்படித்தான் வாழ்ந்து விட்டேன். இனியாவது நல்லபடி வாழவேண்டும்'' என்று நினைத்தார் பரமேஸ்வரன்.

அகல்யாவின் உடையலங்காரத்தைப் பற்றி மகேந்திரன் கூறிய பகுதியை வாசித்துப் பார்த்தார்; ''அன்பே நான் உன்னை முதன் முதலாக முத்தமிழ் விழாவில் தான் கண்டு அதிசயித்தேன். அன்று நீ அலங்காரத்தேவதையாக நின்றாய். உனது அழகிய அங்கங்கள் யாவும் அழகிய பட்டினால் மூடப்பட்டிருந்தன. ஆனால் இப்பொழுது நீ என்னைச் சந்திக்க வரும் போது ஆடைகளைக் குறைத்தே வருகிறாய். மூடப்படாத கைகள் பளபளக்கின்றன. சமவெளியைப் போலத் தெரியும் உனது முதுகின் பொலிவு என்னைக் கொல்கிறது..'' வாசிப்பதை நிறுத்தி விட்டு அமிர்தினியை நினைத்துப் பார்த்தார் பரமேஸ்வரன். அவள் தன்னுடன் கலகலப்பாகப் பழகுமுன் நீளக்கையுடைய முதுகு தெரியாத சட்டையையே அணிந்திருந்தாள். அவருடன் நெருக்கமாகப் பழகத் தொடங்கிய பின்பே அவள் அரை குறையான ஆடைகளை அணியத் தொடங்கினாள். அவளை நினைக்க அவருக்கு அருவருப்பாக இருந்தது. இப்பொழுது அவள் இன்னொரு நிறுவனத்தில் உயர் பதவி பெற அந் நிறுவனமேலாளருடன் சுற்றித்திரிகிறாள்.

அப்பொழுது வாசலில் மோட்டார் வண்டியொன்று வந்து நின்றது. அதிலிருந்து கணநாதன் இறங்கி உள்ளே வந்தார்; ''வாருங்கோ... வாருங்கோ..'' என்று அன்பொழுக அவரை வரவேற்றார் பரமேஸ்வரன்.

ஆசனத்தில் அமர்ந்த கணநாதன் சொன்னார்; ''இந்த ஊரில் எனது கிளை நிறுவனமொன்றை நிறுவலாமென்றிருக்கிறேன் அதற்காகத் தான் வந்தேன்''.

''அப்படியா மிகவும் மகிழ்ச்சி. இன்று இரவு எம்முடன் தங்கியிருந்து விட்டு விடிந்ததும் செல்லுங்கள்'' என்றார் பரமேஸ்வரன்.

“அந்த நோக்கத்துடன் தான் வந்தேன். வந்த வேலை முடிய இன்னும் நாலைந்து தினங்கள் செல்லும். அது வரை இங்கே தான் தங்கப் போகிறேன்” என்றார் கணநாதன்.

“மிக மிக மகிழ்ச்சி. எனக் கென்றால் இந்த ஊர் மிகவும் பிடித்து விட்டது. மகனுடனும் மருமகளுடனும் இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. உழைக்கும் காலத்திலில்லாத மகிழ்வும் நிம்மதியும் இங்கிருக்கிறது. அது தான் எனக்குத் தேவை. எனது தொழில் நிறுவனத்தை விற்க அல்லது குத்தகைக்குக் கொடுக்க நினைக்கிறேன். நான் ஆரம்பிக்கும் போது உதவிய நீங்கள் அதை வாங்கலாம்”.

கணநாதன் அதிர்ந்து போனார்; “உனக்கென்ன விசரா... நல்ல ஆதாயம் தரும் நிறுவனம் அது..” என்று கணநாதன் சொல்லிக் கொண்டிருக்கும் போது பரமேஸ்வரன் குறுக்கிட்டார்; “உண்மைதான். பணத்தைத் தேட வேண்டு மென்ற எனது எண்ணம் இப்போது அழிந்து விட்டது. நான் பணம் தேடும் இயந்திரமாக வாழ்ந்து களைத்துவிட்டேன். எனது நிறுவனங்களை ஒழுங்காக நிர்வகிக்கக் கூடிய மனோ பலம் இப்பொழுது என்னிடமில்லை. எனக்கிருப்பது ஒரே ஒரு மகன். அவன் வைத்தியர். மருமகளும் வைத்தியர். என்னிடமுள்ள சொத்து பத்துப் பேர் வேலை செய்யாமலிருந்து சாப்பிட்டாலும் பல தலை முறை. சென்றாலும் அழியாது. எனவே நீ எனது நிறுவனத்தைப் பொறுப் பேற்று நடத்து மாதா மாதம் இருபத்தைந்து இலட்ச ரூபா தா” என்றார்.

கணநாதன் நினைத்துப் பார்த்தார்; “இந்த ஊரிற் கிளையைத் தொடங்குவதை விடப் பரமேஸ்வரனது நிறுவனத்தைப் பொறுப்பேற்று நடத்துவது சுலபமானது. அத்துடன் இலாபமானது”.

“என்ன யோசிக்கிறியள்?”

“உங்கடை விருப்பம். நான் பொறுப்பேற்கிறேன். நீங்கள் கேட்ட தொகையை மாதா மாதம் தருகிறேன்” என்றார் கணநாதன்.

“எனது மனம் இப்பொழுது அமைதியையும் மகிழ்ச்சியையுமே விரும்புகிறது. சில காலம் ஆன்மீக வாழ்வு வாழ விரும்புகிறேன். இந்த ஊருக்கு வந்த பின்பு தான் எனக்கு அந்த எண்ணம் வந்தது. தணிகாசலத்தைப் பார்க்க எனக்குப் பொறாமையாக உள்ளது. சுவாமியாரை நினைக்க எனக்கு ஆச்சரியமாக உள்ளது. அவர்களைப் போலில்லாவிட்டாலும் அந்த வாழ்க்கை வாழ வேண்டு மென்ற உணர்வு சதா எனது மனதை அரித்துக் கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் நான் தொழில் செய்தால் நட்டமடைவேன். ஒருவன் காலத்திற்கேற்றபடி நடந்து கொள்வதென்பது செல்வம் அவனை விட்டு நீங்காமல் கட்டிக் காக்கும் கயிறு போன்றது நான் எனது காலத்தைக் கருத்திற் கொண்டு நிறுவனத்தை விட்டு விலக நினைக்கிறேன், நீ உனது காலத்தைக் கருத்திற் கொண்டு எனது நிறுவனப் பொறுப்பை ஏர். அதனால் இருவருக்கும் நன்மை கிடைக்கும். அதனால் எம்மிடமுள்ள செல்வம் வெளியே செல்லாது. காலத்திற்கேற்ற நடவடிக்கையானது எமது செல்வத்தைக் கட்டிக் காக்கும் கயிற்றைப் போன்றது” என்றார் பரமேஸ்வரன். கணநாதன் எதுவும் பேசாது மகிழ்வுடன் சிரித்தார்.

**482. பருவத்தோடு ஒட்ட ஒழுகல், திருவினைத்**

**தீராமை ஆர்க்கும் கயிறு.**

ஒருவன் காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல் என்பது, செல்வம் அவனை விட்டு நீங்காமல் கட்டிக் காக்கும் கயிறு போன்றது.

# எதுவும் இல்லை

தணிகாசலத்தினது வீட்டு மேல்மாடியில் இருந்த ஓர் அறையுள் இருந்த வசதி மிக்க பஞ்சனை மெத்தையில் புரண்டு புரண்டு படுத்தார் கணநாதன். நள்ளிரவு கழிந்தும் அவருக்கு நித்திரை வரவில்லை. கட்டிலால் எழுந்து யன்னலூடாக வெளியே பார்த்தார். எல்லா இடமும் இருண்டிருந்தது. வாசலில் பிரகாசமாக எரிந்த மின் குமிழின் வெளிச்சத்தில் முன்புறமிருந்த பூந்தோட்டம் தெரிந்தது. பகலில் பார்த்த போது பூத்துக் குலுங்கிய பல நிற ரோஜாப் பூக்கள் காற்றில் மெல்ல அசைந்தன. தணிகாசலத்தினது நாய் முற்றத்தில் நின்றது. வானத்தைப் பார்த்தார் நட்சத்திரங்கள் வானமெங்கும் மின்னின.

‘‘ஏன் பரமேஸ்வரன் தனது தொழில் நிறுவனத்தை விட விரும்புகிறார்’’ பலவாறு யோசித்தும் அவரால் அதற்கு விடைகாண முடியவில்லை. ‘‘பரமேஸ்வரன் இளமைக் காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டவர். பெரும் முயற்சி செய்து தான் முன்னேறி இந்த நிலைக்கு வந்துள்ளார். கடும் உழைப்பாளியான அவர் திடீரென முடிவெடுத்தாரென்றால் ஏதோ ஒரு முக்கிய விஷயம் இருக்க வேண்டும். முன்பென்றால் தருமகாரியங்களுக்கு ஈயாத அவர் இப்பொழுது தருமகாரியங்களுக்குதவப் போவதாகச் சொல்வதில் உண்மை இருக்குமா...?’’ அவரது மனம் அமைதி கொள்ளாமல் தவித்தது.

‘‘தொழிற்சாலையில் ஏதாவது பிரச்சினைகள் இருக்குமோ? இரண்டு தினங்களுக்கு முன்பு தான் பரமேஸ்வரனது தொழில் முகாமையாளரான சிவராமனைச் சந்தித்தேன். அவர் அங்கு ஏதாவது நடந்தால் கட்டாயம் எனக்குச் சொல்லியிருப்பார். தொழிலாளர்கள் பிரச்சினைப் பட்ட போது அதை எனக்குச் சொல்லி பரமேஸ்வரனுக்குப் புத்திமதிகள் சொல்லி தொழிலாளருடன் சமாதானமாகப் போகும் படி கூறியவர். அத்துடன் அமிர்தினியுடன் பரமேஸ்வரன் தொடர்பு கொண்டதை அவர் தான் கூறினார். அவர் கூறிய போது நான் நம்பவில்லை. அவரை ஏசினேன். ‘‘சிவா, பரமேஸ்வரனை எனக்கு ஐம்பது வருடங்களாகத் தெரியும். அவர் காசில் ஆசைப்படுவாரே தவிர வேறு எவற்றிலும் ஆசைப்பட மாட்டார். நீ தவறாக நினைக்கிறாய்...’’.

‘‘இல்லை ஐயா, அமிர்தினி மோசமானவள். குமராக இருக்கும் போதே பலருடன் தொடர்பு கொண்டவள். அவளுக்கு ஆண்களுடன் கதைப்பது அல்வா சாப்பிடுவது மாதிரி. அவள் நல்ல அழகி. அவளின் அழகில் மயங்கித்தான் கணேசன் அவளைத் திருமணஞ் செய்தான். உங்களுக்கு அவளைப் பற்றித் தெரியாது. சரியான ஆட்டக்காரி’’.

பெருமூச்சு விட்டார் கணநாதன். அவருக்கு நித்திரை வரவில்லை. அதனால் கைத் தொலை பேசியை எடுத்து சிவராமனுடன் தொடர்பு கொண்டார். வெகு நேரம் மணி அடித்தது. கணநாதன் தொடர்பைத் துண்டிக்க நினைத்த போது தொலைபேசி கதைத்தது; ‘‘நான் சிவராமன் கதைக்கிறேன் நீங்கள்’’

“சிவா, நான் கணநாதன்” என்ற கணநாதன் பரமேஸ்வரன் கூறியவற்றைச் சொன்னார்.

“ஒரு வாரமாக பரமேஸ்வரன் ஐயா அப்படித்தான் சொல்கிறார். ஏனோ தெரியவில்லை தத்துவம் பேசுகிறார். அவர் விற்பதானால் நீங்கள் வாங்குவதை நான் விரும்புகிறேன். நீதியான நல்ல மனிதன் நீங்கள். அத்துடன் நீங்கள் அத் தொழில் நிறுவனத்தைப் பொறுப்பேற்றால் நாம் பழகிய ஒருவரின் முகாமைத்துவத்துள் வருவோம். அத்துடன் புதிய இயந்திர சாதனங்களையும் வாங்கிப் பொருத்தி நிறுவனத்தை நவீன மயப்படுத்தலாம். தொழிலில் உங்களுக்கு நல்ல காலமிருப்பதால் தான் அந்தப் பெரும் நிறுவனத்தை உங்களுக்கு அவர் நீங்கள் கேட்காமலே தருகிறார். சம்மதம் தெரிவியுங்கள்” என்றார் சிவராமன்.

யாழ்ப்பாணத்தில் தனது நிறுவனத்தின் கிளையை நிறுவ நினைத்த கணநாதன், அந்த யோசனையைக் கைவிட்டு விட்டு பரமேஸ்வரனின் நிறுவனத்தைப் பொறுப்பேற்று நவீன மயப்படுத்தினார். ஆறு மாத காலத்துள் அந் நிறுவனம் பெரு வளர்ச்சி கண்டது.

அன்று சிவராமன் கணநாதனை அலுவலகத்தில் சந்தித்தார்; “காலந்தான் ஒருவனை முன்னேற்றுகிறது; நல்லவழிப்படுத்துகிறது. காலத்தை நீங்கள் நல்ல வழியில் பயன்படுத்தினீர்கள். அத்துடன் செயலைச் செய்வதற்கான கருவிகளையும் பாவித்தீர்கள். செயலை முடிப்பதற்கேற்ற கருவிகளோடு காலத்தையும் அறிந்து செயற்படுபவனுக்கு வெற்றி கொள்வதற்கு இயலாதது எதுவும் இல்லை என்று நிருபித்து விட்டீர்கள்”

கணநாதன் சிரித்தார்; “பரமேஸ்வரன் இந்தப் பெரிய நிறுவனத்தை என்னிடம் கையளிக்கப் போவதாகச் சொன்ன போது பல்வேறுபட்ட சிந்தனைகள் எனது மனதில் புகுந்து வாட்டின. உண்மையில் அவர் மன அமைதியுடன் வாழவே விரும்புகிறார். மனிதனுக்கு மன அமைதியைத் தருவது சமய வாழ்க்கை. இப்பொழுது அவர் சமய வாழ்வு வாழ்கிறார். குடும்பத்துடன் இன்பமாக வாழ்வதாகச் சொல்கிறார். முன்பை விட மகிழ்வுடன் வாழ்வதாகச் சொல்கிறார். எல்லாம் காலம் தான். காலத்தை அறிந்து வாழ்கிறார்” என்றார் கணநாதன்.

**483. அருவினை என்ப உளவோ கருவியான்**
**காலம் அறிந்து செயின்?**

செயலை முடிப்பதற்கேற்ற கருவிகளுடன் காலத்தையும் அறிந்து செயற்படுபவனுக்குச் செய்ய முடியாத அரிய செயல் என்று எதுவும் இல்லை.

## கைகூடும்

சுனாமிப் பேரலையால் கணவனையும் இரண்டு பிள்ளைகளையும் பெற்றோர்களையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகி நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் தங்கியிருப்பவள் சிவகாமி. அவளுக்கு ஆறு பிள்ளைகள். இரண்டு ஆணபிள்ளைகள் சுனாமியால் இறந்து விட்டனர். மிகுதியான நான்கு

பெண்பிள்ளைகளுடனும் மனநோயாளியாகி விட்ட அவளது சகோதரன் நந்த குமாரனுடனும் தங்கியிருந்தாள்.

பிள்ளைகள் பத்து வயதிற்குட்பட்டவர்கள். கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். கோயில் மடத்திலிருந்து அவர்களை அழைத்து வந்து ஒரு வீடு கட்டி அதில் குடியேற்ற வேண்டும் என்று கஜேந்திரன் விரும்பினான். அதற்கான பல முயற்சிகளில் அவன் ஈடுபட்டான். அவனது நண்பனது குடும்பம் கனடா நாட்டில் உள்ளது. அவர்களது காணியொன்று கோயிலுக்கு அருகில் இருந்தது. அந்தக் காணிக்குள் சிவகாமிக்கு வீடு கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தான் கஜேந்திரன். முதலில் தனது நண்பனுக்கு அவர்களது நிலையை விளக்கிக் கடிதம் எழுதி, அவர்களை அக்காணியில் ஒரு சிறிய வீடு அமைத்து வாழ அனுமதிக்கும் படி எழுதினான். அவனது நண்பன் அக்காணியை சிவகாமிக்கு எழுதிக் கொடுக்கச் சம்மதித்தான்.

அக்காணியின் ஒரு பகுதியில் சிறிய ஒரு வீடுஅமைத்து சிவகாமியையும் பிள்ளைகளையும் அங்கே குடியேற்றினான். எனினும் அவர்களுக்கு வசதியான ஒரு கல்வீடு கட்டிக் கொடுக்க வேண்டு மென்ற எண்ணம் அவனது மனதில் இருந்தது.

அன்று கஜேந்திரன் தணிகாசலத்தின் வீட்டுக்குப் பரமேஸ்வரனைச் சந்திப்பதற்காகச் சென்றான். பரமேஸ்வரன் வேட்டி அணிந்து நெற்றியில் வீபூதி தரித்துச் சந்தணப் பொட்டும் இட்டிருந்தார். முன்பென்றால் அவர் வீபூதி பூசுவதே இல்லை.

''வாரும் தம்பி'' அன்புடன் வரவேற்றார் பரமேஸ்வரன்.

ஆசனத்தில் அமர்ந்த அவன்; ''நான் உங்களிடம் ஓர் உதவி பெறவே வந்தேன்'' என்றான்.

பரமேஸ்வரன் சிரித்தார். பின்பு; ''சொல்லும்'' என்றார்.

''ஐயா, சிவகாமியைப் பற்றி உங்களுக்குத் தெரியும். கோயில் மடத்திலிருந்த அவளைத் தற்பொழுது எனது நண்பனான சுரேசினுடைய காணியில் சிறியதொரு கொட்டில் அமைத்துத் தங்க வைத்துள்ளோம். தினமும் மக்கள் கொடுக்கும் பொருட்களைக் கொண்டு அவர்கள் வாழ்கிறார்கள். சில வேளைகளில் அவர்களுக்குப் பொருட்கள் கிடைக்காமல் விடுவதும் உண்டு. அதனால் அவர்களுக்கு சில காலத்திற்கு பண உதவி செய்தல் வேண்டும்''.

''அப்படியா...? மாதம் நீர் எவ்வளவு கொடுக்க வேண்டுமென எதிர் பார்க்கிறீர்''

கஜேந்திரன் சிரித்தான். ''அவர்களது தேவைக்கு அதிக பணம் தேவை. உங்களுக்கு வசதிப் பட்டதைக் கொடுங்கள்'' என்றான் கஜேந்திரன்.

''மனிதர்கள் பெருந்தியாகங்கள் செய்வதன் மூலம் தான் உலகம் வாழ்கிறது. உன்னதமான மனிதர்களின் சேவையின் மூலம் வரும் நன்மைகளை மனித குலம் மகிழ்வுடன் அனுபவிக்கிறது. இந்த உண்மையை நான் இதுவரை காலமும் உணரவில்லை. ஒவ்வொரு வரும் தனது நலத்திற்காக உழைப்பது

பாராட்டுக்குரியதல்ல. நலிந்த மக்களின் நன்மைக்காக உழைப்பதே பாராட்டுக்குரியது. அப்படி உழைப்பவன் கடவுளுக்குச் சமமானவனாவான். நீ இளம் வயதில் அதை உணர்ந்துள்ளாய். நான் அறுபத்தைந்து வயதைக் கடந்தும் உணரவில்லை'' என்று கவலைப்பட்ட பரமேஸ்வரன் சிறிது நேரங் கழித்துச் சொன்னார்; ''நான் மாதாமாதம் ஐயாயிரம் ரூபா தருகிறேன். அத்துடன் அப்பிள்ளைகளின் கல்விச் செலவையும் மருத்துவச் செலவையும் ஏற்கிறேன்'' என்றார்.

இதை கஜேந்திரன் எதிர்பார்க்கவில்லை. மகிழ்வுடன் சிரித்தான். அப்போது அங்கே வந்த தணிகாசலம் சொன்னார்; ''நான் என்னைப் போல ஒரு சமூகத் தொண்டனை உருவாக்க நினைத்தேன். பல காலமாக அது முடியவில்லை. இப்பொழுது தான் அது கைகூடியுள்ளது. முயற்சியுடையவனுக்கு காலமும் இடமும் உதவி செய்யும். காலத்தையும் இடத்தையும் அறிந்து செயற்படுவோர் உலகத்தைத் தன் எண்ணப்படி நடத்திச் செல்வர். உனது தன்மையை நீ உணரவில்லை. சுவாமியார் அதை அறிந்து தான் உன்னைத் தலைவராகத் தெரிவு செய்தார். சேவை செய்பவன் தான் பெரியவன். அவன் தான் மனிதன். அவன் தான் உலகில் உயிர் வாழ்பவன்'' தணிகாசலத்தின் குரல் கரகரத்தது. கண்கள் மகிழ்வால் கலங்கின.

**484. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின்.**

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து செயற்பட்டால், உலகமே வேண்டு மென நினைத்தாலும் அதுவும் கைகூடும்.

## எதிர்பார்ப்பர்

அன்று கஜேந்திரனது நண்பனான சுரேஸ் கனடா நாட்டிலிருந்து ஊருக்கு வந்திருந்தான். அவன் கஜேந்திரனுடன் சிவகாமி இருக்கும் வீட்டுக்கு வந்தான். சிவகாமி இருவரையும் அன்புடன் வரவேற்றாள். சுரேஸ் அவர்களுக்கு ஏராளமான உடு பிடைவைகளும் பணமும் கொடுத்தான். அப்பொழுது எட்டு மாத வயதுள்ள சிவகாமியின் மகள் ரூபினி தத்தித் தத்தி நடந்து வந்தாள். அவளை உற்றுப் பார்த்தான் சுரேஸ். நான்கு வருடங்களுக்கு முன்பு இறந்து போன தனது மகளின் நினைவு அவனுக்கு வந்தது. அவளைச் சுரேஸ் தூக்கினான். அக் குழந்தை மிரளாது அவனுடன் சேர்ந்து கொண்டது.

சுரேஸ் ரூபினியைத் தூக்கித்தான் மடியில் வைத்திருந்தான். நான்கு வருடங்களுக்கு முன்பு இதே வயதுள்ள அவனது குழந்தை நோய் காரணமாக இறந்தது. ஏற்கனவே இருதயம் பலவீனமாக இருந்த அவனது மனைவி கல்பனா மீண்டும் ஒரு முறை கர்ப்பம் தரித்தால் மரணமடைந்து விடுவாளென வைத்தியர்கள் எச்சரித்திருந்தனர். சுரேஸ் கல்பனாவின் மாமன் மகன். சிறுவயதில் சுரேசின் தாயார் இறக்கும் போது தனது சகோதரனான நாகராசாவுக்குச் சொன்னாள்; ''அண்ணை எனக் கென்றால் எனது கணவரில் நம்பிக்கையில்லை. அவர் நானிறந்ததும் இன்னொரு பெண்ணைத் திருமணஞ் செய்து கொண்டு போய் விடுவார். எனது மகனை அவள் கொடுமைப்படுத்துவாள். அதனால் நீயே அவனை வளர்த்து அவனுக்கு உனது மகளைத் திருமணஞ் செய்து கொடு''. சகோதரி கூறிய படி நாகராசா சுரேசைச் சகல வசதிகளுடனும் வளர்த்தார். அவரது மகளை அவன் விரும்பித்தான் திருமணஞ் செய்தான்.

ரூபினி அவனது கையைப் பிடித்துத் தனது வாய்க்குள் வைத்தாள். அவனது மகளும் அப்படித் தான் அவனது கையை பிடித்து தனது வாய்க்குள் வைத்துச் சூப்புவாள்.

‘‘கஜன்’’ சுரேஸ் அழைத்தான்.

‘‘என்ன?’’

‘‘இந்தப் பிள்ளையை நான் கொண்டு சென்று வளர்க்க விரும்புகிறேன். கேட்டுச் சொல்’’

அதை எதிர் பாராத கஜேந்திரன் சற்றுத் திகைத்து விட்டான். எனினும் எதுவும் பேசாது சிலகணங்கள் நின்றான்.

‘‘கஜன், எனக்கு இனிக் குழந்தைகள் பிறக்கமாட்டாது என்று உனக்குத் தெரியும். எனது மனைவியை என்னால் வெறுக்க முடியாது. அந்தளவில் நான் அந்தக் குடும்பத்திற்குக் கடமைப்பட்டுள்ளேன். இந்தக் குழந்தையைப் பார்த்ததும் எனக்கு இறந்த எனது குழந்தையின் ஞாபகம் வந்து விட்டது’’.

‘‘சரி சரி அதைப் பற்றி பிறகு பேசுவம். இப்ப குழந்தையை விட்டு விட்டு வா’’ என்றான் கஜேந்திரன்.

அன்று மாலை தனது காதலியான வித்தியாவைக் கடற்கரையில் சந்தித்து சுரேசினுடைய விருப்பத்தைப் பற்றிச் சொன்னான் கஜேந்திரன்; ‘‘பாவம் வித்தி சிவகாமி. அவர்களுக்கு நல்ல வாழ்வு அமைத்துக் கொடுக்க வேண்டும். அமைத்துக் கொடுப்பேன் என்ற நம்பிக்கை எனது மனதில் உண்டு. இப்பொழுது ரூபினியை எப்படியும் வாங்கிச் சுரேசுக்குக் கொடுக்க வேண்டும். சுரேஸ் மிகவும் நல்லவன். ரூபினியைக் கனடாவுக்குக் கொண்டு சென்று விட்டானென்றால் அப்பிள்ளையின் பிரச்சினை தீர்ந்து விடும்’’ அவன் உற்சாகமாகக் கதைத்துக் கொண்டிருக்கும் போது வித்தியா சற்றுக் கோபத்துடன் குறுக்கிட்டாள்; ‘‘எப்போதாவது இருந்திட்டு ஒரு நாள் தான் சந்திக்கிறோம். அதுவும் பயந்து பயந்து அம்மாவுக்கு ஆயிரஞ் சாட்டுக்கள் சொல்லித்தான் வெழுக்கிட முடிகிறது. கஷ்டப்பட்டு நான் உங்களைச் சந்திக்க வந்தால் நீங்கள் ஆற்ரையோ கதைகளைக் கதைக்கிறியள்’’.

‘‘கோபிக்கிறீரா....? பாவம் சிவகாமியும் பிள்ளைகளும்’’.

‘‘சுவாமியார் பொறுப்பைத் தூக்கி உங்களது தலையிலை வைத்து விட்டார். இனி நான் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. உங்களுக்கு பொதுத் தொண்டு தான் முக்கியம்’’ சினந்தாள் வித்தியா.

‘‘வித்தி’’ அன்பொழுக அழைத்தான் கஜேந்திரன். வித்தியா அவனது முகத்தைப் பார்த்தாள். அதில் காதல் பெருகி நின்றது. அவளால் அவனது கண்களைப் பார்க்க முடியவில்லை; ‘‘வித்தி உம்மை எனக்குத் திருமணம் செய்து தரமாட்டார்கள். நீர் வேறொருவனுக்கு நிட்சயிக்கப்பட்டவள். அத்துடன் பெரும் பணக்காரி. உம்மை அடைவதும், சிவகாமிக்கு நல்ல வீடு கட்டி நல்ல

வாழ்வு வாழ வைப்பதும் தான் எனது நோக்கம். அதை இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் அடைந்தே தீருவன்'' உணர்ச்சி வசப்பட்டான் கஜேந்திரன்.

''இந்த உலகத்தை அடைய நினைப்பவர்கள், அதைப் பற்றி எண்ணிக் கலக்கம் கொள்ளாமல் தக்க காலத்தை எதிர்பார்த்திருப்பார்கள். எனக்குத் திருமணம் நிட்சயிக்கு முன் என்னை அழைத்துச் சென்றால் சரி. அதே போல அலட்டிக் கொண்டு திரியாமல் காலம் வரும் போது சிவகாமிக்குப் படிப்படியாக உதவிகளைச் செய்யுங்கள்'' என்றார் வித்தியா.

**485. காலம் கருதி இருப்பர், கலங்காது**
**ஞாலம் கருது பவர்.**

உலகத்தை வெல்ல நினைப்பவர்கள் எதைப் பற்றியும் எண்ணிக் கவலைப்படாது அதற்கு ஏற்ற காலத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பர்.

## சண்டையிடும் கடா

''தம்பீ, நீர் எமக்கு எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறீர். கோயில் மடத்தில் இருந்த எமக்கு வசதியான ஒரு வீடும் மலகூடமும் கிணறும் அமைத்துத் தந்துள்ளீர். உடுபிடைவைகளும் மாதாந்தம் செலவுக்குப் பணமும் பெற்றுத் தந்துள்ளீர். அதைவிடப் பிள்ளைகள் படிப்பதற்கு உதவி செய்கிறீர். இந்த நிலையில் நீர் கேட்பதை மறுக்க எனக்கு வருத்தமாக உள்ளது தம்பீ..'' என்று கூறி விட்டு விம்மி விம்மி அழுதாள் சிவகாமி.

''அக்கா, இந்த உலகம் கோளைகளுக்காக உருவாக்கப்பட்டதல்ல. பிரச்சினைகள், கஷ்டங்கள், துன்பங்கள் பலவும் வரத்தான் செய்யும். அதிலிருந்து யாரும் தப்பியோட முடியாது. சுனாமியால் உலகெங்கிலுமுள்ள இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அதையே நினைத்துக் கொண்டிருந்தால் நிம்மதியாக வாழ முடியாது. வாழ்க்கை என்பது போர்க்களம். எதிர் நீச்சல் போட்டுத்தான் வாழ வேண்டும்''.

''உண்மைதான் தம்பீ. நான் முன்பு கஷ்டப்பட்டேன். இவரைத் திருமணம் செய்த பின்பு நான் கஷ்டப்படவில்லை. எனது கணவர் என்னைப் பூப் போலப் பாதுகாத்தார். அவர் சொல்வார்; ''சிவகாமி எனது ஆறு பிள்ளைகளையும் நல்ல முறையில் கற்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டும்'' விம்மி விம்மி அழுதார் சிவகாமி. கஜேந்திரன் எதுவும் பேசவில்லை. அழும் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''தம்பீ, அவர் இருந்ததால் இப்படி ஒரு நிலை வந்திராது. ரூபினியை நான் சுரேசுக்குக் கொடுக்க மாட்டன். ரூபினி தனது தாயைப் போலவே இருக்கிறாள் என்று எனது கணவர் அடிக்கடி சொல்லி அவளைத் தூக்கிக் கொஞ்சுவார். அவர் அவளில் தான் அதிக பாசம் வைத்திருந்தார்''. விம்மினாள் சிவகாமி.

‘‘நான் உங்கள் மீதுள்ள பாசத்தினால் தான் சொன்னேன். கல்பனாவும் பெற்றோரும் இனத்தவர்களும் சுரேசை ஒரு பிள்ளையைத் தத்தெடுக்கும் படி வற்புறுத்திக் கூறியும் சம்மதிக்காத அவன் ரூபினியைக் கண்டதும் விரும்பி விட்டான். அவளது தந்தை இவ்வூரில் தான் இருக்கிறார். அவருக்கு ஏழு பிள்ளைகள். சரியான கஷ்டம். மூத்தவள் திருமணஞ் செய்து மூன்று பிள்ளைகள் புரிசன் விட்டு விட்டுச் சென்று இன்னொரு திருமணஞ் செய்து விட்டான். அதிலொரு பிள்ளையைத் தத்தெடுக்கும்படி தகப்பனும் இனத்தவர்களும் கூறிய போதும் அவன் சம்மதிக்கவில்லை. அவன் எனது நண்பன். என்னை விட நல்லவன். நாளைக்கு நாட்டில் என்னென்ன நடக்குமோ தெரியாது. முன்பு போல இடம் பெயர்வு வந்தால் நாமெல்லாம் எங்கெங்கு செல்வோமோ தெரியாது. அதனால் தான் சொன்னேன். அவனிடம் ரூபினியைக் கொடுத்தால் அவளது வாழ்வு மட்டுமல்ல உங்களது வாழ்வும் சிறக்கும். இனி உங்கள் விருப்பம்’’ என்று கூறி விட்டுச் சென்றான் கஜேந்திரன்.

வாரம் ஒன்று கழிந்தது. சுரேஸ் தினமும் வந்து கஜேந்திரனுடன் ரூபினியைத் தத்தெடுப்பது தொடர்பாகக் கதைப்பான். கஜேந்திரன் அதைப் பற்றிக் கதையாது வேறு கதைகள் கதைப்பான். அதிலிருந்து சுரேஸ், சிவகாமி ரூபினியைத் தர மாட்டாள் என்று நினைத்தான்.

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் சுவாமியாரின் அருகில் இருந்தான் கஜேந்திரன். அவனுக்கு அருகே நகுலனும் இருந்தான். சுவாமியார் கண்மூடி நிஷ்டையில் இருந்தார்.

‘‘நான் ஒரு வாரகாலமாகச் சிவகாமி அக்காவின் வீட்டுக்குச் சென்றாலும் ரூபினியின் விஷயத்தைப் பேசுவதில்லை. அவாவாக விரும்பித் தரட்டும். இல்லா விட்டால் அவாவாகவே பேச்சைத் தொடங்கட்டும் என்று நினைத்திருக்கிறேன். சுரேசும் அடிக்கடி வந்து கரைச்சல் கொடுக்கிறான்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘மகனே நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காகத் தான் எதையும் செய்வார்கள். மற்றவர்களின் நன்மைக்காக அவர்கள் தன்னைத் தானே தியாகஞ் செய்து விடுவார்கள். ஒவ்வொருவரும் பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் தான் நன்மை பெற முடியும். உனது பேச்சைக் கேட்டேன். ஊக்க முடையவன் அடங்கியிருப்பது, சண்டையிடும் ஆட்டுக்கடா தாக்குவதற்குரிய வேகத்தைப் பெறுவதற்காகப் பின்னாலே செல்வதைப் போன்றது. நீ செய்தது சரி, உனது நடத்தையால் சிவகாமியின் மனம் மாறும்’’ என்றார் சுவாமியார்.

சுவாமியாரிடம் விடை பெற்றுக் கொண்டு கஜேந்திரனும் நகுலனும் சிவகாமியின் வீட்டுக்குச் சென்றனர். வழியில் சுரேஸ் வந்தான். மூவரையும் கண்ட சிவகாமி மகிழ்வுடன் அவர்களை வரவேற்றாள். பின் ரூபினியைத் தூக்கி வந்து கஜேந்திரனிடங் கொடுத்து விட்டுச் சொன்னாள்; ‘‘இன்று உறவென்று சொல்ல எனக்கு நீங்கள் ஒருவர் தான் இருக்கிறீர்கள். இனி ரூபினி உங்கள் பொறுப்பு’’.

கஜேந்திரன் திகைத்துப் போனான். ரூபினியின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு அவளைச் சுரேசிடம் கொடுத்தான். அவன் மகிழ்ச்சிப் பெருக்கோடு அவளை வாங்கினான். குதூகலத்துடன் சுரேசின் அணைப்புக்குள் சிக்கிய ரூபினி அவனது கையைப் பிடித்து விரலைத் தனது வாய்க்குள் வைத்தாள்.

**486. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேரும் தகைத்து.**

ஊக்கம் உடையவன் தகுந்த காலத்தை எதிர் பார்த்து அடங்கியிருப்பது, சண்டை செய்யும் ஆட்டுக் கடா தன் பகையை மூர்க்கத்துடன் தாக்குவதற்குப் பின்னே செல்வதைப் போன்றது.

# அடக்கி வைத்திருப்பார்கள்

விக்னேஸ்வரமூர்த்தி அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அன்று சனிக்கிழமை. தணிகாசலம் அவருடன் முக்கிய விஷயங்கள் கதைப்பதானால் பாடசாலை இல்லாத நாட்களிலேயே அங்கு வருவார். தணிகாசலத்தைக் கண்டதும் கோவைகளை மூடி வைத்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

"மயில்வாகனத்திடம் கனகசபாபதி தனது தோட்டக் காணி உறுதியைக் கொடுத்து ஓர் இலட்ச ரூபா வாங்கினவனாம். ஒரு வருடத்தில் மீளாவிட்டால் அறுதி என்று எழுதினவனாம். இப்ப இரண்டு வரிசமாச்சுது. மயில்வாகனம் நெடுகக் காணியை மீழும் படி கனகசபாபதிக்குக் கரைச்சல் குடுத்தபடி. கனகசபாபதி இப்ப மீளக் காசில்லை. பெறுமதியான காணி தானே உன்ரை பெயரிலை எழுது என்று சொல்லி விட்டான். மயில்வாகனம் அந்தக் காணியை ஆட்சிப் படுத்தப் போய் உழுதிருக்கிறான். கனகரத்தினமும் சிவகாமியும் அது தங்கடை காணி யெண்டு மறிச்சுப் போட்டினை" என்று கூறி நிறுத்தினார் தணிகாசலம்.

"அது சிங்கப்பூராற்ரை காணி. இவன் பார்க்கிறான் என்று தான் நான் அறிந்தனான்" என்றார் விக்னேஸ்வர மூர்த்தி.

"அது தான் உண்மை. இவனது வெள்ளை வேட்டி சால்வையை நம்பி காணிக்காரர் இவனைப் பராமரிக்கும் படி குடுக்க, இவன் கள்ள உறுதி முடித்துப் போட்டான். அது கனகரத்தினத்தின்ரை தாய் மாமன்ரை காணி. இதையறியாமல் மயில்வாகனம் காசு கொடுத்திட்டுது. பிறகு தான் மயில்வாகனத்திற்கு விபரம் தெரிய வந்தது." என்றார் தணிகாசலம்.

"அவனைத் திருத்தேலாது. பாவம் ஆதித்தியன். போன கிழமையும் என்னைச் சந்தித்துச் சொல்லிக் கவலைப்பட்டவர். அதை விட தில்லை நடராசா பாவம். பூரணி நல்ல பிள்ளை என்பதால் தான் தில்லை நடராசா அந்தக் கலியாணத்தைச் செய்து வைத்தவர். இப்ப கவலைப்படுறார்" என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

"எனக்குப் பல விஷயங்களிலை தொல்லை கொடுத்தவன். எதிரிகளையும் ஆபத்தான நேரங்களில் காப்பாற்ற வேணும் என்று நமது பழந் தமிழ் நூல்கள் கூறுகின்றன. அதனால் தான் பல முறை அவனுக்கு நான் உதவிகள் செய்தேன். அவ்வுதவிகளை அவன் மதிக்காமல் எந்நாளும் எனக்குத் தொந்தரவுகள் செய்து கொண்டேயிருந்தான். எனக்கு அவன் செய்த செயல்களை நினைத்தால் அவனைக் கொல்ல வேண்டு மென்ற நினைவு தான் வரும். எனினும் கோபத்தை

அடக்கிக் கொண்டு இவ்வளவு காலமும் வாழ்ந்தனான். இனி அவனுக்கு உதவி செய்ய மாட்டன். அவன் அனுபவிக்க வேண்டும்''. கோபமாகச் சொன்னார் தணிகாசலம்.

''என்ன தணி... என்றுமில்லாதவாறு இன்று கோபப்படுகிறாய்'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''மயில்வாகனம் நேற்றுக் காவல் துறைக்குச் சென்றுயில் போய் முறைப்பாடு செய்திருககிறான். சிவகாமியும் கனகரத்தினமும் காவல்துறை அதிகாரிக்கு காணியின் வரலாற்றைச் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறையினர் கனகசபாபதியைக் கைது செய்து நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்கள். நீதவான் அவரை ஒரு மாத காலத்திற்கு சிறையில் வைக்கும் படி கூறியுள்ளார். ஆதித்தியன் கனகசபாபதியின் வீட்டுக்கு வரவேயில்லை. இனத்தவை நண்பர்கள் யாபேரும் கனகசபாபதியைப் பற்றி விசாரிக்கக் கூட வரவில்லை. அதனால் சகுந்தலை ஆதித்தியனிடம் சென்றுள்ளாள். அவர்; ''அம்மா நான் உங்கள் வீட்டில் பெண் எடுத்தனான். என்ரை மானம் மரியாதை யெல்லாம் போயிட்டுது. இனிமேல் உங்களை உறவென்று சொல்லவே எனக்கு விருப்பமில்லை'' என்று கூறினாராம். சகுந்தலை நேற்றிரவு வீட்டுக்கு வந்து சொல்லி அழுதாள். எனக்கும் கனகசபாபதி மேலை சரியான கோபமிருக்கு. இவ்வளவு காலமும் பொறுத்திருந்தனான். இது நல்ல சந்தர்ப்பம். சிறையில் இருந்தால் தான் அவன் திருந்துவன்'' என்றார் தணிகாசலம்.

''நீங்கள் கோபத்தை மறந்து சென்று விடுவீகளென்று நினைத்தேன்.... இவர்கள் திருந்த வேணும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''இவனுக்குப் பாடம் படிப்பிப்பதற்குக் காலம் வரு மென்று காத்திருந்தனான். இப்பத் தான் வந்திருக்கு. இந்த முறை நான் உதவி செய்ய மாட்டன். நீங்களும் உதவி செய்யக் கூடாது. எங்கே நீங்கள் சென்று விடுவீர்களோ என்று நினைத்துத் தான் வந்தேன்'' என்றார் தணிகாசலம்.

''நான் கடைசி வரையும் போக மாட்டன். இவனைத் திருத்த வேண்டும் மென்ற நினைவு பல காலமாக எனது மனதில் இருக்கிறது. நன்றாக அனுபவிக்கட்டும அப்பத்தான் திருந்துவான்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

**487. பொள்ளென ஆங்கே புறம்வேரார், காலம்பார்த்து**
**உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.**

அறிவுடையவர்கள், பகைவர்கள் தமக்குத் தீங்கு செய்யும் போது கோபங் கொள்ள மாட்டார்கள்; பகவரை வெல்லும் காலம் பார்த்து அது வரை சினத்தை அடக்கி வைத்திருப்பார்கள்.

## பொறுத்திருப்பர்

மகா கணபதி ஆலய இரவுப் பூசை முடிந்ததும் அரச மரநிழலில் அமர்ந்திருந்த சுவாமியாரைச் சுற்றிப் பலர் இருந்தனர். சுவாமியார் சொன்னார்; ''நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் உள்ள வித்தியாசம் யாதெனின்

நல்லவர்கள் தமது மனதைத் தீய வழியில் செல்ல விடாது அடக்கித் தம்வசப்படுத்தி வைத்திருப்பர். தீயவர்கள் மனம் போன போக்கில் சென்று கரும மாற்றுவர். தீயவர்களின் சிந்தனையின் முழுச் சக்தியும் வீணாக்கப்படுகிறது. நல்லவற்றை நினையாது என்றும் தீயவற்றையே நினைப்பார்கள். நினைவு தான் செயல். எனவே தாம் நினைப்பவற்றைச் செயலாக்குவார்கள். இதனால் சமூகத்திற்குத் தீமை ஏற்பட, அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். தீய எண்ணங்களை உடையவர்களிடமிருந்து நல்ல செயல்களை எப்படி எதிர்பார்க்க முடியும். நீ செயற்கரிய செயல்களைச் செய்ய நினைத்தால் இரும்பைப் போன்ற மனஉறுதி உன்னிடம் இருந்தாக வேண்டும். மலைகளைத் தூக்கி உனது தோள்களில் வைக்கக் கூடிய வலிமை உனக்கு இருக்க வேண்டும்''. கண்களை மூடினார் சுவாமியார்.

''கனகசபாபதியைப் பிணையெடுக்க யாரும் முன்வரவில்லையாம். சகுந்தலா காலமை எனது வீட்டுக்கு வந்தாள். பார்க்கப் பாவமாக இருக்கிறது'' என்றார் வேலாயுதபிள்ளை.

''பாவம், பழி என்பவற்றைப் பார்த்துப் பார்த்துத்தான் நாம் கனகசபாபதியைக் கெடுத்தோம். அவனை யாரோ அடித்த போது நான் தான் சென்று அவனது தம்பியையும் குடும்பத்தினரையும் ஒற்றுமையாக்கினேன். வருத்தம் சுகப்பட்டதும் தம்பியாருடன் தேவையில்லாமல் பிரச்சினைப் பட்டான். அதனால் இப்போ அவனும் அங்கு செல்வதில்லை. தில்லை நடராசாவுக்கு எத்தனை தீங்குகள் செய்தவன். அதை யெல்லாம் மறந்து தில்லை நடராசா அவனது மகளுக்குத் திருமணம் செய்து வைத்தான். அதற்கும் நான் தான் உதவி செய்தேன். அதை விட அருள் நேசனது வீட்டைக் கொழுத்து வித்தவன். கோயில் குரங்குகளைப் பிடித்து பங்கு போட்டு விற்கக் காரணமாக இருந்தவன். அவனுக்கு யாரும் உதவி செய்யக் கூடாது. பிணையெடுப்பாரில்லாமல் அவன் சிறைக்குள் துன்பப்படல் வேண்டும்'' உணர்ச்சி வசப்பட்டார் தணிகாசலம்.

''நானென்ன உதவி செய்யப் போவதாகச் சொன்னனானே?. காலமை மனிசிக்காரி வந்து அழுதது. பார்க்கப் பாவமாய் இருக்கெண்டு தானே சொன்னனான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''ஒவ்வொருவரும் இப்போது இருக்கும் நிலைக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர். நாம் எப்படியெல்லாம் இருக்க வேண்டு மென்று எண்ணுகின்றோமோ அப்படியே எமது வாழ்க்கையையும் அமைத்துக் கொள்கிறோம். சிந்தனை தான் செயல்கள் செயல்கள் தான் வாழ்வு. நல்லவற்றைச் செய்தால் நன்மையும், தீயவற்றைச் செய்தால் தீமையும் வருமென்று குழந்தைக்குக் கூடத் தெரியும். அப்படியிருக்க ஆசிரியராக இருந்து அதிபராக பதவி உயர்வு பெற்ற கனகசபாபதிக்கு இதொன்றும் தெரியாதா? நாம் இப்படி இருப்பதற்கு முன் வினைகளின் பயன் தான் காரணம் என்று சொல்லித் தப்பி விட முடியாது'' உணர்ச்சி வசப்பட்டதால் தடுமாறினார் தணிகாசலம்.

''நீ ஏனப்பா உணர்ச்சி வசப்படுகின்றாய். ஏற்கனவே வருத்த மென்று படுத்தெழும்பிறாய். நாளைக்கு உன்னைப் பார்க்க நாங்கள் வரவேண்டியிருக்கும்'' பெரிதாகச் சிரித்தார் வேலாயுதபிள்ளை.

விக்னேஸ்வரமூர்த்தி உதடுகள் பிரியாது சிரித்தார். பின் சொனன்ார்; ‘‘தணி வீணாக ஏன் உணர்ச்சி வசப்படுகின்றாய். இவ்வளவு காலமும் பொறுத்ததைப் போல இனியும் பொறு’’.

‘‘இனிப் பொறுக்க மாட்டேன்’’ என்றார் தணிகாசலம்.

சுவாமியார் சிரித்தார்; ‘‘அறிவுள்ளவர்கள் பகைவர்கள் தீங்கு செய்யும் போது உடனே தம் சினத்தை வெளிப்படுத்த மாட்டார்கள். பகைவரை வெல்ல ஏற்ற காலம் வரும் வரை சினத்தை அடக்கி காத்திருப்பர். இப்பொழுது தணிகாசலத்திற்குக் கோபம் வந்து விட்டது. மகனே ஒருவன் எப்போதும் தீமைகளைச் செய்து கொண்டிருக்க முடியாது. தீயவர்களுக்கு அழிவு காலம் வரும் போது அவர்களது தலை தானே கீழே விழும். இது இயற்கையின் நியதி. மனிதன் தனது விதியைத்தானே அமைத்துக் கொள்கிறேன். நன்மையும் தீமையும் இன்பமும் துன்பமும் அவனவனது செயல்களாலேயே உண்டாகின்றன. இப்பொழுது கனகசபாபதி செய்த வினைகளெல்லாம் ஒன்று சேர்ந்து அவனைத் தாக்கத் தொடங்கி விட்டன. இனிமேல் யார் கை கொடுத்தாலும் அவனால் தப்ப முடியாது. எனவே உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்காதீர்கள்’’ என்றார் சுவாமியார்.

மெல்லச் சல சலத்த அரசமிலைகளின் ஒலி பயங்கரமாக ஒலித்தது.

**488. செறுநரைக் காணின் சுமக்க ;இறுவரை
காணின் கிழக்காம் தலை.**

பகைவரைக் கண்டால் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்; அப்பகைவருக்கு அழிவு காலம் வரும்போது அவர்களது தலை கீழே விழும்.

## *பயன்படுத்துவர்*

அன்று வெள்ளிக்கிழமை. நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய இரவுப்பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பரமேஸ்வரனும் காமாட்சியம்மாளும் மகா கணபதியை வணங்கினர். பூசை முடிவடைந்ததும் ஏராளமான இளைஞர்களும் யுவதிகளும் கோயிலை விட்டு வெளியே வந்தனர்.

அவர்களைக் கண்ட பரமேஸ்வரன் தணிகாசலத்தைக் கேட்டார்; ‘‘இந்தக் கிராமத்தில் ஏராளமான இளைஞர்களும் யுவதிகளும் இருக்கிறார்கள். இவர்கள் என்ன செய்கிறார்கள்?’’.

தணிகாசலம் அவரை வியப்புடன் பார்த்தார் பின்பு; ‘‘இதென்ன பட்டணமா...? கிராமம், படித்து விட்டு வீட்டில் இருக்கிறார்கள். அரசாங்கம் வேலை கொடுக்கும் வரை வீட்டில் தான் இருப்பபார்கள்...’’

‘‘அப்படியா?’’ அதிசயப்பட்டார் பரமேஸ்வரன்; ‘‘இவர்களுக்கு வேலை வாய்பளிக்க ஒரு தொழிற்சாலை தொடங்கினால் நல்லது’’

“இங்கே என்ன தொழிற்சாலை தொடங்குவது. யார் தொடங்கப் போகிறார்கள்? கொழும்பைப் போல இங்கு பெரும் பெரும் பணக்காரர்களா இருக்கிறார்கள்” என்று அலுப்புடன் சொன்னார் தணிகாசலம்.

“நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது இங்கே தொழில் தொடங்குவதில் அப்படி என்ன பிரச்சினைகள் இருக்கின்றன. தேவையானளவு நிலம் இருக்கிறது. தொழிலாளர்கள் இருக்கிறார்கள். முதலிடுவதற்குத் தான் ஆட்கள் தேவை. இப்பொழுது பரமேஸ்வரன் ஐயா கொழும்புத் தொழிலை விட்டு விட்டு இங்கே நிரந்தரமாகத் தங்கி விட்டார். அவர் ஒரு தொழிலைத் தொடங்கினால் என்ன?” என்று கேட்டான் கஜேந்திரன்.

பரமேஸ்வரன் யோசித்தார். அதைக் கண்ட கஜேந்திரன் சொன்னான்; “நீங்கள் தான் இந்த ஆலோசனையைச் சொன்னீர்கள். நீங்கள் தான் தொடங்க வேண்டும்.”

“இப்போது எனக்கு அந்த மன நிலை இல்லை. இந்த ஊரில் ஒரு தொழிற்சாலையை நிறுவவென வந்த கணநாதனிடம் நான் எனது நிறுவனத்தை ஒப்படைத்தால் அவன் இங்கு தொழிற்சாலையைத் தொடங்கும் யோசனையைக் கைவிட்டு விட்டான். அவனைக் கேட்டுப் பார்ப்போம்” என்றார் பரமேஸ்வரன்.

வாரம் ஒன்று கழிந்தது. பரமேஸ்வரனின் அழைப்பின்பேரில் கணநாதன் அவ்வூருக்கு வந்திருந்தார். அன்று தணிகாசலத்தின் வீட்டில் விக்னேஸ்வரமூர்த்தி வேலாயுதபிள்ளை தணிகாசலம், கஜேந்திரன் போன்ற பல பிரமுகர்கள் கூடியிருந்தனர்.

கணநாதன் அக்கிராமத்தில் தொழிற்சாலை யொன்றை நிறுவுவதாக ஒப்புக் கொண்டார். சில தினங்களில் தொழிற்சாலை கட்டுவதற்கான ஆரம்ப முயற்சிகளைக் கணநாதன் மேற்கொண்டார்.

இரண்டு மாதங்களின் பின் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அக்கிராமத்திலும் அயற்கிராமத்திலுமுள்ள நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்புக் கிடைத்தது.

மத சம்பரதாயப் படி அன்று சுவாமியார் அத் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்; “ஒருவன் வாழ்க்கையில் வெற்றியடைய விரும்பினால், மனம், இருதயம், ஆன்மா மூன்றையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். இம்மூன்றையும் செய்யும் செயலுக்கு அர்ப்பணிப்புச் செய்தல் வேண்டும். நமது மனம் தான் நமக்கு வெற்றியைத் தேடித் தருகிறது. அதே மனம் தான் எம்மை மகிழ்வுடன் வாழ வைக்கிறது; உலகை அழகாக்குகிறது. எனவே முழுமனதுடன் உற்சாகமாகத் தொழிலைச் செய்யுங்கள். தற்செயலாகப் பரமேஸ்வரன் நமது ஆலயத்தில் தொழுது கொண்டிருந்த ஏராளமான இளைஞர்களையும் யுவதிகளையும் கண்டு அவர்களது காலம் வீணாகச் செல்கிறதே யெனக் கவலைப்பட்டார். அந்தக் கவலையைச் சரி வரப் புரிந்து கொண்ட நம் மூர்ப் பெரியவர்கள் அவரைக் கொண்டு இத் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்துள்ளனர். கிடைப்பதற்கரிய காலம் வாய்த்ததால், அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு செய்வதற்கரிய செயல்களைச் செய்து முடித்தல் வேண்டும். இந்த வகையில் தணிகாசலமும் கஜேந்திரனும் மற்றும் பெரியவர்களும் வாய்ப்பை நல்லமுறையில் பயன்படுத்தியுள்ளனர். இதை நீங்கள்

சரியாகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கிராமத்து இளைஞர்களின் ஆற்றல் வீணாக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் உருவான இத் தொழிற்சாலையைக் காத்துக் கொள்வது தொழிலாளர்களாகிய உங்களின் கடமை''.

மக்கள் எல்லோரும் மௌனமாக நின்று பிரார்த்தித்தனர்.

**489. எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கு அரிய செயல்.**

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்பை நல்ல முறையில் பயன்படுத்திச் செய்வதற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

# *கொக்கு*

ஆரூரன் பண்டிதரிடம் மிகவும் அடக்கமாக இருந்து கல்வி கற்று வந்தான். அவன் இப்பொழுது குடிப்பதில்லை வீண்வார்த்தைகள் பேசுவதில்லை. யாருடனும் அளவுக்கதிகமாகக் கதைப்பதில்லை. முன்பென்றால் சுவாமியாருடனுங் கண்டபடி கதைப்பான். இதனால் அவனைக் கண்டதும் மக்கள் விலகிச் செல்வார்கள். சிலர் மறைந்து விடுவார்கள். அவர்கள் அவனைத் தெரியாதது போல நடந்து கொண்டாலும் அவன் அவர்களை வழிமறித்து தேவையில்லாத கதைகளை யெல்லாம் கதைப்பான். அதனால் சிலர் இவனுடன் பிரச்சனைகளுக்குப் போவதும் உண்டு.

தற்பொழுது ஆரூரன் யாருடனும் கதைப்பதில்லை. யாராவது கதை கேட்டால் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்வான். அல்லது சிரித்து விட்டுச் செல்வான். இது ஊரவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்த போதும் அவனுடன் யாரும் அதைப்பற்றிக் கதைக்க முன் வந்ததில்லை.

ஆரூரன் தனது செயல்கள் யாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு பண்டிதரிடம் கல்வி கற்று வந்தான். ஒரு வருட காலம் அவன் மிகவும் சிரத்தையுடன் கல்வி கற்றதால் இலக்கியத்திலும் சமயத்திலும் ஓரளவு பாண்டித்தியம் பெற்று விட்டான். இப்பொழுது ஆரூரன் பேசும் சமயக் கூட்டங்களுக்கு மக்கள் வரத் தொடங்கினர். வேறு கிராமங்களில் உள்ள கோயில் களுக்குகெல்லாஞ் சென்று அவன் சொற்பொழிவாற்றிய போதும் ஊரில் உள்ள பெரிய கோயிலான நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் சொற்பொழிவாற்ற முடியவில்லையே என்ற கவலை அவனை வாட்டிக் கொண்டிருந்தது. அதை ஒரு நாள் பண்டிதருக்குச் சொன்னான்.

''ஆரூரா, நீ முன்பு அறியாமையால் கிராமத்தவர்களுடனும் முக்கியமாகச் சுவாமியாருடனும் நடந்து கொண்ட முறைகளால் கோயில் நிர்வாகத்தினர் உன்னை ஒரு மனிதனாக ஏற்றுக் கொள்ளவில்லை. உனக்குள் இருக்கும் ஆற்றல் தான் வார்த்ததைகளாக அன்று வெளிப்பட்டன. அதே போலத்தான் இப்போதும் இருப்பாயென மக்கள் நினைக்கிறார்கள். உனது எதிர்காலம் இப்பொழுது மிகவும் பிரகாசமாக உள்ளது. ஏற்கனவே நடந்து முடிந்தவற்றை எண்ணி வருந்தாதே. ஒளிமையமான எதிர்காலம் உன் முன்னால் விரிந்து கிடக்கிறது. நீ கற்றவை அனைத்தும் அதற்குரிய பயனைத் தந்து தீரும். நீ

மன்பு செய்த தீய செயல்கள் உன்னை இப்பொழுதும் பற்றிப் பிடித்திக்கின்றன. அதைப் போல நீ தற்போது நடந்து கொள்ளும் முறைகள், உன்னை இகழ்ந்தவர்களைத் தேடிவரச் செய்யும். மனதைச் சோரவிடாதே. நம்பிக்கையோடு காத்திரு. ஒவ்வொருவருக்கும் காலம் வரவேண்டும். குளத்தில் இரைக்காகக் காத்து நிற்கும் கொக்கானது சிறு மீன்களை யெல்லாம் விட்டு விட்டு பெரிய மீன் வரும் வரை காத்திருந்து குத்திப் பிடிப்பதைப் போல நீயும் காத்திரு, காலம் கனியும் போது எல்லாம் நடைபெறும்'' என்றார் பண்டிதர்.

அன்று வெளளிக்கிழமை, இரவுப் பூசை முடிவடைந்ததும் மக்கள் வீபூதி பிரசாதத்தை வாங்கிக் கொண்டு அரச மரநிழலில் இருக்கும் சுவாமியாரிடஞ் சென்றனர். ஆரூரன் குக்களிடம் வீபூதியை வாங்கித்தரித்தான். சந்தத்தை வாங்கிப் பொட்டு வைத்து விட்டு பூவை வாங்கிக் கண்ணில் ஒத்தி விட்டு காதில் வைத்தான். பின் சுவாமியாருக்கு அருகே சென்றான்.

சுவாமியார் புன்னகைத்தார்; ''எப்படிப் பிரசங்கியாரே சௌக்கியமாக இருக்கிறீர்களா..? இப்பொழுது நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்களாம். சமயக் கருத்துக்களை மக்கள் நன்கு புரியும் படி பேசுவதாகக் கேள்விப் பட்டேன். அத்துடன் நீங்கள் பேசும் கூட்டங்களில் மக்கள் ஏராளமாகக் கலந்து கொள்வதாகவும் கேள்விப்பட்டேன். பிழை பிடிப்பதாலும் குறை சொல்லிக் கொண்டிருப்பதாலும் எந்தப் பயனும் வராது. அவை எமது வாழ்க்கையை வளம்படுத்தப் போவதில்லை. ஒருவன் தன்னுள் மறைந்துள்ள ஆற்றல்களை வெளிப்படுத்தி மனித மேம்பாட்டிற்காக உழைத்தல் வேண்டும். மக்களை வளர்ப்பது சமயக் கொள்கைகள் தான். சமய அறிவில்லாதவன் காட்டு மிராண்டியாகவே வாழ்வான். உனது நடவடிக்கைகள் என்னை மகிழ்விக்கின்றன. இந்த வருடத் திருவிழாவின் போது இருபத்தைந்து நாட்களும் உனது சொற்பொழிவை ஏற்பாடு செய்யும்படி கூறியுள்ளேன். ஆயத்தஞ் செய்து பேசு'' என்றார்.

ஆரூரன் சிலகணங்கள் உணர்வற்றுச் சிலையாக நின்றான். பின் சுவாமியாரின் பாதங்களைப் பற்றினான். அவனது விழிகளால் கண்ணீர் சொரிந்து சுவாமியாரின் பாதங்களை நனைத்தது.

**490. கொக்குஒக்க கூம்பும் பருவத்து; மற்றுஅதன்**
**குத்துஒக்க சீர்த்த இடத்து.**

பெரிய மீன்வரும்வரை பொறுத்திருக்கும் கொக்கைப் போல அமைதியாக இருந்து, காலம் வாய்க்கும் போது கொக்கின் குத்துப் போல விரைந்து செயற்பட்டுக் காரியத்தை முடிக்க வேண்டும்.

## *எளிதாக எண்ணாதே*

சுரேஸ் சிவகாமிக்கு வீடு கட்டிக் கொடுக்கும்படி கொடுத்து விட்டுப் போன இரண்டு இலட்சம் ரூபாவை கஜேந்திரன் வங்கியில் சிவகாமியின் பெயரில்

வைப்பிலிட்டான். சாதாரணமாக ஒரு வீடு கட்டுவதானால் பத்துப் பதினைந்து இலட்சரூபா வேண்டும். முழுமையாகப் பணத்தைத் தேடாமல் வீட்டு வேலையைத் தொடங்க அவன் விரும்பவில்லை. அதனால் பணத்தை வைப்பிலிட்டான். வைப்பிலிட்டதன் மூலம் மாதா மாதம் ஒரு தொகைப் பணம் சிவகாமிக்கு வட்டியாகக் கிடைத்தது.

சிவகாமியின் மகள் கஜனி தரம் ஏழு படித்துக் கொண்டிருந்தாள். அடுத்தவள் ரஜனி தரம் நான்கு படித்துக் கொண்டிருந்தாள். இருவரும் சரியான கெட்டிக்காரர்கள். எப்பாடுபட்டாவது அவர்களிருவரையும் கற்பிக்க வேண்டுமென்று கஜேந்திரன் நினைத்தான்.

கஜேந்திரனும் நகுலனும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தின் முன்னால் விருட்சமாக வளர்ந்து நின்ற வேப்ப மரத்தின் கீழ் இருந்தனர். சிறுவயதிலிருந்தே அவர்களிருவரும் நண்பர்கள். சிறுவர்களாக இருக்கும் போது அந்த மரத்தில் ஏறி விளையாடுவார்கள். யாரும் இலகுவாக ஏறக்கூடிய முறையில் அம்மரம் கீழே கிளைகள் பரப்பி வளர்ந்திருந்தது. அந்த மரத்தின் மேலே இரண்டு ஆட்டுக்குட்டிகள் ஏறித் துள்ளி விளையாடின.

''இந்த மரத்தில் ஏறியதற்காகத் தணிகாசலமண்ணையிடமும் வேலாயுதண்ணையிடமும் எத்தனை தரம் அடி வாங்கியிருப்பம்'' என்றான் கஜேந்திரன்.

நகுலன் சிரித்தான்; ''நான் அப்பாவிடமும் மாமாவிடமுங் கூட அடிவாங்கியிருக்கிறேன்.''

அப்போது அங்கே தனபாலன் வந்தான்; ''என்ன கஜன் யோசிக்கிறாய். சிவகாமிக்கு வீடு கட்டத் தொடங்கவில்லையே. நீங்கள் தானாமே அந்தக் குடும்பத்தைப் பொறுப் பெடுத்திருக்கிறியள். ஒரு பிள்ளையை சுரேசுக்குக் கொடுத்தமாதிரி மற்றய இரண்டையும் யாருக்காவது கொடுத்தால் நல்லது. சுரேஸ் காசு தந்தமாதிரி மற்றவையும் தருவினை. வீடுகட்டலாம். பிறகு அவளுக்குக் கரைச்சல் இல்லை'' என்றான் தனபாலன்.

நகுலனுக்கு கோபம் வந்தது; ''இவன் நெடுக நக்கலடிப்பதும், இரட்டை அர்த்தத்தில் கதைப்பதுமாக இருக்கிறான். இவனுக்கு இண்டைக்கு அடிக்க வேண்டும்'' என்று எழுந்தான் நகுலன்.

''டேய், பேசாமலிரு. நான் யாவற்றையும் ஆறுதலாகச் சொல்லுறன்'' என்று எழுந்த நகுலனின் கையைப் பிடித்து இருத்தினான் கஜேந்திரன்.

தனபாலன் சென்று விட்டான்; ''இவன் நெடுக எம்மோடு சச்சரவுக்கு வருகிறான். இவனுக்கு ஒரு நாளைக்கு அடித்தால் தான் திருந்துவான்'' என்றான் நகுலன்.

''நகுலா, தவறான விஷயங்களை சரி யென்று பலர் நினைப்பதால் தான் இப்படிப் பலர் நடந்து கொள்கிறார்கள். அத்துடன் வாழத்தெரியாதவர்கள் உலகத்தோடு சேர்ந்து வாழக் கற்றிருக்கிறார்கள். அதனால் அவர்கள் இன்பமாக வாழ்கிறார்கள். வாழத் தெரியாதவர்கள் தாம் நடப்பது படி உலகம் நடக்க

வேண்டு மென்று நினைக்கிறார்கள். இவர்கள் தான் வாழ்க்கையில் பல துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உட்பட்டு அவதிப்படுகிறார்கள். அப்படியானவன் தான் தனபாலன். எனவே நாம் அவனுக்கு அடிப்பதன் மூலம்அவனை வழடக் கீழானவராகி விடுவோம். நான் பழகுவது பேசுவது உறவாடுவதைப் பொறுத்தே எமது நடத்தை தீர்மானிக்கப்படுகிறது. நன்மை தீமைகளை ஆராயாது எல்லாச் செயல்களையும் எதிர்பதற்கென்று பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீதி நியாயம் விளங்காது அவர்களுடன் நாம் மிக மிக அவதானத்துடன் பழகுதல் வேண்டும். இல்லா விட்டால் அவர்கள் எம்மைப் பற்றி இல்லாதது பொல்லாதது களையெல்லாம் சொல்லுவார்கள்''.

''இப்போது சொல்லமலா இருக்கிறார்கள்'' அத்திரத்துடன் கேட்டான் நகுலன்.

''கஜேந்திரன் சிரித்தான்; '' கோபப்படாதை நண்பா. பகைவரை நாம் எளிதாய் எண்ணி அவர்களைத் தண்டிக்க வோ புத்திமதிகள் சொல்லவோ இகழவோ கூடாது. அது பெரும் பிரச்சனையில் போய் முடியும். ஆரவாரங்களைக் கேட்டுக் குரைக்கும் நாயைப் போன்றவர்கள் அவர்கள். அவர்களுடன் கதைக்கப் போனால் அவர்கள் கதா நாயகர்கள் ஆகி விடுவார்கள். அதனால் பேசாமலிரு'' என்ற கஜேந்திரன் சிறிது நேரம் பொறுத்துச் சொன்னான்; ''சிவகாமீன்ரை வீட்டு வேலையைத் தொடங்கலா மென்றால் போதிய பணமில்லாமல் இருக்கு. முழுமையாகச் செய்து வெற்றியடையும் வாய்ப்பு ஏற்படும் வரை எந்தச் செயலையும் தொடங்கக் கூடாதென்று பெரியவை சொல்லுவினை'' என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கையில் நகுலன் சொன்னான்; கையில் உள்ள பணத்தைக் கொண்டு வேலையைத் தொடங்குவோம்''.

''வீடு கட்டத் தொடங்கினால் ஒரு வருத்தில் பூர்த்தியாக்க வேண்டும். இல்லா விட்டால் மூன்று வருடஞ் செல்ல வேண்டும் என்றொரு விதி இருக்கு அதனால் காசைச் சேர்த்துக் கொண்டுதான் வேலையைத் தொடங்க வேண்டும்'' என்றான் கஜேந்திரன். நகுலன் எதுவும் பேசவில்லை.

**491. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடம்கண்ட பின்அல்லது.**

முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைக் காண்பதற்கு முன் செயலைத் தொடக்கவும் கூடாது;. பகவரை இகழவும் கூடாது.

## பலவகைப் பயன்

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய வேப்ப மர நிழலில் இருந்த கஜேந்திரனுக்குத் தூக்கம் வந்தது. குளிர்மையான தென்றல் அவனது உடலை வித்தியாவின் மென்மையான கரங்கள் வருடுவதைப் போல வருட மெல்லக் கண்ணயர்ந்தான்.

''அரசே வலிமை மிக்க இரும்பு போன்ற மனம் உங்களிடமுள்ளது. மகத நாட்டு மன்னன் சிறுபான்மையராக இருக்கும் எமது இன மக்களை அளவுக்கதிகமாகத் துன்புறுத்துகிறான். அவர்கள் அங்கே நரக வாழ்வுதான் வாழ்கிறார்கள். அளவுக்கு மீறிய வரியைக் கட்டுகிறார்கள். ஆண்களால்

சுதந்திரமாக எங்கும் நடமாட முடியாது. மகத நாட்டு மக்கள் அனுபவிக்கும் சலுகைகள் எவையும் அவர்களுக்கு இல்லை. தற்பொழுது எமது இன மக்களை தம்மினமாகும் படி வற்புறுத்துகிறான். அத்துடன் பல நூற்றாண்டுகளாக எமது மொழியைக் கற்பித்த பாடசாலைகளில் தற்பொழுது மகத மொழி மூலம் கல்விப் போதனை நடை பெறுகிறது. அதைத்தடுத்து நிறுத்த வேண்டும். இல்லா விட்டால் முன்பு இங்கிருந்து வசதி வாய்ப்புக்களுக்காக அங்கு சென்று குடியேறிய எமது இன மக்களை இங்கு கொண்டு வந்து குடியேற்ற வேண்டும். இரும்பைப் போன்ற வலிமையுடைய மனத்தையுடைய உங்களைப் போன்ற வீரர் எவரும் இதுவரையில் எமது குலத்தில் உதித்ததில்லை. அத்துடன் எமக்குப் போதியளவு பாதுகாப்புண்டு. நாம் அயல் நாடுகளுடன் நல்லுறவு வைத்துள்ளோம். தேவையேற்படின் அவர்கள் எமக்குதவுவார்கள். தற்பொழுது நாம் இருக்கும் நிலையில் மகத நாட்டை ஒரு கணப் பொழுதில் வெல்லலாம்''. என்று முதலமைச்சர் நாக நாட்டு மன்னன் கரிகாலனுக்குச் சொன்னார்.

''எமது இனத்தவர்கள் பலர் அங்குள்ள இனத்துவேசிகளால் கொல்லப்படுகிறார்கள். வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் எம்மினத்தவர் தான் மகத நாட்டின் பூர்வீகக் குடிகள். ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நாக நாடு என்றொரு நாடுதான் இருந்தது. வடக்கிலிருந்து வந்தவர்கள் எமது இனத்தவர்களுடன் போரிட்டு வென்று மகத நாடெனப் பெயர் சூடி அதை ஆண்டு வருகின்றனர். எனக்கு வெகு நாட்களாக எமது தாய் மண்ணை அன்னியர் பிடியிலிருந்து மீட்க வேண்டுமென்ற எண்ணம் மனதில் உண்டு. காலம் வரும் வரை பொறுத்திருந்தேன். இன்று நீர் அதை ஞாபகப் படுத்தியதால் அந்த எண்ணம் மனதில் நிலை பெற்று விட்டது. அந்நாட்டைக் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்'' என்றான் கரிகாலன்.

கரிகாலனது படைவீரர்கள் மகத நாட்டுள் நுழைந்து மகத நாட்டுப் போர் வீரர்களையெல்லாம் கொன்று குவித்து அந்நாட்டைக் கைப்பற்றினர். கரிகாலன் அந்நாட்டின் அரசனாகக் கஜேந்திரனை நியமித்தான்.

''அரசர் வாழ்க... கஜேந்திர மன்னர் வாழ்க....'' வானதிரக் கோசமெளக் கஜேந்திரன் திடுக்கிட்டு விழித்தான். நகுலனைக் காணவில்லை. வேப்ப மரத்தில் ஏறி விளையாடிய ஆட்டுக் குட்டிகள் கஜேந்திரனைப் பாய்ந்து சென்றன.

சங்கப் பாடல்களையும் இலக்கியங்களையும் படிப்பதால் வந்த கனவு என்று எண்ணினான். கஜேந்திரன் அப்பொழுது நகுலன் அங்கே வந்தான்; ''கதைத்துக் கொண்டிருக்கும் போது நீ நித்திரையாகி விட்டாய். கோயில் மடத்திற்குத் தெற்குப் பக்கமாக உள்ள சுவர் வெடித்துப் பிளந்திருக்கிறது. குருக்கள் விழுந்து விடும் என்று சொன்னார் அது தான் பார்க்கச் சென்றேன். சுவர் சரிந்து தான் உள்ளது. விரைவில் உடைத்துத் திருத்த வேண்டும். திருவிழாத் தொடங்கு முன்பு கோயில் வேலைகள் பல செய்ய வேண்டும். திருவிழாத் தொடங்கினால் சிறுவர்கள் அவ்விடஞ் செல்வார்கள். சுவர் இடிந்து விழுந்தால் பெருஞ் சேதங்கள் ஏற்படும்'' என்றான் நகுலன்.

''கோயில் திருத்த வேலைக்கு ஆறேழு இலட்ச ரூபா வேணு மென்று தணிகாசல மண்ணை சொன்னவர். அந்தாள் சேர்த்துப் போடும்'' என்றான் கஜேந்திரன்.

‘‘சமூக சேவை செய்வோர் ஒழுங்கான முறையில் சேவையாற்றினால் எதையுஞ் செய்யலாமென்பதற்குத் தணிகாசல மண்ணை ஓர் எடுத்துக் காட்டு. வலிமை மிக்க மனதை உடையவர்களுக்குப் பாதுகாப்பு என்ற பக்கத் துணையும் அமையுமானால் செய்ய முடியாத காரியங்கள் எவையும் இல்லை. அச் செயல்களின் வெற்றியால் பல்வேறு பட்ட நன்மைகள் கிடைக்கும்’’ என்றான் நகுலன்.

‘‘ஆன்மாவினால் சாதிக்க இயலாத காரியம் எதுவும் இல்லை. வலிமையான மனம் படைத்தவர்களின் வெற்றிக்கு யாரின் உதவியும் தேவையில்லை. என்னால் அந்தச் செயலைச் செய்ய முடியாதென்று நினைப்பது மிகப் பெரிய பலவீன மட்டு மல்ல பாவமுங் கூட. கடவுள் ஒவ்வொரு ஆன்மாவுக்குள்ளும் இருப்பதாகச் சமயம் சொல்கிறது. ஆன்மா கடவுள் தான். எனவே ஆன்மாவால் இயலாதது என எவற்றையுங் கூற முடியாது. பலமும் தகுந்த துணையும் இருந்தால் எதையுஞ் சாதிக்கலாம்’’ என்றான் கஜேந்திரன்.

**492. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்து ஆம்**
**ஆக்கம் பலவும் தரும்.**

மாறுபாடு பொருந்திய வலிமை மிக்கவர்களுக்கும் அரனோடு பொருந்தி ஏற்படும் வெற்றியானது பலவகையான பயன்களையும் கொடுக்கும்.

## வெற்றி பெறும் வசதி

அன்று வெள்ளிக்கிழமை நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயப் பூசை முடிந்த பின்பு சுவாமியார் திடீரென்று; ‘‘இன்று எமது ஊரவரும் சமயப் பிரசங்கியுமான ஆரூரன் சமய உரையாற்றுவார். அவர் அயல் ஊர்க் கோயில்களில் அருமையான சமயக் கருத்துக்களைக் கூறி வருகிறார். நான் அங்கு சென்று கேட்காவிட்டாலும் கேட்டவர்கள் வந்து சொல்லுபவற்றைக் கேட்டதும் அவரது பேச்சைக் கேட்க வேண்டு மென்ற ஆவல் எனது மனத்தில் துளிர்த்தது. அதனால் கோயில் கொடியேறி திருவிழா நடை பெறும் போது பேசச் சொன்னேன், ஆனால் இங்கு வாழும் சிலருக்கு பொறுமையாக இருக்க முடியவில்லை. அதனால் இன்று உரையாற்றுமாறு அவருக்கு அழைப்பு விடுத்தேன். ஆரூரன் பெரிதாகப் படிக்கவில்லை. ஆனால் தான் ஒரு சமயப் பிரசங்கியாக வேண்டு மென்று நினைத்து விட முயற்சியுடன் பண்டிதரிடம் சற்று இன்று தேர்ச்சி பெற்ற ஒரு சொற் பொழிவாளனாக வந்துள்ளான். அவனைப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்’’ என்றார்.

‘‘என்னை யாழும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியை மனதில் இருத்தி இவ்வூரவர்களின் நன்மைக்காக வாழும் சுவாமியாரின் பாதங்களைப் பணிந்து எனது சொற் பொழிவை ஆரம்பிக்கிறேன். நான் பெரிதாகப் படிக்கவில்லை. வெள்ளாடு போல நுனிப்புல்லை மேய்ந்து விட்டு திமிர் பிடித்து இவ்வூரவர்களையும் சுவாமியாரையும் மதியாமல் நடந்தேன். முன்பு பண்டிதர் எழுதித் தந்ததைப் பாட மாக்கிப் பேசினேன். அத்துடன் பண்டிதருடன் உரையாடும் போது அவர் கூறும் கருத்துக்களின் அர்த்தம் புரியாமல் சுவாமியாருடனும் தர்க்கித்தேன். அதனால் ஊரவர்கள் என்னை வெறுத்தனர். அதனால் இந்தக் கோயிலில் பேச ஆசைப்பட்டேன். யாரும் அனுமதிக்கவில்லை.

இன்று என்னைப் பேசும் படி வீட்டில் வந்து கேட்டார்கள். அதை நான் பெருமையாகச் சொல்லவில்லை. நான் கற்று விட்டேன் ஆணவத்தை அடக்கிவிட்டேன் சமூகத்தோடு சேர்ந்து விட்டேன் என்பதைத் தான் பெருமையாகச் சொல்கிறேன். என்னுடைய இலட்சியம் வெற்றி பெற ஏற்ற இடத்தை அறிந்து, என்னைக் கூடாதவனாக நினைக்கின்றவர்களின் மனதினை நெருங்கி, அவர்களது மனதை எனது செயல்களால் மாற்றித் தக்கபடி செயல்களை மேற் கொண்டேன். அதனால் இன்று வெற்றி பெற்று விட்டேன். ஏற்ற இடம் எது வென்பதை அறிந்து, எதிரிகளின் வலிமையையும் உள்ள படி அறிந்து, தக்கபடி செயல்களை மேற்கொண்டால் வலிமையில்லாதவனும் வெற்றி காண்பான். இது எனக்கு மட்டுமல்ல என்போன்ற அனைவருக்கும் உதாரணமாகும்’’.

தணிகாசலம் ஆரூரனது பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் தான் சுவாமியாரிடஞ் சொல்லி அவனை இன்று பேசும் படி வைத்தார். ஆரூரன் அயல் ஊர்களில் உள்ள கோயில்களில் பேசிய போதும் மகா கணபதி ஆலயத்தில் பேச முடியவில்லையே என்று கவலைப்பட்டான். அதைப் பண்டிதர் உணர்ந்து தணிகாசலத்திடம் சொன்னார். தணிகாசலம் அதைச் சுவாமியாரிடஞ் சொல்லச் சுவாமியார் அன்று அவனைப் பேசும் படி அழைத்தார்.

வேலாயுதபிள்ளை பெரிதாகச் சிரித்தார்; ‘‘ சனங்கள் நன்றாகப் பேசுகிறான் என்று சொல்லும் போது நான் நம்பவில்லை. சிவசுந்தரமூர்த்தி தான் எல்லா இடங்களிலும் ஆரூரனைப் பற்றிப் பெரிதாகச் சொல்லிக் கொண்டு திரியுறார். அதாலை நான் நம்பேல்லை. நல்லாயிருக்கு. ஆரூரனுக்கு உற்சாகம் கொடுத்து இன்னும் கற்கப் பண்ணல் வேண்டும். இன்று சமயத்தையும் இலக்கியத்தையும் யார் கற்கிறார்கள்?. பரீட்சைக்காகப் படித்துச் சித்தியடைவதோடு சரி, சபைக்கூச்சமில்லாமல் பேசுவார்கள் குறைந்து கொண்டு வருகிறார்கள்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘கடவுள் இல்லாத இடம் எதுவும் இல்லை. பழந் தமிழ் நூல்கள் கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்று கூறுகின்றன. ஒவ்வொரு உயிருக்குள்ளும் கடவுள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால் தான் திருமூலர் ‘‘உள்ளம் பெருங்கோயில்’’ என்றார். உன்னுக்குள்ளே கடவுள் வாழ்ந்து கொண்டிருக்கும் போது நீ அதை நம்பாமல், சமய அனுட்டானங்களையும் நம்பாது வேடதாரிகளையும் மந்திரவாதிகளையும் சோதிடர்களையும் நம்பி வாழ்கிறாய். மனிதனை விட விலங்குகளும் பறவைகளும் தெய்வத்தின் கோயில்கள் தான். அதனால் தான் கோயில்களாக உள்ள விலங்குகளை கொன்று தின்னக் கூடாதென்று இந்து மதம் கூறுகிறது. ஆன்மீக வாழ்க்கைக்கு ஈடானது எதுவும் இல்லை. ஆன்மீக மென்றதும் குடும்பத்தைத் துறந்து காடுகளுக்குச் செல்வதையே நாம் நினைக்கிறோம். அப்படியல்ல இவ்வூரில் வாழும் பல பெரியவர்கள் ஆன்மீக வாழ்வு வாழ்கிறார்கள்...’’

‘‘நல்லாய்ப் பேசுறான். படிச்சிட்டான். சுவாமியாரிடமும் படிக்கச் சொல்லிச் சொல்ல வேண்டும்’’ என்றார் தணிகாசலம்’’.

**493. ஆற்றாரும் ஆற்றி அடுப, இடன் அறிந்து**
**போற்றார்கண் போற்றிச் செயின்.**

தமக்கு ஏற்ற இடத்தை அறிந்து, தம்மைக் காத்துக் கொண்டு, பகவரைத் தாக்கினால், வலிமை இல்லாதவனும் வலிமை பெற்று வெற்றியடைவான்.

## கைவிடுவர்

பண்டிதர் கந்தையா நாற்காலியில் அமர்ந்திருக்க ஆரூரன் நிலத்தில் அமர்ந்திருந்தான். அவர் அவனையும் நாற்காலியில் இருக்குமாறு பல முறை சொல்லியும் அவன் கேட்கவில்லை. அதனால் அவர் அப்படிக் கூறுவதை நிறுத்தியிருந்தார்.

“ஆரூரா, நீ வெள்ளிக்கிழமை நான் எதிர்பார்த்ததை விட நன்றாகப் பேசினாய். உன்னை விட நான் தான் மிகவும் மகிழ்கிறேன். நீ நினைத்ததைச் சாதித்து விட்டாய். நான் நினைத்ததை விட உயர்ந்து விட்டாய். சுவாமியாரும் கற்றறிந்தவர்களும் உனது பேச்சு வன்மையைப் பாராட்டினார்கள். கற்பவர்கள் எல்லோரும் கற்றதை நல்லபடி மற்றவர்களுக்கு எடுத்துரைக்க மாட்டார்கள். நாவன்மை என்று சொல்லப்படுகின்ற பிரசங்கமும் ஒரு கொடை. அது கடவுளால் கொடுக்கப்படுவது. எல்லோருக்கும் அக் கொடை கிடையாது” என்றார் பண்டிதர்.

ஆருரன் மகிழ்ச்சியின் எல்லையில் நின்றான். அவனால் பேச முடியவில்லை. கண்கள் கலங்கி, கண்ணீர் பெருகியது.

“இத்தனைக்கும் காரணகர்த்தா நீங்கள் தான். என்னை ஆளாக்கியது நீங்கள்...” கலங்கினான் ஆரூரன்.

“என்னிடம் எத்தனை பேர் கற்றனர். அவர்களெல்லாம் பிரசங்கத்தில் பெயர் எடுக்கவில்லையே. உனது அக்கறையும் முயற்சியும் தான் எல்லாவற்றிற்கும் காரணம். ஒரு செயலைச் செய்கின்றவன் யாராக இருந்தாலும், அவன் ஏற்ற இடம் எது வென்பதை அறிந்து எதிரியை நெருங்கிச் செயலை மேற் கொள்ளல் வேண்டும். அப்படிச் செய்தால் வெல்ல வேண்டு மென்று நினைக்கின்ற எதிரிகள் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடுவர்.” என்ற பண்டிதர் ஆரூரனைப் பார்த்தார்.

ஆரூரன் கை கூப்பியபடி மௌனமாக இருந்தான். அதனால் பண்டிதர் சொன்னார்; “ மகனே அரசனாக இருந்தாலும் ஒரு செயலைச் செய்யும் போது ஏற்ற இடம் எது வென்பதை முதலில் அறிந்து கொள்ளல் வேண்டும். அத்துடன் எதிரியை நெருங்கிச் செயலை மேற் கொள்ள வேண்டும். இதனால் பகைவர்கள் பயந்து போய்த் தம் எண்ணத்தைக் கைவிட்டு விடுவார்கள். இது அரசனுக்கு மட்டுமல்ல ஆண்டிகளுக்கும் பொருந்தும். மகனே! புத்த பெருமான் உயிர் கொலையை எதிர்த்தவர். யாகம் என்ற பெயரில் மிருகங்களைக் கொல்வதைக் கண்டு வருந்தியவர். அரசர்கள் ஆயிரக்கணக்கான மிருகங்களைக் கொன்று யாகஞ் செய்வதன் மூலம் தாம் பெரும் பேறுகளையடையலாம் என்றெண்ணித் தினமும்யாகஞ் செய்து வந்தனர். ஒரு முறை ஓர் அரசன் யாகஞ் செய்வதற்காகப் பசு வொன்றைக் கொண்டு வந்து கட்டியிருந்தான் அதைக் கண்ட புத்த பெருமான்; “அரசே இந்தப் பசுவைக் கொல்வதன் மூலம் தங்கள் பெரும் பேற்றை அடையலா மென்று நினைக்கிறீர்கள். பாவம் பசு, அப்பசுவை விட்டு விட்டு என்னைக் கொல்லுங்கள்” என்றார் அரசன் திகைத்து விட்டான். தனது தவறை உணர்ந்து திருத்தியும் விட்டான். புத்த பெருமான் தான் மேற்

கொள்ள வேண்டிய செயலுக்கு ஏற்ற இடம் எதுவென அறிந்து, எதிரியை நெருங்கிச் சென்று காரிய மாற்றிய படியால் வெற்றியடைந்தார். அது போல கலிங்க நாட்டில் போர் முடிந்த பின்பு போர்க்களத்தில் மன்னனான அசோகனைச் சந்தித்துப் போரின் தீய விளைவுகளைப் பற்றி எடுத்துச் சொன்னார். அதனால் அசோக மன்னன் அதன் பின் போர் செய்யவில்லை. இது அரசனுக்கும் ஆண்டிக்கும் இடையில் நடந்த கதை'' என்று கூறி நிறுத்தினார் பண்டிதர்.

ஆரூரன் எதுவும் பேசாததால் பண்டிதர் சொன்னார்; ''ஒவ்வொருவனும் தனது ஆற்றலை நல்ல முறையிற் பயன்படுத்தி கடும் முயற்சி செய்தால் சாதனை புரியலாம். அளவற்ற ஆற்றலும், முயற்சியும், பொறுமையும், அடக்கமும் இருந்தால் தான் நாம் நினைத்ததை எளிதில் செய்து முடிக்க முடியும். அது உன்னிடம் உள்ளது. அதனால் தான் இந்த ஊரில் வாழும் பெரியவர்கள் உன்னை மதிக்கிறார்கள். நாம் எதிரிகளை நெருங்கிச் சென்று செயல்களைச் செய்தால் அவர்கள் எம்மை எதிர்க்கப் பயப்படுவர். அதே போல நல்லவர்களையும் பெரியவர்களையும் நெருங்கிச் சென்று மதித்து நடந்தால் எப்பொழுதும் வெற்றி கொள்ளலாம். நல்லவர்களுடன் நெருங்கியிருப்பவனுக்குத் தோல்விகள் ஏற்படாது. எதிரிகளால் துன்பங்கள் நேராது''.

''ஐயா, தங்களின் வார்த்தைகளை நான் என்றும் போற்றி வாழ்வேன். மனித வரலாற்றில் தெய்வத்தின் தூதுவர்களாக இருப்பவர்கள் குருமாரே. குரு தெட்சனையாக ஏகலைவன் தனது பெரு விரலைக் கொடுத்தான். மாதா, பிதா குரு தெய்வம் என்று தான் எமது சமயம் கூறுகிறது. எனக்கு நீங்கள் தான் மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம்'' உணர்ச்சி வசப்பட்டான் ஆரூரன்.

ஆரூரா, தணிகாசலம் உன்னைச் சுவாமியாரிடமுஞ் சென்று படிக்கச் சொல்கிறார் மொழியும் இலக்கணமும் உனக்கு நன்றாகத் தெரியும் வேத உபநிடதங்களைப் பற்றி ஆழமாக நீபடிக்க வேண்டும். சுவாமியார் வேத உபநிடதங்களைக் கரைத்துக் குடித்த ஞானி. அவரிடமுஞ் சென்று கல்" என்றார் பண்டிதர்.

''அப்படியே செய்கிறேன்'' என்றான் அரூரன்.

**494. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன் அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.**

பொருத்தமான இடத்தை அறிந்து பொருந்தி நின்று செயலை நெருங்கிச் செய்தால் அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர்கள் தம் எண்ணத்தைக் கை விடுவர்.

## இடம்

சுவாமியார் அரசமரநிழலில் இருந்தார். அவரது கண்கள் வெகு நேரமாக மூடியிருந்தன; ''வெள்ளிக்கிழமை அதிகாலையில் வா'' என்று சுவாமியார் சொன்னமையால் ஆரூரன் தோய்ந்து அனுட்டானங்களை முடித்துக் கொண்டு விடியற்காலை ஐந்து மணிக்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்து காலைப் பூசையைப் பார்த்தான். பூசை முடிந்ததும் குருக்களிடம் திருநீறு, சந்தணம், பூ முதலியவற்றைப் பெற்றுக் கொண்டு

அரசமரத்தடிக்கு வந்தான். அவன் அங்கு வந்த போது சுவாமியார் கண்களை மூடியபடி இருந்தார். அவருக் அருகில் ஆரூரன் அமர்ந்து கொண்டான். காலை ஒன்பது மணியாகியும் அவர் கண் திறக்கவில்லை.

ஆரூரன் மனதை அடக்கி நாவலர் ஸ்ரீ வித்தியா கணபதியை நினைத்தபடி இருந்தான்; ‘‘ஆத்மா பந்தங்களில் இருந்து விடுபட்டே இருக்கும். பாவபுண்ணியங்கள் சுக துக்கங்கள் அதைப் பாதிப்பதில்லை. சரீரத்தின் மீது பற்று வைத்திருப்பவர்களைத் தான் பந்தங்கள் சுக துக்கங்கள் பாதிக்கும்’’ வேதாந்தம் பற்றிப் பண்டிதர் கூறியது அவனது காதில் ஒலித்தது. சரீரத்தின் மீது பற்றில்லாத சுவாமியார் எந்தவித ஆட்டமும் அசைவும் இன்றி இருக்கிறார். அது அவரால் மட்டும் தான் முடியும்.’’ என்று நினைத்தான் ஆரூரன்.

சுவாமியார் கண்களைத் திறந்தார். ஆரூரன் அவரது பாதங்களைப் பற்றினான்; ‘‘ மகனே இன்று உன்னை வரச் சொன்னேன். ஒரு மனிதன் சமூகத்திலிருந்து விலகித் தனியாக வாழ முடியாது. எப்பொழுதும் மற்றவர்களை மதிக்கக் கற்றுக் கொள். ஓர் அற்ப உயிருக்கும் தன்னை மற்றவர்கள் மதிப்பது புரியும். சிறு வயதில் எனது தாயார் சொல்வார்; ‘‘எமது ஊரில் ஓட்டைக் கந்தர் என்றொருவர் இருந்தவராம். அவர் தனது வீட்டுக்கு வரும் காகங் குருவிகளுக்கெல்லாம் தானியம் போடுவாராம். எல்லாக் குருவிகளும் அவருடன் அன்பாக இருந்தனவாம். ஒரு நாள் நாகம் அவரைத் தீண்டி விட்டது. அதைக் கண்ட குருவிகள் நாகத்தைக் கொத்திக் கொன்று விட்டனவாம். பறவைகள் விலங்குகள் யாவும் பகுத்தறிவு மிக்கன. புத்திக்கூர்மையுடையன. அன்பைப் புரிந்து கொள்ளும் தன்மை உடையன. அவற்றிற்குப் பேசத் தெரியாது என்று சொல்வது பொய். அவை தமக்குள் தாம் பேசி மகிழ்வதை நீ காணவில்லையா? உலகில் உள்ள மக்கள் எத்தனை மொழிகளைப் பேசுகிறார்கள். இதெல்லாம் ஒலிக் கூட்டங்கள். இத்தனை மொழியும் ஒருவனுக்குத் தெரியுமா? அதைப் போன்றது தான் விலங்குகளினதும் பறவைகளினதும் மொழி. அவைகள் எம்மைப் போலவே வாழ்கின்றன. அவற்றிற்கும் எமக்கும் உள்ள வேறுபாடு என்ன? என்னைப் பொறுத்தரை உருவம் தான் வேறுபாடானது. நீ மொழியை எப்படி வேண்டு மானாலும் பேசலாம். இலக்கணமுடையதாகவோ அடுக்கு மொழியாகவோ, அலங்கார முடையதாகவோ இருக்கத் தேவையில்லை. பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் பேசு. கேட்டவர்கள் இன்னொரு முறை கேட்க வேண்டும் என்று நினைக்கக் கூடியதாகப் பேசு. உனது பேச்சிற்குக் கூலியை எதிர்பாராதே.’’

‘‘நான் கூலியாக இது வரை எதுவும் பெற்றதில்லை. இரவில் தானே சொற்பொழிவாற்றுகிறேன். பகலில் எனது தொழிலைச் செய்கிறேன்’’ என்றான் ஆரூரன்.

‘‘நீ எதைச் செய்தாலும் அதை அர்ப்பணிப்புடன் செய்; மற்றவர்களால் அதைச் செய்ய முடியாதளவிற்குச் செய். ஆழம் நிறைந்த நீர் நிலையில் வாழும் முதலை பிற உயிர்களை வென்று விடும். ஆனால், அந்த முதலை நீரை விட்டுத் தரைக்கு வந்து விட்டால் அதை மற்ற உயிர்கள் கொன்று விடும். இடந்தான் அதற்குக் காரணம். எனவே இடத்தைப் பற்றி நன்கறிதல் வேண்டும். இடமறியாது எதையும் செய்தால் கூடாது. முக்கியமாகப் பேசுவேன். அவை அறிந்தே பேசுதல் வேண்டும். கற்றவர் சபையில் பேசும் போது சகலதும் கற்றவனாய் பேசு. அறிவற்றவர்கள் சபையில் பேசும் போது சபையை அறிந்து பேசு. யானைக்கும் அடி சறுக்கும் என்பதை மறந்து விடாதே’’.

‘‘மக்கள் தமது குறைபாடுகளைப் பிறா் மீது தான் சுமத்துவார்கள். ஆனால் நான் குறைபாடுகளை என்மீது சுமத்துவேன். பண்டிதா் சொல்வார் ‘‘சகலதும் கற்றவன் யாரும் இல்லை. ஒவ்வொரு வரும் ஒவ்வொரு துறையில் மிகச் சொற்பளவையே கற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றை அறிந்திருப்பார்கள். ஓராயிரம் தகவல்கள் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கும்’’.

‘‘மகனே! எனக்குச் சீடனாக இருக்கக் கூடிய ஒருவனை நான் தேடினேன். நீ தான் அதற்குப் பொருத்தமானவன்’’ என்றார் சுவாமியார்.

ஆரூரன் அதிர்ந்து போனான். அவனால் அவ்வார்த்தைகளை நம்ப முடியிவில்லை; ‘‘சுவாமி, சுவாமி!’’ ஆரூரன் தடுமாறினான்.

‘‘ஒவ்வொருவனும் தான் நினைப்பது தான் சரி யென்று நினைக்கிறான். நீ நினைப்பவற்றை அச்சமின்றிச் சொல். ஏற்பதும் விடுவதும் மக்களைப் பொறுத்தது. ஒருவனைப் போல இன்னொருவன் இல்லை. அதனால் ஒவ்வொருவரது விருப்பும் வெறுப்பும் வித்தியாசமான தாகவே இருக்கும்’’ சுவாமியார் பேசிக் கொண்டிருந்தார். ஆரூரன் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

**495. நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலில்
நீங்கின் அதனைப் பிற.**

ஆழமான நீரில் முதலை எல்லா உயிர்களையும் வெல்லும்; அந்த முதலை நீரை விட்டு வெளியே வந்தால் மற்ற உயிர்கள் அதனை வென்று விடும்.

## ஓடுமிடங்கள்

‘‘இறைவனை அடைய விரும்புபவர்களும், சாதனை புரிய விரும்புபவர்களும், பற்றுக்களை விட வேண்டும். முக்கியமாக காமத்தையும் பொருளாசையையும் நீக்குதல் வேண்டும். உலகம் பொருளிலும் காமத்திலும் தான் மூழ்கியுள்ளது. அதை நீ நன்குணர வேண்டும். மழை நீர் எப்பொழுதும் பள்ளத்தை நோக்கி ஓடுவதைப் போல மனித மனமும் ஆசைகளை நாடி ஓடும். சூரியன் உலகை ஒளியூட்டிய போதும் மழை மேகங்களால் சூரியனை மறைக்க முடியு மென்பதை மறந்து விடாதே. மழை மேகங்களைப் போன்றவை தான் ஆசைகள். அவை ஆத்மாவிற்கு நல்லொளியைத் தரவல்ல செயல்களைச் செய்ய விடாது மழை மேகங்களைப் போல மறைக்கும். அகங்காரம் இருக்கும் வரையில் முன்னேற்றத்திற்கு இடமே இல்லை. மனம் அலை பாய்ந்து கொண்டேயிருக்கும். அத்துடன் தீய செயல்களைச் செய்வதிலேயே மனம் ஈடுபாடுடையதாக இருக்கும் நல்ல செயல்களை செய்வதற்கு மனதிற்குப் பயிற்சியளித்தல் வேண்டும்; கண்டிக்க வேண்டும்; கஷ்டப்படல் வேண்டும். இராமாயணத்திலும் பாரதக் கதையிலும் கடவுள் மனிதனாகப் பிறந்து வாழ்ந்து காட்டிய போதும் மனிதர்கள் அவரது அவதாரத்தில் பல தவறுகளைக் கண்டு பிடித்துத் தர்க்கிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அது தான் இந்துப் பண்பாடு. மனிதன் பூரணமில்லாதவன். கடவுள் மனிதனாகப் பிறந்தாலும் பூரணமில்லாத மனிதனால் அவரது திருவிளையாடல்களைப் புரிந்து கொள்ள முடியவதில்லை. ஒவ்வொருவனும் தான் புரிந்து கொண்டதைச் சரியென்கிறான்; உண்மை யென்கின்றான்; ஆனால் இவனது சொல்லும் செயலும் அவன் சொன்ன மாத்திரத்தே மறைந்து விடுகின்றன. ஆத்ம ஈடேற்றத்தை விரும்புபவன் தேக

நலனைக் கவனிக்க மாட்டான். அதனால் தான் ரிஷிகளும் முனிவர்களும் தேக நலனைக் கவனிப்பதில்லை.''

ஆரூரன் கரங்களைக் கூப்பிடியபடி சுவாமியாரின் அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு அருகே பலர் வந்திருந்து சுவாமியாரின் அறிவுரைகளைக் கேட்ட போதும் அவனுக்கு அருகில் நடப்பவை எவையும் தெரியவில்லை.

''இறைவன் பல்வேறு பொருட்களை மனிதனின் நன்மைக்காகப் படைத்துள்ளான். வலிமையான சக்கரங்களையுடைய தேர், கடலில் செல்லாது கடலில் பயணிக்கும் கப்பல் தரையில் செல்லாது. ஆனால் ஒரு கவிஞன் ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும் என்று பாடியுள்ளான். ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஒவ்வொரு தனித்தன்மை உள்ளதைப் போல கடவுளால் படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்திற்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. பொருள்களைத் தேடுபவன் அதை நல்ல முறையில் அனுபவிக்கத் தெரியாது தடுமாறுகிறான். பொருட்களைத் தேடத் தெரியாதவன் அனுபவிக்கிறான். பொருளுக்கும் அனுபவித்தலுக்கும் உள்ள வித்தியாசம் போன்றது தான் ஆன்மாவிற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு. சிலர் தமது நன்மைக்காக உன்னைப் பாராட்டுவார்கள் சிலர் தம் மெண்ணப்படி நீ நடக்கவில்லையே என்று தூற்றுவார்கள். இவற்றிற்குச் செவிசாய்த்தால் உன்னால் எதையும் செய்ய முடியாது. அதனால் உடலும் மனமும் பலவீனமடையும். மக்கள் பலவீனப் பட்டிருப்பார்களானால் அதற்கு மதம் காரணமாக இருக்க முடியாது. மதக் கருத்துக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையே காரணமாகும். மக்கள் சமயக் கருத்துக்களை மெய்ஞ்ஞானக் கருத்துக்களாக ஏற்காது மூட நம்பிக்கையென நினைப்பதால் தான் அவர்களால் முன்னேற முடியவில்லை. இந்தத் தன்மை ஏன் வந்தது தெரியுமா?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினார் சுவாமியார்.

யாரும் எதுவும் பேசவில்லை. சுவாமியார் மெல்லக் கண்களை மூடினார். அவரது உதடுகளில் வார்த்தைகள் வெளிவந்தன; ''ஒவ்வொரு சமயக் கருத்தும், ஒவ்வொரு சமய விதியும், ஒவ்வொரு சமயச் சடங்கும் நம் முன்னோரால் நன்கு ஆராயப்பட்ட பின்பே நடை முறைக்கு வந்தன. இதை மூட நம்பிக்கை யென்றும், அவமானமென்றும் பாமர மக்களோடு சேர்ந்து படித்தவர்களும் சொல்கிறார்கள். தற்கால வைத்தியத்தில் உடற்பயிற்சி மருந்தளவு முக்கியம் பெறுகிறது. இதைத் தான் எம் முன்னோர் கோயில்களில் செய்யச் சொன்னார்கள். ஆங்கில வைத்தியர் சொன்னதற்காக நம்மூர்ப் பொறியியலாளர் ஐந்து மைல்கள் நடக்கிறார். மனவொடுக்கத்துடன் தினமும் கோயிலைச் சுற்றிவா என்று சமயம் கூறுகிறது. இதைப் போன்ற கருத்துக்களை நீ மேடைகளில் கூறுதல் வேண்டும். மனிதனை இன்பமாக வாழ ஆசைகளும் உணவுகளும் விட மாட்டாது. இதை அன்று எமது முன்னோர் உணர்ந்தனர். ஆனால், இன்று அதை வைத்தியர்கள் கூறுகின்றனர். மனிதனின் இன்ப வாழ்விற்கான நடை முறைகளை இந்து மதம் எப்படி யெல்லாம் கூறியதோ, அதை அப்படியே நீ மக்களுக்குப் போதித்தல் வேண்டும். அதற்காக நீ கிராமங் கிராமமாகப் பிரயாணஞ் செய்'' சுவாமியார் கூறிக் கொண்டிருந்தார்.

**496. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர்; கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து.**

பலமான சக்கரங்களை உடைய தேர் கடலில் ஓடாது; கடலில் ஓடுகின்ற கப்பல் நிலத்தில் ஓடாது.

## அஞ்சாமை

கணநாதன் தனது தொழிற்சாலைக்கு வந்திருந்தார். தணிகாசலம், விக்னேஸ்வரமூர்த்தி,பரமேஸ்வரன், வேலாயுதபிள்ளை, அங்குசன், தனபாலசிங்கம் போன்ற பல பிரமுகர்கள் அத்தொழிற்சாலைக்கு வந்திருந்தனர். ஆறு மாத காலத்திற்கு முன்பு சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட அத்தொழிற்சாலைக்கு நவீன இயந்திரங்கள் பல பொருத்தி நவீன மயப்படுத்தி அதை அன்று திறக்க விருந்தார் கணநாதன்.

சுப நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. குருக்கள் வந்து கும்பம் வைத்து இயந்திரத்தை இயக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். காலை பத்து முப்பது மணிக்கு நாள்க் குறித்துக் கொடுத்த சுவாமியாரைக் காணாது கணநாதன் தடுமாறிக் கொண்டிருந்தார்.

அவரது தடுமாற்றத்திற்கான காரணத்தை அறிந்து கொண்ட விக்னேஸ்வரமூர்த்தி கணநாதனுக்கு அருகில் வந்தார்; ‘‘சுவாமியார் குறித்த நேரத்திற்கு முன் வந்து விடுவார். இன்னும் சுபநேரத்திற்கு ஐந்து நிமிடங்கள் இருக்கின்றன. கலக்கமடையாதீர்கள். நாம் பல வருடங்களாகச் சுவாமியாருடன் நெருங்கிப் பழகி வருகிறோம். ஒரு நாளென்றாலும் அவர் எம்மை ஏமாற்றியதில்லை’’ என்றார்.

விக்னேஸ்வரமூர்த்தி சமாதானங் கூறிய போதும் கணநாதனின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அவர் எதையும் குறித்த நேரத்திற்கு ச் செய்து பழக்கப்பட்டவர். அதனால் அவரது மனம் துடித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது வாலை உயர்த்திய படி வீமன் நாய் ஓடி வந்து தொழிற்சாலைக்குள் நுளைந்தது. அதைக் கண்ட கணநாதன் நாயைத் துரத்தும்படி தொழிலாளர்களுக்குச் சொன்னார். தொழிலாளர்கள் எவரும் அசையவில்லை.

‘‘சுவாமியார் வருகிறார்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘எங்கே?’’ என்று கேட்டபடி வாசலைப் பார்த்தார் கணநாதன்.

‘‘வீமன் வந்தால் சுவாமியார் வருகிறார் என்று அர்த்தம்’’ என்று விக்னேஸ்வரமூர்த்தி கூறிக் கொண்டிருக்கும் போது அங்குள்ளவர்கள் பரபரப்புடன் அங்குமிங்கும் செல்லத் தொடங்கினர்.

குருக்கள் மந்திரங்களைச் சொல்லியபடி பஞ்சாராத்தியைக் கொழுத்தி இயந்திரத்திற்குக் காட்டினார். அப்பொழுது கணநாதன் மணிக்கூட்டைப் பார்த்தார். இன்னும் இரண்டு நிமிடங்கள் இருந்தன. உள்ளே வந்த சுவாமியார் இயந்திரத்திற்கு வீபூதி பூசி, சந்தணத்தைத் தொட்டு வைத்தார். பின் பூக்களை எடுத்து வைத்து விட்டு இயந்திரத்தை இயக்கும் விசையைத் தொட்டதும் பேரிரைச்சலுடன் இயந்திரம் இயங்க ஆரம்பித்தது.

ஆரூரன் தணிகாசலத்திற்கு அருகில் வந்து நின்றான். வீமன் மகிழ்வுடன் இயந்திரத்தை முகர்ந்து பார்த்து விட்டுச் சுவாமியாரின் அருகில் வந்து நின்றது.

"நான் நேரத்திற்கு வரவில்லை என்று நினைக்கிறீர்களா?" கணநாதனைப் பார்த்துக் கேட்டார் சுவாமியார். கணநாதன் பேசாமல் நின்றார்; "மகனே நேரம் பொன்னைப் போன்றது. ஒரு கணத்தைக் கூட அவமாக ஒரு மனிதன் கழிக்கக் கூடாது. உண்மையான உழைப்பு நேரத்தை வீணாக்காமையில் தான் தங்கியுள்ளது. ஒருவனின் முன்னேற்றமும் அது தான். நேரத்தைப் பொன்னாகக் கருதுபவன் தான் உலகை வெல்லக் கூடியவனாவான்" என்றார் சுவாமியார்.

"நான் என் உயிரைப் போல நேரத்தை மதிக்கிறேன்" என்றார் கணநாதன்.

எல்லோருக்கும் கற்கண்டும் பாலும் வழங்கப்பட்டது.

"செய்யும் செயல்களைக் குறைவில்லாமல் எண்ணிப் பார்த்து தக்க இடமும் அறிந்து செயற்பட்டால், வெற்றி பெறலாம். அதற்கு துணிவைத் தவிர வேறு எந்தத் துணையுந் தேவையில்லை. இதை நான் எனது அனுபவத்தால் உணர்ந்துள்ளேன்" என்றார் பரமேஸ்வரன்.

"உண்மை தான். என்னிடம் இத்தொழிற்சாலையை உடனடியாகத் தொடங்குவதற்கான முதல் இருக்கவில்லை. துணிவுடன் கடன்பட்டே தொடங்கினேன். எனது துணிவுதான். வெற்றியைத் தந்தது" என்றார் கணநாதன்.

"மனிதனுக்கு எதிரி பயம் தான். பேய்க்குப் பயம்; பிசாசுக்குப் பயம்; மனிதர்களுக்குப் பயம்; தொழில் தொடங்கப் பயம்; இப்படிப் பயந்து கொண்டிருப்பதால் தான் பலர் முன்னேற முடியாது கஷ்டப்படுகிறார்கள். உலகில் முன்னேறியவர்களின் வரலாற்றை எடுத்து நோக்கினால், முன்னேறியவர்க ளெல்லோரும் துணிவுள்ளவர்களாக இருந்ததை நாம் காணக்கூடியதாக இருக்கும்" என்றார் சுவாமியார்.

"இந்தத் தொழிற்சாலையைத் துணிவுடன் ஆரம்பித்து எமது கிராம இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியதற்கு மிகவும் நன்றி" என்றார் தணிகாசலம்.

**497. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தால் செயின்.**

செய்யும் செயல்களை நன்கு ஆலோசித்து தக்க இடத்தில் செய்தால், அஞ்சாமையைத் தவிர வேறு துணை தேவையில்லை.

## வாய்ப்பான இடம்

புதிய இயந்திரங்களைப் பொருத்தி நவீனமயப்படுத்த வந்த கணநாதன் கொழும்புக்குச் சென்று விட்டார். போகும் போது அவர்; "உனது வேண்டு

கோளுக்காகத் தான் இத் தொழிற்சாலையை இந்தக் கிராமத்தில் அமைத்தேன் கவனித்துக் கொள்'' என்று கூறினார். அதை நினைக்கப் பரமேஸ்வரனுக்கு சிரிப்பு வந்தது; ''இந்தக் கிராமத்தில் ஒரு தொழிற்சாலையை அமைக்க விரும்பியே இங்கு வந்தேன். எனது நண்பனான உனது வீட்டில் சில நாட்கள் தங்க வேண்டும் என்று அவரைக் கேட்ட பின்பே தனது தொழிற்சாலையைக் கொடுத்தார். அப்படியிருக்கத் தனது வேண்டு கோளுக்காகத் தான் தொழிற்சாலையை அமைத்தேன் என்று கணநாதன் கூறுவது எந்தளவில் நியாயம் என்று நினைக்க அவருக்குச் சிரிப்பு வந்தது.

இப்பொழுது அவருக்கு ஆன்மீகத்தைத் தவிர வேறு எதிலும் நாட்டம் இல்லை. கோயில், சுவாமியார், புத்தகம் என்றே வாழ்ந்து கொண்டிருந்தார். அதில் அவருக்கு இது வரை கிடையாத நிம்மதி கிடைத்தது.

அன்று பூரணை நாள். சுவாமியாரின் அருளுரையைக் கேட்டமையால் மனமும் உடலும் லேசாகி இருந்தன. வானத்தில் பூரண சந்திரன் உலாவிக் கொண்டிருந்ததால் தாரகைகள் பலவற்றைக் காணவில்லை. வெண் மேகக் கூட்டங்கள் திரள் திரளாகச் சந்திரனைச் சூழ்ந்து கொண்டிருந்தன.

பரமேஸ்வரன் மேசையில் முன்பு வாசித்து விட்டு வைத்த புத்தகத்தை எடுத்து வாசித்தார். அவருக்குப் பழைய அரசர்களின் கதைகள் தான் கூடுதலாகப் பிடிக்கும். முன்பு தணிகாசலம் கொண்டு வந்து கொடுக்கும் புத்தகங்களை வாசிப்பார். கஜேந்திரனும் நகுலனும் நண்பனானதும் அவர்களிடம் நல்ல நல்ல புத்தகங்களை வாங்கிப் படிப்பார்.

சோழ நாட்டின் அருகே உள்ள அரசம்பாடி என்ற நாட்டை வேலவன் என்ற சிற்றரசன் ஆண்டு வந்தான். மூன்று வருடங்களுக்கு முன் கஜமுகன் என்ற அரசனை வென்றே வேலவன் அந்நாட்டின் அரசனானான். கஜமுகன் போரிட்ட போது தப்பியோடி விட்டான். அவனுடன் படைத்தளபதிகள் இருவரும் தப்பிச் சென்று விட்டனர். அவர்கள் இரவில் நாட்டுள் புகுந்து பல அடாவடித்தனங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அரசம்பாடி நாட்டிற்கு அருகில் உள்ள நாடு வளவை நாடு. அதன் அரசன் மணி மாறன் கஜமுகனின் தோழன். அதனால் கஜமுகன் வளவை நாட்டில் இருந்து கொண்டு வேலவனுக்குத் துன்பங்கள் செய்து கொண்டிருந்தான்.

வேலவன் படையைத் திரட்டித் தனது நாட்டைக் காவல் செய்த போதும் வளவை நாட்டுப் படைகளும் கஜமுகனுடன் சேர்ந்து அரசம் பாடி நாட்டுக்குள் புகுந்து கலகங்கள் செய்து கொண்டிருந்தன. அதை அடக்கக் கஷ்டப்பட்ட வேலவன் சோழ மன்னனுடன் நட்புப் பூண்டான். தனது தங்கையை சோழ நாட்டிற்கு தூதுவராக அனுப்பினான். அவளின் அழகில் மயங்கிய சோழ நாட்டுச் சேனாதிபதியின் மகன் புலித்தேவன் அவளை விரும்பி வேலனிடம் பெண் கேட்டான். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த வேலன் உடனே திருமணத்தை முடித்து வைத்தான்.

அன்று மணி மாறனும் கஜமுகனும், நந்தவனத்தில் சந்தித்தனர் ''கஜமுகா வேலவன் நல்லவன், நீ மக்களை மதியாது ஆட்சி செய்தமையால் தான் உனது படைகளும் நாட்டு மக்களும் வேலவனுடன் சேர்ந்து உன்னை எதிர்த்தனர். நீ சண்டையிட முடியாது தப்பிச் சென்று விட்டாய். நீ நண்பன் என்ற காரணத்தாலும், அரசம்பாடி சிறிய நாடென்பதாலும் நான் உனக்கு உதவி

செய்ய முன் வந்தேன். அதை உணர்ந்த வேலவன் தனது தங்கைக்குச் சோழ நாட்டின் சேனாதிபதியின் மகனைத் திருமணஞ் செய்து கொடுத்து விட்டான். இனி நான் உனக்கு உதவி செய்தால் சோழ நாட்டின் பகையைச் சம்பாதிக்க வேண்டி வரும். சோழர்கள் பெரும் வீரர்கள். அவர்களிடம் உள்ள நாற்படை வீரர்களும் திரண்டு வந்தால் எமது நாட்டில் நிற்கக் கூட இடம் போதாது. சிறிய படையை உடைய வேலவன் வாய்ப்பான இடத்தை அடைந்து விட்டான். எனவே அவனை வெல்ல நினைத்தால் இருவரும் கூண்டோடு அழிய வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன் எமது படை வீரர்களை அரசம்பாடி நாட்டுக்குள்ச் செல்ல வேண்டா மென்று உத்தரவிட்டுள்ளேன். நீ எனது நண்பன். அதனால் உன்னை நான் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. அவர்கள் உன்னைக் கைது செய்து தம்மிடம் ஒப்படைக்குமாறு கூறு முன் தயவு செய்து எனது நாட்டை விட்டு வெளியேறி விடு'' என்றான் மணிமாறன்.

கஜமுகன் அதை எதிர்பார்க்கவில்லை. மிகவும் துக்கத்துடன் முகத்தைத் தொங்கப் போட்டவாறு அமர்ந்திருந்தான்; ''கஜமுகா சிறிய படையை உடைய அரசனாக இருந்தாலும் அவன் வாய்ப்பான இடத்தை அடைந்து விட்டால் அவனை வெல்ல நினைப்பவர்கள் தம் எண்ணத்தைக் கைவிட வேண்டும்'' என்றான் மணிமாறன்.

**498. சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.**

சிறிய படையை உடையவனும் பொருத்தமான இடத்தில் பொருந்தி நின்றால், பெரிய படையை உடையவனது வலிமை அழிந்து விடும்.

## அரிதானது

''மணிமாறா நான் உன்னை மலை போல நம்பியிருக்கிறேன். தயவு செய்து எனக்கு உதவி செய். அரசியலில் எதுவும் நடைபெறலாம். பழைய சித்தாந்தங்களை வைத்துக் கொண்டு நாம் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க முடியாது. தளபதியின் மகனுக்காக சோழ மன்னன் உன்னை எதிர்பார் என்றோ, வேலவனுக்கு உதவி செய்யவாரென்றோ நான் நினைக்கவில்லை. ஒற்றர்களை அனுப்பிக் கள நிலையை ஆராய்வு செய்வோம்'' என்றான் கஜமுகன்.

''சோழநாட்டின் வரலாற்றை எடுத்துப்பார். அவர்களது நூற்றாண்டு கால ஆட்சி முறையை நாம் நோக்கினால் ஒரே குடும்பத்தின் வாரிசுகள் தான் தளபதிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். சோழவம்சத்தினர் அந்தக் குடும்பத்தினரின் மீது அதீத நம்பிக்கை வைத்திருக்கின்றனர். தற்போதுள்ள தளபதிக்கு வயது வந்து விட்டது. அவர் ஓய்வு பெற்றுக் கொள்ள ஆசைப்படுகிறார். தனது மகனைத் தளபதியாக நியமிக்கும்படி அரசரை வற்புறுத்தி வருகிறார். அதை அரசரும் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் தற்பொழுது போர் செய்யும் நோக்கமில்லாததால் அந்த நியமனம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நாம் அரசம்பாடி நாட்டுடன் போரிட்டால் கட்டாயம் புலித் தேவனைப் படைத் தளபதியாக நியமித்து எம்மை எதிர்க்க அனுப்புவான்'' என்றான் மணிமாறன்.

‘‘வீணாக நாம் கற்பனை செய்யத் தேவையில்லை. அப்படி எதுவும் நடை பெற மாட்டாது. சோழ மன்னன் நீதியானவன். நான் இழந்த நாட்டைக் கைப்பற்றுவதற்காகப் போராடுவதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டன்’’ என்று கஜமுகன் கூறிக் கொண்டிருக்கும் போது மணிமாறன் குறுக்கிட்டுச் சொன்னான்; ‘‘ஆராயாமல் கதைக்காதே. புலித்தேவனின் மனைவி புலித்தேவனுக்குத் தனது சகோதரனைக் காப்பாற்றுமாறு கூறினால் அவன் கடைசிவரையும் மறக்க மாட்டான். புலித்தேவன் அவளின் அழகில் மயங்கித்தான் திருமணஞ் செய்தான். திருமணமாகி மூன்று மாதங்கள் கூடக் கழியவில்லை. அந்த மயக்கத்தில் இருந்து விடுபட முன் நாம் அவர்களுடன் போர் செய்வது முட்டாள்த் தனம்’’

‘‘என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இழந்த எனது நாட்டை நான் மீட்க வேண்டும்’’.

‘‘நல்லது, ஒரு வீரனுக்கு அழகு அதுதான். அதை நீ எனது நாட்டில் இருந்து செய்வதை நான் விரும்பவில்லை. அரசம்பாடி நாட்டின் எல்லைப் புறத்தில் உள்ள காட்டில் மறைந்திருந்து போராடு. உன்னுடன் இரண்டு தளபதிகள் இருக்கிறார்கள். உன்னுடைய திறமையைப் பாவித்து படைகளைத் திரட்டு, அதைத் தவிர என்னால் வேறு எதுவும் செய்ய முடியாது. நேற்று மாலை ஒரு முனிவர் நடராஜர் கோயில் இருந்து மக்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தவராம். அவரை எமது ஒற்றர்கள் சந்தேகிக்கிறார்கள். சில சமயம் அவன் புலித்தேவன் அனுப்பிய ஒற்றனாகவும் இருக்கலாம்..’’ சொல்லும் போதே தடுமாறினான் மணிமாறன்.

கஜமுகன் எதுவும் பேசவில்லை. அவன் மணிமாறனின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து போனான். அவன் கூறுவது முழுவதும் உண்மை என்று அவனுக்குப் புரிந்தது. இருந்த போதும் தனது எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக அப்படிக் கதைத்தான்.

‘‘சோழ நாட்டைப் பகைக்க நான் விரும்பவில்லை. முதலமைச்சர் என்னை இன்று சந்தித்து நாட்டு நிலைமையைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்; ‘‘அரசே! உங்கள் நட்புக்காக நாட்டின் நலத்தைக் கெடுக்காதீர்கள். சோழப் பேரரசன் மிகவும் நல்லவன்; நீதியானவன், அவன் காரணமின்றி எம்மோடு போர் தொடுக்கமாட்டான். முன்பு நீங்கள் கஜமுகனுக்கு உதவி செய்யும் போதே எனக்கு அது விருப்பமில்லை. பல முறை உங்களுக்கு அதை நான் எடுத்துச் சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. அப்போது புலித்தேவனுக்குத் திருமணமாகவில்லை. வேலவன் தனது பாதுகாப்பிற்காகத் தான் தனது தங்கையைப் புலித்தேவனுக்குத் திருமணஞ் செய்து வைத்தான். இதைத் தெரிந்த பின்பும் நாம் கஜமுகனுக்கு உதவி செய்யலாமா..? பலத்த கோட்டையும் வலிமை மிக்க வீரர்களும் இல்லாத பகைவர்களைக் கூட, அவர்கள் வாழும் இடத்திற்குச் சென்று வெல்லது அரிது. எம்முடன் வேலவன் கடைசிவரையும் போர் தொடுக்கமாட்டான். நாம் தான் போர் தொடுக்க வேண்டி வரும். அப்படிப் போர் தொடுத்தால் நாம் வெற்றி பெற மாட்டோம்’’ என்று கூறுறினார். முதலமைச்சரது வார்த்தைகளைத் தட்ட முடியவில்லை’’ என்றான் மணிமாறன்.

கஜமுகனுக்குத் தலை சுற்றியது. அவனால் பேசமுடியவில்லை. அங்கிருந்து புறப்பட்டு எங்கு செல்வது என்பதை நினைக்க அவனுக்குப் பயமாக இருந்தது.

**499. சிறைநலனும் சீரும் இலர் எனினும் மாந்தர்.**
**உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.**

பகைவனிடம் தக்க அரனும் மற்றச் சிறப்புக்களும் இல்லா விட்டாலும், அவன் வாழ்கின்ற இடத்திற்குச் சென்று அவனை வெல்வது அரிது.

## நரி வெல்லும்

‘‘மணிமாறா, முதலமைச்சர் என்மீது கொண்ட வெறுப்பின் காரணமாகத்தான் அப்படிச் சொல்கிறார். சபையில் நான் அவரை மதியாமல் பலமுறை இகழ்ந்து பேசியுள்ளேன். அந்தக் கோபத்தை இப்பொழுது சாதிக்கப்பார்க்கிறார். உனக்கு ஞாபகம் இருக்கா எமது நாட்டில் இந்திரவிழா நடைபெற்ற பொழுது குடும்பமாக வந்த முதலமைச்சரை எமது படைத்தளபதி திருப்பி அனுப்பி விட்டான். அதை அவர் ஞாபகமாக வைத்துக் கொண்டு சபையில் பலமுறை சூழுரைத்திருக்கிறார். அப்படியானவரின் சொல்லை நீ கேட்கலாமா?’’ கஜமுகனின் குரல் தழுதழுத்தது. கண்கள் கலங்கின.

‘‘எதையும் நீ முன்பு யோசிப்பதில்லை. உனது நாட்டில் குழப்ப மேற்படப் போகிறதென்று நான் உனக்கு எத்தனை முறை எச்சரித்தேன். அதை நீ நம்பவில்லை. அசட்டையாக இருந்தாய். அன்று கவனமெடுத்திருந்தால் இன்று இந்த நிலை உனக்கு வந்திராது. ஒரு செய்தியை, அது பொய்யான செய்தியாக இருந்தாலும் பலரும் கதைத்தால் மெய்யாகி விடும். மெய்யான செய்தியை யாரும் கதைக்காவிட்டால் அது வதந்தியாகி விடும். நான் உனக்குப் பல தடவைகள் சொல்லிய போதும் நீ அதைக் கேட்கவில்லை. கேளிக்கைகளில் மயங்கியிருந்தால் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை. மக்களும் பிரதானிகளும் உனது அடாவடித்தனமான ஆட்சி நீங்க வேண்டு மென்பதற்காகப் பல செய்திகளை உனக்கு மறைத்து விட்டனர். உனது முதலமைச்சர் வேலவனுடன் உறவு வைத்திருக்கிறார் என்று நான் கூறிய போது, நீ ஏளனமாகச் சிரித்தாய். அவர் வரைவில் மகளிரைப் போல உனக்கு விசுவாசமாக இருந்து கொண்டு, வேலவனின் பொருளுக்கு ஆசைப்பட்டு கருமமாற்றினார். அந்த நிலை எனக்கு வரக் கூடாது’’ என்றான் மணிமாறன்.

அப்பொழுது முதலமைச்சர் அங்கே வந்தார். அவரது உதட்டில் புன்னகை தவழ்ந்தது; ‘‘கஜமுகா...’’ இது வரை காலமும் ‘‘அரசே’’ என்று அழைத்த அவர் தற்பொழுது பெயர் சொல்லியழைப்பதைக் கேட்டு அதிர்ந்து போனான் கஜமுகன். நிமிர்ந்து அவரைப் பார்த்தான். அவரது உதடுகளிலும் கண்களிலும் முகத்திலும் ஏளனம் படர்ந்திருப்பதைப் போலக் கஜமுகனுக்குத் தோன்றியது; ‘‘என்ன பெயர் சொல்லியழைக்கிறேன் என்று கோபப்படுகிறாயா? நீ இப்பொழுது செல்லாக்காசு. நான் நினைத்தால் உன்னைக் கைது செய்து வேலவனிடம் ஒப்படைக்கலாம். அது நீதியானதல்ல. எமது மன்னர் மணிமாறன் மிகவும் நல்லவர். சுத்தவீரன். அவர் வேலவனின் தங்கையைத் திருமணம் செய்ய விரும்பினார். அச் செய்தியை அவர் வேலவனுக்குச் சொன்ன போது வேலவன் கவலைப்பட்டான். அதை முன்பே சொல்லியிருந்தால் புலித்தேவனுக்குச் செய்து கொடாமல்

உனக்குச் செய்து தந்திருப்பேன்'' என்றான். அந்தளவில் அவர்களுக்குள் நட்புள்ளது. நீ வேடதாரி. தருணத்திற்கு ஏற்ற மாதிரி உனது மனதை மாற்றிக் கொள்வாயென்று எமக்குத் தெரியும். மணிமாறன் நண்பனாக இருந்த போதும் நீ அவனை நண்பனாகக் கருதவில்லை. அவனை எதிரியாகக் கருதி இந்நாட்டை அபகரிக்கத்திட்டமிட்டாய். அதனால் நாம் தான் உதவி செய்து வேலவனை அரசனாக்கினோம். நீ நட்பை மதித்திருந்தால் இந்திரவிழாவுக்கு உனது அழைப்பின் பேரில் வந்த என்னை அவமானப் படுத்தியிருக்க மாட்டாய்''.

''நீ துரோகமிழைத்தாலும் என்னால் நண்பனுக்கெதிராகச் செயற்பட முடியவில்லை. அதனால் தான் முதலமைச்சரைக் கொண்டு உண்மையான நிலையைச் சொல்ல வைத்தேன். கஜமுகா, நீ ஒன்றை மனதில் வைத்துக் கொள். நண்பன் எத்தகைய துரோக மிழைத்தாலும் அவனுக்குத் துரோகம் செய்யக் கூடாது. அதனால் தான் உன்னையும் உனது வீரர்களையும் நாட்டை விட்டுப் போகும் படி கூறினேன். நண்பர்களைச் சந்தேகித்தால் ஆபத்தான வேளைகளில் உதவ மாட்டார்கள். ஆயிரக்கணக்கான வேல் கொண்ட வீரர்களைக் கொன்று குவித்து, தனது உடலெங்கும் வேல்களுடன் போரிட்டு வெற்றியடையும் யானையும் சேற்றில் சிக்கி விட்டால் குள்ளநரி அதைக் கொன்று விடும். இதை நீ அறியவில்லையா? அரசர்கள் அரசாளும் போது மக்களின் மனமறிந்து செயற்படல் வேண்டும். இல்லாவிட்டால் உனக்கு நேர்ந்த கதிதான் எனக்கும் ஏற்படும். நீ இப்பொழுது சேற்றில் சிக்கிய யானையின் நிலையில் உள்ளாய். எனவே தயவு செய்து இந்த நாட்டை விட்டுத் தாமதியாது புறப்படு'' என்றான் மணிமாறன்.

''கஜமுகன், மணிமாறனைக் கவலையுடன் பார்த்தான். அவனைப் பார்க்கக் கூடாதென்பதற்காக மணிமாறன் தனது முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான்; ''இதற்குப் பின்பும் நான் இங்கிருப்பது சரியல்ல'' என்ற கஜமுகன் மெல்ல நடந்தான். அமைச்சர் பூரிப்புடன் சிரித்தார்.

கதையை வாசித்து முடித்த பரமேஸ்வரன் புத்தகத்தை மூடித் தனது நெஞ்சில் வைத்தார். கஜமுகனின் செயலால் அவன் நாட்டை இழந்தது நியாயமாகப்பட்டது. கஜமுகனைப் போலத் தானும் பல முறை நண்பர்களுடன் நடந்து கொண்டமையால் தான் தனக்கும் நஷ்டமேற்பட்டது என்று நினைத்தார். நெஞ்சு கனத்துக் கண்கள் ஊறின.

**500. கால்ஆழ் களரில் நரிஅடும் கண் அஞ்சா**
**வேலாள் முகத்த களிறு.**

வேலேந்திய வீரனைக் கண்டு அஞ்சாமல் வெற்றி கொண்ட யானை, சேற்று நிலத்தில் காலைப் புதைத்துச் சிக்கிக் கொண்டால் அதை நரி கொன்று விடும்.

## தகுந்தவனா என அறி

கணநாதனின் பிரதம பொறியலாளர் பதவியிலிருந்து விலகிச் சென்று தனியானதொரு தொழிற்சாலையை அமைக்க விரும்பினார். தனது எண்ணத்தை அவர் கணநாதனிடம் சொன்னார். தான் அதைச் சொன்னால் அவர் தனது திறமை காரணமாகத் தன்னை விடமாட்டார்'' என்று நினைத்தார். அத்துடன் பதினைந்து வருட காலமாக எந்தவிதமான குற்றச் செயல்களையும் செய்யாது

வேலை செய்த தன்னை விடுவது பெரும் இழப்பென்று கருதுவாரென்றும் நினைத்தார்.

‘‘அப்படியா? மனிதன் முன்னேற வேண்டும். தனக்குக் கீழ் வேலை செய்பவன் முன்னேற மேலாளர்கள் உதவி செய்தல் வேண்டும். நீர் எனது தொழிற்சாலையில் பதினைந்து வருடங்களாக வேலை செய்கிறீர். திறமையுடன் உமது தொழிற்சாலையைப் போல எண்ணி உழைத்தமையால் தான் இத் தொழிற்சாலை இலாபம் பெற்றது. வாழ்நாள் முழுவதும் இன்னொருவனுக்குக் கீழிருந்து வேலை செய்வதன் மூலம் ஒருவன் முன்னேற முடியாது. அவன் தனித்துத் தொழில் செய்தல் வேண்டும். நான் ஆரம்பத்தில் பொன்னம்பலம் முதலாளியிடம் கூலியாகத் தான் சேர்ந்தேன். காலப் போக்கில் எனது திறமையை உணர்ந்த முதலாளி என்னைத் தொழிற்சாலைக்குப் பொறுப்பானவனாக நியமித்தார். சில வருடங்கள் அந்த வேலையைக் கண்ணியமாகச் செய்ததால் தொழிற்சாலையின் சகல வேலைகளையும் நான் பழகி விட்டேன். பின் நான் முதலாளியிடஞ் சென்று ‘‘புதிதாக ஒரு தொழிற்சாலையை நிறுவப் போகிறேன்’’ என்று சொன்னேன். முதலாளி மகிழ்ந்து நீ பத்து வருடங்கள் மிகவும் நல்ல முறையில் வேலை செய்தபடியால் நான் உனக்குப் பணம் தருகிறேன் என்று கூறிப் பணமும் தந்தார். அவரது நல்லாசியால் தான் நான் இன்று நல்லாயிருக்கிறேன். சென்றவாரமும் அவரைச் சென்று சந்தித்தேன். எனது தொழிலைப் பற்றிக் கேட்டுச் சந்தோசமடைந்தார். எனது முதலாளி சொல்வார்; ‘‘ ஒருவனை வேலைக்கமர்த்தும் போது அறம், பொருள், இன்பம் தன் உயிருக்கு அஞ்சுகின்ற அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராய்ந்தே பின்பே அவனை அமர்த்துதல் வேண்டும். அறத்தின் மீது நம்பிக்கை வைத்து ஒழுக்கமுள்ளவனாக வாழ்பவனாகவும், பொருள் விஷயத்தில் அவதானமும், எளிமையும், பிறர் பொருளைத் தன் பொருளாக எண்ணிப் பாதுகாக்கும் தன்மையுடையவனாகவும், இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக மதிப்பவனாகவும் அதே சமயம் நியாயத்திற்காகத் தனது உயிரையும் கொடுக்கக் கூடியவனாகவும் இருப்பவனையே நாம் செயலுக்குத் தகுந்தவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்’’. என்பார். நீர் இவ்வளவு காலமும் நான் சொன்ன முறையில் வேலை செய்துள்ளீர். அதற்காக நான் ஒரு தொகைப் பணம் தருகிறேன். எப்போது புதிய தொழிலை ஆரம்பிக்கப் போகிறீர்’’ என்று கேட்டார் கணநாதன்.

பொறியியலாளர் அதை எதிர் பார்க்கவில்லை. பல காரணங்கள் சொல்லித் தன்னை மறிப்பார் என்று தான் எதிர்பார்த்தார். அதனால் சற்றுத் தடுமாறினார்.

‘‘நீர் எப்பொழுது வேண்டு மானாலும் வேலையால் நிற்கலாம். ஆனால் நிற்கு முன்பு அறியத்தாரும். நான் அறம், பொருள், இன்பம், தன் உயிருக்காக அஞ்சுகின்ற அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராய்ந்த பின்பே உமது வெற்றிடத்தை நிரப்புவேன். கணக்காளரிடம் கூறுகிறேன் பணத்தைப் பெற்றுச் செல்லும். ஒருவன் நன்கு படித்திருக்கலாம், தொழிலுக்கேற்ற முதலை வைத்திருக்கலாம். ஆனால், தொழிலில் வெற்றி பெற மிகுந்த ஆளுமை வேண்டும். உமக்கு வெற்றி பெறக் கூடிய அத்தனை தகுதிகளும் உண்டு ‘‘செய்யும் செயலைக் குறைவில்லாமல் எண்ணிப்பார்த்து, தக்க இடமறிந்து காரியஞ் செய்தால், வெற்றி பெறுவதற்கு, அஞ்சாமையைத் தவிர வேறு எவையும் வேண்டியதில்லை’’ என்று எனது முதலாளி அடிக்கடி கூறுவார். அதை நான் வேதவாக்காகப் பின் பற்றி வருகிறேன். அது உண்மை. இந்தக் காலத்தில் வங்கியில் தொழிலுக்குத் தேவையான முதலையும் ஆலோசனைகளையும்

பெறலாம். துணிவைப் பெற முடியாது. நீ துணிவுடன் செயலாற்று. வெற்றி பெறுவாய். கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்'' என்றார் கணநாதன்.

''மிகவும் நன்றி ஐயா. நான் பலகாலமாக இதை மனதில் நினைத்திருந்தேன் நல்ல மனிதனாக உங்களிடஞ் சொல்லத் தைரியம் வரவில்லை'' என்றார் பொறியியலாளர்.

கணநாதன் சிரித்தார்; ''நீதிக்குப் பிறம்பான செயல்களைச் சொல்லத் தான் தைரியமில்லாமல் இருத்தல் வேண்டும். இவற்றையெல்லாம் துணிவுடன் சொல்ல வேண்டும். தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கும் போது நான் கூறியவற்றைக் கவனத்தில் எடு'' என்றார் கணநாதன்.

''நீங்கள் தான் என்றும் எனக்கு முதலாளி; தெய்வம், உங்களின் சொற்படி தான் நான் செயற்படுவேன். தேவையேற்படும் போதெல்லாம் தங்களிடம் ஆலோசனைகள் கேட்க வருவேன். இவ்வளவு காலமும் என்னை உங்களது சகோதரன் போல நடத்தி எனது குடும்பத்தின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் கலந்து ஆலோசனை வழங்கி, பணவுதவி செய்தது போல தொடர்ந்தும் செய்தல் வேண்டும்'' கலங்கினார் பொறியியலாளர்.

**501. அறம்பொருள் இன்பம் உயிர் அச்சம் நான்கின்**
**திறம்தெரிந்து தேறப்படும்.**

அறம்,பொருள்,இன்பம், உயிருக்காக அஞ்சுகின்ற அச்சம் ஆகிய நான்கு வகைகளாலும் ஆராயப்பட்ட பின்பே ஒருவன் தொழிலுக்குத் தகுதியானவன் தானா என்று தெரியப்படுவான்.

## நம்பித் தெளிதல்

பொறியியலாளர் முகுந்தன், தனது நண்பனான வசந்தனுக்குத் தனது பதவியைக் கொடுக்கும்படி கோரி அவனையும் அழைத்துக் கொண்டு கணநாதனின் தொழிற்சாலைக்கு வந்தார். அப்பொழுது கணநாதன் வெளிநாட்டுப் பிரமுகர் ஒருவருடன் மிகவும் முக்கியமான விடயம் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்.

பொறியியலாளர் முகுந்தன் தனது தொழிற்சாலையை விட்டு நீங்குவதாகக் கூறிய பின்பு அவரை எதற்கும் கணநாதன் அழைப்பதில்லை. அன்று வெளிநாட்டு பிரமுகர்கள் வந்ததே அவருக்குத் தெரியாது. அன்று தொழிற்சாலைக்கு, அதுவும் கணநாதனைச் சந்திப்பதற்கென்று வந்த பின்பு தான் அவ்விஷயம் அவருக்குத் தெரிய வந்தது. முன்பென்றால் இரண்டு தினங்களுக்கு முன்பே அவரை அழைத்து வருபவர்கள் யார், அவர்கள் எதற்காக வருகிறார்கள். அவர்களுடன் என்னென்ன கதைத்தல் வேண்டு மென்றெல்லாம் சொல்லி விடுவார். ஆனால் அன்று அவர் எதுவும் சொல்லவில்லை. பல வருடகலாமாக விசுவாசத்துடன் செயற்பட்ட அவருக்கு கணநாதனின் செயல் துக்கத்தைக் கொடுத்தது. தான் அக்குடும்பத்திலிருந்து அந்நியப்பட்டு விட்டதாக நினைத்தார்.

வாசலில் கணநாதனைக் காண்பதற்காக அவரும் வசந்தனும் இருந்த போது காரியாலயச் சேவகன் வந்து சொன்னான்; “ இன்று முழுவதும் ஐயா, யாரையும் சந்திக்க மாட்டார். சந்திக்க வருவோரைப் புதன்கிழமை வரும்படி கூறச் சொன்னவர்”.

“நான் வந்திருக்கிறேன் என்று சொல்லு”

“ஐயா, முதலாளியைப் பற்றி உங்களுக்கு நன்கு தெரியும். அவர் சந்திக்க மாட்டன் என்று கூறினால் அவரது மனைவி மக்களே அவரைச் சந்திக்க முடியாது. அப்படியிருக்க நீங்கள் எப்படிச் சந்திக்கலாம். தொழிற்சாலை சம்பந்தமான முக்கியமான கூட்டம் நடைபெறுகிறது. அதில் கட்டாயம் நீங்கள் கலந்து கொள்ளல் வேண்டும். நீங்கள் புதிய தொழிற்சாலையை ஆரம்பிக்க இருப்பதால் உங்களின் இடத்திற்குப் புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நான் உள்ளே சென்றால் கட்டாயம் கண்டிப்பார். அதை நான் விரும்பவில்லை” என்றான் காரியாலைச் சேவகன்.

பொறியியலாளர் திகைத்து விட்டார். அவருக்குத் துக்கமாகவும் அவமானமாகவும் இருந்தது. தான் சொல்பவற்றை மறு பேச்சின்றிச் செய்பவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலை தனக்கு ஏற்பட்டதை நினைத்து வருந்தினார் பொறியியலாளர். அதைவிட கணநாதனின் மேலிருந்த நம்பிக்கை மிகுதியால் வசந்தனுக்கு நம்பிக்கையூட்டிச் சொன்ன வார்த்தைகளை நினைத்துப்பார்த்தார்; “நான் பதினைந்து வருடகாலமாகக் கடமையுணர்வுடன் வேலை செய்து வருகிறேன். எனது முதலாளி மிகவும் நல்லவர். என்னில் நிறைய நம்பிக்கை வைத்துள்ளார். எனவே நான் சொல்வதைக் கேட்பார். எனக்கு அவர் தரும் மதிப்பு மரியாதையை நீ வந்து பார்” என்று கூறியிருந்தார். அவருக்கு வசந்தனது முகத்தைப் பார்க்க வெட்கமாக இருந்தது. அவரது நிலையை உணர்ந்த வசந்தன் சொன்னான்; “முகுந்தா, நீ வேலையில் இருந்து நீங்குவதாகச் சொன்னால் அவர் புதியவரை வேலைக்கு எடுக்கத்தானே வேண்டும். அத்துடன் அவ்வேலைத்திட்டம் பூர்த்தியாக இரண்டொரு வருடங்களும் செல்லலாம். அப்படியிருக்க அவ் வேலைத் திட்டத்திற்கு எப்படி உன்னைப் பொறுப்பாக நியமிப்பது. யோசித்துப் பார். கணநாதன் கனவான் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அவர் நிர்வாக விடயங்களில் மிகவும் கண்டிப்பானவர். அவருக்குச் சிபார்சு செய்வது பிடியாது. அதனால் தான் நான் உன்னோடு வர மறுத்தேன். சில சமயம் நான் தனியே சென்று சந்தித்தால் எனக்கு வேலை கிடைக்கலாம்”.

வசந்தனின் வார்த்தைகள் முகுந்தனுக்குத் துக்கத்தையும் அவமானத்தையும் கொடுத்த போதும் அவன் எதுவும் சொல்லவில்லை.

அன்று மாலை ஐந்து மணிக்கு அலுவலகப் பணியாளர் வந்து; “முகுந்தன் ஐயாவை முதலாளி வரட்டாம்” என்று சொன்னான்.

முகுந்தன் அலுவலகத்துள்ச் சென்ற போது கணநாதன் மிகவும் மகிழ்வுடன் அவரை வரவேற்றார்; “காலையில் நீங்கள் வந்ததாகச் சொன்னார்கள். ஒருவனிடம் ஒரு பணியை ஒப்படைக்கும் போது பலவற்றைப் பார்க்க வேண்டும். நீதியாக ஒழுக்கத்துடன் வாழ்கின்ற குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருத்தல் வேண்டும். அவன் குற்றங்கள் செய்யாதவனாகவும் பழிக்கு அஞ்சி நடப்பவனாகவும் இருத்தல் வேண்டும். அப்படியானவரிடம் தான் நாம் பணியை

ஒப்படைத்தல் வேண்டும். நான் அப்படியான ஒருவனைத் தேர்ந்தெடுத்து விட்டேன். அதனால் தான் நான் உங்களை அழைக்கவில்லை. நீங்கள் எமது நிறுவனத்திலிருந்து விலகுவதாகத் தீர்மானித்து விட்டீர்கள். இது ஐந்து வருடத்திட்டம். அதனால் தான் நான் உங்களை அழைக்கவில்லை. நீங்கள் பணியாட்களைத் தெரியும் போது மேற் சொன்ன விபரங்களைக் கவனியுங்கள்'' என்றார் கணநாதன். முகுந்தனால் எதுவும் பேச முடியவில்லை.

**502. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாண் உடையான் கட்டே தெளிவு.**

நற்குடியில் பிறந்து குற்றங்களில் இருந்து விடுபட்டு பழியான செயல்களைச் செய்ய நாணப்பட்டு அஞ்சுகின்றவன் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும்.

## *அறியாமை*

''என்ன யோசிக்கிறீர்கள். மனதில் உள்ளவற்றைப் பயப்படாமல் சொல்லுங்கள். நான் தொழிலாளர்களை நண்பர்களாகவே நினைப்பவன். நான் முன்பு வேலை செய்த தொழிற்சாலையின் முதலாளி மிகவும் நல்லவர். நன்றாகப் படித்தவர். பெரிய பணக்காரன். அவர் தொழிலாளர்களை எப்பொழுதாவது மரியாதை இல்லாமல் நடத்தியதில்லை. நீங்கள் இங்கு பல வருடங்களாக வேலை செய்கிறீர்கள். உங்கள் மனம் புண்படும் படியாக நான் நடந்திருக்கிறேனா?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினார் கணநாதன்.

முகுந்தனுக்குத் தர்மசங்கடமாகி விட்டது; ''இல்லை... இல்லை...'' என்றார் அவசரமாக.

''நான் தொழில் செய்யும் போது பொறியலாளர் என்னை மதிப்பதில்லை. தான் அரிய பல நூல்களைக் கற்றவன் என்ற திமிர் அவருக்கு இருந்தது. அதனால் வயதிற்கு மூத்த தொழிலாளர்களையும் ''வாடா, போடா'' என்றே அழைத்துக் கதைப்பார். இதைப் பல முறை முதலாளி சொல்லிய போதும் அவர் திருந்தவில்லை. ஏனோ தெரியாது என்னைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது. என்னைத் துன்புறுத்திப் பார்ப்பதில் அவருக்கு அலாதியான விருப்பம். நான் அவர் சொல்வதெதையும் மறுப்பதில்லை; அவரை மதித்து நடந்தேன். ஆனால் நான் அத் தொழிற்சாலையை விட்டு விலகும் வரை அவரது குணம் மாறவே இல்லை. கடவுளின் அருளாலும் தாய் தந்தையர் செய்த புண்ணியங்களாலும் முற்பிறப்பில் செய்த புண்ணியங்களாலுமே ஒருவன் சிறப்பான வாழ்க்கையைப் பெறுகிறான். அதற்காக மேலதிகாரிகள் தொழிலாளர்களது மனம் புண்படும்படியாக நடக்கக் கூடாது. அரிய நூல்கள் பலவற்றைக் கற்றுக் குற்றங்கள் இல்லாமல் வாழ்கிறோம் என்று நினைத்து வாழ்பவரையும் ஆராய்ந்து பார்த்தால் பல அறியாமைகள் அவரிடம் இருப்பது தெரிய வரும். அதனால் நான் அடிக்கடி என்னைப் பற்றிப் பலரிடமும் விசாரிப்பேன். ஆனால் எவரும் எனது குறைகளைப் பற்றிச் சொல்வதில்லை. உண்மையான நட்பும் விசுவாசமும் இருந்தால் உள்ளதை உள்ளபடி சொல்லுதல் வேண்டும்''.

“உண்மை தான் ஐயா, பெரும்பாலனவர்களுக்குத் தமது குறை குற்றங்களைக் கூறுவது பிடிக்காது. அவர்கள் கோபிப்பார்கள் அல்லது பழிவாங்குவார்கள்” என்றார் முகுந்தன்.

கணநாதன் சிரித்தார்; “உண்மை தான். பலர் தாம் செய்யும் தவறுகள் மற்றவர்கள் விட்ட தவறுகளால் தான் வருகிறன என்கிறார்கள். அது பிழை. இத் தொழிற்சாலையில் நட்டமோ அல்லது தவறோ ஏற்பட்டால் அது பொறுப்பானவர்களின் பிழை என்றே நான் நினைப்பேன். பரமேஸ்வரனது தொழிற்சாலையில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு யார் காரணம்? எமது தொழிற்சாலையில் பிரச்சினைகள் இல்லாமலிருப்பதற்கு என்ன காரணம்?” என்று கேட்டு விட்டு நிறுத்தினார் கணநாதன்.

முகுந்தனுக்கு அந்தரமாக இருந்தது. அவரால் பதில் கூற முடியவில்லை, தடுமாறினார்.

கணநாதன் சிரித்தபடி கூறினார்; “நாம் குற்றங்களின்றி நடந்தால் மற்றவர்கள் குற்றஞ் செய்ய மாட்டார்கள். இதைத் தான் சமயம் சொல்கிறது. நான் என்னைப் பற்றிச் சொல்கிறேன். நான் எவருக்கும் தீங்கிளைக்காமல் வாழ்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ தெரியவில்லை. தனது மனதிற்குத் துரோகஞ் செய்யாமல் மனச்சாட்சியின் படி நடந்தால் சரியென்று பெரியவர்கள் சொல்கிறார்கள். ஆனால் தவறு செய்பவர்களும் மனச்சாட்சியின் படி தான் நடந்தேன் என்கிறார்கள்” பெருமூச்சு விட்டார் கணநாதன்.

“என்னைப் பொறுத்தவரை நீங்கள் தவறு செய்ததாக எனது காதிற்கு எட்ட யாரும் கதைக்கவில்லை” என்றார் முகுந்தன்.

கணநாதன் பூரண மகிழ்வுடன் சிரித்தார். அதைக் கேட்க அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது; “அது சரி நீங்கள் காலையில் யாரையோ அழைத்து வந்ததாகச் சொன்னார்கள். யார் அவர்? எதற்காக அழைத்து வந்தீர்கள்”.

“அவர் எனது நண்பர். இன்னொரு தொழிற்சாலையில் பணிபுரிகிறார். மிகவும் நல்லவர். எனது இடத்திற்கு அவரை நியமிக்கலா மென்று அழைத்து வந்தேன். அவருடைய செயல்களுக்கு நான் பொறுப்பு” என்றார் முகுந்தன்.

சில நிமிடங்கள் கணநாதன் எதுவும் பேசவில்லை. பின் சொன்னார்; “எனக்கு மற்றவர்களில் நம்பிக்கையில்லை. நானே அவரின் சகல விடயங்களையும் ஆய்வு செய்தல் வேண்டும். நற்குடியிற் பிறந்து, குற்றங்களிலிருந்து நீங்கிப் பாவச் செயல்களைச் செய்ய அஞ்சுபவனைத் தான் நம்பித் தெளிதல் வேண்டும். இது சரியோ பிழையோ எனக்குத் தெரியாது. நான் சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னேன்; “அரிய நூல்கள் பலவற்றைக் கற்று குற்றங்களில்லாமல் இருப்பவர்களிடமும் அறியாமைகள் இருக்குமென்றும் அதனால் நான் சிபார்சுகளை ஏற்பதில்லை. இங்கு வேலை செய்த விதுஷனை உங்களின் இடத்திற்கு நியமித்துள்ளேன். அவனை எனக்குப் பத்து வருடங்களாகத் தெரியும்” என்றார் கணநாதன்.

**503. அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்**

**இன்மை அரிதே வெளிறு.**

அரியநூல்கள் பலவற்றை நன்கு கற்றுத் தேர்ந்த பெரியவர்களிடத்திலும் அறியாமை இல்லாதிருத்தல் அரிது.

# ஆராய்வு

“விதுஷனையா?...” என்று ஆச்சரியத்துடன் கேட்ட முகுந்தன், அதன் பின் எதுவும் பேசாது இருந்தார்; “விதுஷன் அவ்வளவு கெட்டிக்காரன் அல்லன். சொந்தமாகச் சிந்தித்து எதையும் செய்யத் தெரியாதவன். சொல்வதைச் கச்சிதமாகச் செய்து முடிப்பான். எதையும் அருகிலிருந்து சொல்லிக் கொண்டிருத்தல் வேண்டும். அதனால் தொழிற்சாலையிக் கதி அதோ கதி தான்” என்று நினைத்தார் முகுந்தன்.

“புதிதாக ஒருவரை அப்பதவிக்கு நியமிப்பதைவிட கீழே வேலை செய்த ஒருவனை நியமிப்பதன் மூலம் பல நன்மைகளைப் பெறலாம். இன்னொரு வரை நியமிப்பதது அவனை அவமானப் படுத்துவது போன்றது. அத்துடன் ஒருவனது செயலின் திறமையை அறிய வேண்டுமானால் அவனிடம் பொறுப்பை ஒப்படைத்துப் பார்த்தல் வேண்டும். திறமையை, மீண்டும் மீண்டும் ஆராய்ந்து செய்யும் செயல்களால் தான் உருவாக்க முடியும். மேலும் மேலும் மேற்கொள்ளப்படும் செயல்களால் அனுபவம் ஏற்படும். அதனால் அபாரமான ஆற்றல்கள் உண்டாகும். ஒருவனுடைய இயல்பு எப்படிப்பட்ட தென்று அறிய வேண்டுமானால் அவனது குணங்கள் ஆராய வேண்டும். பின் அவனது குற்றங்களை ஆராய வேண்டும். அவற்றுள் எது மிகுதியாக இருக்கிறதோ, அதைக் கொண்டே அவன் எப்படியானவனென்று தீர்மானிக்க வேண்டும்” நிறுத்தினார் கணநாதன்.

முகுந்தன் எதுவும் பேசவில்லை. கணநாதனுக்கு மனதில் உள்ளது சரியோ பிழையோ உடனே சொல்லிவிட வேண்டும். அவர் கதைத்து விட்டு நிறுத்தினால் எதிரே இருப்பவரது அபிப்பிராயத்தை எதிர்பார்த்திருக்கிறார் என்று அர்த்தம். முகுந்தன் எதுவும் பேசாமல் நட்ட கல்லைப் போல அமர்ந்திருந்து அவருக்குப் பிடிக்கவில்லை. தொழில் விடயமாகச் சில சமயம் முக்கிய விடயங்களைக் கதைத்தாலும் அவர் அப்படித்தான் இருப்பார். அதனால் கணநாதன் கோபப்பட்டுக் கேட்டால்; “நீங்கள் சொல்வது சரி. அதனால் தான் பேசாமலிருந்தேன்” என்பார்.

முகுந்தன் பேசாமலிருந்ததால் கணநாதன் சொன்னார்; “ஒருவன் செய்யும் செயல்களிலிருந்து தான் அவனது குற்றங்குறைகளையும் திறமையையும் அறிந்து கொள்ளலாம். எதுவும் தெரியாதவனென்று யாரும் இல்லை. ஒரு சமயம் அவன் அதை அறிந்திரா விட்டாலும் மற்றொரு சமயம் அதை அறிந்து விடுவான். அதற்கு ஊக்கம் தான் காரணம். செயல்கள் தான் மனிதனின் இயல்பை வெளிப்படுத்துவன. வாய்ப்புக் கிடைத்தால் சாதாரண மனிதன் கூட உயர்ந்த நிலைக்கு வந்து விடுவான். ஒருவனின் நடத்தையில் சில குற்றங்கள் காணப்படலாம். குறைகளில்லாத மனிதனே இல்லை. குறைகளை விட அவனது செயல்களில் சில பெருந்தன்மையுடையனவாக இருந்தால் அவனை நல்ல மனிதனாக ஏற்றுக் கொள்ளலாம். செயல்கள் எப்பொழுதும் அவதானிக்கப் படல் வேண்டியவை. இந்தத் தொழிற்சாலையில் உள்ள அத்தனை பேரினதும் செயல்களை நான் அவதானித்துச் சேகரித்து வைத்துள்ளேன். தொண்டு

மனப்பான்மையும் கீழ்படிதலும் தன்னடக்கமும் ஒருவனை மேம்பாடடைய வைக்கும் அவனை மதிக்க வைக்கும் உயர்வடைய வைக்கும் கீழ்ப்படிவதற்கு ஒருவன் எப்போதும் தயாராக இருத்தல் வேண்டும். கீழ்படியும் தன்மையில்லாவிட்டால் கற்ற கல்வியால் நன்மைகள் எவையும் வர மாட்டாது. கர்வம் இல்லாதவன் தான் வாழ்வில் வெற்றியடைவான். இது நான் கண்ட உண்மை'' என்றார் கணநாதன்.

முகுந்தன் சிரித்தார். பின்பு சொன்னார்; ''உங்களுடைய ஆலோசனைகள் எனக்கு மிகவும் உபயோகமுள்ளனவாக இருக்கும். உங்களில் இருக்கும் இனிய சுபாபமும் கண்டிப்பும் பிறரை மதிக்கும் தன்மையையும் கண்டு நான் பிரமிப்பேன்''.

''நாம் எந்தத் தொழிலைச் செய்தாலும் அந்தத் தொழில்தான் உலகத்திலேயே சிறந்த தொழில் என்று நினைத்தல் வேண்டும். அந்தத் தொழிலில் உறுதியான நம்பிக்கை வைத்தல் வேண்டும். எந்த வேளையிலும் சந்தேகம் கொள்ளக்கூடாது. மற்றவர்கள் சொல்பவற்றை அவதானித்து கேட்டல் வேண்டும். நல்லவற்றைப் பாராட்ட வேண்டும். பிடிக்காதவற்றை நேரடியாக மனம் வருத்தப்படுமாறு கூறாது உண்மை நிலையை எடுத்துரைக்க வேண்டும். அனைவருக்கும் உதவி செய்தல் வேண்டும். நான் ஏன் விதுஷனைத் தெரிவு செய்தேன் என்று நீங்கள் நினைப்பீர்கள். விதுஷன் நல்லவன்; கீழ்படிவுள்ளவன்; நேர்மையானவன். தொழிலாளர்களுடன் அன்பாகப் பழகுபவன். மேலதிகாரி சொல்வதைக் கேட்டு அதன்படி செய்பவன். மேலதிகாரி பிழையாகச் சொன்னால் அதை அவருக்குச் சொல்லாமல் சரியாகச் செய்வான். மேலதிகாரிக்கு அவன் கீழ்ப் படிவது தான் அதற்குக் காரணம்''.

அதைக் கேட்டு முகுந்தன் திடுக்கிட்டார். தான் நினைத்ததற்கு மாறாக கணநாதன் அவனை எடை போட்டிருப்பதை நினைக்க அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

விதுஷன் தொழிலாளர்களுடன் சேர்ந்து குடிப்பான். புகைப் பிடிப்பான். இப்படியான சில தீய குணங்கள் அவனிடமிருக்கின்றன. அவற்றைத் திருத்தலாம். தீய குணங்களை விட நல்ல குணங்கள் பல அவனிடம் உள்ளதால் தான் அவனைத் தெரிந்தேன்'' என்றார் கணநாதன்.

**504. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

ஒருவனது குணங்களை ஆராய்ந்து, பின் அவனது குற்றங்களை ஆராய்ந்து, அவற்றுள் எது மிகுதியாக இருக்கிறதோ அதைக் கொண்டே அவன் எப்படியானவன் என்று தெரிந்து கொள்ளல் வேண்டும்.

## உரைகல்

''ஒருவனது பெருமைக் குணத்தையும் சிறுமைக் குணத்தையும் அறிந்து கொள்ள உரைகல்லாக இருப்பவை அவனது குணங்களேயாகும்'' என்று அவனது பாட்டனார் அவனுக்குக் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. பதினைந்து

வருடங்களுக்கு முன்பு அவர் வேலையைப் பொறுப்பேற்பதற்காகச் சென்ற போது அவரது பேரனார் கனகராசா சொன்னார்; ‘‘பேரா நீ பொறியியலாளராக இன்று வேலையைப் பொறுப்பேற்கச் செல்கிறாய். அத்தொழிற்சாலைப் பொறுப்பு முழுவதும் உன்னுடையது. பல கோடி ரூபாவை யாரோ ஒரு புண்ணியவான் முதலிட்டு அதை உனது பொறுப்பில் விடப் போகிறார். எனவே அதை உனது தொழிற்சாலையாக நினைத்துச் செயற்படு. செயல்கள் தான் ஒருவனை உயர்த்துவதும் தாழ்த்துவதும். எப்பொழுதும் முதலாளிக்கு விசுவாசமுள்ளவனாகவும் நம்பிக்கையுடையவனாகவும் இரு. அவருக்குத் துரோகம் செய்ய நினைக்காதே. சிறுமைக் குணத்தையுடையோர் உன்னைக் கெடுக்க நினைப்பர். கூடாதவர்களுடன் சேராதே’’.

‘‘என்ன முகுந்தன் யோசிக்கீறீர்கள்’’ என்று கேட்டார் கணநாதன்.

‘‘எனது பேரனார் நான் வேலையைப் பொறுப்பேற்க முன் கூறிய வார்த்தைகள் எனது நினைவுக்கு வந்தன. அவரும் உங்களைப் போலத்தான் சொன்னார். அதாவது ஒருவனது செயல்கள் தான் அவனைப் பற்றிய எண்ணங்களை உருவாக்குகிறது என்றார்’’ உங்களது சொற்களைக் கேட்க அந்த நினைவு வந்தது’’ என்றார்.

‘‘விதுஷன் மிகவும் நல்லவன். ஏழைகள் மீது அன்பு கொண்டவன். நான்கு வருடங்களுக்கு முன்பு உதயணன் என்ற தொழிலாளி எமக்கு ஓயாத தொல்லைகள் தந்து கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியும் தானே. அவனுடன் தொழிலாளர்கள் பலர் சேரப் பயந்தனர். சேர்ந்து திரிபவர்களும் அவனைப் பற்றி இல்லாதது பொல்லாததுகளை எனக்குச் சொல்லி வந்தனர். அவனுடன் விதுஷன் நல்ல நண்பனாக இருந்தான். அது எனக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. எமது தொழிற்சாலை இரகசியங்கள் பல பரமேஸ்வரனுக்கும் விநாயகரத்தினத்திற்கும் தெரிந்திருந்தது. இது இவர்களின் வேலையாகத் தான் இருக்குமென்று நினைத்தேன்’’ நிறுத்தினார் கணநாதன்.

அந்த நேரம் உதயணன் தொழிற்சாலையைப் பற்றியும் கணநாதனைப் பற்றியும் அளவுக்கதிகமாகக் காரசாரமாக அவருடன் பல முறை தர்க்கித்திருக்கிறான்.

‘‘ஒரு நாள் உதயணன் நன்றாகக் குடித்து விட்டு வீதியால் வரும் போது விபத்துக்குள்ளாகிப் பல நாட்கள் வைத்தியசாலையில் தங்கிச் சிகிட்சை பெற்றான். தொழிலாளர்களோ, அவனது குடும்பத்தினரோ உதயணனைச் சென்று பார்க்கவில்லை ஆனால் விதுஷன் தினமும் சென்று பார்த்தான். இரவில் அவனுக்குத் துணையாக நின்றான். அவனது வீட்டுச் செலவுக்குப் பணமுங் கொடுத்தான். இது எனக்குப் பெருங் கவலையை அளித்தது. உதயணனைக் கெடுப்பது விதுஷன் என்று பலர் என்னிடம் கூறினார்கள். அதனால் எனதுமூளை தீவிரமாக இயங்கியது. அந்த வேளையில் தொழிற்சாலையில் ஒரு திருட்டு நடந்து விட்டது. எல்லோருமாகச் சேர்ந்து விதுஷன் தான் திருடினான் என்றார்கள். நான் விதுஷனை வேலையில் இருந்து நீக்கி விட்டேன். அவனும் சென்று விட்டான். பெருமூச்சு விட்டார் கணநாதன். சிறிது நேரத்தின் பின் கணநாதன் கைக்குட்டையை எடுத்துக் கண்ணீரைத் துடைத்து விட்டுச் சொன்னார்; ‘‘நான் எனது வாழ்நாளில் செய்த தவறு அது ஒன்று தான். சில வாரங்களுக்குப் பின் உதயணன் என்னைச் சந்தித்தான்; ‘‘நான் வேலைக்கு

வரவில்லை. எனது தொழிலை நான் ராஜினாமச் செய்து விட்டேன". தயவு செய்து எனது கணக்கு வழக்கைப் பார்த்து என்னைப் போக அனுமதியுங்கள்" என்றான். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கணக்காளரை அழைத்து உதயணனை விடுவிக்கும்படி சொன்னேன். பின் உதயணனிடம்; "உனது நண்பன் திருடியமையால் வெட்கத்தால் இங்கு வந்து கணக்கைப் பார்க்கவில்லை. வந்து பார்கச் சொல்லு" என்றேன். உதயணன் கண்கலங்கினான். பின்பு சொன்னான்; "ஐயா நீங்கள் தொழில் நிபுணத்துவம் பெற்றதாகச் சொல்கிறீர்களே தவிர உங்களுக்குத் தொழிலைப் பற்றி எதுவும் தெரியாது. தொழிலாளர்களைப் பற்றியும் தெரியாது. உங்களோடு சேர்ந்தவர்கள் தான் திருடியது. விதுஷன் மிகவும் நல்லவர். என்னுடன் அவர் சேர்ந்தது உங்களின் நன்மைக்காக. உங்களோடு நட்பாக இருக்கும் பலர் உங்களைக் கெடுப்பதற்காக என்னை கருவியாகப் பயன்படுத்தினர். அதற்காக எனக்குக் கூலியும் கொடுத்தனர். அதை அறிந்த விதுஷன் என்னோடு சேர்த்து உங்களைப் பற்றிச் சொன்னார். உங்களது நல்ல குணங்களைப் பற்றிச் சொன்னார். நம்பிக்கையுள்ளவர்களோடு எப்படி நடக்க வேண்டுமென்று சொன்னார். அந்த நேரம் தான் நான் விபத்துக்குள்ளானேன். நான் வைத்தியசாலையில் தங்கியிருந்த போது தினமும் வந்து விதுஷன் நல்லவற்றையே சொல்வார். அதனால் தான் நான் திருந்தினேன்" என்றான். நான் திகைத்துப் போனேன். பின்பு ஆராய்ந்து பார்த்ததில் எனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் தான் அனைத்திற்கும் காரணம் என்பதை உணர்ந்தேன். அதனால் தான் விதுஷனிடத்தில் மன்னிப்புக் கேட்டேன். பின்பு அவனைச் சந்தித்து ஏன் எனக்கு அவற்றைக் கூறவில்லை என்று கேட்டேன், அவன் சொன்னான்; "ஐயா, உங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் தான் உதயணனை தன் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துகிறார் என்பதை அறிந்து கொண்டேன். அதைச் சொன்னால் நீங்கள் கடைசி வரையும் நம்பமாட்டீர்களென்று எனக்குத் தெரியும். அதனால் உதயணனைத் திருத்தினேன். அதனால் பாதிக்கப்பட்ட அவர், தானே களவை எடுத்து விட்டு என்னைச் சாட்டினார். நான் மறுத்தாலும் யாரும் என்னை நம்ப மாட்டார்கள். அதனால் பேசாமலிருந்தேன். பகை, பொறாமை, நம்பிக்கைத் துரோகம் ஆகியவற்றைச் செய்தால் அவை வட்டியும் முதலுமாகத் திரும்பச் செய்தவனையே சென்றடையும். இது மேலே எறியப்பட்ட கல்லைப் போன்றது. அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. செயல்கள் உயிர் உள்ளவை. அவற்றைத் தொட்டால் அவை உடனே தொட்டவனைப் பற்றிப் பிடித்து விடும். அதனால் தான் நான் பொறுத்திருந்தேன் என்றான். ஒருவன் செய்யும் செயல்கள்தான் அவனது குணத்தை அறிந்து கொள்ளும் உரைகல்லாகும்".

முகுந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கணநாதன் கூறிய விஷயங்கள் எதுவும் அவருக்குத் தெரியாது. அவை யாவற்றையும் கணநாதன் இதுவரை காலமும் மிகவும் இரகசியமாக வைத்திருந்ததை நினைக்க அவருக்கு ஆச்சரியம் மிகுந்தது.

**505. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

ஒருவனது பெருமையையும் சிறுமையையும் அறிந்து கொள்ள உரை கல்லாக இருப்பவை அவடைய செயல்களே ஆகும்.

## பழிக்கஞ்சாதோர்

“அது சரி நான் உங்களை அழைத்த விஷயத்தை மறந்து விட்டேன். காலையில் யாரையோ அழைத்து வந்தீர்களாம். யார் அவர்..? என்ன விஷயம்” என்று கேட்டார் கணநாதன்.

முகுந்தன் தயங்கினார் தனது நண்பனான வசந்தனைத் தனது பதவிக்கு நியமிக்குமாறு கேட்க வந்தார். ஆனால் விதுஷன் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டு விட்டான். இனி அதைப் பற்றிக் கதைப்பதால் எந்த விதமான பிரயோசனமும் இல்லை. ஏன் தேவையில்லாமற் கதைப்பான் என்று நினைத்தார்.

“எதுவானாலும் கலக்கமில்லாது சொல்லுங்கள், என்னால் முடிந்ததைச் செய்வேன்” என்றார் கணநாதன்.

“வசந்தன் என்னுடைய நண்பன். நான் முன்பு சொன்ன போது சிபார்சுகள் எவற்றையும் ஏற்க மாட்டேன் என்றீர்கள். அவன் என்னுடன் தான் பல்கலைக்கழகத்தில் படித்தான். நம்பிக்கையானவன். எனது தொழிலுக்கு நியமிக்கக் கேட்கலா மெனக் கூட்டி வந்தேன்”.

கணநாதன் சிரித்தார் பின்பு; “ஏன் விநாயகரத்தினத்துடன் ஏதாவது பிரச்சினையா?” என்று கேட்டார்.

“இல்லை இல்லை அங்கே அவர் உதவிப் பொறியியலாளராகத் தானே கடமை செய்கிறார். இங்கு பிரதம பொறியியலாளராகக் கடமையாற்றலாம். சம்பளமும் கூட” என்றார் முகுந்தன்.

“ஆறு மாதங்களுக்கு முன்பு தான் விநாயகரத்தினத்தின் தொழிற்சாலையில் பிரதம பொறியியலாளராகக் கடமை புரிந்தவர் வெளிநாடொன்றிற்குச் சென்றார். அப்பொழுது ஏன் விநாயகரத்தினம் அவருக்கு அந்தப் பதவியைக் கொடுக்கவில்லை?”

முகுந்தன் அக்கேள்விக்குப் பதில் கூற முடியாது அவதிப்பட்டார், பின்; இருவருக்கு.......” முகுந்தன் கூறிக் கொண்டிருக்கும் போது கணநாதன் சொன்னார்; “முகுந்தன், விநாயகரத்தினம் எனது நண்பர். அவரின் தொழிற்சாலையில் உள்ள ஒருவரை நான் எடுத்தால் அவர் என்னுடன் கோபிப்பார். தொழிலில் நாணயம் இருத்தல் வேண்டும். ஆனால் வசந்தனை நான் எடுத்தால் அவர் சந்தோசப்படுவார்..” நிறுத்தினார் கணநாதன்.

முகுந்தனுக்கு அவரது பேச்சு விளங்கவில்லை. அதனால் தடுமாறினார்; “வசந்தன் திறமையுள்ளவனாக இருந்தால் விநாயகரத்தினம் பிரதம பொறியியலாளர் பதவியை அவருக்குக் கொடுத்திருப்பார். ஆனால் ஏன் கொடுக்கவில்லை என்று தெரியுமா..?”

கணநாதன் பேசுவதை நிறுத்தி விட்டு முகுந்தனைப் பார்த்தார். முகுந்தனுக்கு அதற்கான விடை தெரியவில்லை; “நீங்கள் வசந்தனுக்குப் பொறுப்பு நிற்பதாகக் கூறினீர்கள். எதை வைத்துக் கொண்டு அப்படிக் கூறினீர்கள். வசந்தன் உங்களோடு படித்தவன் என்ற காரணத்தால் அவனைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா...? சுற்றத்தவர்களோடு தொடர்பில்லாதவர்களை நம்பக்கூடாது. ஏனென்றால் அவர்களுக்கு உலக வாழ்வில் பற்று இருக்க மாட்டாது. அதனால்

அவர்கள் பழி பாவங்களுக்கு அஞ்சமாட்டார்கள். ஒழுங்காகத் தொழில் செய்ய மாட்டார்கள். எனக்கு வசந்தனின் மனைவியின் குடும்பத்தினரை வெகு காலமாகத் தெரியும். வசந்தனின் மனைவி அம்பிகையின் தகப்பனார் நடேசபிள்ளை ஒரு தலை சிறந்த ஆசிரியர். ஆசிரியர்களுக்குரிய அத்தனை அம்சங்களும் அவரிடம் இருக்கிறது. சிவபூசை செய்து சமய வாழ்வு வாழ்ந்து வந்தார். அவ்வூரவர்கள் அவரைத் தெய்வமாக மதித்தனர். அம்பிகையுடன் தான் வசந்தன் படித்தான். அம்பிகையின் அழகு வசந்தனைக் கவர்ந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினர். விஷயமறிந்த வசந்தனின் பெற்றோர் வசந்தனுக்கு வேறு இடத்தில் பெண் பார்த்தனர். வசந்தன் அம்பிகையை அழைத்துச் சென்று தனிக்குடித்தனஞ் செய்தான். அதை அவமானமாகக் கருதினார் நடேசபிள்ளை. அதனால் அவரால் அத்திருமணத்தை ஏற்க முடியவில்லை. இரண்டு வருடங்கள் கழிந்தன. வசந்தனுக்கு இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன. பணக் கஷ்டமும் வந்தது. அதனால் மனைவியைப் பெற்றோரிடஞ் சென்று சீதனம் பெற்று வருமாறு அனுப்பினான். அம்பிகையின் தாய் பாசமேலீட்டால் அவளை ஏற்றுக் கொண்டாள். காலப் போக்கில் நடேசபிள்ளையும் ஏற்றுக் கொண்டார். ஆசிரியராகவே வாழ்ந்த நடேசபிள்ளையிடம் ஏது பணம், அதனால் அம்பிகைக்கும் வசந்தனுக்குமிடையில் தினமும் சண்டையும் சச்சரவும் தான். ஒரு முறை வசந்தனின் கொடுமைகளைத் தாங்க முடியாத அம்பிகை தற்கொலை செய்ய முயற்சித்தாள். அதனால் நடேசபிள்ளை நோயாளியானார். இப்பொழுது அம்பிகையைப் பெற்றோர்களைக் கூடப் பார்ப்பதற்கு வசந்தன் அனுமதிப்பதில்லை. நடேசபிள்ளை நோய்வாய்பட்டு ஆறு மாதங்கள் வைத்தியசாலையில் இருந்தும் வசந்தன் அவரைச் சென்று பார்க்க அம்பிகையை விடவில்லை. நடேசபிள்ளை இறந்து போனார். மரணச் சடங்கில் கூட அவர்கள் கலந்து கொள்ளவில்லை. காதலிப்பவர்கள் சீதனத்தை எதிர் பார்க்கக் கூடாது. சீதனத்தை எதிர்பார்பவர்கள் காதலிக்கக் கூடாது. பெற்ற தகப்பனைப் பார்க்கவிடாத அவன் எப்படிச் சிறப்பாகத் தன் தொழிலைச் செய்வான். அதனால் தான் விநாயகரத்தினம் அவரை மேலாளராக்க வில்லை'' என்றார் கணநாதன்.

**506. அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று அவர்
பற்றிலர்; நாணார் பழி.**

தனது சுற்றத்தவர்களோடு தொடர்புகள் இல்லாதவரை நம்பி நடக்கக் கூடாது; அவர் உலகத்தில் பற்றில்லாதவராகையால் பழிக்கு அஞ்சமாட்டார்.

## அன்பால் வரும் துன்பங்கள்

முகுந்தன் திகைத்துப் போனார். நண்பனான தான் அறியாத பல விஷயங்களை அவர் அறிந்திருப்பதை நினைக்க அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் படிக்கும் காலத்தில் பல பெண்களின் பின்னால் சுற்றித்திரிந்தவன். அவனைச் சந்திக்கும் வேளைகளில் அவன் பெண்களைப் பற்றியே வாயோயாமல் கதைப்பான். தான் பார்க்கும் பெண்களை வெட்கமில்லாது உற்றுப் பார்த்து அவர்களின் அங்கப் பொலிவுகளைக் கூச்சமின்றி வர்ணிப்பான். முகுந்தனுக்கு பெண்களைக் கண்டாலே வியர்த்துக் கொட்டும். நிமிர்ந்து பார்த்துக் கதைக்க முடியாது அவதிப்படுவர். ஆனால் வசந்தன் தான் பார்க்கும் பெண்களின் தலைமுடி, நெற்றி, கண்கள்,மூக்கு, கன்னங்கள், கழுத்து, உடைக்குள் மறைந்திருக்கும் பகுதிகள் யாவற்றையும் சுவையாகச் சொல்வான். முகுந்தன் விலகிச் சென்றாலும் விடமாட்டான். அவனது கதைகளைக் கேட்க வென்றே பல இளைஞர்கள் காத்திருப்பர். அவன் மற்றய

பெண்களோடு பழகுவதைப் போலத் தான் அம்பிகையுடனும் பழகினான். ஏனோ தெரியவில்லை அவளையே திருமணஞ் செய்து கொண்டான். மற்றய பெண்களைப் போல அவளையும் விட்டிருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் வந்திராது.

‘‘ஒருவனைப் பற்றி அறிய வேண்டியவற்றை அறியாது அன்பு, நட்பு, இனத்தவன் என்ற காரணத்தினால் நம்பினால் நம்பியவன் பல துன்பங்களை அடையும் நிலை ஏற்படும். வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரின் பின்னனியிலும் குடும்பநிலை காரணமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியில்லாதவனால் வாழ்க்கையில் வெற்றியடையவே முடியாது. கணவனும் மனைவியும் அன்பாகவும் நெருக்கமாகவும் இருக்க வேண்டும். சுற்றத்தவர்களுடன் பிரியமான நெருக்கமிருக்க வேண்டும். அவை தான் அவர்கள் வாழ்க்கையில் அடைந்த வெற்றிகளுக்குக் காரணமாகும்’’ என்றார் கணநாதன்.

‘‘உண்மையில் கணநாதன் பெரியவர் தான் உலகை அறிந்த ஞானி தான். நாம் நினைத்தவற்றைச் சொல்லில் சொல்கிறார்’’ என்று நினைத்தார் முகுந்தன்.

‘‘எனது மனைவியின் தம்பி, எனது மனைவியின் செல்லப்பிள்ளை. சிறுவயதிலிருந்தே பெற்றோர் அவனை மிகவும் செல்லமாக வளர்த்தனர். அதனால் அவன் உலக நடையைப் புரிந்து கொள்ளவே இல்லை. எனது மனைவியை நான் திருமணத்திலன்றே கண்டேன். அதற்கு முன்பு அவளது பெயரைக் கூட அறிந்திருக்கவில்லை. எனது தகப்பனார் ஒரு வியாபாரி. புகையிலையை மொத்தமாக வாங்கி வாகனத்தில் கொண்டு சென்று எல்லா இடங்களிலும் வியாபாரஞ் செய்வார். அவர் மிகவும் நாணயமாக வாழ்ந்தமையால் நகரில் உள்ள எல்லா வியாபாரிகளும் அவரிடமே புகையிலையைக் கொள்வனவு செய்து விற்பனை செய்து வந்தனர். அதனால் அவர் பணக்காரனாக இருந்தார். அவரது வாடிக்கையாளராக இருந்த நாகேஸ்வரன் என்ற வியாபாரியை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. எமது கிராமத்திலிருந்து முன்நூறு மைல் தொலைவிலிருந்த அவரது வியாபாரத் தலத்திலேயே புகையிலையைக் கொண்டு சென்று வைப்பார். அங்கிருந்து தான் அவர் அந்தப் பகுதி வியாபாரத்தைக் கவனித்து வந்தார். இருவருக்கிடையேயும் நட்பு மிகுந்திருந்தது. அதனால் அவரது மகளை எனக்குத் திருமணம் செய்ய விரும்பினார். நான் சம்மதித்தேன். திருமணம் முடிந்தது. எனது மனைவி பேரழகி. குணகுன்று திருமண மானதிலிருந்து இன்று வரை அவள் எனக்கு எந்தக் குறையையும் வைத்ததில்லை. அதனால் நான் அவள் மீது உயிரையே வைத்திருந்தேன். அவளது தம்பி ஊதாரி. மிகவும் செல்லமாக வளர்த்ததால் கெட்டவனானான். நண்பர்களோடு சேர்ந்து கெட்டுப் போனான். அதை எனது மனைவி நம்பவில்லை. அவன் தொழிலில்லாமல் இருந்ததால் எமது தொழிற்சாலையில் பொறுப்பான ஒரு பதவி கொடுக்குமாறு கேட்டாள். அவளின் மீது இருந்த மோகத்தால் அவளின் சொல்லை வேத வாக்காகக் கருதி அவனுக்கு நான் எனது தொழிற்சாலையின் முகாமையாளர் பதவியைக் கொடுத்தேன். அறிய வேண்டியவற்றை அறியாதவர்களை அன்பின் காரணமாக நம்பினால் அவர்கள் பல துன்பங்களை அடைவார்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். எனது மனைவியின் சகோதரனுக்கு எதுவும் தெரியாது. தெரியா விட்டால் பரவாயில்லை. பேசாமலிருந்தாலே போதும். ஆனால் அவன் பேசாமல் இருக்காது தான் சொல்பவற்றைத் தான் எல்லோருஞ் செய்ய வேண்டு மென்று கட்டளையிட்டான். அதனால் எனக்குப் பெரும் நஷ்டமேற்பட்டது. பல கொள்வனவாளர் எனது தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்கள் தரமற்றன என்று பிரசாரஞ் செய்தனர். அந்த நஷ்டத்தை ஈடு செய்ய எனக்குப் பல வருடங்கள் எடுத்தன.

அதனால் தான் நான் சிபார்சுகளை ஏற்றுக் கொள்வதில்லை. அத்துடன் எனது நண்பர்கள், இனத்தவர்கள் என்னுடன் நெருங்கிப் பழகுபவர்களின் பிள்ளைகள் போன்றோரை எனது தொழிற்சாலையில் ஊழியர்களாகச் சேர்த்துக் கொள்வதில்லை'' என்றார் கணநாதன்.

**507. காதன்மை கந்தா அறிவு அறியார்த் தேறுதல்**
**பேதைமை எல்லாம் தரும்.**

அறியவேண்டியவற்றை அறியாது இருப்பவரை அன்பு காரணமாக நம்பினால், பல துன்பங்களுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படும்.

## தலைமுறைக்கும் தீது

''வசந்தன் என்னுடைய நண்பன். எனது ஊரவன். நாம் கிராமத்தில் ஒன்றாகவே கல்வி கற்றோம். பின் பட்டணத்தில் உள்ள பாடசாலையில் இருவரும் உயர் கல்வி கற்றோம். ஒரே ஆண்டில் இருவரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோம். அதனால் இருபது வருடங்கள் நட்பாக இருந்தோம். அவன் எனது உயிர் நண்பன். அதனால் அவன் செய்யும் தவறுகள் எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. இளைஞர்கள் காதலிப்பது இயல்பு. காதலிப்பதில் தவறேதுமில்லை. ஓர் ஆணும் பெண்ணும் மனமொத்து விரும்பினால் அவர்கள் திருமணம் செய்வதில் என்ன தவறு இருக்கிறது. எமது கடவுளரே காதலித்துத் திருமணஞ் செய்துள்ளனர். அதனால் வசந்தன் காதலித்ததை என்னால் தவறென்று ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நான் ஒரு பெண்ணை விரும்பினேன். அவளைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. அதனால் அவளின் பின்னால் சென்றேன். இருவரும் பல்கலைக்கழகத்தில் படித்தோம். தினமும் அவளை நான் பார்ப்பேன். அவளும் என்னைப் பார்ப்பாள். நான் அவளைப் பார்த்தால் அவள் தலையைக் குனிந்து கொள்வாள். அவள் என்னைப் பார்த்தால் நான் தலையைக் குனிந்து கொள்வேன். இப்படியே நாட்கள் சென்றனவே தவிர என்னால் எனது விருப்பத்தை அவளுக்குக் கூற முடியவில்லை. பல்கலைக்கழகப் பரீட்சை முடிந்த பின்பு அவளை நான் தோழியர்களுடன் சந்தித்தேன். அப்பொழுது கூட எனது விருப்பத்தைச் சொல்லும் தைரியம் எனக்கிருக்கவில்லை. வீட்டுக்கு வந்த பின்பு வேலை கிடைத்தது. நான் அது பற்றிக் கடிதம் எழுதினேன். அதில் அவளை விரும்புவதாக எழுதினேன்'' என்று கூறிவிட்டு நிறுத்தினார் முகுந்தன்.

கணநாதன் முகுந்தனைப் பார்த்தார்; ''முழுமடையன். தனது காதலை வெளிப்படுத்தியிருக்கலாம்'' என்று எண்ணினார்.

சில நிமிடங்கள் கழித்து முகுந்தன் சொன்னார்; ''அப்பெண்ணிடமிருந்து கடிதம் வந்தது. நான் உங்களைக் கண்டன்றே விரும்பி விட்டேன். உங்களது மாசில்லாத குணமும் அழகும் என்னைக் கவர்ந்தன. அப்படியிருந்தும் நான் எப்படி அதை உங்களுக்குச் சொல்வது. நீங்கள் எனது நிலையை உணர்வீர்களென்று காத்திருந்தேன். எனது திருமணத்திற்குப் பின்பு தான் அதை நீங்கள் உணர்தீர்கள். மறுபிறப்பென்பது உண்மையானால் அதில் இணைவோம்'' என்று அவள் கடிதம் எழுதியிருந்தாள். இன்னும் அந்த வலி எனது இதயத்துள் இருக்கிறது. திருமணமாகி மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான நான் இதைச் சொல்ல வெட்கப்படவில்லை. அப்படியிருக்கக் காதலித்துத் திருமணஞ் செய்த

வசந்தனால் எப்படித் தனது மனைவியைக் கொடுமைப்படுத்த முடிகிறது'' கவலைப்பட்டார் முகுந்தன்.

''ஆராயாமல் யாரையும் நம்பக்கூடாது. நம்பினால் அது அவனுக்கு மட்டுமல்லாமல் அவனது தலைமுறைக்கே தீராத துன்பத்தைக் கொடுக்கும். உங்களது நண்பன் தீயவன்; பாவச் செயல்களுக்கு அஞ்சாதவன். அதனால் தான் விநாயகரத்தினம் அவனுக்குப் பதவியுயர்வு வழங்கவில்லை. வேலையில் அக்கறை இல்லை. தொழிலாளர்களுடன் நல்லுறவில்லை. மேலதிகாரிகளை மதிப்பதில்லை. அதனால் அவனை எப்படி வெளியேற்றலாமென்று எண்ணிக் கொண்டிருக்கிறார் விநாயகரத்தினம். விநாயகரத்தினம் எனது நண்பர். எந்தச் செயலையும் செய்யு முன்பு என்னுடன் கலந்தாலோசித்த பின்பே செய்வார். வசந்தன் கெட்டவனென்றாலும் பாவம் பிழைக்கட்டுமென்று விட்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவருக்கு நீங்கள் சிபார்சு செய்கிறீர்கள். அதை நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. இப்படியான தன்மையுள்ள நீங்கள் எப்படி தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்தப் போகிறீர்கள்'' என்று கேட்டார் கணநாதன்.

முகுந்தனுக்கு அதைக் கேட்க வெட்கமாக இருந்தது. அரையிலிருந்து உடை கழன்று நிலத்தில் வீழ்ந்து விட்டதைப் போன்ற உணர்வு.

''எவனொருவன் ஆராயாமல் ஒருவனை நம்புகின்றானோ அவன் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் ஆபத்திற்குள்ளாகிறான். யாரொருவன் ஆராய்ந்து அவனை நம்புகிறானோ அவன் உயர்ந்த நிலைக்குள்ளாகிறான். வாழ்க்கையில் படிக்க வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன. மனிதன் தான் எல்லாவற்றையும் உருவாக்குகிறான். பொருட்கள் மனிதனை உண்டாக்குவதில்லை. ஒவ்வொருவரும் தமது பகுத்தறிவைப் பயன்படுத்தி நன்மை தீமைகளை உணர்ந்து கொள்ளல் வேண்டும். நல்லவர்களையும் தீயவர்களையும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இதற்காகத்தானே மனிதன் கல்வி கற்கிறான். உலகைப் புரிந்து கொள்ளக் கூடிய தன்மையை உண்டு பண்ண முடியாத கல்வியைக் கற்பதனால் என்ன பயன்?'' கேட்டு விட்டு முகுந்தனைப் பார்த்தார் கணநாதன்.

முகுந்தனுக்கு அவமானமாக இருந்தது. முப்பது முப்பத்தைந்து வருடங்களாகப் பழகிய நண்பனைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவனைத் தெரியாத கணநாதன் புரிந்து வைத்திருந்தமையை நினைக்க முகுந்தனுக்கு அவமானமாக இருந்தது.

**508. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.**

ஒருவனைப் பற்றி நன்கு ஆராயாமல் நம்பிக்கை வைத்தால், அ∴து அவனுக்கு மட்டுமல்லாமல், அவனது வழிமுறையில் தோன்றியவர்களுக்கும் தீராத துன்பத்தைக் கொடுக்கும்.

## ஒப்படைக்கத் தக்கதோர்

''தேனில் உள்ள இனிமையைச் சுவைத்தவனுக்குத் தான் அதன் இனிமை தெரியும். மாம்பழத்தில் உள்ள இனிமையும் அதைச் சுவைத்தவனுக்குத் தான்

தெரியும். அதே போல இரண்டிலும் உள்ள இனிமையின் வேறுபாடு அதைச் சுவைத்தவனுக்குத் தான் தெரியும். இதே போல மனிதனில் உள்ள குணங்களை அவனின் செயல்கள் மூலம் அறிந்து கொண்டவனுக்குத் தான் அவனது குணங்களைப் பற்றித் தெரியும். வெளித்தோற்றத்தைக் கொண்டு எதையும் தீர்மானிக்கக் கூடாது. முருக்குப் பெருத்தாலும் தூணுக்குதவாதென்பார்கள். அருமையான நறுமணமுடைய பெரிய பலாப்பழம் உண்பதற்கு உதவாமலும் இருக்கும். எனவே நன்கு ஆராய்ந்த பின்பு தான் எதையும் செய்தல் வேண்டும்''.

கணநாதன் கூறுவதைக் கேட்க முகுந்தனுக்கு வெறுப்பாக இருந்தது. தேவையில்லாமல் கதையைத் தொடக்கி விட்டோமென மனம் வருந்தினார். அவர் கதைக்கும் போக்கைப் பார்த்தால் இப்போதைக்கு விடமாட்டார் போலத் தோன்றியது. தனது எரிச்சலை வெளியே காட்டத் தனது மணிக்கூட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தார்.

''உங்களுக்கு ஏதாவது வேலை இருக்கிறதா? அப்படியானாற் செல்லுங்கள். நீங்கள் ஒரு புதிய தொழிலைத் தொடங்கவிருப்பதால் சொன்னேன். பெரும்பான்மையான மக்களுக்கு உண்மைகளைச் சொல்வது பிடிப்பதில்லை. நான் எப்போதும் நடக்கப் போவதையே சொல்வேன். ஆனால் அது பலருக்குப் பிடிக்காது. நீங்கள் செல்வதானால் செல்லலாம்'' என்றார் கணநாதன்.

''இல்லை... இல்லை... எனக்கு எந்த வேலையும் இல்லை. நீங்கள் சொல்லுங்கோ. புதிதாகத் தொழிலை ஆரம்பிக்கிறவர்கள் அனுபவஸ்தர்களின் வார்த்தைகளைக் கேட்க வேண்டும்'' என்றார் முகுந்தன்.

''யாராக இருந்தாலும், அது நண்பனாகவோ இனத்தவனாகவோ இல்லை நிபுணத்துவம் மிக்கவனாகவோ இருந்தாலும் அவனது குணநலன்களை நன்கு ஆராய்ந்து தெளிந்த பிறகே செயல்களை ஒப்படைத்தல் வேண்டும். பத்து வருடங்களுக்கு முன்பு அதாவது நீங்கள் எனது தொழிற்சாலையில் சேர முன்பு பொறியியலாளராக மதுகரன் என்பவனை நியமித்தேன். அவன் பல்கலைக்கழகத்தில் முதல் தரத்தில் சித்தியடைந்திருந்தான். அவனைக் கற்பித்த பேராசிரியர் ஒருவர் அவனுக்கு மிகவும் சிறந்த நற்சான்றிதழ் ஒன்று வழங்கியிருந்தார். அவன் எல்லாப் பாடங்களிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தான். மிகவும் நல்லவன்; கீழ்படிவுள்ளவன். சான்றிதழ் கொடுத்த பேராசிரியரும் பெயர் பெற்றவர்; புகழ் பூத்தவர். அதனால் பல தொழிற்சாலைகள் அவனுக்குத் தொழில் கொடுக்கப் போட்டி போட்டன. எனக்கு அந்தப் பேராசிரியரைத் தெரியும். அதனால் அவரிடஞ் சென்றேன். அவரிடம் மதுகரனைப் பற்றி விசாரித்த போது அவர் சொன்னார்; ''மிகவும் திறமையானவன். பாடம் சம்பந்தமாக எதைக் கேட்டாலும் உடனே பதில் சொல்வான். அதனால் மற்றய மாணவர்களுக்கு விளங்காதவற்றை அவனைக் கொண்டு தான் கற்பிப்போம். அத்துடன் நேர்மையானவன். கண்ணியவான்'' என்றார் அதை நம்பி அவரிடம் அவனை எனது தொழிற்சாலையில் சேர உதவி செய்யுமாறு கேட்டேன். அவர் சம்மதித்து விட்டார். அவனும் வேலையில் சேர்ந்தான்'' என்று கூறிவிட்டு பெருமூச்சு விட்டார் கணநாதன்.

சுவரஸ்சியமான இடத்தில் கதையை நிறுத்தி விட்டு தொழிலாளன் ஒருவன் கொண்டு வந்த தேநீரை வாங்கிக் குடித்தார் கணநாதன். முகுந்தனும் தேநீரைக் குடித்தார். தேநீரைக் குடித்து விட்டு கோப்பையை மேசையில் வைத்த கணநாதன் சொன்னார்; ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதாவது. மதுகரன்

கெட்டிக்காரன்; படிப்பில் நிபுணன்; நேர்மையானவன், ஆனால் அனுபவ அறிவு இல்லை. எமது தொழிற்சாலையில் இயந்திரமொன்று பழுதடைந்து விட்டது. அதைத் திருத்த முடியாது அவன் அவதிப்பட்டான். அதற்கு வேண்டிய உதிரிப்பாகம் எதுவெனத் தெரியாது தடுமாறினான். தேவையான பொருள் ஒன்றாக இருக்க இன்னொரு பொருளை வாங்கி வந்தான். ஆனால் இயந்திரத்தை இயக்கும் தொழிலாளி மிகவும் இலகுவாக அவ்வியந்திரத்தைச் சரி செய்து விட்டான்; ''ஐயா இது சின்னப் பிழை, இது கூடத் தெரியாதவரை எப்படி மேலதிகாரியாக நியமித்தீர்கள். இவர் உருப்பட மாட்டார்'' என்றான். புத்தகத்தைப் படித்து விட்டு பரீட்சை எழுதிச் சித்தியடைந்தால் மட்டும் போதாது. அனுபவம் வேண்டும். மதுகரன் வேண்டுமானால் ஓர் ஆசிரியராக இருக்கலாம். தொழிற்சாலையை நிர்வகிக்கக் கூடிய எந்தத் தகுதியும் அவனுக்கு இல்லை. யாராக இருந்தாலும் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். எந்தப் பொறுப்பை ஒருவனிடம் ஒப்படைக்க நினைக்கிறோமோ அவன் அந்தத் துறைக்குப் பொருத்தமானவனா என்று ஆராய்ந்த பின்பே பொறுப்பை ஒப்படைத்தல் வேண்டும். இல்லாவிட்டால் தொழிலில் முன்னேற முடியாது'' என்றார் கணநாதன்.

**509. தேறற்க யாரையும் தேராது; தேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள்.**

யாரையும் ஆராயாமல் நம்புதல் கூடாது; ஆராய்ந்து தெளிந்தபின்பே அவரிடம் நம்பிப் பொருள்களை ஒப்படைத்தல் வேண்டும்.

## நீங்காத துன்பங்கள்

கணநாதன் எவ்வளவு அனுபவசாலி என்பதை முகுந்தன் கண்டு கொண்டார். இவ்வளவு காலமும் வேலை செய்த போதும் அவரிடமுள்ள அனுபவ அறிவில் நூறில் ஒரு பகுதி கூடத் தன்னிடமில்லையே என்று நினைக்க அவருக்கு வேதனையாக இருந்தது. ஒரு தொழிற்சாலையில் வேலை செய்வது வேறு, தொழிற்சாலையை நடத்துவது வேறு, தொழிற்சாலையை நடத்த எவ்வளவு அறிவு தேவை என்பதை அவர் அப்பொழுது தான் உணர்ந்தார்.

''எதற்கும் நாம் பயப்படக்கூடாது. பயந்தால் நாம் வீட்டை விட்டுப் புறப்படவே முடியாது. அத்துடன் ஒரு தொழிலைத் தொடங்கிய பின்பு அதற்கான அறிவை வளர்த்துக் கொள்ளலாம். தண்ணீரில் இறங்காமல் நீந்த முடியுமா? ஒருவனை ஆராயமல் பொறுப்பைக் கொடுப்பதும், நம்பியவரைச் சந்தேகிப்பதும் நீங்காத துன்பத்தைத் தரும். பரமேஸ்வரன் அமிர்தினியோடு தொடர்பு கொண்டிருந்த விஷயம் பலருக்குத் தெரியாது. அவளின் மேற் கொண்ட மோகத்தால் அவள் சிபார்சு செய்த ஒருவனுக்கு அவர் வேலை கொடுத்து விட்டார். அதன் பின் அவன் அமிர்தினியோடு கலகலப்பாகக் கதைப்பான். தனது வாகனத்தின் பின் ஆசனத்தில் ஏற்றிச் செல்வான். இது பரமேஸ்வரனுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. பரமேஸ்வரன் நேரே கதைப்பவர். அதனால் அமிர்தினிக்கு தனது சந்தேகத்தை வெளிப்படுத்தினார். அவள்; ''நான் அப்படி நடக்கவில்லை. அவன் எனது உறவினன்'' என்றாள். அப்படியானால் அவனது வாகனத்தில் செல்வதையாவது கைவிடு'' என்றார். அவள் அதையும் கேட்கவில்லை. அதனால் அவர் மனமுடைந்து போனார். ஒரு நாள் அவர் என்னிடம் அது பற்றிக் கதைத்தார்; ''கணா, அமிர்தினி நல்லவளென்று நினைத்துத் தான் அவளுக்கு

நல்ல வேலை கொடுத்தேன். அவளில் உள்ள நம்பிக்கையில் தான் அவள் கூட்டியந்தவனை ஆராயாது வேலை கொடுத்தேன். இப்பொழுது அவள் அவனது வாகனத்தில் ஏறிச் சுற்றித் திரியுறாள்'' என்றார் அதற்கு நான் சொன்னேன் அமிர்தினி கலகலப்பானவள். இனத்தவருடன் சென்று வருவதில் என்ன தப்பு'' பரமேஸ்வரன் சிறிது நேரம் பேசாமலிருந்தார் பின்பு சொன்னார்; ''தனது கணவனிருக்க இன்னொருவனுடன் தொடர்பு வைத்திருக்கும் பெண்களை நம்பக் கூடாது. அவர்கள் அப்படிப் பலருடன் தொடர்பு வைப்பார்கள்'' இதைப் புரிந்த பின்பு ஏன் கவலைப்படுகிறாய். அவளை விட்டு விடு என்றேன். அதற்கும் அவருக்கு விருப்பமில்லை. அதன் பின் அமிர்தினி கூட்டி வந்து சேர்த்தவனோடு தினமும் பிரச்சனைப்படுவாள். அதனால் அவரது நிம்மதி போய் விட்டது. நான் அறிந்தளவில் அவன் தொழில் விஷயத்தில் திறமையுடையவனாக இருந்தான். ஒருவரை ஆராயமல் தொடர்பு வைப்பதும் நம்புவதும் ஆபத்தானது. அத்துடன் நம்பியவனைச் சந்தேகிப்பதும் துன்பமானது. விதுஷன் மிகவும் நல்லவன்; நம்பிக்கைக்குரியவனென்று நான் நம்பியிருந்த போது, தொழிற்சாலையில் உள்ள சிலா் அவன் உதயணனோடு சேர்ந்து எனக்குச் சதி செய்கிறான் என முறையிட்டனர். விதுஷனுக்கு நான் பல உதவிகள் செய்திருக்கிறேன். அப்படியிருக்க இவன் ஏன் இப்படி நடக்கிறான் எனச் சந்தேகப்பட்டேன். அதனால் எந்த நாளும் எனக்கு மனப் புழுக்கமேற்பட்டது. அதனால் இரத்த அழுத்தம் கூடியது. என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை; உண்ண முடியவில்லை; உறங்க முடியவில்லை; வேலைகளை ஒழுங்காகக் கவனிக்க முடியவில்லை. அந்த நாட்களில் நான் பட்ட கஷ்டத்தை என்னால் சொல்லி முடிக்க முடியாது. அதன் பின் அவனைத் திருட்டுக் குற்றஞ் சாட்டி வேலையிலிருந்து நீக்கினேன். அவன் வந்து எதையாவது கதைப்பானென்று எதிர்பார்த்தேன். ஆனால் அவன் வரவில்லை. அதனால் எனக்குக் கோபம் வந்தது; ஆத்திரம் வந்தது; அதனால் அவனைப் பழிவாங்க நினைத்தேன். பின்பு அவன் நிரபராதியென்று தெரிந்த பின்பு நான் அவனுக்குச் செய்ய துரோகங்களை நினைக்க முன்பை விட வேதனையாக இருந்தது. அதற்காகத் தான் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நம்பியவனைச் சந்தேகித்தால் பெரும் பெரும் துன்பங்கள் வரும் என்று இப்பொழுதும் அந்த நினைவுகள் எனது மனதில் தோன்றி என்னை வருத்துகின்றன. அதனால் நான் பெருந் துன்பத்தை அனுபவிக்கிறேன். அதனால் தான் யாரையும் ஆராயாமல் நம்புவதில்லை; சிபார்சுகளை ஏற்றுக் கொள்வதில்லை. அதற்காக நீங்கள் என்னைத் தவறாக நினைக்கக் கூடாது'' என்றார் கணநாதன்.

**510. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்.**

ஒருவனை நன்கு ஆராயாமல் நம்புவதும், ஆராய்ந்து தெளிந்து நம்பிய பின் ஐயப் படுவதும் தீராத துன்பத்தைத் தரும்.

## *செயலுக்குரியவன்*

மிகவும் அவசரமாகக் கஜேந்திரன் வீட்டிலிருந்து புறப்பட்டு வீதிக்கு வந்தான். அன்று நோயாளியான அவனது தாய்க்கு நோய் சற்று அதிகரித்ததால் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று மருந்தெடுத்துக் கொண்டு வந்தான். அன்று வயலில் பத்துக் கூலியாட்கள் வேலை செய்தனர். தகப்பன் அவர்களுடன் வயலில் நின்றதால் அவர்களுக்கு மதிய உணவு தயாரிக்க வேண்டிய பணியும் அவனது தலையில் பொறிந்தது. அதனால் அன்று அவன்

பல்கலைக்கழகத்திற்குச் செல்லவில்லை. அத்துடன் சுவாமியாரின் விருப்பத்தின் பேரில் சமூக சேவைகளில் ஈடுபடுவதால் அவனுக்கு நேரமே இருப்பதில்லை. அன்று மூன்று மணிக்கு வெளிநாட்டிலிருந்து வந்த பெரும் பிரமுகரொருவரைச் சந்திப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டதால் விரைவாகத் துவிச்சக்கர வண்டியை மிதித்தான். அதிபா் விக்னேஸ்வரமூா்த்தியும் தணிகாசலமும் அப்பிரமுகரின் வீட்டுக்கு மூன்று மணிக்கு வருவதாகக் கூறியிருந்தனா். அவன் அப்பிரமுகரின் வீட்டுக்குச் சென்ற போது நேரம் மூன்று பத்து. விக்னேஸ்வரமூா்த்தியும் தணிகாசலமும் அப்பிரமுகரின் வீட்டில் இருந்தனா். அதனால் அவனுக்கு உள்ளே செல்லச் சற்றுத் தயக்கமாக இருந்தது. விக்னேஸ்வரமூா்த்தியும் தணிகாசலமும் எத்தனை வேலைகளிருந்தாலும் அதை ஒதுக்கி வைத்து விட்டுக் குறித்த நேரத்திற்கு அந்தந்த இடங்களுக்கு வந்து விடுவார்கள்.

கஜேந்திரனது தயக்கத்தைப் புரிந்து கொண்ட தணிகாசலம் சொன்னாா்; ‘‘தம்பி, அம்மாவுக்கு எப்படி....? காலமை அப்பாவைச் சந்தித்தனான். அவா் எல்லாம் சொன்னவா். இந்தச் சின்ன வயதிலை வீட்டுச் சமையற் பொறுப்பெல்லாம் உம்முடைய தலையிலை பொறிஞ்சிட்டுது. ஒரு காலத்திலை கஷ்டப்பா்றவை பிற்காலத்திலை நல்லாயிருப்பினை. வீட்டு வேலை, தோட்டவேலை, சமூகசேவை, பல்கலைக்கழகத்திலையும் நீா் தான் மாணவா் தலைவா் என்றும் கேள்விப்பட்டன். எல்லாவற்றையும் செய்யத் திறமை வேண்டும். உமக்கு அது நிறைய இருக்கு. சுவாமியாா் சொன்னாா்; ‘‘நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து, நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவனைச் செயல்களுக்குரியனவாய் அரசனும் ஏற்றுக் கொள்வான். அதனால் தான் நான் கஜேந்திரனைத் தலைவனாகத் தெரிந்தேன்’’ என்று உண்மையைச் சொல்லுறன் என்னை, ஏன் அதிபரை விட நீா் அக்கறையோடை நல்லபடி சேவை செய்கிறீா். அதைத் தொடா்ந்து செய்ய வேண்டும்’’. கஜேந்திரனுக்கு ஒரு மாதிரியாகப் போய் விட்டது. தன்னை கற்பித்த குருவை விடத் தன்னை உயா்வாகக் கதைத்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. எனினும் அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

‘‘பின்நேரம் ஐந்து மணிக்கு பரமேஸ்வரன் உம்மை வரச் சொன்னவா் தம்பி. இப்படியே போய்ச் சந்தித்து விட்டுப் போம்’’ என்றாா் தணிகாசலம்.

கஜேந்திரன் அதிா்ந்து போனான். நாலரை மணிக்கு வித்தியாவைச் சந்திப்பதாகக் கூறியிருந்தான். நாலரை மணிக்கு அவளைச் சந்திக்கா விட்டால் பூகம்பமே வெடிக்கும். அவன் அவளை இரண்டு வாரமாகச் சந்திக்கவில்லை. முக்கியமான விஷயம் கதைக்க வேண்டுமென்று ஐந்து முறை சொல்லியனுப்பி விட்டாள். நேற்றுக் காலையில் காயத்திரி வந்து சொன்னாள்; ‘‘ நீங்கள் ஏன் வித்தியாவைக் காதலித்தனீங்கள். பொழுதுபோக்கிற்கும் இளம் உணா்வுகளுக்கும் தீனியிடவுமா அவளுடன் பழகினீா்கள். உங்களை அவள் காதலித்தாளா? நீங்கள் அவளின் பின்னால் திரிந்த போது எத்தனை தடவைகள் செருப்பைக் கழற்றிக் காட்டியிருப்பாள். அப்போதெல்லாம் வெட்கமில்லாமல் அவளின் பின்னால் திரிந்து அவளை வளைத்துப் போட்டு, இப்ப கை கழுவப் பார்க்கிறீா்களா? இப்பவும் நிலைமை மோசமடையவில்லை. அவளை விரும்பவில்லை என்று சொல்லி ஒரு கடிதம் எழுதித் தாருங்கள் கொண்டு சென்று கொடுக்கிறன். நீங்கள் என்ன நினைத்திருக்கிறீா்கள்?. அவளிடம் அழகில்லையா? பணமில்லையா? பொருளில்லையா? கல்வியறிவில்லையா? ஏற்கனவே அவளது தாய் மாமன் தனது மகனுக்கு அவளைத் திருமணஞ் செய்து வைக்க விரும்புறாா். தாய்க்கும் விருப்பம். மைத்துனன் வைத்தியராக

இருக்கிறான். கொழும்பில் அவர்களுக்குச் கோடிக் கணக்கான சொத்திருக்கு. அதனால் தான் அவள் உங்களை விரும்பவில்லை. பழிகிடந்து அவளின் பின்னால் நாய் மாதிரி அலைந்து அவளது காதலைப் பெற்று விட்டு இப்ப என்னத்திற்காக அவளைச் சந்திக்காமல் இருக்கிறியள்'' வெடி குண்டுகளைப் போலக் காயத்திரி சொன்ன வார்த்தைகள் கஜேந்திரனது காதுக்குள் வெடித்துக் கொண்டிருந்தன.

''எனக்கு மிகவும் முக்கியமானதொரு வேலை இருக்கிறது. நேற்று விரிவுரையாளர் தனக்கு உதவி செய்ய வரும்படி சொன்னவர். இன்று நான்கு மணிக்கு வருவதாகச் சொல்லி விட்டேன்'' என்றான் கஜேந்திரன்.

''இதுவும் ஒரு முக்கியமான விஷயம். சந்தித்து விட்டுப் போ''என்றார் தணிகாசலம்.

கஜேந்திரனுக்கு வியர்த்தது.

**511. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப்படும்.**

நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து, நன்மை தருபவற்றை விரும்புகின்ற இயல்பை உடையவனே செயலுக்கு உரியவனாக ஏற்றுக் கொள்ளப்படுவான்.

## வல்லவன்

''எல்லோராலுஞ் செயல்களைச் செய்ய முடியாது. நாங்கள் ஏன் உம்மைச் செயலுக்குரியவனாக நினைத்திருக்கிறம்'' என்று கூறி விட்டு நிறுத்தினார் தணிகாசலம்.

கஜேந்திரனுக்கு அவர் கூறியது கேட்கவில்லை. இன்று சென்று வித்தியாவைச் சந்திக்காவிட்டால் அவள் தற்கொலை செய்தும் விடுவாள். ''இரண்டு வாரகாலமாக அவள் என்னைச் சந்திக்கத் துடிக்கிறாள். என்னால் அவளைச் சந்திக்க முடியவில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரச்சினை வந்து கொண்டே இருக்கு. ''டேய், வித்தியாவுக்கு நீ துரோகஞ் செய்கிறாய். நேற்று நான் அவளைக் கண்டனான். கடுமையான நோயாளி மாதிரியிருக்கிறாள். முகம் கறுத்துப் பொலிவிழந்து கண்கள் தாண்டு விட்டன. விசரியைப் போல நின்றாள். தலை கூடச் சீவவில்லை ''நூலகத்துக்கை இருக்கும் வித்தியாவின்ரை நிலையை வந்து பார் என்று சொல்லிக் காயத்திரி சொன்னதாலை போய்ப் பார்த்தனான். என்னைக் கண்டிட்டு அழுதாள். எனக்குக் காதலில் நம்பிக்கையில்லை. இப்ப நாம் படிக்க வேண்டிய காலம். படித்து முடியத்தான் அதைப் பற்றிச் சிந்திக்க வேணும். இந்த வயதில் காதலிப்பது தப்பு. அதை விடத் தப்பு காதலித்த பெண்ணை ஏமாற்றுவது. டேய் உன்னை அவள் விரும்பினவளே, இரண்டு மூன்று வரிசமாய் அவளுக்குப் பின்னால் பேயாய் அலைந்து தான் அவளின்ரை காதலைப் பெற்றனி. அப்படியிருக்க இப்ப உனக்கு என்ன நேர்ந்தது?'' நகுலன் முதல் நாள் கூறியது அவனது நினைவுக்கு வந்தது.

‘‘கஜன், நகுலன், பிரதீபன் என்று ஊருக்கை நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இருக்கும் போது நாமெல்லோரும் ஏன் உன்னை விரும்புறம்.... நீதான் செயலுக்குத் தகுதியானவன். பொருள் வரும் வழிகளைப் பெருக்கி, அவற்றை வளமுண்டாகும் படி மேலும் வளர்த்து, இடையில் வந்து தாக்கும் துன்பங்களை எதிர்த்துப் போராடி, அவற்றை வென்று தானெடுத்த செயலை முடிக்கக் கூடிய தகுதியுடையவனே செயல் புரிவதற்கேற்றவனாவான். அது நீதான்’’.

அவர்கள் சந்திக்க வந்த பிரமுகரின் மனைவி மூவருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். கஜேந்திரன் நேரத்தைப் பார்த்தான். மூன்றரை மணி. அவனது மனம் என்றுமில்லாதவாறு தவித்தது. நெஞ்சுள் பூகம்பம் நிகழ்வதைப் போன்ற ஓர் உணர்வு. அவனால் தேநீரைக் குடிக்க முடியவில்லை. உதடுகள் பிரியாது மனம் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் நாமத்தை உச்சரித்தது.

பிரமுகர் கொடுத்த நன்கொடையைப் பெற்றுக் கொண்டு பற்றுச் சீட்டை எழுதிக் கொடுத்து விட்டு மூவரும் எழுந்தனர்.

‘‘கஜன், தணிகாசலம் சொன்னது உண்மை தான். நீ தலைவராக வந்த பின்பு பணம் மழை போலக் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. அப்பணத்தின் மூலம் நாம் எவ்வளவோ நற்காரியங்களைச் செய்யக்கூடியதாக இருக்கிறது. கொழும்பில் உள்ள அரிமாக்கழகத்தினர் பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்களைப் பரமேஸ்வரன் மூலம் கொடுக்க விரும்புகிறார்கள். அதற்காக அரிமாக்கழகத்தைச் சேர்ந்த சிவானந்தனும், டன்சன்கலாட்டும் சுரேசும் கொழும்பிலிருந்து வந்திருக்கின்றனர். சில்வெஸ்ரர் நான்கு மணிக்கு அவர்களை அழைத்துக் கொண்டு பரமேஸ்வரனின் வீட்டுக்கு வருகிறார். இரவு ஒன்பது மணிக்கு அவர்கள் புறப்படுகிறார்கள். விரிவுரையாளரின் தொலைபேசி இலக்கத்தைத் தா நான் சொல்லுறன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

இடியொன்று திடீரென்று தலையில் விழுந்து சிதறியதைப் போல இருந்தது கஜேந்திரனுக்கு. இரத்தோட்டம் நின்று விட்டதைப் போன்றதொரு நிலைக்குட்பட்டான் கஜேந்திரன். அவனால் பேசமுடியவில்லை.

‘‘தொலைபேசி இலக்கம் என்ன?’’ என்றவாறு தனது கைத் தொலைபேசியை எடுத்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

கஜேந்திரன் தடுமாறினான். அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. இன்று உலகமே அழிந்தாலும் சரி வித்தியாவைச் சந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் மற்றவர்கள் கூறுவதைப் போலத்தான் அவளும் நினைப்பாள். நகுலனும் காயத்திரியும் கூறிய செய்திகளால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த கஜேந்திரனுக்கு விக்னேஸ்வரமூர்த்தி சொன்னது எரிச்சலை வரவழைத்தது; ‘‘பொல்லாத சமூகசேவை. எனக்கேன் இது. மற்றய இளைஞர்களைப் போல இருப்போம்’’ என்று நினைத்தான்.

‘‘எனக்கு அவரது இலக்கம் ஞாபகமில்லை. நான் கட்டாயம் போட்டுத் தான் வர வேண்டும். அவர்கள் எட்டுமணிவரை அங்கிருப்பார்கள் தானே. நான் ஒரு மணி நேரத்துக்குள் வந்து விடுவேன்’’ என்று கூறி விட்டு அவர்களது பதிலை எதிர்பாராது புறப்பட்டான் கஜேந்திரன்.

அது விக்னேஸ்வரமூர்த்திக்குப் பிடிக்கவில்லை என்று தணிகாசலத்திற்குப் புரிந்தது.

**512. வாரி பெருக்கி வளப்படுத்து உற்றவை ஆராய்வான் செய்க வினை.**

பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளங்களை உண்டாக்கி, அதனால் வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல்களைச் செய்தல் வேண்டும்.

## நம்பிக்கைக்குரியவன்

நாலேகாலுக்கு கஜேந்திரன் வந்த போது கடற்கரையில் அவர்கள் சந்திக்கும் பழுதடைந்த ஓடத்தினருகே வித்தியா தலை குனிந்த படி அமர்ந்திருந்தாள். கஜேந்திரன் மெதுவாக வந்து அவளின் அருகே இருந்து ‘‘வித்தி’’ என்றான். அவனது குரல் தளர்ந்தது.

மணலில் குந்தியிருந்து இரண்டு முழங்காலுக்குள்ளும் தலையைப் புதைத்து, கைகளால் காலைச் சுற்றிப் பிடித்தபடி அமர்ந்திருந்த வித்தியா எதுவும் பேசவில்லை. லேசான விம்மல் ஒலி மட்டும் கேட்டது.

அவள் அப்படித்தான் கோபமான வேளைகளில் பேசமாட்டாள். அவளைப் பேசப்பண்ண ஒரு மணித்தியாலம் வேண்டும். அவளைச் சமாதானப் படுத்தி கதைத்து விட்டு எப்போ பரமேஸ்வரனின் வீட்டிற்குச் செல்வது என்பதை நினைக்க அவனுக்குப் பயமாக இருந்தது. ‘‘வித்தி என் அன்பே’’ என்றழைத்தான்.

வித்தியா எதுவும் பேசவில்லை; ‘‘ வித்தி எனக்கென்ன உம்மைச் சந்திக்க விருப்பமில்லையா? காலையில் அம்மா மயங்கி விட்டா. அவாவை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றேன். பின் வயலில் வேலை செய்த பத்துக் கூலியாட்களுக்குச் சமைத்தேன். அம்மாவுக்குரிய உணவு தயாரித்துப் பணிவிடை செய்தேன். பின் அதிபரும் தணிகாசலமண்ணையும் நானும் ஒரு பிரமுகரைச் சந்தித்து நன்கொடை பெற்றோம். அதன் பின் பரமேஸ்வரனின் வீட்டுக்கு டன்சன்கலாட்டையும் சிவானந்தனையும் சுரேசையும் சில்வெஸ்ரர் அழைத்து வாறார். அவர்கள் நாவலர் வித்தியாலயத்திற்கு இலட்சக்கணக்கில் கொடுத்தவர்கள். அன்பே! என்னைப் புரிந்து கொள்ளும். திருமணமான பின் நானே உமக்குச் சமைத்துத் தருவன். இன்று, அருமையான நேரத்தை அழுதே கழிக்காதையும். முகத்தைத் தூக்கி ஒரு முறை காட்டும்’’ இரந்தவாறு அவளது தலையில் கையை வைத்தான் கஜேந்திரன்.

அவனது நிலையை நினைக்க அவளுக்கு வேதனையாக இருந்தது. மனதில் இரும்புக்குண்டு போல இருந்த வேதனை படிப்படியாக குறைந்து கொண்டு வந்தது.

சிலவேளைகளில் அவள் அப்படி இருக்கும்போது, அவன் அவளது தலையில் கை வைத்தால் ஆத்திரத்துடன் அதைத் தட்டி விடுவாள். அப்படி அவள் செய்யாததால் மெதுவாக அவளது தலையைத் தூக்கினான். அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். குளமாகக் கண்களுக்குள் தேங்கி நின்ற நீர் உடைப்பெடுத்து ஆறாகப் பாய்ந்தது. கண்கள் சிவந்திருந்தன.

அவளது கண்களால் வழியும் கண்ணீரைப் பார்த்தபடி இருந்தான் கஜேந்திரன். அவனது கண்களாலும் கண்ணீர் வழிந்தது. முகத்தில் கரிய குறுந்தாடி இருந்தமையால் கண்ணீர் அதற்குள்ப் புகுந்தது.

‘‘கஜன் என்றவாறு வித்தியா அவனது நெஞ்சில் சாய்ந்தாள் ‘‘வித்தி, என்னுயிரே நான் உம்மை வெறுப்பேனா...? நான் உம்மை அடையப்பட்ட கஷ்டம் எனக்கும் உமக்குந்தான் தெரியும். உமக்காக நான் எதையும் இழக்கத் தயார். சொல்லும்... நான் எனது தலைமைப் பதவியை இராஜினாமச் செய்யட்டா. சுவாமியாரில்லை... அந்த மகா கணபதியே வந்து கேட்டாலும் நான் பதவியை ஏற்க மாட்டேன்’’.

உருகிப்போனாள் வித்தியா; ‘‘ஐயையோ அப்படிச் சொல்லாதைங்கோ. சுவாமியார் நாம் நினைப்பதை அறிந்து விடுவார். நீங்கள் சொன்னது அவருக்குக் கேட்டிருக்கும் அப்படிச் சொல்லாதைங்கோ. மன்னிப்புக் கேளுங்கோ... மன்னிப்புக் கேளுங்கோ...’’ துடித்தாள் வித்தியா.

‘‘நான் போய்ச் சுவாமியாரிடம் கேட்கிறேன்...’’ என்றான் கஜேந்திரன்.

‘‘இல்லை... இல்லை... அவரிடங் கேட்க வேண்டாம். என்ரை கையைத் தொட்டுச் சொல்லுங்கோ....’’ கஜேந்திரன் அவளது வலது கையைத் தொட்டான்; ‘‘நான் அறியாமல் அப்படிக் கூறிவிட்டேன். இனிமேல் நான் அப்படிக் கூற மாட்டேன். இதற்குப் பரிகாரமாக நான் மகா கணபதிக்கு அர்ச்சனை செய்வேன்’’ வித்தியா சொல்லக் கஜேந்திரன் சொன்னான்.

‘‘உம்மைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். பிரிந்தே செல்லக்கூடாது’’ முணுமுணுத்தான் கஜேந்திரன்.

‘‘உண்மையில் நான் கொடுத்து வைத்தவள்’’

‘‘ஏன்’’

முழுமையாக முறுவலித்தாள் வித்தியா. கஜேந்திரனுக்கு உயிர் போவது போல இருந்தது ‘‘வெள்ளிக்கிழமை இரவு சுவாமியார் என்ன சொன்னவர்?’’.

‘‘சொல்லும்’’ கஜேந்திரன் அவளது கையைப் பிடித்துத் தனது நெஞ்சில் வைத்தான். பின் ‘‘ சொல்லும்’’ என்றான்.

சேவை செய்பவன் பிற உயிர்கள் மீது மட்டற்ற அன்பைச் சொரிபவனாகவும், அறிவு மிக்கவனாகவும் சந்தேகமில்லாது ஆராய்ந்து அறியும் ஆற்றல் உடையவனாகவும் இருத்தல் வேண்டும். அவன் தான் நம்பிக்கையான சேவகன்’’ என்றவர். அவர் கூறிய எல்லாத் தகுதிகளும் உங்களுக்கிருக்கு’’.

‘‘அதை நீர் சொன்னால் சரியா...?’’

“நான் சொல்லவில்லை ஊரே சொல்கிறது. அதிபா் சுவாமியாா் கூறும் போது எனக்கருகில் தான் இருந்தவா். சுவாமியாா் கஜேந்திரனை நினைத்துத் தான் சொல்கிறாா் என்று தணிகாசலமண்ணைக்குச் சொன்னது எனக்குக் கேட்டது” நாணினாள் வித்தியா.

“அதற்குப் பரிசு தரவேண்டும்” என்று அவளை இழுத்து அனைத்தான் கஜேந்திரன் அதன்பின் சில கணங்கள் பேச்சொலி எளவில்லை.

**513. அன்பு அறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.**

அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய நான்கு குணங்களை நிலையாக உடையவன் மீதே நம்பிக்கை கொள்ளல் வேண்டும்.

## வேறுபடுவோா்

விம்மி விம்மி அழுத வித்தியா மகிழ்வுடன் இருப்பதைப் பாா்க்க கஜேந்திரனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது; “வித்தி, நான் உம்மீது உயிரையே வைத்திருக்கிறேன். உம்மைப் பிரிந்து என்னால் வாழ முடியாது. ‘வித்’ என்ற மகா சத்தியிலிருந்து தான் உலகம் உருவானதைப் போல ‘வித்யா’ என்ற மகா சக்தி என்னுடலுள் இருப்பதால் தான் நான் உயிா் வாழ்கிறேன். அப்படியிருக்க என்னைக் காணாத வேளைகளில் நீா் ஏன் கவலையாக இருக்கிறீா். என்னில் உமக்கு நம்பிக்கையில்லையா..?” அல்லது எனது நினைவுகள் உமது இதயத்தில் இல்லையா...? மற்றவா்களுக்கு முன்னால் ஏன் அப்படியிருக்கிறீா். நகுலனும் காயத்திரியும் என்னைக் கேவலமாக நினைத்து உபதேசம் செய்கிறாா்கள். அதை என்னாற் சகிக்க முடியவில்லை” கலங்கினான் கஜேந்திரன்.

வித்தியா நிமிா்ந்து அவனைப் பாா்த்தாள். அவனது கண்கள் கலங்கியிருந்தன; “என்னால் உங்களைக் காணாது இருக்க முடியவில்லை. எப்படித்தான் மனதிற்குச் சமாதானஞ் சொன்னாலும் அது கேட்டால் தானே. தானே கேள்வியும் கேட்டு விடையும் சொல்லிக் கலங்குகிறது”.

கஜேந்திரன் சிரித்தான் இந்த விஷயத்தில் உமக்குப் புத்திமதிகளோ ஆலோசனைகளோ சொல்ல முடியாது. இப்போது கேட்பீா். நாலு நாட்கள் சென்றால் உம்மைப் பாா்த்து விட்டு வந்து ஒவ்வொருவரும் எனக்கு உபதேசம் செய்யத் தொடங்கி விடுவாா்கள்”.

சிணுங்கினாள் வித்தியா. அப்போது அவளது முகம் சிவந்து நவரசபாவனை காட்டியது; “வித்தி, பரமேஸ்வரன் ஐயாவின் வீட்டிற்குச் சில பிரமுகா்கள் வருகிறாா்கள். நான் அங்கு செல்ல வேண்டும்”.

“நான் போக விடமாட்டன்” கஜேந்திரனின் கையை இறுக்கமாகப் பிடித்தாள் வித்தியா.

கஜேந்திரன் சிரித்தான் ''பிறகும் சுவாமியாரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டி வரும்''

''போங்கோ... இனிமேல் வரவேண்டாம். நான் மாமாவின் மகனைச் செய்யிறன். அவரெண்டால் வீட்டோடை இருப்பர்''.
கஜேந்திரன் அட்டகாசமாகச் சிரித்தான்; ''அதைத்தான் நான் எதிர்பார்க்கிறன். எப்ப செய்யப் போறீர்''.

வித்தியா முறாய்த்தாள்; ''இப்பிடிக் கதைக்கக் கூடாதென்று சொன்னான்''.

''நீர்....'' என்றவன் சற்றுத் தடுமாறியபடி'' கோபிக்கும் போதும் அழகாக இருக்கிறீர்'' என்றான்.

'இல்லை..... இல்லை... நீர் கதைக்கலாமோ'' என்று தானே கேட்க நினைத்தனீங்கள்.''

''ஓம்...ஓம்.... உண்மை தான்''

''எது உண்மை?''

''ஐயோ என்னைக் கொல்லாதையும். பரமேஸ்வரன் வீட்டில் மூன்று பேர் இருந்து திட்டப் போயினை'' எழுந்தான் கஜேந்திரன்.

''நாளையிண்டைக்கு அம்மா நயினாதீவு நாகபூசனியம்மன் கோயிலுக்குப் போறா. வீட்டுக்கு வாறியளா?''.

கஜேந்திரனால் உடனடியாகப் பதில் கூற முடியவில்லை. சற்றுத் தடுமாறினான்; ''மத்தியானச் சாப்பாடு வீட்டை தான்'' என்று கூறிவிட்டு நடந்தாள் வித்தியா.

''எல்லா வேலைகளையும் ஒதுக்கி விட்டுச் செல்ல வேண்டும்'' என்று நினைத்தான். உடல் முழுவதும் இனித்தது.

கஜேந்திரன், பரமேஸ்வரனின் வீட்டுக்கு வந்த போது, பரமேஸ்வரன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்திருந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தார். கஜேந்திரனைக் கண்டதும் புத்தகத்தை மூடி மேசையில் வைத்து விட்டு அவனைப் பார்த்தார்.

''அவர்கள் வரவில்லை. கடைசி நேரத்தில் பிரச்சினையாம். நாளை மறுதினம் வருவதாகச் சொன்னார். நாளையிண்டைக்கு பௌர்ணமிதானே. பல்கலைக்கழகமும் விடுதலை. காலமை ஒன்பது மணிக்கு வந்தால் வேலைகள் கொஞ்சம் செய்யலாம். பின்நேரம் அவையோடு கதைக்கலாம்'' என்றார் பரமேஸ்வரன்.

''மத்தியானச் சாப்பாடு வீட்டைதான்'' வித்தியா சொன்னாள். தடுமாறினான் கஜேந்திரன்.

“அதிபரும் தணிகாசலமும் சிவசுந்தரமூர்த்தியோடு அவரது நண்பரொருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். சிவசுந்தரமூர்த்தி தான் கூட்டிக் கொண்டு போகுது. சுனாமி நிதிக்கு மூன்று இலட்சரூபா தாற தெண்டவராம். உண்மையில் நீ ராசிக்காரன் தான்” என்றார் பரமேஸ்வரன். அப்பொழுது தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும் அங்கு வந்தனர்.

தணிகாசலம் சிரித்தார் சிவசுந்தரமூர்த்தியை எந்த விஷயத்திலும் நம்ப முடியாது. எதிலும் தில்லு முல்லுத்தான். அவனை நம்பி அஞ்சு மைல் சென்றது தான் மிச்சம்” அலுத்துக் கொண்டார் தணிகாசலம்.

“ஏன்? என்ன நடந்தது?” என்று கேட்டார் பரமேஸ்வரன்.

“அவர் ஒரு ஐந்நூறு ஆயிரம் தாறாராம். இவ்வளவு தொகையைத் தான் சொல்லேல்லையாம்” என்றார் தணிகாசலம்.

“எவ்வளவு தான் நாம் ஆராய்ந்து செயற்பட்டாலும் செயலை மேற் கொண்டு செய்யும் போது வேறுபடும் மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். எவ்வளவு அவமானங்கள் வந்தாலும் சிலர் திருந்த மாட்டார்கள். சிவசுந்தரமூர்த்தி சொல்லும் போது எனக்கு நம்பிக்கையில்லை. நான் சொன்னனான். தணிகாசலம் கேட்கவில்லை” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“எனக்குத் தெரியும். இருந்த போதும் போகாமல் விட்டால் சிவசுந்தரமூர்த்தி கதைகளைச் சோடனை செய்து ஊருக்கை கதை கட்டிவிடுவன்” என்றார் தணிகாசலம்.

பரமேஸ்வரன் சிரித்தார்; “உலகம் பலவிதம். ஒவ்வொருவரும் ஒரு விதம்” என்றார்.

**514. எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்**
**வேறுஆகும் மாந்தர் பலர்.**

எவ்வளவு தான் ஆராய்ந்து நம்பிக்கை வைத்த பின்பும், செயலாற்றும் போது மாறுபடும் மனிதர்கள் பலர் இருக்கிறார்கள்.

## ஏவக் கூடியவன்

அன்று சனிக்கிழமை டான்சன் கலாட்டும் சிவானந்தனும் சுரேசும் சில்வெஸ்ரருடன் பரமேஸ்வரனது வீட்டுக்குக் காலை எட்டு மணிக்கு வந்தனர். சரியாக எட்டு மணிக்கு விக்னேஸ்வரமூர்த்தியும் வந்து விட்டார். ஆனால் தணிகாசலத்தையும் கஜேந்திரனையும் காணவில்லை. “தணிகாசலம் ஒரு போதும் நேரம் பிந்தி வரமாட்டார். என்னவாக இருக்கும்? என்று யோசித்தபடி இருந்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

“சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் முழுவிபரங்களையும் சேகரித்து அவர்களுக்கு என்னென்ன உதவிகள் தேவையென முன்னுரிமைபட்டியலொன்றை

உடனடியாகத் தயாரித்துத் தரும்படி சிவானந்தன் சொன்னார். கூட்டம் முடியப் பத்து மணியானது. அப்பொழுதும் இருவரும் வரவில்லை. கொழும்பிலிருந்து வந்தவர்கள் சென்ற பின்பே தணிகாசலம் வந்தார். அவரது முகத்தில் துயரத்தின் ரேகைகள் பதிந்திருந்தன.

‘‘பாவம் கஜேந்திரன். இரவு நான்கு மணியளவில் கஜேந்திரனது தாய் இலட்சுமி திடீரென்று நோய் வாய்ப்பட்டிட்டாள். கஜேந்திரன் உதவி செய்யும் படி வந்து கேட்டான். விடிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். இப்பத்தான் அவாவுக்கு மயக்கம் தெளிந்தது’’ என்றார் தணிகாசலம்.

‘‘இலட்சுமி இப்ப எங்கை?’’ விக்னேஸ்வரமூர்த்தி கேட்டார்.

‘‘ஆஸ்பத்திரியிலை தான். நாலைந்து நாட்களுக்குத் தங்கியிருந்து சிகிட்சை பெற வேண்டும் என்று வைத்தியர் கூறுகிறார்’’ என்றார் தணிகாசலம்.

‘‘அப்ப கஜேந்திரன் நாலைந்து நாட்களுக்கு வரமாட்டான். சில்வெஸ்ரர் சொன்ன வேலையை நகுலனைக் கொண்டு செய்விப்பம். நாளைக்கு கடத்தக் கூடாது’’ என்றார் பரமேஸ்வரன்.

தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும் வெகுநேரமாக எதுவும் பேசாததால் பரமேஸ்வரன் சொன்னார்; ‘‘நாம் தாமதிக்கும் ஒவ்வொருநாளும் இழப்புக்களைத் தான் சந்திப்போம். நகுலன் கெட்டிக்காரன். அவனும் பட்டதாரி தானே. செய்வான்’’.

தணிகாசலம் சிரித்தார். பின்பு சொன்னார்; ‘‘மச்சான், நீங்கள் பெரிய தொழிலதிபர். என்னை விடப் படித்தனீங்கள். அனுபவஸ்தர். உங்களின் தொழிற்சாலையில் பொறியியலாளர்கள் ஐந்து பேர் இருப்பதாகவும், இருவருக்கு எந்த வேலையும் தெரியாது. அவர்களிடம் பொறுப்புக் கொடுக்கும் செயல் முடிவடைய மாட்டாது என்று அடிக்கடி சொல்வீர்கள். அதைப் போலத்தான் நகுலனும். அவன் கெட்டிக்காரன் தான். ஆனால் சில விஷயங்கள் அவனுக்குப் புரியாது. முன்பு சில செயல்களைக் கொடுத்து நாம் அவதானித்துப் பார்த்தோம். அவற்றில் பல குறைபாடுகள் இருந்தன. அதனால் நாலைந்து தினங்கள் சென்றாலும் பரவாயில்லை. கஜேந்திரன் வரட்டும். அதற்கு முன்பு நாம் மற்ற விஷயங்களைப் பார்ப்போம்’’.

‘‘ஒரு செயலைச் செய்யும் வழிவகைகளை நன்றாக அறிந்து, அதனால் வரும் இடையூறுகளுக்கு முகங் கொடுத்து, அச் செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பவனை விட்டு விட்டு, வேறேதாவது காரணத்தால் சிறந்தவனென்று எண்ணி, வேறொருவனைச் செயலைச் செய்ய ஏவக்கூடாது. அது பெரும் தீங்கில் தான் முடியும். மந்திரம் தெரியாதவனின் பூசைவிடிய விடிய நடைபெறும் என்பார்கள். அதனால் கஜேந்திரன் வரட்டும். அவன் மனது வைத்தால் ஓரிரு நாட்களில் முடித்து விடுவான்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

அப்பொழுது கஜேந்திரன் அங்கே வந்தான்; ‘‘அம்மாவுக்கு எப்படி?’’ அக்கறையுடன் கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

கஜேந்திரனின் முகம் கறுத்தது, கண்கள் கலங்கின; ‘‘இப்ப பரவாயில்லை. இரண்டு தினங்களாவது ஆஸ்பத்திரியில் தங்கியிருக்க வேண்டும்’’ என்று வைத்தியர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

‘‘அங்குசன் இருந்த படியால் எம்மைக் கண்டதும் ஓடி வந்து செயலாற்றினார். இப்ப அம்மாவுடன் துணையாக ஆஸ்பத்திரியில் யார் நிற்கிறார்கள்’’ தணிகாசலம் கேட்டார்.

கஜேந்திரனால் உடனடியாக அதற்குப் பதில் கூற முடியவில்லை. சற்றுத் தயங்கினான். காலையில் கஜேந்திரனது தாயார் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதை நகுலன் வித்தியாவுக்குச் சொல்லி விட்டான். உடனே வித்தியா ஆஸ்பத்திரிக்கு வந்து இலட்சுமியைப் பார்த்தார்.

‘‘யார் இந்தப்பிள்ளை?’’ என்று இலட்சுமி கேட்டாள்.

கஜேந்திரன் தடுமாறினான். வித்தியா சாதாரணமாகச் சொன்னாள்; ‘‘அம்மா நான் கூலிக்கு நோயாளிகளைப் பராமரிப்பவள். கவலைப்படாதைங்கோ உங்களை நான் எனது தாயைப் போலப் பராமரிப்பன்’’.

முன்பை விடக் குழம்பிப் போனான் கஜேந்திரன். அங்கிருந்து ஒருவாறு தப்பி வந்தவனுக்குத் தணிகாசலத்தின் கேள்வி மேலும் தடுமாற வைத்தது.

கஜேந்திரன் தடுமாறுவதைக் கண்ட தணிகாசலம் சொன்னார்; ‘‘ஒருத்தருமில்லையே...? காலமை மயங்கின மனிசியைத் தனிய விட்டு விட்டு வந்திட்டியா...? எனது வீட்டை போய்ப் பாக்கியக்காவைக் கூட்டிச் சென்று விட்டிருக்கலாம் தானே’’.

கஜேந்திரன் உருகிப் போனான். பரமேஸ்வரனுக்கு ஆச்சரியமாக இருந்தது; ‘‘தணிகாசலமென்ன மனிதனா? இல்லைத் தெய்வமா?’’ என்று நினைத்தார். விக்னேஸ்வரமூர்த்தி சாதாரணமாகச் சிரித்தார். அது தணிகாசலத்தின் இயல்பு என்று அவருக்குத் தெரியும்.

‘‘இல்லைத் தணியண்ணை. கூலிக்கு நோயாளிகளைப் பராமரிக்கின்ற ஒரு வேலையாளைப் பிடித்தனான்’’ என்றான் கஜேந்திரன். அதைச் சொல்ல அவனது நெஞ்சு வெடித்து விடும் போல இருந்தது.

‘‘ஏன் தம்பி...? அதுகள் அக்கறையாகப் பார்க்காதுகள். இனிமேல் பிடிக்காதை பாக்கியக்காவைக் கூட்டிக் கொண்டு போ’’என்றார் தணிகாசலம்.

**515. அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**
**சிறந்தான் என்று ஏவற்பாற் றன்று.**

செய்யும் வழிவகைகளை அறிந்து, அதனால் வரும் இடையூறுகளைத் தாங்கிச் செய்து முடிக்க வல்லவனை அல்லாமல் மற்றவர்களைச் சிறந்தவன் எனக் கருதி ஒரு செயலைச் செய்யுமாறு ஏவக் கூடாது.

## உணர்ந்து செயற்படு

‘‘நல்லவர்கள் தமக்காகவும் தமது குடும்பத்தினர்களுக்காகவும் மட்டும் வாழ்வதில்லை. சமூகத்தில் உள்ள நலிந்தவர்களின் நன்மையையும் நினைத்தே வாழ்கிறார்கள். சமயப்பற்றுள்ளவன், ஒழுக்கமுடையவன் தன்னைத் தானே தியாகஞ் செய்து விடுவான். அவன் தன்னைத் தியாகஞ் செய்வதன் மூலம் நட்டமடைந்தாலும் இன்பமடைகிறான். நல்லவர்களின் அர்பணிப்பான உதவிகளால் தான் உலகம் வாழ்கிறது. நலிந்தவர்கள் நன்மை பெறுகிறார்கள். இந்த உண்மையை நீங்கள் எமது முன்னோர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். நீ உனக்காக மட்டும் வாழ்ந்தால் அது யாருக்கும் தெரியாது. உன்னையும் தெரியாது. நீ பிறருக்காக வாழ்ந்து பார் உன்னை உலகத்தில் உள்ளோரில் பலருக்குத் தெரியும்’’ என்று ஒரு நாள்ச் சுவாமியார் அருளுரையில் கூறிய வார்த்தைகள் பரமேஸ்வரனின் காதில் ஒலித்தன. அப்படி வாழக் கூடியவர்கள் இருக்கிறார்களா? என்று இதுவரை எண்ணியிருந்தார் பரமேஸ்வரன்; ‘‘இருக்கிறார்கள். அதுவும் உனது வீட்டிலேயே இருக்கிறார்கள்’’ என்று சுவாமியார் பலத்துச் சத்தமிட்டுச் சொல்வதைப் போல இருந்தது.

‘‘அம்மாவுக்குச் சாப்பாடு என்ன மாதிரி. நீயும் அப்பாவும் காலையில் சாப்பிட்டீர்களா..? வீட்டுக்குச் சென்று சாப்பிட்டு விட்டு, அப்பாவுக்கும் கட்டிக் கொண்டு போ’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘இல்லை ஐயா, அம்மாவுக்குப் பத்திய உணவு கொடுக்க வேண்டும். உப்புச் சேர்க்கக் கூடாது. அவாவுக்குச் சமைத்து விட்டுப் பின்பு நாம் உப்பிட்டுச் சாப்பிடுவோம். கேட்டதற்கு மிகவும் நன்றி’’ என்றான் கஜேந்திரன்.

‘‘பட்டணத்தில் யாரும் யாரையும் சாப்பிட்டதாக விசாரிப்பதில்லை. அன்பான வாழ்க்கை வாழ்வதால் எவ்வளவு மகிழ்ச்சி. ஏழைகளிடமும் நோயாளிகளிடமும் எவ்வளவு அன்பை இவர்கள் வைத்திருக்கிறார்கள். நாமெல்லாம் உணர்வுகளில்லாத இயந்திரங்களுடன் தானே வாழ்ந்தோம். இரும்பாலான இயந்திரங்களைப் போல எமது இருதயங்களும் இரும்பாகவே இருந்து விட்டன’’ அதை நினைக்க அவருக்கு வேதனையாக இருந்தது.

‘‘கஜன், நீ போய் உனது அம்மாவைக் கவனி. ஒரு செயலைச் செய்கின்றவன் மிகவும் திறமையுள்ளவனாக இருந்து, அவன் செய்யப் போகும் வேலை மிகவும் இலகுவானதாக இருந்தாலும் தக்ககாலம் உணர்ந்து மனவிருப்புடன் செய்யக்கூடிய சூழ்நிலையில் தான் செய்தல் வேண்டும். நீ இப்பொழுது மிகவும் குழம்பியிருக்கிறாய். இப்பொழுது சென்று உனது அம்மாவைக் கவனி. போ’’என்றார் தணிகாசலம்.

கஜேந்திரனும் விக்னேஸ்வரமூர்த்தியும் சென்று விட்டனர் ‘‘நகுலனைக் கண்டால் வரச் சொல்லுங்கள். நாமிருவரும் வேலையைத் தொடங்குகிறோம்’’ என்றார் பரமேஸ்வரன்.

தணிகாசலத்திற்கு அவரது வார்த்தைகளைக் கேட்க எரிச்சல் எரிச்சலாக வந்தது; ‘‘எப்படிச் சொல்லியும் புரிந்து கொள்கிறாரில்லையே’’ என்று நினைத்தார்; ‘‘மச்சான், எதற்கும் அவசரப்படக் கூடாது. ஒரு செயலைச் செய்யப் போபவனின்

திறமையை முதலில் ஆராய வேண்டும். அத்துடன் அவன் செய்ய வேண்டிய வேலையின் இயல்பைப் பற்றி ஆராய வேண்டும். அத்துடன் அவ்வேலையை அவன் செய்யத் தக்க காலம் தற்பொழுதுள்ளதா என்று ஆராய வேண்டும். இவையாவற்றையும் நன்கு உணர்ந்த பின்பே செய்பவனைக் கொண்டு செய்விக்க வேண்டும். கற்றவர்கள் எல்லோரும் ஒரு செயலைச் செய்து முடிப்பார்களென்று நம்பக்கூடாது. அவர்கள் கற்றவர்கள் என்று சொல்வதை விடச் செத்தவர்களென்று சொல்லலாம். நகுலனுக்கு இந்த வேலை சரிப்பட்டு வராது. இரண்டு நாட்கள் பொறுங்கள் நான் முடித்துத் தருகிறேன்'' என்று கூறி விட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தார் தணிகாசலம்.

மறு நாள் காலை கஜேந்திரன் பரமேஸ்வரனின் வீட்டுக்கு வந்தான்; ‘‘அம்மாவுக்கு இப்போது எப்படி'' என்று கேட்டார் பரமேஸ்வரன்.

‘‘இப்ப சுகம். வீட்டை வந்திட்டா. அப்பா அவாவுக்குத் துணையாக நிற்கிறார். நான் சமைத்து வைத்து விட்டுத் தான் வந்தேன். அப்பாவின் சமையல் அம்மாவுக்குப் பிடிக்காது. நானும் சாப்பிட மாட்டன்'' சிரித்தான் கஜேந்திரன்.

கஜேந்திரனை வியப்புடன் பார்த்தார் பரமேஸ்வரன்; ‘‘இப்படிப் பாசமுள்ள ஒரு பிள்ளையா...? வத்சல்யனுக்குக் குசினியே தெரியாது. இவனது தாய் மட்டுமல்ல இனத்தவர்கள் கூடக் கொடுத்து வைத்தவர்கள். எனக்கொரு மகளிருந்தால் எத்தனை கோடி ரூபா கொடுத்தாவது இவனுக்குக் கட்டி வைத்திருப்பேன்'' என்று நினைத்தார். அந்த நினைவு இனித்தது.

**516. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு**
**எய்த உணர்ந்து செயல்.**

செய்கின்றவனின் தன்மையையும், செய்யும் தொழிலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தில் பொருந்து மாறு செய்விக்க வேண்டும்.

## தெரிந்தபின்

நேற்று அவசரப்பட்டீர்கள். பாருங்கள், இன்று பொழுது சாயுமுன் கஜேந்திரன் சகல படிவங்களையும் நிரப்பி நாம் செய்யும் செயலுக்கேற்றவாறு கொண்டு வருவான். முன்பு இடம் பெயர்வின் பின் கிராமசேவகரின் வேண்டுகோளுக்கேற்ப நிவாரணங் கொடுப்பதற்காக இங்கு வாழும் சுமார் ஆயிரத்து ஐந்நூறு குடும்பங்களை அவர்களது இயல்புக்கேற்றவகையில் பட்டியலிடுமாறு நகுலனிடம் கூறினோம். அவன் தான் ஒரு பெரிய அதிகாரி என்ற எண்ணத்தில் மக்களுடன் சற்றுத் திமிராக நடந்து கொண்டான். கிராமத்தவர்கள் கல்வியறிவும் விளக்கமும் குறைந்தவர்கள். அதனால் தமக்கு விளங்காதவற்றைத் திருப்பித் திருப்பிக் கேட்பார்கள். வயோதிபர்களுக்குக் காது கேட்காது. திருப்பித் திருப்பிக் கேட்பார்கள். அதனால் நகுலனுக்கு அளவுக்கதிகமான கோபம் வரும். வயது சென்ற வயோதிபரொருவர் ஏதோ கேட்க, இவன் ஏதோ சொல்ல இருவருக்கும் வாய்த்தர்க்கம் வந்து விட்டது. வயது சென்றவரின் பிள்ளைகள் நகுலனுக்கு அடிக்கப் போக நகுலன்ரை நண்பர்கள் அவர்களுக்கு அடிக்கப் போக அன்று முழுவதும் சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பதே வேலையாக இருந்தது. அந்தச் சண்டையால் ஏற்பட்ட பகை இன்னும் தீரவில்லை. அதனால் தான் நானும் அதிபரும் அப்படிச் சொன்னோம். நகுலன் பெரியவர்கள் சொல்வதைக் கேட்க

மாட்டான். தான் சொல்வதைத் தான் கேட்க வேண்டுமென்பான். ஆனால் கஜேந்திரன் அப்படியல்ல. அனைவரையும் அனுசரித்து அன்பாக நடப்பான். பொறுமைக்கு இலக்கணமே அவன் என்று சொல்லலாம். கேள்வி கேட்பவர் திருப்த்தியடையும் வரை திரும்பத் திரும்பச் சொல்வான். அத்துடன் குழந்தைகளில் இருந்து முதியவர்கள் வரை அவன் சொல்வதைக் கேட்டு நடப்பார்கள். அவன் சிறியவனென்று யாரும் நினைப்பதில்லை. ஒரு வேலை செய்யப் பத்துப் பேர் தேவையென்றால், அவன் அழைத்தால் நூறு பேர் வருவார்கள். ஐந்து நாளில் முடிய வேண்டிய வேலை அரை நாளில் முடிந்து விடும். எந்தெந்த வேலையை எப்படியெப்படிச் செய்ய வேண்டு மென்றும், அந்தந்த வேலையை யார் யார் செய்வார்களென்றும் அவனுக்குத் தெரியும். அத்துடன் ஒவ்வொரு வரையும் எப்படிச் செயற்படுத்தலாமென்றும் அவனுக்குத் தெரியும். பாருங்கோ இன்று மாலை ஐந்து மணிக்கு முன்பு வேலையை முடித்து விடுவான். காலையில் கோயிலடியில் சென்று பார்த்தேன். முப்பது மேசைகள் அயல் வீடுகளில் இருந்து கொண்டு வந்து போட்டிருக்கிறார்கள். நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் கடமை செய்கிறார்கள். அவன் வேலை செய்யும் அழகை ஒரு முறை சென்று பாருங்கள்'' என்றார் தணிகாசலம்.

பரமேஸ்வரன் மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றார். கோயிலின் வடக்கு வீதியில் இருந்த சனசமூக நிலையக் கட்டிடத்தில் மேசைகளும் கதிரைகளும் போட்டு இளைஞர்களும் யுவதிகளும் மக்களின் விபரங்களைப் பதிந்து கொண்டிருந்தனர். மிகவும் அமைதியாகவும் சுறுசுறுப்பாகவும் பணி நடை பெற்றுக் கொண்டிருந்தது. அங்கே கஜேந்திரனைக் காணவில்லை. அங்கு நின்ற ஒரு இளைஞனிடம் பரமேஸ்வரன் கேட்டார்; ''தம்பி, கஜேந்திரன் எங்கே...?''

''அவன் இப்போது தான் வீட்டுக்குச் செல்கிறார். தாயாருக்குச் சுகமில்லை. மருந்தும் சாப்பாடும் கொடுக்கச் சென்று விட்டார். இப்போது வந்து விடுவார்'' என்றான்.

''கஜேந்திரனை நினைக்க பரமேஸ்வரனுக்கு வியப்பாக இருந்தது. சகல விடயங்களிலும் அவன் திறமையுள்ளவனாக இருப்பதை நினைத்து அவர் மகிழ்ந்தார். அப்போது தணிகாசலம் அங்கே வந்தார்.

''பார்த்தீர்களா? தலையீடுகள் குறுக்கீடுகள் எதுவும் இல்லாமல் யாவும் எவ்வளவு அமைதியாக நடைபெறுகிறது என்று. இந்தச் செயலை இத்தகைய முறையால் இவன் செய்து முடிப்பான் என்று நன்கு தெரிந்த பின்பே அந்தச் செயலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். கல்வியால் இத்தகைய பண்பு வராது. அதற்கு ஓர் ஆளுமை வேண்டும்'' என்றார் தணிகாசலம்.

இரண்டுமணிக்குக் கஜேந்திரன் வேலையை முடித்து விட்டான். அவன் சகல படிவங்களையும் ஒழுங்காக அடுக்கிக் கொண்டு வந்து பரமேஸ்வரனிடங் கொடுத்தான்.

'தணிகாசலம் மாலை ஐந்துமணியளவில் தான் சகல வேலைகளும் முடியும். என்றார். நான் நம்பவில்லை. நீங்கள் இரண்டு மணிக்கே முடித்து விட்டீர்கள். கெட்டிக்காரர்கள். எனக்கு உமது திறமையைப் பற்றித் தெரியாது'' என்றார்.

அன்று நான்குமணிக்குப் படிவங்கள் யாவும் ஒழுங்குபடுத்தப்பட்டு சிவானந்தனிடம் கையளிக்கப்பட்டன; ''யாரோ ஒருவனுக்கு நேரமில்லாததால்

வேலை தாமதமாகும் மென்று கேள்விப்பட்டேன். ஆனால் வேலை குறிக்கப்பட்ட நாளை விட விரைவாக முடிந்து விட்டது மகிழ்ச்சி'' என்றார் சிவானந்தன்.

**517. இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன் கண் விடல்**

கொடுக்கப்பட்ட தொழிலை தேவையான கருவிகளைக் கொண்டு ஒழுங்காகச் செய்து முடிப்பான் என்று அறிந்த பிறகே, அத் தொழிலை அவனிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

## தகுதியானவன்

கணநாதன் முகுந்தனையும் விதுஷனையும் அழைத்துக் கொண்டு தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தார். விதுஷனின் தந்தை பொன்னுத்துரை கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாற்பது வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாண மண்ணை விட்டுச் சென்று விட்டார். அதன் பின் கண்டியில் உள்ள ஒரு பெண்ணை விரும்பித் திருமணஞ் செய்து கொண்டார். அது அவரது பெற்றோர்க்கு விருப்பமில்லாததால் அவர்கள் அவரது தொடர்பைத் துண்டித்து விட்டனர். அதன் பின் அவர் யாழ்ப்பாணத்தை மறந்து விட்டார். அதனால் விதுஷனுக்கு யாழ்ப்பாணத் தொடர்பே இல்லை. கணநாதன் விதுஷனை தனது யாழ்ப்பாணத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அறிமுகஞ் செய்து வைப்பதற்காக அழைத்து வந்தார். அவருடன் சேர்ந்து முகுந்தனும் வந்திருந்தார்.

பரமேஸ்வரன் அவர்கள் மூவரையும் அன்புடன் வரவேற்றார். விதுஷனுக்கு அவரது வீட்டில் தங்க ஒரு மாதிரியாக இருந்தது. அதை அங்கு வந்தவுடனேயே கணநாதன் கண்டு கொண்டார். யாழ்ப்பாணத்தில் இனத்தவர்களில்லாத விதுஷனைத் தனியார் விடுதியில் தங்க வைக்கலாமோ?'' என்றும் நினைத்தார். அதை அவர் விதுஷன் தனிமையில் சந்தித்த போது கேட்டார்.

''விதுஷன், உங்களது மனநிலை சரியில்லைப் போலத் தெரிகிறது. முன்பு பரமேஸ்வரனுடன் ஏதாவது பிரச்சினைப்பட்டீர்களா?''

விதுஷன் தடுமாறிப் போனான். அவனால் உடனடியாகப் பதில் கூற முடியவில்லை. அவர் எப்படி அதைக் கண்டு பிடித்தார் என்று எண்ணி ஆச்சரியப்பட்டான்.

''விதுஷன், ஒருவனது மனதில் உள்ளவற்றை காட்டும் கண்ணாடி போன்றது முகம். கொழும்பிலிருந்து புறப்படும் போதும், பிரயாணஞ் செய்யும் போது வழியில் இருந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் இப்போது உன்னிடத்தில் இல்லை. மனதில் மகிழ்வில்லாவிட்டால் எந்தச் செயலையும் உருப்படியாகச் செய்ய முடியாது. இங்கு நாம் சுற்றுலாவுக்காக வரவில்லை. இது நாள் வரை கொழும்பு நகரில் இயங்கிய எமது தொழிற்சாலையின் கிளையை முதல் முதலாக இங்கு பயத்துடன் தான் ஆரம்பித்தேன். ஆனால் கொழும்பில் உள்ள இரண்டு தொழிற்சாலைகளின் வருமானத்தை இந்தத் தொழிற்சாலை தருகிறது. அத்துடன்

இப்பிரதேச சீதோஸ்ண நிலை காரணமாக இப்பிரதேசத்தில் உருவாக்கப்படும் பொருட்களை கொள்வனவாளர்கள் மிகுந்த விருப்பத்துடன் கொள்வனவு செய்கிறார்கள். அதனால் இத் தொழிற்சாலையை புணரமைத்து மேலும் பல இயந்திரங்களைப் பூட்டி பெருப்பிக்கலாமென்று நினைத்துத் தான் உங்களை அழைத்து வந்தேன். ஒவ்வொரு செயலையும் முடிக்கத் தக்கவனிடந் தான் ஒப்படைத்தல் வேண்டும். இந்தப் பாரிய செயலை முடிக்கக் கூடிய ஆற்றல் உனக்கிருப்பதை உணர்ந்து கொண்டமையால் தான் நான் உன்னை அழைத்து வந்தேன். இதைச் சவாலாக ஏற்றுச் செய்து முடிப்பாய் என்ற எண்ணம் என்னிடம் உண்டு. அதனால் உனது விருப்பத்தைச் சொல்லு'' என்றார் கணநாதன்.

''ஐயா, இப்பொழுது பரமேஸ்வரன் ஐயா எப்படி இருக்கிறாரோ எனக்குத் தெரியாது. முன்பு அவர் மிகவும் கூடாத ஒரு மனிதன். மற்றவர்கள் வாழ்வது அவருக்குப் பிடிப்பதில்லை. எமது தொழிற்சாலையில் உதயணனின் தீய செயல்களுக்கெல்லாம் காரணகர்த்தாவாக விளங்கியவர் அவர் தான். அவர் தான் என்னைப் பற்றியும் பல கூடாத தகவல்களைச் சொன்னவர் என்று எனக்குத் தெரியும். மற்றவர்களிடம் தீய தன்மை இருந்தால் அதைப் பற்றி நாம் கதைப்பதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. அத்துடன் அவர்கள் அதைத் தீய தன்மை என்று ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ''ஒரு நாளைக்கு அத்தீமையால் அவர்கள் தண்டிக்கப்படும் போது தான் புரிந்து கொள்வார்கள்'' என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அது தான் பரமேஸ்வரனின் வாழ்க்கையிலும் நடந்தது. தீமைக்குத் தீமை செய்வதன் மூலம் அழிவு ஏற்படுமே தவிர ஆக்க மேற்படாது என்பதால் தான் தீமை செய்த பலருக்கும் நான் தீமை செய்வதில்லை. அது வாழ்நாள் முழுவதும் எனக்கு நன்மையைத் தான் தந்து கொண்டு வந்துள்ளது. இல்லாவிட்டால் சாதாரணமான என்னிடம் இப் பாரிய பொறுப்பை நம்பி முழுமையாக ஒப்படைப்பீர்களா....? எனக்குத் தீயவர்களைப் பார்க்கக் கூடப் பிடிக்காது என்பதை நீங்கள் கண்டு பிடித்து விட்டீர்கள்'' என்றான் விதுஷன்.

''சரி சரி கவலைப்படாதே. உனக்கு நான் சகல வசதிகளும் கொண்ட நல்ல வீடொன்று எடுத்துத் தருகிறேன். இரண்டொரு நாள் பொறுத்துக் கொள்'' என்றார் கணநாதன்.

''சரி'' என்று மகிழ்வுடன் சொன்னார் விதுஷன்.

**518. வினைக்குஉரிமை நாடிய பின்றை, அவனை**
**அதற்குஉரிய னாகச் செயல்.**

கொடுக்கப்பட்ட தொழிலைச் செய்ய இவன் தான்தகுதியானவன் தானா என்பதை ஆராய்ந்து அறிந்த பின்பே, அத் தொழிலைச் செய்யும் பொறுப்பை, அவனுக்குக் கொடுத்தல் வேண்டும்.

## தவறான நினைப்பு

கணநாதனுக்குப் பரமேஸ்வரனை நினைக்க ஆத்திரமாக இருந்தது. தனக் கெதிராக அவர் செயலாற்றுவாரென அவர் முன்பு நம்பவில்லை. பலரும் அவரைப் பற்றித் தவறாகப் பேசும் போதும் அவர் மட்டும் தான் பரமேஸ்வரனைப் பற்றி நல்லபடி சொல்வார். அவரை விட்டு பல நண்பர்கள் விலகிச் சென்ற

போதும் அவர் கடைசி வரையும் விலகாமலிருந்து புத்திமதிகள் கூறிக் கொண்டிருந்தார். பல விஷயங்களில் கணநாதன் புத்திமதிகள் கூறும் போது அவர் கணநாதனை அவமதித்தார்.

‘‘நான் அறிவுள்ளவன். ஒரு தொழிலாளியாக இருந்து தான் நான் இந்த நிலைக்கு வந்தனான். எனக்கு யாரும் புத்திமதிகளோ ஆலோசனைகளோ சொல்லத் தேவையில்லை. நான் மற்றவர்களுக்குச் சொல்லக் கூடிய நிலையில் இருக்கிறேன்’’ என்று ஒரு முறை பரமேஸ்வரன் சொன்னார்.

‘‘நான் புத்திமதிகளோ ஆலோசனைகளோ சொல்ல வரவில்லை. உண்மைகளைச் சொல்கிறேன். நடந்தவற்றைச் சொல்கிறேன். புத்திமதிகள் சொல்லக்கூடியளவிற்கு நான் தகுதியானவனில்லை. சூழ்நிலைக்கேற்ப வாழ்க்கையை அமைக்காது தர்மத்திற்கேற்ப சூழ்நிலைகளை வகுத்துக் கைக் கொள்வது தான் வெற்றிகரமான வாழ்க்கைக்குரிய முறையாகும். அந்த முறை வாழ்க்கையில் வெற்றியை மட்டுமல்ல மகிழ்ச்சியையும் நிம்மதியையும் நீங்காத செல்வத்தையும் தரும். வாழ்க்கையை தர்மங்களுக்கேற்ப மாற்றியமைப்பவன், நீண்ட காலம் வளமான வாழ்வு வாழ்வான். இது தான் நியதி. நான் வருகிறேன் என்று அமிர்தினியின் பிரச்சினையின் போது ஒரு நாள்ச் சொன்னது கணநாதனுக்கு நினைவில் வந்தது.

‘‘தலைவனாக இருப்பவன் எப்பொழுதும் முயற்சியுடையவனின் உறவைத் தவறாக நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தால் அவனது செல்வம் மட்டுமல்ல சகல சௌபாக்கியங்களும் அவனை விட்டு நீங்கிச் சென்று விடும். பரமேஸ்வரன் ஐயா தொழிற்சாலையில் சிலரின் பேச்சை நம்பி பலரின் மீது சந்தேகம் கொண்டார். அதனால் நல்லவர்களும் வல்லவர்களும் அவரின் உறவை வெறுத்தனர். அவரது தொழிற்சாலையில் பிரதம பொறியியலாளராகப் பணிபுரிந்த நடேசன் மிகவும் நல்லவர்; தொழிலில் பற்றுள்ளவர்; விசுவாசமானவர் யாருக்கும் தீமைகள் செயய்யாதவர். அவரால் தமக்குத் தீமைகள் வருமென்று உணர்ந்த அமிர்தினியும் அவளது சகாக்களும் அவரைப் பற்றி பிழையான தகவல்களைக் கூற பரமேஸ்வரன் நம்பி விட்டார். அமிர்தினி திட்டமிட்டு அவர் தவறாகத் தன்னுடன் நடக்க முற்படுகிறாரென பரமேஸ்வரனுக்குக் கூறி விட்டு, அதை நிரூபிப்பதாகச் சொன்னாள். ஒரு நாள் சக தோழர்களுடன் அவள் திட்டமிட்டு நடேசனின் அறைக்குச் சென்று கலாட்டா செய்தது உங்களுக்குத் தெரியும். அதனால் அவமானப்பட்ட நடேசன் வேலையை விட்டுச் சென்று விட்டார். அன்று தான் அவருக்குக் கெட்ட காலந் தொடங்கியது’’ என்றான் விதுஷன்.

‘‘உண்மை தான். தான் மேற்கொள்ளும் தொழிலில் எப்பொழுதும் முயற்சியுடையவனின் உறவைத் தவறாக நினைக்கும் தலைவனை விட்டுச் செல்வம் நீங்கிச் செல்லும்’’ என்றார் கணநாதன்.

‘‘அவருக்கு எல்லோர் மீதும் சந்தேகம். ஒரு காலத்தில் வேத வாக்காகக் கருதிய அமிர்தினியின் சொற்களைக் கூட பின்னர் சந்தேகித்தார். அத்துடன் அவரது அழிவுக்குக் காரணமாக இருந்தது அவர் உதயணனைச் சந்தேகித்தது. உதயணன் தன்னிடம் பணம் பெறுவது போல, தன்னுடைய எதிரிகளிடமும் பணம் பெறுகிறானோ எனச் சந்தேகித்தார். அதை அவனிடம் நேரடியாகவும் சொல்லி விட்டார். அதற்கு முன்பு எதிரிகளிடம் பணம் பெறாத உதயணன் பின்பு அவர்களிடம் வலியச் சென்று பொய்யான தகவல்களைக் கூறிப் பணம் பெறத் தொடங்கி விட்டான். அந்த நிலைமையில் தான் அவன் விபத்துக்குள்ளானான்.

நல்லவர்களுக்கு எப்போதும் கடவுள் துணையாக இருப்பார் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீங்கள் மிகவும் நல்லவராக எனக்குத் தோன்றியமையால் தான் நான் உங்களின் நன்மை கருதி உதயணனுடன் சேர்ந்தேன். ஆரம்பத்தில் அவன் என்னை நம்பவில்லை. அதற்காகச் சில தீயவற்றை நான் மனமில்லாமற் செய்தேன். அதனால் தான் நான் குடிக்க வேண்டி வந்தது'' பெருமூச்சு விட்டான் விதுஷன்.

கணநாதன் திகைத்துப் போனார். தனது நன்மைக்காகச் சில தீய செயல்களைச் செய்த அவனைத் தான் கூடாதவனாக நினைத்துச் செயற்பட்டதை நினைத்து வருந்தினார்.

''விதுஷா, உன்னை நான் தவறாக நினைத்து விட்டேன். எனது பிள்ளைகள், சகோதரர்கள் கூடச் செய்யாத செயலைச் செய்து விட்டாய். என்னை மன்னித்துக் கொள்'' கண் கலங்கினார் கணநாதன்.

**519. வினைக்கண் வினையுடையான் கேண்மைவேறு ஆக**
**நினைப்பானை நீங்கும் திரு.**

செய்யும் தொழிலில் எப்பொழுதும் முயற்ச்சியுடையவனைத் தவறாக நினைக்கும் தலைவனை விட்டுச் செல்வம் நீங்கும்.

## கோணாதபடி நட

''தொழில் செய்பவன் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருந்தால் தான் தொழிற்சாலை சொர்க்மாக இருக்கும். தொழில் செய்பவன் மனங்குழம்பினால் எல்லாம் நாசமடைந்து விடும். முதலாளி எப்பொழுதும் தொழிலாளர்கள் மனங்கோணாத வகையில் நடந்து கொள்ளல் வேண்டும். அவன் தொழிலில் அக்கறையும் ஊக்கமும் கொள்ள வேண்டு மானால் அவனது மனம் பாதிக்காத முறையில் தொழில் செய்விப்பவன் நடந்து கொள்ள வேண்டும் இதை நான் அடிக்கடி பரமேஸ்வரனுக்குச் சொல்வேன். அதற்கு அவர் சொல்வார்; ''எவ்வளவு பணம் கொடுத்தாலும் தொழிலாளி திருப்திப்பட மாட்டான். எப்படித்தான் அவனை மதித்தாலும் அவன் திருந்த மாட்டான். தொழிலாளர்களின் ஆசைக்கு அளவே கிடையாது'' என்பார். அது எவ்வளவு தவறு என்று அவர் பல துன்பங்கள் பட்ட பின்பும் உணரவில்லை. துன்பங்கள் மற்றவர்களால் தான் தனக்கு வருகின்றன, மற்றவர்களால் தான் தனக்குத் துன்பமேற்படுகிறது என்று அடிக்கடி சொல்வார். அவருக்கு நிலைமையை எடுத்துச் சொன்னாலும் புரியாது. இப்பொழுது அவரது தொழிற்சாலையை நான் வெற்றிகரமாக நடத்துகிறேன். அங்கு வேலை செய்வோர் மிகவும் சந்தோசமாக இருக்கிறார்கள்'' என்றார் கணநாதன்.

''நடேசன் எனக்கு யாவற்றையும் சொன்னவர். அமிர்தினி தினமும் தனக்கு விதம் விதமான பிரச்சினைகளைத் தருவாளாம். அவளின் சொற்படி நடப்பது தர்மமல்ல என்பதால் அவளின் போக்கைத் தான் கண்டித்தாரம். அதனால் வெறுப்படைந்த அமிர்தினி தன்னைப் பழிவாங்குவதற்காகத் தான் அப்படி நடந்து கொண்டாள். என்றார் அவருக்குத் தற்பொழுது வேலை செய்யும் தொழிற்சாலை பிடிக்கவில்லையாம். முகாமையாளர் எல்லாவற்றிற்கும் சந்தேகப்படுவாராம். ஒவ்வொருவரைப் பற்றியும் விசாரிப்பாராம். தானே பல பிரச்சினைகளை

உருவாக்கி விட்டுத் தொழிலாளர்கள் மீது அவற்றைச் சுமத்துவாராம். தொழில் செய்யுமிடம் கோயில் போல இருத்தல் வேண்டும். மக்கள் பூசை காண்பதைப் போல பயபக்தியுடன் முதலாளியைக் காணவேண்டும். அவரைக் காணும் போது அருவருப்போ வெறுப்போ கொள்ளக்கூடாது. அப்படியிருந்தால் தான் மகிழ்ச்சி பெருகும் என்று கூறினார். அவரது நிலையைப் பார்க்க எனக்கு வேதனையாக உள்ளது. எனவே அவரை எமது தொழிற்சாலையில் மீண்டும் இணைத்தால் என்ன?'' என்று கேட்டார் விதுஷன்.

''உங்களுடைய இடத்திற்கு யாரை நியமிக்கலாமென நான் யோசித்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளை நீங்கள் நினைப்பூட்டினீர்கள். நடேசன் மிகவும் பொருத்தமானவர்.'' என்றார் கணநாதன்.

விதுஷனும் கணநாதனும் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்தனர். இயந்திரங்கள் திருத்தும் பகுதிக்குச் சென்ற போது அங்கே இயந்திர இயக்குனர் இயந்திர மொன்றைக் கழற்றிக் கொண்டிருந்தார். அவர் புதியவராகையால் கணநாதனை அறிந்திருக்கவில்லை.

''உங்கள் பெயர் என்ன?'' கணநாதன் கேட்டார்.

''சிவகுரு''

''இங்கே என்ன வேலை செய்கிறீர்கள்''

''இயந்திர இயக்குனராக இருக்கிறேன்''

''வேலை பிடித்ததா.... முகாமையாளர் எப்படி?''

''மிகவும் தங்கமானவரய்யா. நான் வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதங் கூட ஆகவில்லை. என்னுடன் அன்பாகப் பழகுகிறார். எனது மகன் சென்றவாரம் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான். அவர் வந்து பார்த்து விட்டுப் பணமும் தந்தார். கண்டிப்பில்லை. எதையும் மகிழ்வுடன் சொல்வார். எமக்கு அவரைக் கண்டால் பயமில்லை; பக்தி தான் வரும். முன்பு நான் வேலை செய்த இடத்தில் முகாமையாளர் நாய் மாதிரி எந்நேரமுங் குரைத்துக் கொண்டே இருப்பார். வேலை செய்தாலும் பேச்சு. வேலை செய்யா விட்டாலும் பேச்சு. வேலை செய்யும் இடம் கோயிலையா. அங்கு எப்பொழுதும் அமைதி நிலவ வேண்டும். இங்கு வேலை செய்யச் சந்தோசமாக இருக்கிறது'' என்றான் சிவகுரு. அதைக் கேட்க கணநாதனுக்குச் சந்தோசமாக இருந்தது; ''சிவகுரு நான் தான் முதலாளி...'' என்று அவர் வார்த்தையை முடிக்கு முன்பு சிவகுரு சொன்னான்; ''கணநாதன் ஐயாவே.... உங்களைப் பற்றி இங்குள்ள தொழிலாளர்கள் மிகவும் பெருமையாகப் பேசுவார்கள். முதலாளி தொழிலாளர்கள் மீது அன்பு செலுத்துபவராக இருத்தல் வேண்டும். தொழிலாளனது மனம் கோணாதபடி அவனின் நலனில் அக்கறை செலுத்துபவராகவும் இருத்தல் வேண்டும். அப்போது தான் தொழில் வளரும். நீங்கள் தெய்வம். தொழிலாளர்களின் நலனில் நிறைந்த அக்கறை கொண்டனீங்கள். நீங்களும் உங்கள் குடும்பமும் பெரு வாழ்வு வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் தான் நாமும் மகிழ்வுடன் வாழ்வோம்'' என்றான் சிவகரு.

கணநாதன் மகிழ்வுடன் சிரித்தார்.

**520. நாள்தோறும் நாடுக மன்னன்; வினைசெய்வான்**
**கோடாமை கோடாது உலகு.**

தொழில் செய்பவன் மனம் வருந்தாமல் தொழிலைச் செய்யும் வரை உலகம் கெடாது; ஆகையால் மன்னன் தினமும் தொழில் செய்பவனுடைய மன நிலையை ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

## *நல்ல உறவினன்*

யாரோ ஒரு முக்கிய பிரமுகர் வந்திருப்பதாகத் தொழிலாளி ஒருவன் வந்து கணநாதனுக்குச் சொன்னான். அதனால் கணநாதன் அலுவலகத்திற்குச் சென்றார். விதுஷன், மிகவும் நல்லவனாகவும் அறிவுடையவராகவும் தொழில் நுட்பங்கள் பல தெரிந்தவராகவும் இருந்த சிவகுருவைப் பார்த்தான். அவரை இதற்கு முன்பு எங்கோ கண்டதைப் போல இருந்தது. மீண்டும் மீண்டும் அவரைப் பார்க்க வேண்டும் போன்றதொர் உணர்வு அவரது இதயத்துள் கிளர்ந்து கொண்டிருந்தது; ‘‘எங்கே பார்த்தோம்? நான் இங்கு வரவில்லையே? அப்படியானால் அவர் எமது தொழிற்சாலைக்கு வந்திருப்பரோ...’’

‘‘ஐயா, உங்களைப் நான் என்கோ பார்த்ததைப் போல உள்ளது. நான் இன்று தான் முதற்தடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ளேன். நீங்கள் கொழும்புக்கு வந்தீர்களா? என்னைப் பார்த்தீர்களா?’’ என்று கேட்டார் விதுஷன்.

சிவகுரு திரும்பி விதுஷனை உற்றுப் பார்த்தார். அந்த முகத்தை எங்கோ பார்த்ததைப் போன்ற உணர்வு இதயத்துள் எழுந்தது; ‘‘நான் கொழும்புக்கு வரவில்லை. நான் மிகவும் ஏழை ஐயா, நான்கு பிள்ளைகள். கொழும்புக்குச் சென்றால் நல்ல வேலை செய்யலாமென்று தான் சொல்கிறார்கள். ஆனால் அதற்கெல்லாம் எனக்கு வசதியில்லை ஐயா? ‘‘சிரித்தான். வெற்றிலைக் காவி படிந்த பற்களைப் பார்க்க முகுந்தனுக்கு அருவருப்பாக இருந்தது. எனினும் அந்தச் சிரிப்பைப் பார்த்த ஞாபகம் அதுவும் வெற்றிலைக் கறையுடன்; ‘‘எங்கே? எங்கே....?’’ விதுஷனது மனம் வேகமாகத் துடித்தது.

‘‘நீங்கள் யாரையோ கண்டு விட்டுச் சொல்கிறீர்கள். உலகில் ஒருவரைப் போல ஏழு பேர் இருப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள’’. மீண்டும் சிவகுரு சிரித்தார். அந்தச் சிரிப்பு அவருக்குப் பழக்கப்பட்டதைப் போல இருந்தது.

‘‘நீங்கள் எந்த ஊரய்யா?’’ சிவகுரு கேட்டார்.

‘‘நான் கொழும்பு’’

‘‘இங்கேயாராவது உறவினர்கள் இருக்கிறார்களா?’’

சிவகுருவின் கேள்வி விதுஷனைச் சிந்திக்க வைத்தது; ‘‘இருக்கினை யாரென்று தெரியாது. அப்பா கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சுமார்

நாற்பது வருடங்களுக்கு முன்பு கண்டிக்கு வந்தவர். அங்கேயே திருமணமாகி இருந்து விட்டார். இடையிடையே தனது பெற்றாரைப் பற்றியும் சகோதரர்களைப் பற்றியும் சொல்வார்'' என்றார் முகுந்தன்.

''கொக்குவிலா? நானும் கொக்குவில் தான். கொக்குவில் பெரிய இடம். எவடமென்று குறிப்பாகச் சொன்னால் தான் தெரியும். நாற்பது வருடங்களுக்கு முன்னென்றால் அம்மாவைத் தான் கேட்க வேண்டும். அப்போது எனக்கு ஐந்து வயது. உங்களது அப்பாவுக்கு என்ன பெயர்?. நான் நாளைக்கு அம்மாவைக் கேட்டுக் கொண்டுவாறன். எனது தாத்தாவும் இருக்கிறார். எண்பத்தைந்து வயது. சில வேளைகளில் தான் அவருக்கு ஞாபகம் வரும். மற்றய வேளைகளில் மாறாட்டமாகப் பேசுவார். உங்களது தந்தையின் பெயர் என்ன?

''பொன்னுத்துரை''

''பொன்னுத்துரையோ....?'' அதிர்ச்சியுடன் கேட்ட சிவகுரு விதுஷனை நிமிர்ந்து பார்த்தார். அவரது கண்கள் கலங்கின் ''எனக்கு ஐந்து பெம்பிளைப் பிள்ளைகள். ஒரே ஒரு மகன். நல்லூரானை வேண்டித் தவமிருந்துதான் பெத்தனான். அவன் இருபது வயதிலை கண்டிக்குப் போனவன். போனவன் போனவன் தான். திரும்பி என்னை வந்து பார்க்கவே இல்லை. அங்கை ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்திட்டான். அஞ்சு பெம்பிளைப் பிள்ளைகளிருக்க அவன் அவர்களைக் கவனிக்காமல் திருமணஞ் செய்ததாலை கண்டபடி காகிதம் எழுதிப் போட்டன். ஊருக்கை வந்தால் இரண்டு பேரையும் வெட்டியெறிவன் என்று ஆத்திரத்திலை எழுதிப் போட்டன். அதுக்குப் பயந்து அவன் வரவில்லை. கடிதமும் போடவில்லை. பிற்காலத்திலை மனம் மாறிவிட்டது. வந்திருக்கலாம். ''பெத்த மனம் பித்து பிளளை மனம் கல்லென்று'' பெரியவை சொல்லுவினை. அது தான் உண்மை. அவன் கொள்ளி வைத்தால் தான் என் உடல் வேகும்'' பேரனாரான பொன்னுச்சாமி சொல்வது அவனது காதில் ஒலித்தது.

''அப்படியானால் விதுஷன் எனது மச்சான்''

''என்ன திகைச்சுப் போயிருக்கிறியள்'' என்று கேட்டவாறு சிவகுருவின் தோளில் கையை வைத்தான் விதுஷன்.

'' உங்கடை அப்பாவைக் கண்டு பிடிச்சிட்டன். அவருடைய தகப்பன் உயிருடன் இருக்கிறார். பாவம் அவர் தன்ரை மகனைப் பற்றி அடிக்கடி சொல்லுறவர்''.

''அப்படியா? நான் அவரைப் பார்க்க வேண்டும்'' அவசரப்பட்டான் விதுஷன்.

ஆடம்பரமான ஒரு மோட்டார் வாகனத்திலிருந்து சிவகுரு இறங்கி வருவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அவரது மனைவி தவனேஸ்வரி. சிவகுரு தான் திருத்தும் வாகனங்களை வீட்டிற்குக் கொண்டு வருவதால் அவள் அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. நவநாகரீக உடையுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டு வரும் விதுஷனைப் பார்த்தான்.

அது ஒரு சிறிய வீடு. எனினும் மிகவும் அழகாக இருந்தது. முற்றத்தில் நின்ற வேப்பமர நிழலில் ஒரு சாய்வு நாற்காலியில் வயது முதிர்ந்த ஒருவர் அமர்ந்திருந்தார்; ''இவர் தான் உங்கள் தந்தையின் தகப்பன்''.

“அவரது தந்தையைப் போலவே அவர் இருந்தார்; “அப்பூ, இவ்வளவு நாளும் தேடிய உனது மகன் பொன்னுத்துரையின் மகன் இவர், உன்ரை பேரன்”.

“பொன்னுத்துரை” பலமாகக் கத்திய படி எழுந்தார் பொன்னுச்சாமி. “பொன்னு... என்ரை பொன்னு...” அவரது விழிகளால் கண்ணீர் பெருகியது விதுஷனை இறுகக் கட்டி அணைத்தார். இனம்புரியாத ஓர் உணர்வு விதுஷனின் உடலெங்கும் மின்சாரம் போல ஓடியது.

“இனி நான் சாகலாம்... இனி நான் சாகலாம்...” பொன்னுச்சாமியின் விழிகள் நிரம்பின.

“அப்பா, நான் இனி உங்களோடு தான் இருக்கப்போறன். தொழிற்சாலைக்கு அருகில் பெரிய வீடொன்று எடுக்கப் போறன். நீங்கள் அங்கை வாங்கோ. அப்பாவையும் கூட்டியாறன். அங்கை குடும்பமாக இருப்பம்.

“உறவினர் வறியவர்களாக இருந்தாலும் அந்த உறவைப் பேணும் குணம், நல்லவர்களிடத்தில் எப்பொழுதும் இருக்கும்” என்று அடிக்கடி தணிகாசலம் சொல்வார். “அது எவ்வளவு உண்மை” என்று இப்பொழுது தான் நான் உணர்ந்தேன்” என்று நினைத்தார் சிவகுரு.

**521. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்**
**சுற்றத்தார் கண்ணே உள.**

ஒருவன் வறியவனான காலத்திலும் அவனுக்கும் தனக்கும் இருந்த பழைய உறவைப் பேணிப் பாராட்டும் பண்பு நல்ல சுறற்த்தவரிடம் உண்டு.

## அன்பான உறவு

விதுஷன் வந்து மூன்று மணித்தியாலத்திற்கு மேற்பட்டதால் கணநாதன் கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொன்னார்; “விதுஷா இன்று எமது கொள்வனவாளர் ஒருவர் மதிய உணவு எமக்குத் தருவதாக முன்பே கூறியிருந்தார். நீ கட்டாயம் அதில் கலந்து கொள்ள வேண்டும். அத்துடன் முக்கியமான சில பிரமுகர்கள் இன்னும் ஒரு மணிநேரத்துள் எம்மைச் சந்திக்க வரவுள்ளார்கள். உனது நிலை எனக்குப் புரிகிறது. ஆனால் அவர்களுக்குப் புரியாது. நிலைமையை விளக்கிச் சொல்லி விட்டு வா. பின்பு சென்று மிகுதியைக் கதைக்கலாம்.”

“சரி.. நான் வரத் தெண்டிக்கிறேன்”

“என்ன தெண்டிக்கிறது. உடனை வா. பின் போகலாம்” என்று கூறி விட்டுப் பதிலை எதிர்பாராது தொடர்பைத் துண்டித்தார் கணநாதன்.

“அப்பூ, நான் அவசரமாகப் போக வேண்டும். பின்பு வருகிறேன்” என்றான் விதுஷன்.

“இல்லைப் பேரா, வந்தனீ சாப்பிட்டு விட்டுப் போ. நாற்பது வரிசமாய் ஏங்கித் தவித்தனான். என்ரை பிள்ளையைப் பார்த்த மாதிரித்தான் இருக்கு, பொன்னுவைக் கூட்டியா.... எப்போ கூட்டியரப் போறாய்....?” அழுதார் பொன்னுச்சாமி.

“இப்பொழுது நான் தொடர்பு கொண்டு சொல்கிறேன். உங்களிடம் தொலைபேசி வசதியிருக்கா?” என்று கேட்டார் விதுஷன்.

சிவகுரு பதில் சொல்லத் தயங்கினான். பின்; “நாம் யாருடன் தொடர்பு கொள்ளத் தொலைபேசி...”

“அப்படியா! இதை வைத்துக் கொள்ளுங்கோ” என்ற விதுஷன் தனது தந்தையுடன் தொடர்பு கொண்டான். அவர் குளித்துக் கொண்டிருப்பதாக அவனது தாயார் சொன்னார்.

“குளித்து முடிந்ததும் அவசரமாக என்னுடன் தொடர்பு கொள்ளச் சொல்லுங்கள்” என்று கூறிவிட்டுத் தனது கைத் தொலைபேசியைச் சிவகுருவிடம் கொடுத்தான் விதுஷன்.

தவனேஸ்வரி அவருக்கும் பொன்னுச்சாமிக்கும் சிவகுருவுக்கும் உணவு பரிமாறினாள். பொன்னுச்சாமியின் கண்களால் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அவர் சோற்றைக் குழைத்து விதுஷனுக்கு ஊட்டிக் கொண்டிருந்தார். விதுஷன் கரைந்து போனான். அவனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து இது வரை அவனது தந்தையார் சாப்பிட்டு விட்டாயா?” என்று கூடக் கேட்கவில்லை.

சாப்பாடு முடிந்ததும் விதுஷன் ஒரு தொகைப் பணத்தை எடுத்து பொன்னுச்சாமிக்குக் கொடுத்தான். பின்பு சிவகுருவுக்கும் கொடுத்து விட்டுப் புறப்பட்டான்.

மாலை ஐந்து மணிக்கு எல்லா வேலைகளும் முடிந்த பின்பு விதுஷன் கணநாதனைச் சந்தித்தான்; “ஐயா, உங்களால் இன்று நான் பெரும் பாக்கியத்தை அடைந்தேன். இங்கு நீங்கள் என்னை அழைத்து வந்தால் தான் எனது உறவினர்களைச் சந்திக்க முடிந்தது. எனது பேரனாரைக் கண்டு, அவரது கையால் உணவு உண்டதை எனது வாழ்நாளில் மறக்கமாட்டன். அவர் தனது மகன் மீது கொண்ட அன்பை நினைக்க எனக்கு எனது தந்தை மீது வெறுப்பாக இருக்கிறது. அவர் ஒரு முறை இங்கு வந்து தனது தந்தையைச் சந்தித்திருக்கலாம். இல்லாவிட்டால் உதவிகளாவது செய்திருக்கலாம். அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை என்னால் சகிக்க முடியிவில்லை. அப்பா கல் நெஞ்சுக்காரர். அவரை நான் வெறுக்கிறன்”. அழுதார் விதுஷன்.

கணநாதனால் எதுவும் சொல்ல முடியவில்லை. குழந்தைப் பிள்ளையைப் போலத் தேம்பித் தேம்பியழும் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“ஐயா, “அன்பு நீங்காத உறவு ஒருவனுக்குக் கிடைத்தால், அது அவனுக்கு மேலும் மேலும் செல்வத்தைக் கொடுக்கும்; பல கீர்த்திகளைக் கொடுக்கும்” என்பார்கள். எனக்கு அன்பு நீங்காத உறவு பெற்றோர்களிடமிருந்தும்

உங்களிடமிருந்தும் கிடைத்தமையால் தான் நான் இன்று இந்நிலைக்கு உயர்ந்தேன். அந்த உறவு எனது தந்தையாருக்குக் கிடைக்காமையால் அவர் மிகவும் கஷ்டப்பட்டார். நானும் சகோதரர்களும் வளர்ந்த பின்பு தான் அவர் வசதியாக இருக்கிறார். இப்பொழுதும் நீங்கள் என் மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கிறீர்கள். அதனால் இந்தத் தொழிற்சாலையின் சகல பொறுப்புக்களையும் என்னிடம் ஒப்படைத்துள்ளீர்கள். உங்கள் நம்பிக்கையைக் கெடுத்து உங்கள் அன்பான உறவை நான் எச்சந்தர்ப்பத்திலும் கெடுக்க மாட்டேன். அந்த அன்பான உறவு என்னை மேலும் மேலும் உயர்த்தி வைக்கும்'' கலங்கினார் விதுஷன்.

''நீ நல்லவன், உனக்கு ஒரு போதும் தீமை நிகழாது. ஒருவன் வறியவனான காலத்தில் தான் அவனது உறவைப் பற்றிப் பாராட்டிப் பேசி அவனுக்கு உதவி செய்தல் வேண்டும். நீ அதைக் கைக்கொள்கிறாய். அதனால் உனக்கு எந்தத் துன்பமும் வராது'' என்றார் கணநாதன்.

**522. விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா**
**ஆக்கம் பலவும் தரும்.**

அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால், அது மேன் மேலும் வளர்ச்சி குறையாத ஆக்கங்கள் பலவற்றையும் அவனுக்குக் கொடுக்கும்.

## கரை இல்லாத குளம்

பொன்னுச்சாமி அன்று போலத் தனது வாழ்நாளில் மகிழ்ந்ததில்லை. மகனையும் மருமகனையும் பேரப்பிள்ளைகளையும் கண்டவுடன் சித்தங்கலங்கியவர் போலானார்; ''இனி எனக்கு இங்கு வேலையில்லை. நல்லூரானை நான் வேண்டியது வீணாகவில்லை. அவர் எனது மகனைக் குடும்பத்தினருடன் கொண்டு வந்து சேர்த்து விட்டார்; ''டேய் துரை நாப்பது வருடமாய் எங்களையெல்லாம் பிரிந்து எப்படியடா இருந்தாய்?'' விம்மி விம்மி அழுதார்.

சகோதரனின் முகத்தைக் காணாத தவனேஸ்வரி பொன்னுத்துரையின் அருகே சென்று விம்மி விம்மி அழுதாள்; ''அம்மா போனவரிசம் தான் செத்தவா. அவா கடைசியாகச் சொன்ன வார்த்தை ''துரை'' என்பது தான் அவா இறக்கும் வரை உங்களை நினைத்துக் கொண்டு தான் இருந்தவா; ''எனக்குக் கொள்ளி வைப்பன் என்று நம்பியிருந்தன். அவன் எனக்கு முன்னம் போட்டானென்று அவா கவலைப்படுவா'' என்றான் தவனேஸ்வரி.

''உன்னை நினைத்து மனிசி பட்ட மனவேதனையைத் தாங்க முடியாத நான் மனிசிக்குப் பெரியதொரு பொய்யைச் சொல்லிச் சமாதானஞ் செய்தனான்'' என்று கூறி நிறுத்திய பொன்னுச்சாமி விம்மி விம்மி அழுதார். பின்பு சொன்னார்; ''எனக்கு அதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. அதனால் தான் நீ இனக்கலவரத்திலை கொல்லப்பட்டதாய்ச் சொன்னனான். அதாலை கொஞ்ச நாள் மனிசி அழுது விட்டு பின் மறந்திட்டுது. ஆனால் நான் காலம் பூராவும் மனிசிக்குத் தெரியாமல் அழுது கொண்டே இருந்தேன்''. பொன்னுச்சாமி விம்மினார்.

விதுஷனுக்கு அதைக் கேட்கச் சகிக்கவில்லை; ‘‘இவ்வளவு பாசமுள்ள பெற்றோரை மறந்து எப்படி அப்பா உங்களாலை இவ்வளவு காலமும் வாழ முடிந்தது’’. என்று கேட்டான்.

‘‘நான் எங்கே வாழ்ந்தேன். எனது மாமா, அதாவது உனது அம்மாவின் தகப்பன். சிறுவயதிலேயே கண்டிக்கு வந்து விட்டார். அவர் ஒரு பெரிய கடையில் சிப்பந்தியாக வேலை செய்யும் போது அதே ஊரில் வாழ்ந்த ஒரு பெண்ணுடன் உறவு வைத்திருந்தார். அவளுக்கு இரு பிள்ளைகள் இருந்தன. அவர் புகையிலை கொள்வனவு செய்வதற்காக ஊருக்கு அடிக்கடி வந்து செல்வார். அவர் திருமணமாகிக் கண்டியில் வசிப்பது ஊரில் யாருக்கும் தெரியாது. அதனால் ஊரில் திருமணம் பேசும்போதெல்லாம் ஒவ்வொரு சாட்டைச் சொல்லித் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தார். கண்டிக்குச் சென்ற நான் அவருடன் தான் தங்கியிருந்தேன். ஒரு முறை ஊருக்கு அவர் வியாபார நிமிர்த்தம் வந்த போது விபத்தில் சிக்கி இறந்து விட்டார். அவர் திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தை என்று உங்களுக்குத் தெரியாது. ஊரவர்கள் யாரையும் மாமிக்குத் தெரியாது. அதனால் அக்குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய அவல நிலைக்கு நான் உட்பட்டேன். பின்பு மாமாவின் மகளைத் திருமணஞ் செய்தேன். எம்மிடம் முதல் இல்லாததால் வளமாக வாழ முடியவில்லை. பெற்றோருக்கும் உதவி செய்ய முடியவில்லை. அதனால் ஊருக்கு வர நான் விரும்பவில்லை’’ என்றார் பொன்னுத்துரை.

‘‘கதிர்காமுக்குப் பிள்ளைகள் இருக்கா....?’’ அதிர்ந்து போனார் பொன்னுச்சாமி; ‘‘யாரோ ஊர் பேர் தெரியாத பெண்ணைத் தான் நீ திருமணஞ் செய்தாயென்று நினைத்தன். மாமன் மகளைச் செய்திருக்கிறாய்.... சந்தோசம்’’ என்றார் பொன்னுச்சாமி.

விதுஷனுக்கு மர்மப்படம் பார்ப்பதைப் போல இருந்தது. ‘‘கனவு காண்கிறோமோ?’’ என்று நினைத்தார்.

‘‘பிள்ளைகள் வளர்ந்து தொழிலான பின்பு தான் எமது குடும்பம் பணக்காரக் குடும்பமானது. நான் வரத்தான் நினைத்திருந்தன். சுற்றத்தவருடன் மனங்கலந்து பழகாதவனுடைய வாழ்க்கை, கரையில்லாத குளம் நீர் நிறைந்ததைப் போன்றதாகும். எந்த நேரமும் அம்மாவைப் பற்றி நினைப்பேன்; அப்பாவைப் பற்றி நினைப்பேன்; சகோதரர்களைப் பற்றி நினைப்பேன்; இனத்தவர்களைப் பற்றி நினைப்பேன். அப்போது இதயம் இரத்தக் கண்ணீர் சிந்தும். கவலையை யாருக்குச் சொல்வது. மனைவி ஏற்கனவே குடும்பச் சுமையைத் தாங்க முடியாது அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். நான் அங்கு வாழ்ந்த காலம் பாலைவனத்தில், யாருமில்லாத தீவில் தனிமையில் வாழ்ந்ததைப் போன்றது’’. கண்கலங்கினார் பொன்னுத்துரை.

விதுஷனுக்கு அவரைப் பார்க்க வேதனையாக இருந்தது; ‘‘உறவினர்களில்லாது நேர்ந்த துன்பங்களையெல்லாம் தாங்கி, எனது தாயின் குடும்பத்தைக் காப்பாற்றிப் பின் தனது குடும்பத்திற்காகவும் கடுமையாக உழைத்துத் தேய்ந்திருந்த அவரைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அவரை நல்ல முறையில் காப்பாற்ற வேண்டும்’’ என்று நினைத்தார்.

**523. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்**

**கோடுஇன்றி நீர்நிறைந் தற்று.**

சுற்றத்தவருடன் மனம் கலந்து அன்பாகப் பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை, கரையில்லாத குளத்தில் நீர் நிறைந்ததைப் போன்றது.

## பெற்றபலன்

கணநாதன் விதுஷனுக்குக் கொடுத்த பெரிய வீட்டில் பொன்னுத்துரையும் மனைவி சுமத்திராவும் இளையமகன் கௌசிகனும் கொழும்பிலிருந்து வந்து தங்கினர். பொன்னுச்சாமியும் அவர்களுடன் வந்திருந்தார்.

அன்று கணநாதன் விதுஷனது வீட்டுக்கு அவனது பேரனாரைப் பார்க்க வந்தார். பொன்னுச்சாமி விதுஷனைப் போலவே இருந்தார்.

‘‘நாற்பது வருடங்களுக்குப் பிறகு மகனையும் மருமகளையும் பேரப்பிள்ளைகளையும் கண்டு விட்டீர்கள். மகிழ்ச்சி தானே’’ கணநாதன் கேட்டார்.

அதைக் கேட்டுப் பொன்னுச்சாமி அழுதார் ‘‘இவ்வளவு காலமும் நான் தவித்த தவிப்பை எப்படி வார்த்தைகளாற் சொல்வது. ஆரம்பத்தில் ஐந்து பெம்பிளைகளைத் தவிக்க விட்டு விட்டு இவன் போய் விட்டான் என்று மனம் நொந்தேன். காலப்போக்கில் அந்தத்துயரம் மறைத்து விட்டது. இவன் வரமாட்டானா? வந்து என் துயரத்தை தீர்க்கமாட்டானா என்ற எண்ணமே மேலோங்கியது. அதன் பின் எனது கடைசிக் கிரிகைகளைச் செய்யவாவது வரமாட்டானா?’’ என்று ஆசைப்பட்டேன். வந்து விட்டான். இனி எனக்கு முத்தி கிடைக்கும்’’ உணர்ச்சிவசப்பட்டார் பொன்னுச்சாமி.

‘‘இப்போது தான் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். எனது தங்கைகள் வந்து கதைத்தபோது நான் சொர்க்கத்தில் இருப்பதைப் போல இருந்தது. பத்துப் பதினைந்து மருமக்கள் வந்து என்னை ‘‘மாமா’’ என்றழைக்க எனது இதயம் இனித்தது. உலகில் வாழ்பவர்கள் சுற்றத்தவர்களுடன் இருத்தல் வேண்டும். அப்போது தான் வாழ்க்கை சுவைக்கும்’’ என்றார் பொன்னுத்துரை.

‘‘மனிதன் தனித்து வாழவே கூடாது. அப்படித் தனித்து வாழ்ந்தால் அவனில் ஏதோ குறைபாடு இருப்பதாக நாம் எண்ணுதல் வேண்டும். எனக்கு நான்கு சகோதரர்கள். எமக்கு இனத்தவர்கள் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்தாலும் வைபவங்கள் அனைத்திற்கும் தவறாது வருவார்கள். மாதத்தில் ஓரிரு முறை வருவார்கள். அதனால் வீட்டில் எந்த நாளும் நாலைந்து பேர் இருப்பார்கள். சுற்றத்தவர்களோடு இருப்பதைப் போன்ற தொரு மகிழ்வு இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை. ஒருவன் சுற்றத்தார் சுற்றியிருக்கும்படி வாழ்வது, அவன் செல்வத்தைப் பெற்றதால் அடைந்த பயனாகும். சுற்றத்தவர்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்கி இயன்றளவு அவர்களைச் சந்தோசமாக வாழ வழி வகுத்தல் வேண்டும்’’. என்றார் கணநாதன்.

‘‘ஒரு மனிதன் சுற்றத்தார் சுற்றியிருக்கத்தக்கதாக வாழ வேண்டும். அப்படி வாழத் தான் எனக்கும் விருப்பம். அப்படியிருந்தும் என்னால் அப்படி வாழ முடியாமைக்குக் காரணம் எனது வறுமைதான். மாமாவின் வீட்டுக்குச் சென்று

மாமியின் கையால் உணவை வாங்கி உண்டு விட்டு அவர்களுக்குத் துரோகம் செய்யக்கூடாதென்று நினைத்தேனே தவிர எனது குடும்பத்தைப் பற்றி நான் சிந்திக்கவில்லை. அன்று நான் அதைச் சிந்தித்திருந்தால் அவர்களை விட்டு விட்டு வந்திருப்பேன். ஏனோ தெரியவில்லை, அன்று எனக்கு அந்தச் சிந்தனை வரவில்லை. பின் எனது பிள்ளைகள் வளர்ந்து உழைக்கத் தொடங்கிய பின்பு எனது பெற்றோரின் நினைவும் சகோதரர்களின் நினைவும் வந்த போது மனம் நான் செய்த பிழைகளைச் சுட்டிக்காட்டி வருத்தியமையால் என்னால் அவர்களைத் தேடி வர முடியவில்லை. விதுஷன் வந்த பின்பு தான் அந்த எண்ணம் எனக்கு வந்தது. எனது குடும்பத்தவரை தேடிக் கண்டு பிடிக்கும்படி விதுஷனுக்குச் சொல்ல நினைத்தேன். மறு முறை அவன் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் போது நானும் கூடச் செல்ல வேண்டும் என்றும் நினைத்தேன்'' என்றார் பொன்னுத்துரை.

''உங்களது மனவலிமை எல்லோருக்கும் வராது'' என்றார் கணநாதன்.

''மாமா மாமி, மைத்துணர்கள், மைத்துணிகளெல்லாம் எனது இரத்த உறவினர்கள் என்பதை நினைக்க எனக்கு அப்பாவின் மேலிருந்த கோபம் தணிந்து விட்டது. இனி நாம் பிரியமாட்டோம். இவ்வளவு காலமும் தாத்தா பிரிந்திருந்து பட்ட துன்பங்கள் போதும்'' என்றார் விதுஷன்.

''நாங்களெல்லோரும் ஒன்று சேர்ந்ததைக் கொண்டாடுதல் வேண்டும். நாளை பகல் உணவை இங்கே வந்து உண்ணுங்கள். எனது இனத்தவர்களையும் அழைக்கப் போகிறேன்'' என்றார் பொன்னுத்துரை.

அப்போது தணிகாசலமும் பரமேஸ்வரனும் அங்கே வந்தனர். பொன்னுச்சாமி தணிகாசலத்தை அன்புடன் வரவேற்றார்.

'' பொன்னுத்துரை, என்னைத் தெரியுமா?'' என்று கேட்டார் தணிகாசலம்.

பொன்னுத்துரை; ''இல்லை'' என்றார்.

''எடதுரை தணிகாசலத்தைத் தெரியாதே.... இளமையிலை நீங்கள் இரண்டு பேரும் தானே நண்பர்கள். தோட்டத்துக்கை வெள்ளரிப் பிஞ்சுகளைப் பிடுங்கித் தின்று என்னிடம் அடிவாங்கிறனீங்கள்'' என்றார் பொன்னுச்சாமி.

''ஓ......ஓ மறந்திட்டன்'' என்றார் பொன்னுத்துரை.

**524. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம் தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன்.**

சுற்றத்தவர்கள் சூழ்ந்திருக்க அன்போடு வாழும் வாழ்க்கை, ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் உண்டான பயனாகும்.

சூழ்ந்திருப்பர்

“துரை, உன்னை இழந்து நான் தவித்த போதெல்லாம் எனக்காறுதல் கூறி உபசரித்தது தணிகாசலம் தான். தணிகாசலமில்லாவிட்டால் நான் எப்போ செத்திருப்பன். உன்னுடைய பிரிவை விடக் குடும்பக் கஷ்டங்கள் அடிக்கடி வரும். அப்படி வரும் போது தணிகாசலம் தான் உதவி செய்தது. பிள்ளைகளைப் படிப்பிக்கவும், விவசாய நடவடிக்கைகளுக்காகவும் அடிக்கடி நான் தணிகாசலத்தின் உதவியைத் தான் நாடுவேன். அப்போதெல்லாம் சீறிச் சினக்காது மகிழ்வுடன் உதவி செய்வான். விதை தானியங்கள் கூட அவன் தான் தாறது. நான் வாங்கிய பொருட்களில் பலவற்றைத் திருப்பிக் கொடுக்கவில்லை. பணமும் அப்படித்தான். ஒரு நாளென்றாலும் தந்த பொருளையோ காசையோ அவன் கேட்கவில்லை. நான் தான் கொண்டு சென்று கொடுப்பேன். எனக்கு மட்டுமில்லை ஊரிலை உள்ள பலருக்கும் உதவிகள் செய்வது அவர் தான்” என்றார் பொன்னுச்சாமி.

“என்னாலை முடிந்ததைச் செய்தனான். பெரிதாக நான் எதுவும் செய்யவில்லை” என்றார் தணிகாசலம்.

அப்பொழுது அங்கே கஜேந்திரன் வந்தான்.

“வடா பேரா, இஞ்சை வந்து பார் உனது மாமாவின் குடும்பம் வந்திருக்கு. நாற்பது வருடங்களாகத் தேடித்திரிந்தனான். கொம்மாவுக்கும் போய்ச் சொல்லு. பிள்ளைகள் வந்த சந்தோசத்திலை அவளை மறந்திட்டன். இவன் மூத்தக்கா இலட்சுமீன்ரை மகன். பல்கலைக்கழகத்திலை படிக்கிறான்” மூச்சு விடாமல் சொன்னார் பொன்னுச்சாமி.

கஜேந்திரன் நிமிர்ந்து பொன்னுத்துரையைப் பார்த்தான்; “குடும்பப் பொறுப்புக்களையெல்லாம் விட்டு விட்டு தப்பியோடியவர் இன்று ஏன் வருவான்” என்று நினைத்தவாறு; “தணிகாசலமண்ணை உங்களை அதிபர் உடனை கூட்டி வரச் சொன்னவர். வாங்கோ போவம்” என்றான்.

“நாற்பது வருடங்களுக்கு முன்பு சென்ற உனது மாமா இன்று தான் வந்திருக்கிறார். அவர் எனது நண்பர். அவரைப் பார்க்கத் தான் வந்தனான். நீயும் அவரோடு கதை” என்றார் தணிகாசலம்.

“பிறகு வந்து கதைக்கலாம். அதிபர் முக்கிய விடமாக இல்லாவிட்டால் வரச் சொல்லச் சொல்ல மாட்டார்” என்றான் கஜேந்திரன்.

அப்போது மணிவண்ணன் அங்கே வந்தான்; “தணியண்ணை இவ்வூர் விவசாயிகளுக்கு உரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னீர்கள். ஆயிரம் மூடை உரம் கொண்டு வந்துள்ளேன் வந்து அவற்றைப் பாரமெடுத்து விட்டு என்னை விடுங்கள்” என்றான் மணிவண்ணன்.

தணிகாசலம் புறப்படும் போது மேலும் இருவர் அங்கே வந்தனர்; “ உங்களை எங்கையெல்லாமண்ணை தேடுறது. வீட்டை போனோம், உங்களின் மகள் பரமேஸ்வரன் ஐயாவோடை மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றதாகச் சொன்னாள். கோயிலுக்கு வந்து பார்த்தோம். சுவாமியார் “பொன்னுச்சாமித்

தாத்தாவின் மகன் வந்திருக்கிறான். அவனைப் பார்க்கப் போயிட்டினை'' என்றார். இங்கே வந்தோம்'' என்றான் ஒருவன்.

தணிகாசலம் எழுந்தார்; ''அப்பூ அவசரமான வேலை ஒன்றிருக்கு. நான் வாறன். துரை இனி இஞ்சை தானே இருக்கப் போகிறாய். பிறகு சந்திக்கிறன்'' என்று கூறிவிட்டு புறப்பட்டார் தணிகாசலம்.

அவர் தன்னுடன் கூட வந்த பரமேஸ்வரனை மறந்து போனார். வாசலில் வந்த போது தான் அவருக்குப் பரமேஸ்வரனின் நினைவு வந்தது. திரும்பி வந்து சொன்னார்; ''மச்சான் வாறியளே?''.

பரமேஸ்வரன் யோசித்துப் பார்த்தார். அவருடன் ஒரு தொழிலுக்குப் புறப்பட முடியாது. ஒரு இடத்திற்குப் போகலாமென்று புறப்பட்டால் அவர் அதை விட்டு விட்டு பத்துப் பதினைந்து இடங்களுக்குச் செல்ல வேண்டி வரும். வழியில் நூறு பேர் வழிமறித்துக் கதைப்பார்கள். அவரோடு நிற்க முடியாது. அதனால்; ''நீங்கள் போங்கோ நான் வாறன்'' என்றார்.

கஜேந்திரனது போக்குப் பொன்னுத்துரைக்குப் பிடிக்கவில்லை. ஒப்புக்காவது ஏதாவது கதைத்திருக்கலாமென்று நினைத்தார்.

''எனக்கு இலட்சுமியை நினைக்கத் தான் கவலை. மாதம் முப்பது நாளும் ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரி என்று திரிகிறாள். போய் ஒருக்கால் அவளைப் பார் தம்பி. பாவம் புரிசனும் தோட்டம். பெரிய கஷ்டம்'' என்றார் பொன்னுச்சாமி.

பரமேஸ்வரன் வீட்டுக்குப் புறப்பட்டார். வழியில் இருவர் தணிகாசலத்தைத் தேடி வந்தனர். அவர்கள் பரமேஸ்வரனைக் கண்டதும்; ''தணியண்ணை உங்களோடு வந்தவராம். தனியவாறியள். அவர் எங்கை?'' என்று கேட்டான் ஒருவன்.

''அவர் மணிவண்ணனோடு செல்கிறார்'' என்றார் பரமேஸ்வரன்.

''ஒரு நாளைக்கு எத்தனை பேர் தணிகாசலத்தைத் தேடி வருகிறார்கள். அவருக்குள்ள மதிப்பு இங்கு யாருக்குமில்லை. தணிகாசலம் அடிக்கடி சொல்வார்; ''மச்சான் ஒருவன் சுற்றத்தாருக்கு உதவிகள் செய்தும், இனிமையாகப் பேசியும் வந்தால் சுற்றத்தவர்கள் அவனை எப்பொழுதும் சூழ்ந்திருப்பார்கள். அவனை அவர்கள் மதித்துத் தெய்வமாகத் துதிப்பர்'' தணிகாசலத்தை நினைக்கப் பரமேஸ்வரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் தனக்குச் சம்பந்தியாக அமைந்ததை எண்ணி மகிழ்ந்தார்.

**525. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தால் சுற்றப்படும்.**

பொருள் கொடுத்தலும், இன் சொல் கூறுதலுமாகிய இரண்டு பண்புகளையும் உடையவனைச் சுற்றத்தவர் எப்பொழுதும் சூழ்ந்திருப்பர்.

## யாரும் இல்லை

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய இரவுப் பூசை முடிவடைந்ததும் மக்கள் சுவாமியாருக்கு அருகிற் சென்றமர்ந்தனர். சுவாமியார் தணிகாசலத்தையும் விக்னேஸ்வரமூர்த்தியையும் வரும்படி கூறியிருந்ததால் அவர்கள் இருவரும் வந்திருந்தனர். கணநாதன், பரமேஸ்வரன், விதுஷன், பொன்னுத்துரை குடும்பம் என்று அரசடி மக்களால் நிறைந்திருந்தது.

“அடியார்களே சுனாமி நிதிக்கு எம்மவர் பலர் மனமுவந்து வாரி வழங்கியுள்ளனர். அன்ரன் சில்வெஸ்ரரும் அவரது நண்பர்களும் முன்பு ஏற்றுக் கொண்ட படி பல உதவிகளைச் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் மக்களில் சிலர் இவர்களின் நல்லெண்ணத்தைப் புரிந்து கொள்ளாமல் மற்றவர்களையும் தவறாகப் புரிந்து, அவர்களைத் தவறாக வழிநடத்தப் பார்க்கிறார்கள். ஒரு பொய்யைத் திரும்பத் திரும்ப மெய் என்று கூறுவதன்மூலம் அது மெய்யென ஏற்கப்பட்டு விடும். அதே போல் ஓர் உண்மையை பொய் என்று திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் அது பொய்யாகி விடும். இது தாழ்ந்தவர்களுக்கு மட்டுமல்ல உயர்ந்தவர்களுக்கும் பொருந்தும். ஒருவன் தீமையைக் கண்டு அஞ்ச வேண்டும். மற்றவர்கள் மீது குற்றஞ் சுமந்து முன் பலமுறை அது சரிதானா என்பதை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். மிகுந்த உத்தமரைப் பற்றியும் பலரிடம் தவறாகச் சொல்லி வந்தால் ஒரு சில நலிந்த மனம் படைத்தோரும் எதிரிகளும் அவற்றை உண்மையென ஏற்றுக் கொள்வர். அண்மையில் வெளிநாட்டால் வந்த ஓர் அன்பருக்கு இங்குள்ள சிலர், ஓர் உத்தமரைப் பற்றித் தவறாக கூறியுள்ளனர். அந்த வெளிநாட்டவர் பலரிடம் விசாரித்துப் பார்த்திருக்கிறார் பெரும்பான்மையானோர் தவறாகவும் அப்படி இருக்கலாமென்றும் கூறியுள்ளனர். சிலர் மட்டும் ஆதாரங்களுடன் மறுத்துரைத்துள்ளனர். ஆனால் அந்த வெளிநாட்டவர் மறுத்துரைத்தவர்கள் அவரது நண்பர்கள் என்கிறார்” மூச்சு விட்டார் சுவாமியார்.

யாரும் எதுவும் பேசத் தோன்றாது பேசாமலிருந்தனர்; “யார் அந்த வெளிநாட்டவர்; யாரைப் பற்றி விசாரித்துள்ளார்?” என்ற எண்ணமே எல்லோரது மனதிலும் இருந்தது.

மீண்டும் சுவாமியார் பேசத் தொடங்கினார்; “கல்வியால் மனிதன் முன்னேறியுள்ளான் என்று சொல்வது எல்லோருக்கும் பொருந்தாது. ஏனெனில் கற்ற கல்வியைக் கொண்டு தான் பலர் தீய செயல்களிலீடு படுகிறார்கள். கற்காத பலருக்கு மனச் சாட்சிக்குப் பயம்; கடவுளுக்குப் பயம்; செயல்களுக்குப் பயம், ஆனால் கற்ற சிலர் இவற்றிற்குப் பயப்படுவதில்லை. கல்வியால் எல்லாம் கிடைக்கும் என்பார்கள். ஆனால் ஒன்றும் கிடைக்காமலும் போகலாம். செல்வமோ, கல்வியோ, நிறைந்த வளங்களோ ஒருவனது ஆத்ம முன்னேற்றத்திற்கு உதவாது. இன்னொருவராலும் ஏற்படாது. அதைத் நாம் தான் உருவாக்கிக் கொள்ள முடியும். ஒருவனிடம் இலட்சம் இலட்சமாகப் பணம் உள்ளது. என்னிடம் வந்து நிம்மதியில்லை; மகிழ்ச்சியில்லை என்கிறான். இவற்றை எங்கே வாங்குவது. எங்காவது விற்பனை செய்கிறார்களா? அது ஒவ்வொருவரினதும் மனத்திலே தான் உள்ளது. இலட்சம் இலட்சமாகப் பணமுள்ளவன் இன்னும் தேட முயற்சிக்கிறானே தவிர அடுத்த நேரக் கஞ்சிக்கு வழியில்லாதவனுக்கு உதவத் தயாராக இல்லை. சமூகசேவை செய்பவனைப் பற்றிக் குறை சொல்கிறார்களே தவிர, குறையில்லாமற் செய்ய யாரும்

முன்வந்ததில்லை. உன்னிடம் உள்ள யாவற்றையும் பங்கிட்டுக் கொடு; உள்ளது போதும் என்று நினைத்திரு; எல்லோரும் நல்லவர்கள் என்று எண்ணு; மனதில் நிம்மதி உண்டாகும்; மகிழ்ச்சி பெருகும். ஆசையும் பொறாமையும் தான் மனிதனைத் தன் வழியிற் கொண்டு சென்று அவனைக் கெடுக்கின்றன. ஒருவன் பெருங் கொடை வள்ளனாகவும் கோபம் என்பது இல்லாதவனாகவும் இருந்தால், அவனைப் போலச் சுற்றத்தை உடையவன் இந்த உலகில் யாரும் இருக்க மாட்டார்கள். சுற்றத்தைக் கெடுப்பது அளவுக்கதிகமான கோபம். அன்பர்களே சுனாமியால் இலட்சக்கணக்கான மக்கள் மரணமடைந்தனர். ஆயிரக்கணக்கானோர் தமது உறவுகளையும் உடமைகளையும் இழந்து தவிக்கின்றனர். இவர்களை வாழ வைக்க வேண்டும். அவர்களை எமது சுற்றத்தினராக்கிக் கொள்ளல் வேண்டும். அதற்காகத் தான் நிதியுதவி கோரினோம். நிதி சேர்ந்துள்ளது. அதை உரிய முறையில் அவர்களிடஞ் சேர்த்தல் வேண்டும். இறைவன் எல்லோரையும் நிர்வாணமாகவே படைத்தான். படைப்பின் மகத்துவம் அது. நானுன்னை ஆசைகளின்றிப் படைத்துள்ளேன். நீ ஆசைகளின்றி வாழ் என்பது அர்த்தம். வயது செல்லச் செல்ல பொருட்களில் உள்ள பற்றுக்கள் யாவும் அகன்று விடும். பின் ஆடையே பாரமாக இருக்கும். கற்ற கல்வி தேடிய பணம் எதுவும் அப்போது உதவாத நிலைக்கு வந்து விடும். மாறாட்டம் வரும். பெற்ற பிள்ளையைக் கூட அடையாளம் தெரியாத நிலை உருவாகும். அப்படியிருக்க இடையில் ஏன் நீ மற்றவர்கள் மீது பொறாமைப்படுகிறாய்; கோபிக்கிறாய்; வசைப்பாடுகிறாய்; இவற்றை விட்டு விட்டுப் பெரும் கொடைவள்ளலாக இரு; கோபத்தை அடக்கு, சுற்றம் சேரும். என்றும் மகிழ்வாய் இருப்பாய்'' சுவாமியார் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

**526. பெரும் கொடையான் பேணான் வெகுளி அவனின்**
**மருங்குஉடையார் மாநிலத்து இல்.**

பெருங் கொடையாளியாகவும், சினங் கொள்ளாதவனாகவும் ஒருவன் இருந்தால், அவனைப் போலச் சுற்றத்தை உடையவர்கள் எவரும் உலகத்திலே இரார்.

## ஆக்கமுடையவர்

''எம்மை விட நாம் அற்ப உயிர்கள் என்று எண்ணும் விலங்குகள், பறவைகளைப் பாருங்கள் அவை எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றன. தமது சுற்றத்தை எவ்வளவு பாசத்துடன் நேசிக்கின்றன. விலங்குகளும், பறவைகளும் தான் இன்பமாக இருக்கின்றன. வாழ்க்கையை அனுபவிக்கின்றன. கடவுளால் படைக்கப்பட்ட எந்த நாயும் நன்றி கெட்டத் தனமாக நடந்ததில்லை. எஜமானை அவமதித்ததில்லை. அப்படிச் செய்ததாக யாரும் கேள்விப்பட்டதுமில்லை. அப்படியிருக்க அறிவுள்ள மனிதன் மட்டுமேன் தனது சுற்றத்தவரை வெறுக்கிறான். இதற்குக் காரணம் ஆசை தான். ஆசைக்கு வரம்பில்லை. முதலில் வரம்பு கட்டுங்கள், நிம்மதியாக இருப்பீர்கள். கோடிக் கணக்காகப் பணம் வைத்திருப்பவனும் தனது சுற்றத்தவர்களுக்கு உதவாமல் அவர்களைச் சுரண்டிச் சுரண்டி மேலும் மேலும் பணத்தைச் சேகரிக்கவே விரும்புகிறான். ஒருவன் தனது தேவைக்கதிகமான எவற்றையும் தன்னொடு வைத்திருக்கக் கூடாது. உடனே அதைச் சுற்றத்தவர்களுக்குக் கொடுத்து விட வேண்டும். அனேகமானவர்களுக்கு இன்னும் வேண்டு மென்ற நினைப்பே மேலோங்கிக் கொண்டிருக்கும். காகத்தைப் பாருங்கள், அது தனக்குக் கிடைத்தவற்றைத் தான் மட்டும் உண்ணாமல் தன் இனத்தைக் கரைந்து அழைத்துச் சேர்ந்தே உண்ணும்.

இத்தகைய குணமுடையவர்களுக்கே சுற்றத்தவரால் ஆக்கம் உண்டாகும். சுற்றத்தவர்களைப் பற்றிக் குறை கூறிக் கொண்டே இருப்பது மிகவும் பாவமான செயல். பிறரைக் குறை கூற யாருக்கும் அதிகாரங் கிடையாது. நீ ஒரு வரைக் குறைகூறுமுன் உன்னைப் பற்றி ஆராய்ந்து பார். உன்னிடம் அதைவிடக் கூடுதலான குறைகள் இருக்கும். உன்னை நீ விமர்சனம் செய். குற்றம் நிகழாது. உன்னைப் பற்றிச் சிந்தித்துப் பார். அதன்மூலம் நீ திருந்த இடமுண்டு. உனக்குத் தெரியாமல் நீ நல்லவை யென்று நினைத்துச் செய்வது தீமைகளாக இருக்கலாம். அறியாமையில் மூழ்கியுள்ளோர் அதைத் தீதாகக் கருதி விமர்சனம் செய்வர்; கூடிக் கதைப்பர்; ஆனால் நல்லவர்கள் நேரே எடுத்துச் சொல்வார்கள். உலகம் அவர்களைப் பற்றித்தான் தவறாக நினைக்கிறது. முகஷ்துதி பாடி விட்டு பிறரோடு சென்று கேலி செய்து சிரிப்பவர்களைப் பற்றி நல்ல அபிப்பிராயமே வைத்துள்ளது. இது தான் இன்றைய அழிவுக்குக் காரணம். உன்னைப் பற்றி விமர்சிப்பதை நல்லவையானால் கேட்டு மகிழ்வடை. தீயவையானால் செவிடனைப் போல இருந்து விடு. அது சொன்னவனைபயே சென்றடையும். அதற்காக நீ கோபப்பட்டால் அவ்விமர்சனம் உண்மையாகிவிடும். அதை அலட்சியம் செய்தால் மறைந்து விடும். இப்பொழுது இங்கே அது தான் நடைபெறுகிறது. முன்பு சொல்லப்பட்ட அந்த உயர்ந்த மனிதன் அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. அதனால் இப்பொழுது சம்பந்தப்பட்டவர்கள் அமைதியாக இருக்கிறார்கள்'' சுவாமியார் மூச்சு விட்டு விட்டு அருகில் இருந்த செம்பை எடுத்து நீரைப் பருகினார்.

‘‘நாம் ஒருவரை அவரது நற்குணங்களை வைத்துத் தான் எடை போடல் வேண்டும். அவரது குறைகளை நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது. ஒவ்வொருவனும் தன்னைப் போலத்தான் மற்றவர்களும் இருப்பார்கள் என்று நினைக்கிறான். குடிகாரன் சமூகத்தில் வாழ்பவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் குடிக்கிறார்கள் என்று நினைக்கிறான். திருடன் எல்லோரும் திருடாமலா இருக்கிறார்கள் என்று நினைக்கிறான். நல்லவர்கள் எப்பொழுதும் எல்லோரும் நல்லவர்கள் என்றே நினைக்கிறார்கள். சுற்றத்தவர்களுக்குக் கொடுப்பவர்கள் எல்லோரும் சுற்றத்தவர்களுக்குக் கொடுத்து இன்பமாக வாழ்கிறார்கள் என்றே நினைப்பார்கள். இது வரலாற்று நாயகர்களைக் கூட விட்டு வைக்கவில்லை. அரிச்சுனன் கிருஸ்ணரைச் சந்திக்கும் போதெல்லாம், கிருஷ்ணர் கர்னனைப் பற்றிப் புகழ்ந்தே பேசுவார். இது அரிச்சுனனுக்குப் பிடிப்பதில்லை. கிருஷ்னர், ‘கர்ணன் பெருங்கொடையாளி’ என்று ஒரு முறை கூறிய போது அருச்சுனன் மறுத்தான். தன்னாலும் கொடுக்க முடியுமென்றான். அதன்படி கிருஷ்ணன் பொன், மகரதம், மாணிக்கங்களை மலையாகக் குவித்து விட்டு அருச்சுனை அழைத்து அவற்றைத் தானஞ் செய்யும்படி கூறினார். அவன் மக்களை அழைத்து வீரர்களைக் கொண்டு அதைக் கொடுக்கச் சொன்னான். பல நாட்கள் சென்றும் அது குறையவில்லை. கர்னனை அழைத்து; ‘‘நீ பெரிய கொடை வள்ளலா? உன்னிலும் பார்க்கப் பல கொடைவள்ளல்கள் இருக்கிறார்கள்'' என்றான். அதற்குக் கர்னன்; ‘‘உண்மைதான் பிரபு. நான் கொடுத்தாலும் நாட்டின் செல்வத்தைத் தான் கொடுக்கிறேன். உடலை வருத்தி ஒரு பொன்னை ஒருவன் தானஞ் செய்தால் அது மிகப் பெரிய தானம்'' என்றான். பகவான் சிரித்து விட்டு உனக்கு பொன், மகரதம், மாணிக்கங்களை மலை போலத் தருகிறேன். இன்று பொழுது சாயுமுன் தானஞ் செய்'' என்றார். கர்னன் வெளியே வந்து பார்த்தான். பொன்னும், மகரதமும் மாணிக்கமும் மலைகளாகக் குவிந்திருந்தன. அவ்வழியால் மூன்று பேர் சென்று கொண்டிருந்தனர். அவர்களை அழைத்த கர்னன் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவருக்குக் கொடுத்து விட்டு உடனே திரும்பி வந்தான். அரிச்சுனனுக்கு வெட்கமாக இருந்தது. எனவே

மனதில் உள்ளவை தான் செயல்களாக வரும். காகத்தின் மனதில் உள்ளவை செயலாக வருவதால் அப்பறவை தனக்குக் கிடைத்த உணவை தான் மட்டும் உண்ணாமல் தனது சுற்றத்தவரையும் அழைத்து உண்டு மகிழ்கிறது. அத்தகைய குணமுடையவர்களுக்குச் சுற்றத்தவரால் பல நன்மைகள் உண்டாகும்'' என்றார் சுவாமியார்.

**527. காக்கை கரவா கரைந்து உண்ணும்; ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள.**

காக்கை தனக்குக் கிடைத்த உணவை தான் மட்டும் உண்ணாது கரைந்து தனது இனத்தை அழைத்துச் சேர்ந்து உண்ணும்; அத்தகைய குணம் உள்ளவர்களுக்குத் தான் ஆக்கம் உண்டு.

## தகுதியறிந்து நட

சுவாமியாரின் அருளுரையைக் கேட்டு விட்டு வந்த பரமேஸ்வரன் நள்ளிரவாகியும் தூக்கமின்றித் தவித்தார். சுவாமியார் சொன்ன அனைத்தும் தனக்குப் பொருத்தமாக இருப்பது போல இருந்தது. இளமைக காலத்தில் தான் நடந்து கொண்ட விதத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தார். எப்பொழுதும் அவருக்கு சந்தேகமிருக்கும். அவர் யாரையும் நம்புவதில்லை. அதற்குக் காரணம் அவர் பிறருடன் நம்பிக்கையாகப் பழகுவதில்லை. நடிப்பார். அதனால் அவருக்கு மனவருத்தமாக இருந்தது. நித்திரை வரும் வரை புத்தகத்தை வாசிப்போமென்று நினைத்துப் புத்தகத்தை எடுத்தார்.

வளவை நாட்டரசன் மணிமாறன் அன்று சபைக்கு வந்த போது ஏளனமான மக்கள் அவனைச் சந்திப்பதற்காகக் காத்திருந்தனர். மணிமாறன் நீதியானவன். அவரவரின் தகுதியறிந்து மதிப்பவன் என்பது எல்லோருக்கும் தெரியும். மன்னன் சபைக்கு வந்ததும் எல்லோரும் எழுந்தனர். சிங்காசனத்தில் அமர்ந்த மணிமாறன் சபையைப் பார்த்தான். செங்கல்வராஜர் என்ற மூத்த புலவர் கடைசிவரிசையில் அமர்ந்திருந்தார். அவரை உடனே அழைத்து வரும்படி தனது வீரனுக்குக் கட்டளையிட்டான். அவருக்கருகில் அமர்ந்திருந்த மங்களேஸ்வரனையும் அழைத்து வரும்படி கூறினான். அவர்களிருவரையும் தனக்கருகில் அமருமாறு பணித்தான்.

''செங்கல்வராஜர் பெரும் அறிஞர். கல்விமான், பல நூல்களை ஆக்கியவர். அதனால் தான் அரசன் அவரை அழைத்துத் தனக்கருகில் அமர்த்தியுள்ளார். மங்ளேஸ்வரன் பெரும் வர்த்தகன். கடல் கடந்து பல நாடுகளுக்குச் சென்று திரவியங்களைக் கொண்டு வருவன். எனவே அரசன் அவனைத் தனக்குச் சமமானவனாக எண்ணியுள்ளான்'' என்றார் அரசவைப் புலவர்.

அது நாட்டின் கிராமப் புறத்தலைவர் ஒருவருக்குப் பிடிக்கவில்லை. எனினும் வெளியே அதைச் சொல்லப் பயந்து பேசாமலிருந்தார்.

அரசவை செயற்படத் தொடங்கியது. மணிமாறன் முதலாவதாக அங்கிருந்து ஒரு ஏழைப் பெண்ணை அழைத்து விசாரித்தான்; ''அரசே எனக்கு ஐந்து

பிள்ளைகள். அவர்களை மிகவும் அன்பாக வளர்த்தேன். இப்பொழுது ஐவரும் மிகவும் நல்ல நிலையில் இருக்கின்றனர். இவர்கள் எவரும் என்னைக் கவனிப்பதில்லை. என்னை அவர்கள் பாரமாகக் கருதுகின்றனர். ஒவ்வொருவரும் மற்றவர்கள் பார்க்கட்டும் என்று நினைக்கின்றனர். அதனால் எனக்கு அவர்கள் மீது வெறுப்பேற்பட்டு விட்டது. நான் இரந்து வாழ விரும்பவில்லை. எனக்கு இரண்டு நல்ல இனப்பசுக்கள் தாருங்கள்'' என்றாள் அம்மூதாட்டி. அரசன் அதை ஏற்றுக் கொண்டான்.

அடுத்து அவ்வூர் வர்த்தகன் ஒருவனை அழைத்தான் மணிமாறன்; ''அரசே எனக்கு வளவை நாட்டின் கிழக்குப் பகுதியிலும் வியாபாரஞ் செய்ய அனுமதித்தல் வேண்டும். அவன் கூறிக் கொண்டிருக்கும் போது மணிமாறன் குறுக்கிட்டுச் சொன்னான்; ''வர்த்தகர்கள் தன்பொருளைப் போல பிறரின் பொருளையும் மதித்தால் மக்கள் மதிப்பார்கள். நீ எங்கும் வியாபாரஞ் செய்யலாம். நீதியான முறையில் நீ வியாபரஞ் செய்தால் மக்கள் உன்னைத் தேடி வருவார்கள். நீ ஊரூராகத் திரியத் தேவையில்லை''.

அடுத்து விவசாயி யொருவன் எழுந்தான்; ''உனது வயலையே நீ சரிவரச் செய்வதில்லை. பிறகேன் உனக்கு நிலம். நிலத்தைப் பெருக்குவதால் உற்பத்தியும் இலாபமும் பெருகாது. விளைச்சலைப் பெருக்கு. உயர்வடைவாய்''.

பரமேஸ்வரன் புத்தகத்தை மூடி விட்டு ஒருகணம் சிந்தித்துப் பார்த்தார். மணிமாறனது காலத்தில் வளவை நாடு பெரும் வளர்ச்சியுற்றிருக்கும் என்று நினைத்தார்; ''அரசன் பொதுவாக எல்லோரையும் ஒரு மாதிரியாகப் பாராமல் அவரவர்களது தகுதியறிந்து நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அவனை விரும்பி வாழ்வோர் பலராக இருப்பார்கள். அத்துடன் நாடும் பொருளாதார வளம் பெறும்'' என்று நினைத்த பரமேஸ்வரன் மீண்டும் புத்தகத்தை வாசிதார்.

''அரசே எனக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். மூவர் ஆயுதப் பயிற்சியை முடித்து விட்டு வேலையில்லாமல் வீட்டில் இருக்கின்றனர். இவர்களுக்குப் பொருத்தமான வேலைகளைத் தாங்கள் வழங்குதல் வேண்டும்'' என்று சொன்னான் குடியானவன்.

''ஆயுதப் பயிற்சியை எல்லா இளைஞர்களும் பெற்றிருத்தல் வேண்டும். அதில் திறமையுள்ள அனைவற்கும் படையில் உள்ள வெற்றிடங்களுக்கேற்ப பதவிகள் வழங்கிவருகிறோம். உங்களது பிள்ளைகளுக்கும் கிடைக்கும். அதுவரை பொறுத்திராது தமக்குப் பொருத்தமான தொழில்களைச் செய்யலாம் தானே. ஆயுதப் பயிற்சி பெறுவது தற்பாதுகாப்பிற்காகவும், திடீரென எதிரி படையெடுத்தால் எல்லோருமாக ஒன்று சேர்ந்து எதிரியை எதிர்பதற்குமே. எனவே தொழில் செய்வதற்கான ஆயத்தங்களைச் செய்யச் சொல்லவும்'' என்றான் மணிமாறன்.

அன்று சபைக்கு வந்திருந்த அனைவரும் மகிழ்வுடன் சென்றனர். விஞ்ஞானம் வளர்ச்சியடையாத காலங்களிலும் கூட மக்கள் முன் கூட்டியே தமக்கு வரும் நன்மை தீமைகளை அறிந்து செயற்பட்டு வந்துள்ளனர்'' என்று நினைத்தார் பரமேஸ்வரன்.

**528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**
**அது நோக்கி வாழ்வார் பலர்.**

அரசன் எல்லோரையும் பொதுவாக நோக்காமல், அவரவரது தகுதியறிந்து நோக்கினால், அச் செயலை விரும்பி அவனை நெருங்கி வாழ்வோர் பலர் ஆவர்.

## சேர்வர்

அங்குஷன் தங்கியிருந்த ஆஸ்பத்திரி விடுதிக்கு விநாயகரத்தினம் வந்தார். இப்பொழுது பரமேஸ்வரனைப் போலத் தானும் தொழிலிலிருந்து ஓய்வு பெற வேண்டு மென்ற எண்ணம் விநாயகரத்தினத்தின் மனதிலும் எழுந்து கொண்டிருந்தது. ஆறு மாதங்களுக்கு முன்பு கொழும்பிற்கு வந்த அங்குஷன் தகப்பனுக்குச் சொன்னார்; “அப்பா, இப்பொழுது உங்களுக்கு எழுபது வயதாகிறது. இப்பவும் இளைஞன் என்று நினைக்கிறீர்கள். தொழிற்சாலைப் பொறுப்புக்கள் யாவற்றையும் தம்பியிடங் கொடுங்கோ. நீங்கள் சுகதேகியாக இருக்கும் பொழுதே பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு அவன் சரியாகச் செய்கிறானா என்று அவதானியுங்கள். அவன் செய்யும் சரி பிழைகளைத் திருத்துங்கள். இவ்வளவு வயதிற்குப் பிறகும் வேலை செய்ய வேண்டுமா? கல்வியறிவு இல்லாத கிராமத்து மக்கள் அன்போடும் மகிழ்வோடும் குடும்பத்தினருடன் குதூகலித்து வாழ்கிறார்கள். ஆனால் படித்தவர்களும் பணக்காரர்களும் தான் நிம்மதியில்லாமல் குடும்பத்தாருடன் சதா சச்சரவுகளிலீடுபட்டுக் கொண்டு மகிழ்வில்லாமல் வாழ்கிறார்கள். இதை நான் அந்தக் கிராமத்திற்குச் சென்ற பின்பு தான் அறிந்து கொண்டேன். பணம் மனச்சாந்தியையும் மகிழ்ச்சியையும் உள்ளத்திலிருந்து படிப்படியாகக் குறைந்து ஈற்றில் முற்றாக நீக்கி விடும். கணபதியை உங்களுக்குத் தெரியும் தானே. அவன் இப்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறான். அவனுக்கும் மனைவிக்கும் இடையில் இருக்கும் நெருக்கத்தையோ, அன்னியோன்யத்தையோ நான் உங்களிடம் ஒரு போதும் காணவில்லை. தணிகாசலமண்ணை, அதிபர், சுவாமியார், வேலாயுதபிள்ளை இப்படி அங்கு வாழ்வோரைச் சொல்லிக் கொண்டே போகலாம். இங்கு நீங்கள் யாரையாவது ஒருவரைச் சொல்லுங்கள் பார்ப்போம். ஆசைகள் அடங்காதவை சுவாமியார் சொல்வார் “ஆசைகள் சமுத்திர அலைகளைப் போல ஆரவாரிக்கும். காற்று பலமாக வீசினால் கொந்தளிக்கும். கோடிக்கணக்கில் பணம் இல்லையே என்று கவலைப்படாதே. அன்றைய செலவுக்குப் பணம் இருந்தால் போதும். ஆடம்பரமான வண்டிகள் இல்லையே என்று கவலைப்படாதே. இறைவன் உனக்குக் கால்களைத் தந்துள்ளான். நடந்து செல். கைகளைத் தந்துள்ளான். உழைத்து முன்னேறு”

அதனால் விநாயகரத்தினம் பொறுப்புக்களை மகனிடங் கொடுத்து விட்டு அங்குஷனிடம் வந்தார். அன்று மாலை அவர் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் பரமேஸ்வரனைக் கண்டார். இப்பொழுது பரமேஸ்வரன் முற்றாக மாறியிருந்தார். நீளக் காற்சட்டைக்குப் பதிலாக வெள்ளை வேட்டி அணிந்திருந்தார். மேற்சட்டையை அவர் அணிந்திருக்கவில்லை. மகா கணபதியைப் பற்றியும், சேவையைப் பற்றியுமே பேசினார். தான் முன்பு நடந்து கொண்ட முறைகளுக்காக வருந்தினார். தனது செயல்கள் தவறானவை என்று கண்ணீர் விட்டார்.

வீட்டுக்கு வந்த விநாயகரத்தினத்திற்குப் பரமேஸ்வரனை நினைக்கப் பாவமாக இருந்தது. முன்பு அமிர்தினியின் விஷயத்தில் இருவருக்கும் கருத்து முரண்பாடு வந்தது. மிகவும் கேவலமான முறையில் நடந்து கொண்ட பரமேஸ்வரனை அவர் வெறுத்தார். அவரைப் பார்ப்பதே பாவம் என்று எண்ணினார். அதனால் அதன் பின்பு அவர் பரமேஸ்வரனைச் சந்திக்க விரும்பவில்லை.

வீட்டுக்கு வந்த விநாயகரத்தினத்திற்குப் பரமேஸ்வரனைச் சென்று சந்திக்க வேண்டும் போலிருந்தது.

‘‘நாம் பிறரைப் பற்றிக் குறைவாக நினைப்பது பாவம். நிந்தனை செய்வது அதை விட மகா பாவம். குறைகள் இல்லாத மனிதரில்லை. அதனால் மெது மெதுவாக அவனைத் திருத்தப்பார். பெரும்பாலனவர்கள் அடுத்தவர் சொல்லித்திருத்துவதே இல்லை. காலம் அவர்களைத் திருத்தும். அதுவரை நீ பேசாமலிரு”என்று சுவாமியார் ஒரு முறை சொன்னது அவருக்கு நினைவில் வந்தது; ‘‘உறவினர்கள் ஏதோ காரணங்களுக்காகப் பிரிந்து சென்றாலும், அப்பிரிவுக்குரிய காரணம் பொருந்தாது என்பதை அறிந்த பின், மீண்டும் உறவினர்களாய் வந்து சேர்வர்’’ என்று அங்குஷன் கூறியது அவரது நினைவுக்கு வந்தது. அதனாற் புறப்பட்டு தணிகாசலத்தின் வீட்டுக்குக் கால் நடையாகச் சென்றார்.வழியில் பரமேஸ்வரன் வந்தார்.

‘‘நான் உங்களைச் சந்திப்பதற்காகத் தான் வந்தேன்’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘நானும் தான்’’ என்றார் விநாயகரத்தினம்.

இருவரும் பேசியவாறு தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தனர். இருவரும் நெடுநேரம் பேசினர். தொழிற்சாலை விஷயங்கள் எதையும் அவர்கள் கதைக்கவில்லை; ‘‘இளமை மிடுக்கால் நாம் செய்தவற்றை நினைக்க இப்பொழுது வெட்கமாக இருக்கிறது’’ என்று மட்டுஞ் சொன்னார் பரமேஸ்வரன்.

**529. தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்**
**காரணம் இன்றி வரும்.**

முன்பு சுற்றத்தவராக இருந்து ஏதோ ஒரு காரணத்தினால் பிரிந்து சென்றவரது உறவு, பிரிந்து சென்றமைக்கான காரணம் நீங்கியதும் தானே வந்து சேரும்.

### *ஆராய்ந்துசேர்*

‘‘ஒவ்வொரு மனிதனும் ஏதோ கொஞ்சம் தெரிந்ததும் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கிறான். நான் அப்படித்தான் நினைத்திருந்தேன். அது தான் என்னுடைய அழிவுக்குக் காரணமாக அமைந்தது. ஒவ்வொருவருடைய மனமும் தூய்மையானதாக இருந்தால் மட்டும் தான் வாழ்வு சிறக்கும். அதை அன்று உணரத்தவறியதால் தான் எனக்கு இவ்வளவு துன்பங்களும் நேர்ந்தன. கணநாதனும் நீங்களும் வலிய என்னைத் தேடி வந்து எனது குறைபாடுகளைப் பற்றிச் சொல்லும் வேளைகளில் நான் உங்களை அலட்சியம் செய்தேன்.

அத்துடன் உங்களது மனம் புண்படும்படியாக எவ்வளவு கொடிய வார்த்தைகளைச் சொல்லியிருப்பேன். அப்படியிருந்தும் நீங்கள் அதைப் பொறுத்துக் கொண்டீர்கள். ஒருவன் நல்லவற்றை முகத்துக்கு நேரே சொல்லுதல் வேண்டும். தீயவற்றைச் சொல்லவே கூடாது. ஆனால் நான் நல்லவற்றை ஒரு போதும் சொன்னதில்லை. தீயவற்றைத் தான் நாக்கூசாது சொன்னேன். நல்லொழுக்கமிருந்தால் எல்லாச் செல்வங்களும் ஒருவனை வந்தடையும். நல்லொழுக்கமில்லாதவனின் செல்வம் செல்லும் வழி தெரியாது சென்று விடும். ''நல்லதையே சொல்ல வேண்டும்; சொன்னதையே செய்தல் வேண்டும்; செய்யக் கூயவற்றையே சொல்ல வேண்டும்'' என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். நான் நல்லவற்றைச் சொல்லவில்லை; சொன்னவை எவற்றையும் செய்யவில்லை; செய்யக்கூடாதவற்றையே சொன்னேன். இதனால் தான் நான் அழித்தேன். அமிர்தினியும் மிகவும் கெட்டவள் என்பதைப் பின்பு தான் அறிந்து கொண்டேன். இருப்பினும் அவளிடமிருந்து என்னால் மீளமுடியவில்லை. அப்படி மயக்கி வைத்திருந்தாள் அவளில்லாத வேளைகளில் அவளது செய்கைகளை நினைத்துப் பார்த்தால் எனக்கு விசர்வரும். ஆனால் அவளைக் கண்டதும் மனம் குளிர்ந்து, அவளது அணைப்பைத் தேடும். அதனால் தான் நான் அவ்வூரை விட்டு இங்கு வந்தேன்'' என்றார் பரமேஸ்வரன்.

விநாயகரத்தினம் எதுவும் பேசவில்லை; ''காலையில் புறப்படும் போது அங்குசன் கேட்டார்; ''எங்கே அப்பா காலையில் கால் நடையாகச் செல்கிறீர்கள்''.

''பரமேஸ்வரனை இராத்திரி கோயிலில் சந்தித்தேன். பாவம் நன்றாக மெலிந்து கறுத்துப் போனார். அவரது முகம்களையிழந்துள்ளது. போய்ப் பார்த்து விட்டு வரலாமென்று புறப்படுகிறேன்'' என்றார் விநாயகரத்தினம்.

''அப்பா, உங்களை விட்டுக் காரணமின்றி விலகிப்போனவர்; திரும்பி வந்து உங்களோடு நட்புப் பூண்டால் நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே உறவாக்கிக் கொள்ளல் வேண்டும் என்பார்கள். உங்களில் பிழையில்லாத போது உங்களை அவமதித்துக் கெட்ட செயல்களில் மனிதாபிமானமில்லாமல் ஈடுபட்ட ஒருவரின் நட்பைப் பெறவா போகிறீர்கள்?. அவர் உங்களைத் தேடி வந்தாலே ஆராய்ந்து தான் நட்புக் கொள்ளல் வேண்டும்'' என்றார் அங்குசன்.

விநாயகரத்தினம் சிரித்தார்; ''இங்கு வந்த பின்பு நீ அறிவாளியாகி விட்டாய். உலகத்தையும் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டாய். அதை நினைக்க எனக்குச் சந்தோசமாக உள்ளது. பரமேஸ்வரன் எனது பாலிய நண்பன். மிகவும் நல்லவன். நடத்தை கெட்ட பெண்ணின் உறவால் நாசமாகி விட்டான். ஆண்கள் சலன புத்தியுடையவர்கள். பலவீனமான இதயமுள்ளவர்கள். பெண்கள் அதைப் பயன்படுத்தி நல்லவர்களைச் சீரழித்து விடுவதும் உண்டு. அது தான் பரமேஸ்வரனுக்கு நடந்தது. பெண் பித்துப் பிடித்தவன் நீதி நியாயங்களைப் பார்க்க மாட்டான். தர்மமான செயல்களைச் செய்ய மாட்டான் இப்பொழுது பரமேஸ்வரன் திருந்தி விட்டார். இனி அவர் எந்த வேளையிலும் தப்புச் செய்ய மாட்டார். அந்தளவில் அவர் துன்பப்பட்டு விட்டார். நான் எல்லாவற்றையும் ஆராய்ந்து தான் முடிவெடுத்தேன்'' என்றார் விநாயகரத்தினம்.

காலையில் நடந்த சம்பவம் விநாயகரத்தினத்தின் மனதில் வலம் வந்தது; ''என்ன பேசாமல் இருக்கிறியள். உங்களைக் கோயிலில் கண்டபின் எனது மனச்

சாட்சி விழித்துக் கொண்டது. அதனால் இரவு முழுவதும் தூங்கவில்லை; காரணமின்றி விலகிப் போன நான் பின் திருந்தி வந்து சேர்ந்தாலும் பழைய நட்பு இராது என்று சொல்வார்கள். அப்படி என்னை நினைக்காதை'' பரமேஸ்வரன் கண் கலங்கினார்.

''நீ ஏன் வீணாகக் கவலைப்படுகிறாய். அப்படி நினைத்திருந்தால் நான் உன்னைத் தேடி வருவேனா? கவலைப்படாதே. நாமிருவரும் சிறுவயதிலிருந்தே நண்பர்கள். இடையில் புகுந்த அந்தப் பெண் எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டாள். தீயவற்றை நாம் ஒரு போதும் நினைக்கக் கூடாது. மீறி நினைத்தால் பெருந்துன்பங்கள் தான் உண்டாகும். நடந்தவற்றைக் கனவாக எண்ணி மறந்து நல்லவற்றைச் சிந்திப்போம்'' என்றார் விநாயகரத்தினம்.

பரமேஸ்வரன் மனமகிழ்வுடன் சிரித்தார். அவர் அப்படிச் சிரித்துப் பலவருடங்களாகி விட்டன.

**530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்து இருந்து எண்ணிக் கொளல்.**

தம்மை விட்டு காரணமின்றிப் பிரிந்து சென்றவன் தனது தவறை உணர்ந்து திரும்பி வந்தால், அரசன் ஆராய்ந்து அறிந்த பின்பே அவனுக்கு உதவியைச் செய்து உறவு கொள்ளல் வேண்டும்.

### *தீமையானது*

பொன்னுத்துரையையும் குடும்பத்தையும் பார்ப்பதற்காக இனத்தவர்கள், அயலவர்கள், நண்பர்கள் பலர் முகுந்தன் தங்கியிருந்த வீட்டுக்கு வந்தனர். கஜேந்திரன் தகப்பனுக்கும் தாய்க்கும் பொன்னுத்துரை வந்த விசயத்தைக் கூறித் தான் அவர்களுடன் கதைக்காமல் வந்ததாகக் கூறினான்; ''அதுதான் சரி'' என்றார் கஜேந்திரனது தந்தை விசுவலிங்கம்.

''இப்படியா பிள்ளைகளுக்குப் பழக்கம் பழக்குவது. நாற்பது வருடங்களுக்கு முன்னஞ் சென்ற ஒருவரோடு கதைக்காமல் வாற தென்பது கூடாத செயல். ஒப்புகாவது ''எப்படி இருக்கிறியள்'' என்றாவது கேட்டிருக்கலாம் என்றாள் இலட்சுமி.

''அவன் மனிதனே இல்லை. அவன் எதை வேண்டுமானாலும் செய்திருக்கலாம். ஆனால் ஒரு முறை வந்து பெற்றோரைப் பார்த்திருக்கலாம்தானே. மாமி எவ்வளவு கவலைப்பட்டவா. கடைசி நேரத்திலை விசர் மாதிரி அலட்டினவா. அந்த நிகழ்வுகளைப் பார்த்த என்னாலை அவனது முகத்தைப் பார்க்க முடியாது. அப்படி யென்ன பெரியதொரு பெம்பிளையைக் கண்டவர். எட ஒரு நாயையொதுக்கிப் பெற்றாரை வந்து பார்த்திருக்கலாம் தானே'' விஸ்வலிங்கத்திற்குக் கோபம் வந்தது.

''நீங்கள் வரவேண்டாம். நான் அவரைப் போய்ப் பார்த்திட்டு வரட்டே. எனக்கு ஆசையாக இருக்கு. கலங்கினாள் இலட்சுமி.

விஸ்வலிங்கம் கெஞ்சும் மனைவியைக் கோபத்துடன் பார்த்தார். அவருக்குக் கவலையாக இருந்தது. அவர் ஒரு போதும் மனைவியின் விருப்பத்திற்கு மாறாக நடந்ததில்லை.

‘‘போகக் கூடாது அம்மா. நான் தணிகாசலமண்ணையைத் தேடித் தான் அங்கை போனனான். அப்ப அவை அங்கை இருக்கினை. எனக்கெண்டால் அவரைப் பார்க்கவே பிடிக்கவில்லை. நீங்கள் போயிட்டு வாங்கோ.’’ என்றான் கஜேந்திரன்.

‘‘அம்மா நடக்கமாட்டா. கூட்டிக் கொண்டு போ. உள்ளுக்குப் போக விருப்பமில்லாவிட்டால் வாசலிலை விட்டுட்டுவா. இரண்டு மணித்தியாலங் கழியப் போய்க் கூட்டி வரலாம்’’ என்றார் விஸ்வலிங்கம்.

இலட்சுமிக்கு அது சரியாகப்படவில்லை; ‘‘அப்படி நடப்பது சரியில்லை...’’ என்று கூறிக் கொண்டிருக்கும் போது விஸ்வலிங்கம் சொன்னார்; ‘‘இலட்சுமி, இந்தவிஷயத்திலை யாரையும் தெண்டிக்காதை. நீ அவனை விட மூத்தனீ. அதனால் அவனும் அவனது குடும்பத்தினரும் தான் உன்னை வந்து பார்க்க வேண்டும். அதை விடக் கஜன் படித்தவன். பண்பானவன். அவன் தவறாக நடக்க மாட்டான். நீ ஆசைப்பட்டதற்காகப் போட்டு வா. கஜன் உனக்கு விருப்பமில்லா விட்டால் கண்ணனின் மோட்டார் வாகனத்தில் அம்மாவைச் செல்லச் சொல்லு’’ என்று கூறி விட்டுச் சென்று விட்டார்.

‘‘தம்பீ’’ மேலே பேச முடியாது அழுதாள் இலட்சுமி. தாயின் மீது அளவுக்கதிகமான பாசம் வைத்திருந்த கஜேந்திரன்; ‘‘சரி வாருங்கோ’’ என்றான்.

இருவரும் முகுந்தனின் வீட்டுக்குச் சென்றனர். உள்ளே ஏராளமானவர்கள் இருந்தனர். இலட்சுமியையும் கஜேந்திரனையும் கண்ட பொன்னுச்சாமி; ‘‘இலட்சுமி இவ்வளவு நேரமும் என்னடி செய்தனீ. தம்பீ நாப்பது வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கிறான். உடனை வந்து பார்க்க முடியாதே. விசுவு எங்கை...?’’

‘‘வருவர் அப்பு’’ என்றாள் இலட்சுமி.

‘‘பொன்னு.... எடதுரை .... தங்கச்சி வந்திருக்கிறாள்’’ என்றார் பொன்னுச்சாமி.

பொன்னுத்துரையும் விதுஷனும் கதைத்துக் கொண்டிருந்தவர்களிடஞ் சொல்லி விட்டு வந்தனர். இலட்சுமி ‘‘தம்பீ’’ என்று பலமாகக் கத்தினாள். அவளுக்கு மூச்சடைத்தது. திக்கு முக்காடினாள்.

‘‘அம்மா உணர்ச்சி வசப்படாதைங்கோ....’’ அககறையுடன் கூறினான் கஜேந்திரன்.

விதுஷனுக்கு மிகப் பெரியமகிழ்ச்சியாக இருந்தது. கொழும்பில் உறவினர்கள் எவரும் இல்லாது தனிமையில்வாடிய அவருக்கு நூற்றுக்கணக்கான உறவினர்கள் வந்து குசலம் விசாரித்துச் செல்வதை நினைக்க நினைக்க மகிழ்ச்சி பொங்கியது. கஜேந்திரனைப் பார்த்தான். உருவத்தில் இருவருக்கும் பெரும் வேறுபாடு இருக்கவில்லை.

“இவன் என்ரை பேரன். என்னுடைய எல்லா வேலைகளையும் கவனிப்பவன். என்னுடன் கதைக்கப் பலருக்கு விருப்பமில்லை. ஆனால் இவன் மணிக்கணக்காகக் கதைப்பன். அருமையான பிள்ளை” என்றார் பொன்னுச்சாமி.

அப்பொழுது கைத்தொலைபேசி அழைத்தது. கணநாதன் பேசினார்; “ விதுஷா இன்று பதினொரு மணிக்கு வெளிநாட்டிலிருந்து வரும் பிரமுகர்களுடனான கலந்துரையாடலுக்கு நீ தானே ஒழுங்கு செய்தாய், மறந்து விட்டாயா...? அவர்கள் வந்து உன்னைக் காணாமையால் சென்று விட்டனர். இதனால் எவ்வளவு நட்டம் தெரியுமா? மிகப் பெரிய மகிழ்ச்சியால் மறதி கொண்டு தன் கடமையை மறப்பது, ஒருவனுக்கு அளவு கடந்த கோபம் வருவதை விடத் தீமையானது; விரைவாக வா” என்றார்.

அவர் அப்படிச் சொன்ன போதும் விதுஷனுக்கு அப்படியொரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்தது நினைவுக்கு வரவில்லை.

**531. இறந்த வெகுளியின் தீதே சிறந்த**
**உவகை மகிழ்ச்சியின் சோர்வு.**

அளவு கடந்த மகிழ்ச்சியால் மறதி கொண்டு தனது கடமையை மறப்பது, ஒருவனுக்கு அளவு கடந்த கோபம் வருவதை விடத் தீமையான தாகும்.

## புகழைக் கொல்லும்

யோசித்துப் பார்த்தான். முதல் நாள் சிவகுருவைச் சந்திக்கு முன் கணநாதன் சொன்னார்; “ விதுஷா யப்பான் நாட்டிலிருந்து பொறியியலாளர் குழு ஒன்று எமது தொழிற்சாலையைப் பார்க்க நாளைக் காலை பத்து மணிக்கு வருகிறது. திடீரென்று அவர்கள் வருவதால் என்னால் நிற்க முடியவில்லை. கொள்வனவாளர் ஒருவரின் வங்கிக் கணக்கை ஆராய்வதற்காக நான் வங்கிக்குச் செல்ல வேண்டும். பல இலட்சரூபாவுக்கான பிரச்சினை. நான் பத்து மணிக்கு முன்பு வரத் தெண்டிக்கிறேன். நீ அவர்களுக்குத் தொழிற்சாலையைச் சுற்றிக்காட்டு” என்று சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

“இவர் தான் என்னுடைய மூத்தமகன் விதுஷன். பொறியியலாளராக இருக்கிறான். இவன் இளையவன், மருத்துவக் கல்லூரியில் முதலாம் வருடத்தில் கற்கிறான். இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். இவா தான் என்னுடைய மனைவி சுமித்திரா. இவா வேறு யாரும் இல்லை. அம்மாவின் தம்பியாரின் மகள். இவர்களாற் தான் நான் எல்லாரையும் மறந்தது” விம்மினார் பொன்னுத்துரை.

சுமித்திரா பாசம் பொங்க இலட்சுமியைப் பார்த்தாள். அவளது கண்கள் கலங்கின. அவளால் பேச முடியவில்லை அழுதாள்.

“அழாதைங்கோ எல்லாம் முடிந்து விட்டது. இனி அழக்கூடாது. நாமெல்லாம் சேர்ந்ததை எண்ணி மகிழ வேண்டும்” என்றாள் இலட்சுமி.

“என்ன தம்பி யோசிக்கிறாய். உனது முகம் திடீரென மாறிவிட்டது. என்ன நடந்தது” என்று கேட்டார் பொன்னுத்துரை. அப்பொழுது அங்கே சிவகுரு வந்தார்; “உங்களை உடனை கணநாதன் ஐயா வரச் சொன்னார்” என்றார்.

“கஜேந்திரன், நான் தொழிற்சாலைக்கு அவசரமாகச் செல்ல வேண்டியிருக்கிறது. பின்பு வந்து சந்திக்கிறேன்” என்றான் விதுஷன்.

“சரி” என்று தலையாட்டினான் கஜேந்திரன். எனினும் அவனுக்கு அவர்களை ஏற்றுக் கொள்ளும் தன்மை மனதில் உருவாகவில்லை.

கணநாதன் தனது அறையில் இருந்தார். உள்ளே சென்று சந்திக்க விதுஷனுக்குத் தயக்கமாக இருந்தது. அதனால் வாசலில் தாங்கியவாறு நின்றார். அவரைக் கண்ட கணநாதன் உள்ளே வரும்படி அழைத்தார்.

“ஐயா, மிகப் பெரிய தவறொன்றை நான் மறதி காரணமாகச் செய்து விட்டேன். நீங்கள் கூறியது உண்மை. அளவுக்கதிகமான மகிழ்ச்சியால் மறதி கொண்டு தனது கடமையை மறப்பது மிகப் பெரிய விபரீதங்களை ஏற்படுத்தும் என்பதை நான் அறியவில்லை. உறவினர்கள் பலர் என்னைச் சூழ்ந்து நின்று பலவற்றையும் விசாரித்ததனால் நான் எல்லாவற்றையும் மறந்து விட்டேன்” கவலைப்பட்டார் விதுஷன்.

“விதுஷா, நடந்ததை நினைத்துக் கவலைப்படாதே. அளவுக்கதிகமான மகிழ்வோ, துக்கமோ ஒருவனைச் சிந்திக்க விடாது. அதனால் தான் சிலர் இறக்க நேர்கிறது. உனது நிலையில் நானிருந்தாலும் மறந்து தான் இருப்பேன். மறதி தான் மனிதனின் எதிரி. அது கூட இருந்தே கழுத்தை அறுக்கும். தொடர்ந்து ஒரு குடும்பத்திற்கு வறுமை வந்தால் அக்குடும்பத்தின் அறிவை வறுமை கொன்று விடும். அதே போல மறதி அவனது புகழைக் கொன்று விடும். இன்று நீ யப்பான் நாட்டிலிருந்து வந்த பொறியியலாளர் குழுவைச் சந்தித்திருந்தால் உனது திறமைகளை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். அத்துடன் நீ குறித்த நேரத்திற்குப் பின்பும் வராமையால் அவர்கள் உன்னைப் பற்றித் தவறாக நினைத்து விட்டார்கள். அவர்கள் வந்த போது முகுந்தன் தான் தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டினார். நீ ஏன் வரவில்லை என்று கேட்டார்களாம். அதற்கு முகுந்தன் உனக்குச் சுகமில்லை என்று சொல்லியிருக்கிறார். சுகமில்லா விட்டால் தொலைபேசியில் சொல்லலாம் தானே. தொழிற்சாலையில் அக்கறையில்லாத ஒரு தொழிலாளி இருந்தாலே தொழிற்சாலைக்குப் பெரும் நஷ்டமேற்படும். ஆனால் இங்கு பிரதம பொறியியலாளரே அக்கறை இல்லாமல் இருந்தால் தொழிற்சாலையை இழுத்து மூட வேண்டியது தான். முதலாளிக்குச் சொல்லுங்கள் அக்கறையுள்ள ஒரு பொறியியலாளரை நியமிக்கும் படி. ‘எமது நாடானால் உடனேயே அவரை நீக்கி விடுவோம்’ என்றார்களாம். அவர்களுக்கு உங்கள் நிலை புரியவில்லை” என்றார் கணநாதன்.

இரவு பத்து மணியாகியும் அதை நினைத்து விதுஷன் தூங்கவில்லை; “தொடர்ந்து வரும் வறுமை அறிவைக் கொல்வது போல, மறதி புகழைக் கொல்லும்” என்று கணநாதன் கூறியவார்த்தைகள் அவரது காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. தனது மறதியால் தனது திறமையும் புகழும் கொல்லப்பட்டதை

நினைக்க அவருக்குக் கவலையாக இருந்தது. நித்திரை வராமல் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தார் விதுஷன்.

**532. பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.**

தொடர்ந்து வரும் வறுமை அறிவைக் கொல்லும்; அதே போல் மறதி அவனது புகழைக் கொல்லும்.

### ஒப்புக் கொண்ட உண்மை

அன்று சுனாமி அனர்த்தத்தினாற் பாதிக்கப்பட்டவர்களுக்கெனச் சேர்ந்த நிதியைப் பங்கீடு செய்வதற்கான கூட்டம் நடைபெறவிருந்தது. அதற்காக ஒரு வாரத்திற்கு முன்பு நிர்வாக சபை கூடி ஊரில் உள்ள பிரமுகர்கள் பலருக்கு அறிவித்து அவர்களின் ஆலோனைகளையும் கேட்டல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நிர்வாக சபைக் கூட்டத்திற்கு வருகை தந்தோரைத் தவிர்ந்த ஏனைய பிரமுகர்களுக்குச் செயலாளரான நகுலனை அறிவிக்கும் படி நிர்வாக சபை நகுலனுக்கு அறிவித்தது.

அன்று மாலை ஐந்து மணிக்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய மண்டபத்தில் நிர்வாகசபைக் கூட்டத்திற்குச் சமூகமளித்தோரில் நகுலனைத் தவிர மற்றய எல்லோரும் வந்திருந்தனர். சுவாமியார் சரியாக ஐந்து மணிக்குக் கோயில் மண்டபத்துள் நுழைந்தார். சுவாமியார் மணிக்கூடு கட்டியதை இது வரை யாரும் கண்டதில்லை. ஆனால் அவர் எந்த ஒரு நிகழ்விற்கும் குறித்த நேரத்திற்கு வந்துவிடுவார். அவர் எப்படி நேரத்தைக் கணக்கிடுகிறார் என்று ஒருவருக்கும் புரிவதில்லை.

நகுலன் பொதுவாக எந்தக் கூட்டத்திற்கும் வருவதில்லை. அவன் மறதிக்காரன். அதனால் கஜேந்திரன் நிர்வாக சபையில் அழைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று அன்று கூட்டம் நடைபெறவிருப்பதைக் கூறியிருந்தான். அதனால் ஐந்து மணிக்கு முன் பிரமுகர்கள் வரத் தொடங்கினர்.

சரியாக ஐந்து மணிக்கு சுவாமியார் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். தணிகாசலம் தேவாரத்தையும் புராணத்தையும் ஓதினார். அது முடிவடைந்ததும் சுவாமியார் பேசினார்; ‘‘நமது மூதாதையர் சமூகத்திற்குச் செய்த சேவைகளின் காரணமாகவே நாம் பல நன்மைகளை இன்று அனுபவிக்கக் கூடியதாக இருக்கிறது. இன்று நாம் செய்யும் வேலைகளால் தான் நாளைய சமூகம் நன்மை பெறும். நல்லவர்கள் துன்பப்படுவோரின் துயரத்தைத் தீர்ப்பதற்காகத் தான் வாழ்வார்கள். மற்றவர்களின் நன்மைக்காகத் தனது சுகங்களைத் தியாகஞ் செய்வது பெரியவர்களின் குணம். கிராமங் கிராமமாக எமது தொண்டர்கள் சென்று சேகரித்த பொருட்களையும் நிதியையும் நாம் மிகவும் அவதானத்துடன் உரியவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் நரகத்திற்குக் கூடச் சென்று வந்தீர்கள். ஒவ்வொருவரும் பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் தமக்கே நன்மை செய்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். சேவையில் தான் மகிழ்ச்சி இருக்கிறது. அதைச் சேவை செய்பவர்களால் தான் அனுபவிக்க முடியும். புனிதமான காரியங்களைச் செய்வதன் மூலம் நாம் தூய்மையடைய முடியும்.

கழிந்து போனவை எவையும் திரும்ப வருவதில்லை. காலத்தை ஒவ்வொருவரும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். காலம் தான் கடவுள்'' என்றார்.

அடுத்துச் சேர்ந்த பொருட்களை எப்படிக் கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் முடிய இரவு ஏழுமணியாகிவிட்டது. அப்பொழுதும் நகுலன் வரவில்லை. ஏழுமணிக்குப் பூசையான படியால் காண்டாமணி ஒலித்தது. அன்று வெள்ளிக்கிழமை அதனாற் பக்தர்கள் அதிகமாக வந்திருந்தனர். வெள்ளிக்கிழமைகளில் நகுலன் கோயிலுக்கு வருவான். அதுவும் பூசை முடிந்த பின்பு. பொதுவாக எல்லாக் கூட்டங்களும் வெள்ளிக்கிழமைகளிலேயே நடைபெறும். கூட்டம் முடிந்ததும் மகா கணபதியையும் கூட்டத்திற்கு வருவோர் கும்பிட வசதியாக இருக்குமெனக் கருதி அப்படியொரு ஏற்பாட்டைச் செய்திருந்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

பூசை முடிந்து திருநீற்றைக் குருக்கள் கொடுத்துக் கொண்டிருக்கும் போது நகுலன் வந்தான். கஜேந்திரன் அவனைக் கண்ட போதும் எதுவும் கதைக்கவில்லை. கஜேந்திரன் அமைதியானவன். யாருடனும் கலகலப்பாகப் பேசமாட்டான். கண்டால் தலையாட்டுவான். அல்லது சிரிப்பான் என்பது நகுலனுக்குத் தெரியும். அதனால் அவன் அதைப் பெரிதாக நினைக்கவில்லை.

வெளியே வந்த நகுலனின் அருகே வந்த தணிகாசலம் சொன்னார்; ''நகுலா, நீ ஏன் இன்று கூட்டத்திற்கு வரவில்லை''.

நகுலன் தடுமாறினான்; ''இன்று கூட்டம் என்பதை மறந்து விட்டேன்''.

''அது தெரிந்து தான் கஜேந்திரன் எல்லோரினதும் வீட்டிற்குச் சென்று கூட்டத்தைப்பற்றிச் சொன்னவன். தம்பீ நீ படித்தனீ... ஊரிலை உள்ள பலரை விடப் படிச்சனி... மறதியைப் பற்றி உனக்குத் தெரியாத எதுவும் இராது. மறதியால் சோர்ந்து வாழ்பவர்களுக்குப் புகழ் ஒரு போதும் கிடையாது. அவர்கள் உலகத்தவரால் இகழப்படுவார்கள். உலகில் உள்ள எல்லா நூல்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை அது என்பதை நீ அறியவில்லையா...?''

நகுலனுக்கு வெட்கமாக இருந்தது. அவமானத்தால் உடல் கூசியது.

**533. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை; அது உலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு.**

மறதியால் சோர்ந்து வாழ்பவருக்குப் புகழுடன் வாழும் வாழ்க்கை இல்லை என்பது உலகில் உள்ள எல்லா நூல்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

## *பயனில்லை*

''இளைஞனொருவன் மறப்பதென்பது அவனது பலவீனத்தை வெளியாருக்குக் காட்டுவதாகவே அமையும். துன்பங்களும் வறுமையுந்தான் ஒருவனுக்கு கேடுகளை விளைவித்து அவனது சுய புத்தியை இழக்கச் செய்து மறத்தலை உண்டாக்கும். குடிகாரனுக்குக் கூட மறதியேற்படாது. பல குடிகாரர்களை நான் பார்த்திருக்கிறேன், அவர்கள் குடித்த பின்பு இருபது முப்பது வருடங்களுக்கு

முன்பு நடந்த சம்பவங்களைக் கூட அச்சரம் பிழையாமல் சொல்கிறார்கள். குடியால் மதிமயங்கி விட்டவனை விட மறதியுடையவன் கீழானவன். நீ பல்கலைக்கழகத்திற் படிக்கிறாய். அரிய பல நூல்களைக் கற்றிருப்பாய். உனக்கு நான் சொல்ல வேண்டிய தேவையில்லை. இருப்பினும் இளைஞன் என்பதாலும் எனது அன்புக்குரியவன் என்பதாலும் சொல்கிறேன். உனக்கு என்ன கஷ்டம்? கஜேந்திரனுக்கு எவ்வளவு கஷ்டம் தெரியுமா? பொருளாதாரக் கஷ்டம். தாய் நோயாளி அவளை வைத்தியசாலையில் வைத்து நல்ல முறையில் பராமரிக்கிறான். அதனால் கஷ்டம். வீட்டு வேலைகள்... சமையலைக் கூட அவன் தான் செய்கிறான். அதைவிடப் பல்கலைக் கழகத்தில் படிக்கிறான். சமூகசேவைகள் பலவும் செய்கிறான். அப்படியிருந்தும் அவன் குறித்த நேரத்தில் திட்டமிட்டபடி யாவற்றையுஞ் செய்து முடித்து விடுகிறான். அத்துடன் ஒவ்வொருவரைப் பற்றியும் அறிந்துவைத்துள்ளான். எதிர் காலத்தில் என்னென்ன நடக்குமென்று ஓரளவு அறிந்து வைத்திருக்கிறான். அதனால் தான் நீ மறந்து விடுவாய் என்று அழைக்க வேண்டிய பிரமுகர்களின் வீடுகளுக்குச் சென்று கூட்டத்தைப் பற்றி அறிவித்திருக்கிறான். அதனால் தான் இன்று கூட்டம் கூடி முடிவெடுக்கப்பட்டது. அதற்காகப் பிரமுகர்கள் அவனைப் பாராட்டினார்கள். உனது குணத்தை அறிந்து உன்னைப் பற்றிக் குறையாகச் சொன்னார்கள்'' என்றார் தணிகாசலம்.

''பிழைதான் அண்ணை. இனிமேல் நான் அப்படி நடக்க மாட்டன்'' தழுதழுத்தான் நகுலன்.

''தவறு செய்பவர்கள் பலர் இப்படித்தான் சொல்கிறார்கள். நீ இந்த வார்த்தைகளை என்னிடம் எத்தனை தடவை சொல்லியிருப்பாய்... யோசித்துப்பார். அதனால் எத்தனை பிரச்சினைகள் உருவாகின. நீ பல்கலைக்கழகத்தில் படித்து சித்தியடைந்து விட்ட பின் உனக்கு ஆசிரிய நியமனம் கிடைக்குமென்று வைத்துக் கொள். ஒரு போதும் உன்னைக் கணபதி மத்திய மகா வித்தியாலயத்திற்கு எடுக்க விக்னேஸ்வரமூர்த்தி விரும்ப மாட்டார். தப்பித் தவறிக் கிடைத்தாலும் கல்விப்பணிப்பாளருக்குச் சொல்லி உன்னை வேறு பாடசாலைக்கு மாற்றும் படி கூறிவிடுவார்''.

அதைக் கேட்டதும் நகுலனுக்கு கோபம் வந்தது. அப்படிக் கோபம் வரவேண்டும் என்பதற்காகத் தான் அவர் அபப்டிச் சொன்னார்; ''அது அவருக்குச் சொந்தமான பாடசாலை அல்ல. அரசாங்கப் பாடசாலை. நான் பழைய மாணவன் என்னைத் தடுக்க இவர் யார்?'' என்று மனதில் எண்ணினான் நகுலன்.

ஒருவனின் செயல்களை வைத்துத்தான் அவனது நடத்தை தீர்மானிக்கப்படுகிறது. நீ பழையமாணவனென்றாலும் உனது இனத்தவர்கள் கூட உனக்கு ஆதரவாகக் கதைக்க மாட்டார்கள். எல்லோரும் அதிபர் சொல்வதைத் தான் கேட்பார்கள். அதிபரை எதிர்கிற துணிவு இங்கு யாருக்கும் இல்லை''.

''ஏணண்ணை பெரிய பெரிய வார்த்தைகளையெல்லாம் சொல்கிறீர்கள்'' அவனைப் பேசவிடாது சொன்னார் தணிகாசலம்; ''உள்ளதைச் சொல்ல வேண்டும். உண்மையான நிலையை நீ உணர வேண்டும். உள்ளத்தில் பயம் உள்ளவன் மிகவும் பாதுகாப்பான கோட்டைக்குள்ளிருந்தாலும் பயப்படுவான். அந்தக் கோட்டையால் அவனுக்குப் பாதுகாப்புக் கிடையாது. அது போல மறதியை உடையவனுக்கு எல்லாச் செல்வங்களும் இருந்தாலும் பயனில்லை. உனது குடும்பத்திடம் எல்லாச் செல்வமும் இருக்கிறது. ஆனால் அவற்றால்

பயன் ஏற்படாது.'' தணிகாசலத்திற்கு அன்று அவனது செயலால் அளவுக்கதிகமான கோபம் வந்தது. அவனைப் பேசப்பேச சினம் கூடியது; ''இப்படியே நீ வாழ்ந்தாயானால் உனது எதிர்காலம் கெட்டழிந்து விடும். உன்னுடைய போக்குச் சரியில்லையென்று உனது தந்தையாரே சொன்னார். உனது பெற்றோர் ஆசிரியர்களாகக் கடமை புரிகின்றனர். சமூகத்தினால் கௌரவிக்கப்படுபவர்கள். அப்படியிருக்க நீ இப்படிப் பொறுப்பில்லாமல் நடக்கலாமா...? அவதானமும் பொறுப்புணர்ச்சியும் கடமையுணர்வும் உள்ள ஒருவன் எதையும் மறக்க மாட்டான். அவையொன்றும் உன்னிடம் இல்லையே.... அப்படியானால் உனக்கு மறதி என்பது நோயாக இருத்தல் வேண்டும். உடனே சென்று நல்லதொரு வைத்தியரைப் பார''. என்று சொல்லிவிட்டுச் சென்றார் தணிகாசலம்.

நகுலனுக்கு வேதனையாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. ஆனால் தணிகாசலத்துடன் ஏறுமாறாகக் கதைத்தால் ஊரே காறி உமிழும் என்பதால் பொறுமையாக இருந்தான் நகுலன்.

**534. அச்ச முடையார்க்கு அரண்இல்லை ஆங்குல்லை**
**பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.**

மனதிலே அச்சமுள்ளவர்களுக்குப் பாதுகாப்பான அரண் இருந்தாலும் பயன் இல்லை; அது போல மறதியுடையவர்களுக்கு எல்லாச் செல்வமும் இருந்தாலும் பயனில்லை.

### காத்துக் கொள்ளாதவன்

சுவாமியார் அருளுரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்; ''எம்மை நாம் தான் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். கிராமத்தவர்கள் சொல்வார்கள் ''குதிரைக்குத் தண்ணியைக் காட்ட முடியுமே தவிரக் குடிக்கவைக்க முடியாதென்று'' இது அர்த்தம் பொதிந்த வார்த்தை. பெற்றோர் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புவார்கள் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பார்கள்; பணம் கொடுப்பார்கள்; ஆசிரியர்கள் கற்பிப்பார்கள். கற்க வேண்டியவர்கள் யார்? மாணவர்கள் தான் கற்க வேண்டும். பிள்ளை கைக் குழந்தையாக இருக்கும் போது குழந்தைக்காகத் தாயே மருந்துண்பாள். ஏனெனில் தாய்ப்பால் தான் குழந்தையின் உணவு. வளர்ந்த பின்பு வரும் நோய்களுக்கு நோயாளிகள் தான் மருந்துண்ணல் வேண்டும்''. சுவாமியார் அருளுரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். கஜேந்திரன் எழுந்து சென்றான். அதைக் கண்ட நகுலன் அவனின் பின்னாற் சென்றான்.

''கஜன், நில்லடா. ஏன் என்னுடன் கோபித்துக் கொண்டா ஓடுகிறாய்?''

கஜேந்திரன், நகுலனைப் பார்த்தான். அவனது முகம் வாடி இருந்தது; '' நான் ஏன் உன்னோடு கோபங் கொள்ளப் போகிறேன். உனது இயல்பு அது. அதை மாற்று என்று நான் பல முறை உனக்கு எடுத்துச் சொல்லியும் நீ உணரவில்லை. ஒரு முறை சொன்னாற் கேட்பவனுக்குத்தான் புத்திமதிகள் கூற வேண்டு மென்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். உனக்கு ஓராயிரம் முறை சொல்லியும் பயனில்லை. அப்படியிருக்க உன்னுடன் கோபித்தால் என்ன

பயன்? நான் இன்று நான்கு மணிக்கு முன் வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டேன். அம்மா நோயாளி, எந்த நேரமும் வீட்டில் யாராவது ஒருத்தர் இருத்தல் வேண்டும். அப்பா வயலுக்கு இரவு காவலுக்குப் போக வேண்டும் மென்றவர். அத்துடன் அடுத்தவாரம் பரீட்சை வருகிறது படிக்க வேண்டும் அதை விட ஒரு பெரிய பிரச்சினை'' பெருமூச்சு விட்டான் கஜேந்திரன்.

''உனக்கு எந்த நேரமும் பிரச்சினை தானே'' என்றான் நகுலன்.

''வேலை உள்ளவர்களைத் தேடித்தான் வேலைகள் வரும். நான் பிரச்சினை என்று சொன்னது வித்தியாவை. அவளது மாமனார் கொழும்பிலிருந்து வந்து நிற்கிறாராம். அது பற்றி கதைப்பதற்காக என்னை வரச் சொன்னவள். நான் நேரமின்மையால் போகவில்லை. உன்னைப் போல எந்நேரமும் ஆர்ச்சகாவை நினைத்துக் கொண்டிருக்க முடியுமே...? நீ இன்று கடற்கரைக்கு அர்ச்சகாவைச் சந்திக்கச் சென்றதால் தான் கூட்டத்திற்கு வரவில்லை..'' என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது நகுலன் அவசரமாகக் குறுக்கிட்டான்; ''உண்மை தானடா. அவளைச் சந்திக்காவிட்டால் இருண்டு விட்டதைப் போல உள்ளது. உன்னால் எப்படி வித்தியாவைச் சந்திக்காது இருக்க முடிகிறது''.

''வரப்போகும் துன்பங்களை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளாதவன், பின் அவை வந்து விட்ட போது தனது பிழையை அறிந்து வருந்துவான்'' என்று பெரியவர்கள் கூறுவார்கள். வித்தியாவைச் சந்திக்க எனக்கு விருப்பமில்லை என்று நீ நினைக்கிறாய். அப்படியல்ல, எனக்குக் காதலை விடக் கடமை தான் முக்கியம். ஒரு செயலைப் பொறுப்பேற்கக் கூடாது. பொறுப்பேற்றால் அதைச் சரியான முறையில் செய்து முடிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவமானந்தான் ஏற்படும். இன்று நடைபெறவிருந்த கூட்டத்திற்கான அழைப்பிதழ்களை அனுப்புவதற்கு உனக்கு என்ன கஷ்டம் இருந்தது. அர்ச்சகா அனுப்ப வேண்டாம் என்று சொன்னவளா?'' சிரித்தான் கஜேந்திரன். பின் சொன்னான்; ''இங்கு வாழும் நல்லவர்கள் எவருக்கும் உனது நடத்தை பிடிக்கவில்லை. அது ஆரோக்கிமானதில்லை. இப்பொழுதும் காலங்கடந்து விடவில்லை. இனியும் நீ திருந்தலாம்'' என்றான் கஜேந்திரன்.

நகுலன் யோசித்துப் பார்த்தான். தான் செய்தது பெரும் பிழை என்பதை அவன் உணர்ந்து கொண்டான். இருப்பினும் அவனுக்கு அதனால் கவலை ஏற்படவில்லை.

நகுலனுக்கு எதைச் சொன்னாலும் ஏறாது என்பது கஜேந்திரனுக்குத் தெரியும். அதனால் தான் அவன் பிரமுகர்களின் வீடுகளுக்குச் சென்று கூறினான். அத்துடன் விக்னேஸ்வரமூர்த்திக்கும் சுவாமியாருக்கும் தணிகாசலத்திற்கும் நகுலனை நிர்வாக சபையில் இருந்து நீக்கும் படியும் கூறினான்.

''படிக்கிற வயதில் பொதுத் தொண்டு செய்வது கஷ்டம். அதனால் நான் பதவியில் இருந்து விலக நினைக்கிறேன்'' என்றான் நகுலன்.

அதைக் கேளாதவன் போல நடந்தான் கஜேந்திரன். அதற்கும் பதில் கூறுவது வீண் என்பது அவனுக்குத் தெரியும். பின்னால் நகுலன் கதைத்துக் கொண்டு வந்தான். அவை எவையும் கஜேந்திரனுக்குக் கேட்கவில்லை. அவனது நினைவு வீட்டைச் சுற்றியே நின்றது.

**535. முன்னுறக் காவது இழுக்கியான் தன்பிழை**
**பின்ஊறு இரங்கி விடும்.**

வரும் துன்பங்களை முன்பே அறிந்து காக்க மறந்தவர்கள், பின்பு அவை வந்த போது தமது தவறை உணர்ந்து வருந்துவர்.

**ஒப்பானநன்மை**

அரிமாக்கழகத்தினர், அன்று வெளிநாட்டிலிருக்கும் வைத்திய நிபுணர்களை அங்குஷன் வேலை செய்யும் வைத்தியசாலைக்கு அழைத்து வந்தனர். சிவானந்தனும் சில்வெஸ்ரரும் தியாகராஜாவும் அவர்களுடன் கூட வந்திருந்தனர்.

அங்குசன் இரண்டு தினங்களுக்கு முன்பே வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் வருவதைக் கஜேந்திரனுக்குச் சொல்லி அவனது தாயாரை அன்று காலை அழைத்து வருமாறு கூறியிருந்தார். நூற்றுக்கும் மேற்பட்ட கடும் நோயாளிகள் அன்று அங்கு வந்திருந்தனர். அங்குஷன் முதலாவதாக கஜேந்திரனது தாயாரைப் பரிசோதனை செய்ய வரும்படி அழைத்தார்.

கஜேந்திரன் தாயாரை உள்ளே அழைத்துச் சென்றான். உள்ளே சென்ற கஜேந்திரனுக்கு அங்குஷன் அங்கு இருந்த தனது வைத்தியரை அறிமுகஞ் செய்தார்; ‘‘கஜன், இவர் வைத்தியக் கலாநிதி மங்களேஸ்வரன். இவரிடந்தான் நான் மருத்துவக் கல்லூரியில் படித்தேன். இவர் தற்பொழுது லண்டனில் பணியாற்றுகிறார். எனது அழைப்பின் பேரில் தான் இங்கு வந்தார். இன்னும் சில தினங்கள் இங்கு தங்கியிருந்தார்’’ என்ற அங்குஷன், மங்களேஸ்வரனின் பக்கம் திரும்பி; ‘‘இவர் ஒரு வித்தியாசமான மனிதர். இந்தக் கிராமத்தில் பல உத்தமர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் இவர் தான் மிகவும் வயது குறைந்தவர். இவரைப் பற்றி உங்களுக்கு நிறையச் சொல்ல வேண்டும்’’ என்றார் அங்குஷன்.

மங்களேஸ்வரன் இலட்சுமியைப் பரிசோதித்தார். வெகுநேரமாகப் பரிசோதித்தார். பின்பு இலட்சுமியை வெளியே செல்லுமாறு கூறிவிட்டு கஜேந்திரனுடன் சில நிமிடங்கள் பேசினார். மகிழ்வுடன் கஜேந்திரன் வெளியே வந்தான். வாசலில் அங்குஷன் நின்றார்; ‘‘மிகவும் நன்றி ஐயா, நீங்கள் வைத்திய நிபுணர்களை அழைத்து வந்தமையால் தான் இன்று எனது தாயாரின் நோய் கண்டு பிடிக்கப்பட்டது. நான் உங்களை மறக்க மாட்டன்’’ என்றான்.

அங்குஷன் சிரித்தார்; ‘‘இது எனது கடமை. சேவை இல்லையே நீங்களெல்லாம் ஊரில் செய்யும் வேலை எவ்வளவு...? அதை நினைத்தால் இது எம்மாத்திரம்....’’ என்றார்.

வெளியே தணிகாசலம் நோயாளிகளை ஒழுங்கு செய்து கொண்டிருந்தார். அரிமாக்கழகத்தினர் நோயாளிகளுக்கு உடுபிடைவைகளும் உணவுப் பண்டங்களும் வழங்கிக் கொண்டிருந்தனர். தணிகாசலத்தைக் கண்டதும் கஜேந்திரன் அவரின் அருகில் வந்தான்; ‘‘அண்ணை இன்று தான் அம்மாவின் நோய் இன்னதென்று அடையாளங் காணப்பட்டது. எதுக்கும் நிபுணத்துவம்

வேண்டும். அம்மாவுக்குப் பெரிதான நோயில்லையாம். சில மருந்துகள் தந்துள்ளனர். இரத்தம் பரிசோதனைக்காக எடுத்திருக்கிறார்கள். படமும் பிடித்தார்கள். வேறு சோதனைகள் பலவும் செய்தார்கள். மீண்டும் நாளைய தினம் வரச் சொன்னார்கள். உண்மையில் அங்குஷன் தெய்வம்தான். இவ்வளவு காலத்தில் எத்தனை பேர் இந்த வைத்தியராகக் கடமை புரிந்தனர். இப்படியான ஒருவர் இருக்கவில்லையே'' என்றான் கஜேந்திரன்.

''அங்குஷன் மூன்று மாதங்களுக்கு முன்பு இதைப் பற்றிச் சொன்னவர். அப்பவே நான் சந்தோஷப்பட்டனான். பின்பு அவரை நான் காணும் வேளைகளிளெல்லாம் அதைப்பற்றி விசாரிப்பேன். அதற்கு அங்குஷன் சொல்லார்; ''தணி அண்ணை, ஒரு போதும் நான் செய்யப்போவதாகச் சொன்ன செயலை மறக்க மாட்டன். கனவிலும் அதைத்தான் காண்பன். நீங்கள் பயப்பட வேண்டாம். திகதி குறித்ததும் நானே வந்து சொல்லுவன் என்றவர். இருந்தாலும் அவர் மறந்திடுவார் என்று நினைத்து அவரைக் காணும் போதெல்லாம் கேட்பன். இரண்டு தினங்களுக்கு முன்பு என்னிடம் வந்து இன்று நோயாளிகளை வரச் சொல்லுமாறு கூறினார். பின்பு சொன்னார்; ''அண்ணை நீங்கள் அடிக்கடி நினைவூட்டுவதால் உங்களது நினைவுத் திறனையும் சேவை மனப்பான்மையையும் நான் உணர்ந்து கொண்டேன். அதே போல நானும் எதையும் மறக்க மாட்டேன். அப்பா சொல்வார் ஒருவனுக்கு எதிரி அவன் தான். ஒரு செயலை ஒருவன் மறந்தானேயானால் அவனது வாழ்க்கை நாசமாகிவிடும். ஒருவனுக்கு மறதியால் வரும் சோர்வென்பது இல்லாமல் இருந்ததால், அதற்கொப்பான நன்மை வேறெதுவும் இல்லை'' என்பார். நான் எனது குருநாதனுக்கு இந்த வேண்டு கோளை விடுத்த போது அவர் தனக்கு மூன்று மாதங்களுக்கு நேரமில்லை யென்றும் அடிக்கடி தொடர்பு கொள்ளுமாறுஞ் சொன்னார். நான் பத்து முறை தொடர்பு கொண்டனான். ஒரு முறை தன்னும் நான் மறந்திருந்தால் இப்பெரும் நன்மையைப் பெற்றிருக்க முடியாது'' என்றார் அங்குஷன்.

தணிகாசலம் தடுமாறியபடி சிரித்தார்.

**536. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுஒப்பது இல்.**

யாரிடத்திலும் எக்காலத்திலும் மறதியால் உண்டாகும் சோர்வு இல்லாமல் இருக்குமானால், அதற்கு ஒப்பான தன்மை வேறொன்றும் இல்லை.

## முடியாத செயல்

அன்று மாலை விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் பரமேஸ்வரனும் கஜேந்திரனும் அங்குசன் தங்கியிருக்கும் வைத்தியசாலையின் விடுதிக்கு வந்தனர். அங்குஷன் வெளிநாட்டில் இருந்து வந்த மருத்துவர்களை நகரில் உள்ள ஆடம்பர விடுதியொன்றுக்கு அனுப்பி விட்டு அப்போது தான் வந்திருந்தார்.

கணபதி அவர்களுக்குச் சுவையான சிற்றுண்டி வகைகளைக் கொண்டு வந்து கொடுத்தான். தேநீரும் கொண்டு வந்து கொடுத்தான்.

‘‘உண்மையிலேயே அங்குசன் பாக்கியசாலி. பொதுவாக எல்லோரும் நகரில் வேலை செய்யவே விரும்புவார்கள். அங்குஷனும் நகரில் வேலை செய்யவே விரும்பினான். நான் தான் வற்புறுத்தி இங்கே அனுப்பினேன். இப்போது அவன் வீட்டுக்கு வர விரும்புவதே இல்லை. அதற்கு முக்கிய காரணம் கணபதி தான் மிகமிகச் சுவையாகச் சமைத்துக் கொடுப்பதாலும், அவனது வேலைகள் யாவற்றையும் மறக்காமல் செய்வதாலும் அங்குஷன் இந்தக் கிராமத்தை விட்டு வரமறுக்கிறான். எனது மனைவிக்கு ஏனோ தெரியாது அங்குஷன் மேல் தான் பாசம் அதிகம். தான் போய் அங்குஷனோடு இருக்கப் போவதாக அடிக்கடி சொல்வாள். அதன் ஆரம்பக்கட்டமாக நான் எனது தொழிற்சாலைப் பொறுப்புக்களையெல்லாம் எனது இளைய மகனிடம் ஒப்படைத்து விட்டேன். கொஞ்ச நாட்கள் அங்கிருந்து அவனை அவதானித்துப் பார்த்தேன். மிகவும் சிறப்பாகத் தொழிற்சாலையை நடத்துகிறான். அதனால் நானும் மனைவியும் இங்கு வந்து விட்டோம். இங்கிருந்து செல்ல விருப்பமே இல்லை. அதனால் கொழும்பில் இருக்கும் எனது பிள்ளைகள் கவலைப்படுகிறார்கள். கிராமத்தில் உள்ள இந்த அமைதியான சூழல் என்னை மிகவும் கவர்ந்து விட்டது’’ என்றார் விநாயகரத்தினம்.

‘‘கணபதி கூடாதவன்; குடிகாரன்; சண்டியன் என்றெல்லாம் சொன்னார்கள். அவற்றையெல்லாம் மீறிக் கணபதியை நான் வேலையில் அமர்த்தினேன். இன்று அவர் முற்றாக மாறி விட்டார். உண்மையில் மிகமிக கடமை உணர்வுள்ள ஒரு மனிதன். எனது பழக்கவழக்கங்கள் அத்தனையையும் எனது பெற்றோரை விடக் கணபதி புரிந்து வைத்துள்ளார். எனது நாளாந்த நடவடிக்கைகள் அனைத்தையும் காலை உணவு தரும் போது கூறுவார். இன்று நிபுணத்துவக் குழு வந்ததற்கும் காரணமாக இருந்தது கணபதிதான். எனது குருவான மங்களேஸ்வரன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போது நானில்லா விட்டால் கணபதி தான் அவருடன் கதைப்பார். என்னை விடக் கணபதியுடன் கதைக்கத் தான் அவருக்கு விருப்பம். எதையும் மறக்காமல் அவ்வப்போது எனக்குக் கணபதி நினைவூட்டிக் கொண்டே இருக்கும். கணபதிக்கு ஞாபக சக்தி அதிகம். மறக்காது கடமைகளை ஒருவன் போற்றிச் செய்தால், செய்வதற்கு அரிய செயலென்று எவையுமில்லை’’ என்றார் அங்குஷன்.

கணபதிக்குப் பெருமையாக இருந்தது. முன்பு சேரக் கூடாதவர்களுடன் சேர்ந்து செய்த தீய செயல்களை நினைத்துப் பார்த்தார். அவருக்கு வெட்கமாக இருந்தது. நல்ல, ‘‘முறையில் முன்பு நான் வாழ்ந்திருக்கலாம்’’ என்று நினைத்துக் கவலைப்பட்டார்.

‘‘மறக்காமல் ஒவ்வொரு செயல்களையும் குறித்த நேரத்தில் செய்து வந்தால் இயலாது என்று எந்தச் செயலையும் ஒதுக்கி வைக்க முடியாது. அங்குஷன் தான் விரும்பியதை அடைய விரும்பி மறக்காது அச்செயலை அடிக்கடி தனது குருவான மங்களேஸ்வரனுக்கு நினைவூட்டியமையால் தான் அவருக்கு திடீரென ஒருவாரகாலம் விடுமுறை வந்த போது இங்கே வரச் சம்மதித்தார். நிபுணத்துவம் வாய்ந்ததோர்க்கு நேரங் கிடைப்பதில்லை. சில சமயங்கள் திட்ட மிட்ட சில விஷயங்கள் இரத்துச் செய்யப்படும். அந்த வேளையில் அவர் அக்கறையின்மையால் சில கருமங்களைப் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர்களுக்குப்

புரியாததால் அதை அவர்கள் மறந்து விடுவார்கள். அக்கறை உள்ள ஒரு மனிதன் அதை மறக்காது ஞாபகமூட்டினால் தான் அவர்கள் நினைவிற் கொள்வார்கள். மங்களேஸ்வரன் இதைப் பெரிதாக எண்ணவில்லை. அங்குஷன் மறக்காது ஞாபகப்படுத்தியமையால் தான் இங்கு வந்தார். அதனால் இவ்வூர் மக்கள் பெரும் பயனடைந்தனர்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''சிறிய செயல்களென்றாலும் அவற்றை மறக்காது நினைவில் வைத்துப் பெரிய செயல்களைப் போலச் செய்ய வேண்டுமென்று அப்பா அடிக்கடி கூறுவார். அதனால் தான் நான் எச் செயல்களையும் சிறிய செயல் என்று நினைப்பதில்லை. இன்று பல நோயாளிகளை நாம் இனங் கண்டுள்ளோம். சிறிய நோய்களென்று நினைத்திருந்த சிலரின் நோய் மிகக் கொடியது என்பதை நாம் கண்டு கொண்டோம். இவ்வளவு காலமும் கஜேந்திரனது தாயாரின் நோயை நாம் கண்டு பிடிக்கவில்லை. இன்று தான் கண்டு பிடித்துள்ளோம்'' என்றார் அங்குஷன்.

**537. அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.**

மறவாமை என்னும் கருவியால் ஆராய்ந்து கடமையைப் போற்றிச் செய்பவனுக்கு முடியாத செயல்கள் எதுவும் இல்லை.

## நன்மை இல்லை

''கடவுளைப் பெரிதாக நான் நம்புவதில்லை. ஒருவனுடைய முயற்சிதான் அவனது வெற்றிக்குக் காரணம். முயற்சியுடையவன் ஒருபோதும் தாழ்ந்து போனதில்லை. கடவுள் விருப்பு வெறுப்பற்றவர். அவர் யாருக்கும் உதவி செய்வதில்லை என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஒவ்வொருவரும் செய்யும் பாவபுண்ணியங்களுக்கேற்பவே அவர்களது வாழ்வு அமைகிறது என்று தான் நான் நினைத்து வந்தேன். எனக்கென்று நான் இதுவரை கடவுளை வேண்டியது கிடையாது. அம்மா படும் வேதனையைப் பார்த்து, அம்மாவைக் குணப்படுத்து என்று தான் நான் மகா கணபதியை வேண்டி வந்தேன். அது இன்று தான் நிறைவேறியது. இன்று எடுத்த மருந்தின் பின் அம்மா குணமடைந்து வருகிறா. இது நாள் வரை எழும்பி நடமாடவே கஷ்டப்பட்டவா. இன்று சமைத்தவா. அதிலிருந்து நான் மகா கணபதியை நம்ப ஆரம்பித்துள்ளேன்'' என்றான் கஜேந்திரன்.

''நீ சின்னப்பிள்ளை. உனக்கு மகா கணபதியின் சக்தியைப் பற்றித் தெரியாது. நம்பிக்கையுடன் வணங்கினால் நாம் விரும்பியவை யாவும் கிடைக்கும்'' என்றார் தணிகாசலம்.

''என்னைப் பொறுத்தவரை நான் அறிவுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பேன். நல்லவர்கள் தான் தெய்வங்கள். தணிகாசலமண்ணை, அதிபர், அங்குசன் ஐயா போன்ற அறிவுடையவர்கள் ஏவிய செயல்களை மதித்துச் செய்ய வேண்டும். அறிவுடையவர்களால் தான் உலகம் வாழ்கிறது. தணிகாசலமண்ணை தன்னலமற்ற சேவை செய்கிறார். அதிபர் அர்ப்பணிப்புடன் கடமை புரிகிறார். அங்குஷன் ஐயா கடவுள் போல உயிர்களுக்கு அருள் புரிகிறார். இவர்கள் சொல்வதையல்ல நிைப்பதைக் கூட மதித்துச் செயற்பட

வேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்து நடப்பவர்களுக்கு அவர்கள் பிறக்கும் ஏழு பிறப்புக்களிலும் நன்மை வராது'' என்றான் கஜேந்திரன்.

''கடவுளை நம்பாத நீ ஏழு பிறப்புக்களை நம்புகிறாயா...?'' என்று கேட்டார் தணிகாசலம்.

''பிறப்பென்று ஏழுமுறை பிறந்து பின் இறப்பதை நான் கருதவில்லை. ஓர் உயிர் தாயின் வயிற்றில் இருக்கும் காலம் முதல் இறக்கும் வரை பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. குழந்தை, பிள்ளை, இளைஞன், குடும்பத்தவன் தந்தை, பேரன், பூட்டன் என்று ஒருவனின் பருவம் வயதிற்கேற்றவாறு மாறுபடுகிறது. இந்த ஏழு பருவத்திலும் அவன் துன்பப்படுவான் என்று தான் நான் நினைக்கிறேன்'' என்றான் கஜேந்திரன்.

''கணிதம் படிக்கும் நீ, சமயம் பற்றிப் பேசுகிறாய். நல்லது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நான் கணிதத்தைப் படித்தாலும், தமிழ்,கணிதம்,சோதிடம் யாவும் கற்றுள்ளேன்'' என்றான் கஜேந்திரன்.

''அப்படியா? ஆச்சரியமாக இருக்கிறது எனக்குச் சோதிடம் பார்த்துச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார் அங்குஷன்

''ஓ... குறிப்பிருகா? இல்லாவிட்டால் கைரேகை பார்ப்போம்'' என்றான் கஜேந்திரன்.

''குறிப்பில்லை, கையைப் பார்'' என்று தனது வலது கையை நீட்டினார் அங்குஷன். கஜேந்திரன் அவரது கையைப் பிடித்துப் பார்த்தான். சிறிது நேரத்தின் பின் சொன்னான்; ''ஐயா நீங்கள் மிகவும் நல்லவர். ஆனால் குடும்பம் அமையவில்லை. இரண்டு பிள்ளைகள். நீங்கள் மனைவியைப் பிரிந்து இருக்கிறீர்கள். குடும்பத்தை நீங்கள் தான் நேசிக்கிறீர்கள். உங்களது மனைவி நேசிக்கவில்லை. குடும்பத்தை முற்றாகப் பிரிய வேண்டிய நிலை. அது தான் நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள்..''.

விநாயகரத்தினமும் திடுக்கிட்டுத் திகிலடைந்து போனார். 'இந்த விஷயம் இவனுக்கு எப்படித் தெரியும்' என்று சிந்தித்தார்.

நீங்கள் குடும்பத்தினருடன் சேருவீர்களா இல்லையா என்பதை உங்களது சாதகத்தைப் பார்த்துத்தான் சொல்ல முடியும். நீங்கள் அந்தப் பெண்ணைக் காதலித்துத் தான் திருமணம் செய்தீர்கள். அது உங்களது பெற்றோருக்கு விருப்பமில்லை. நீங்கள் அந்தப் பெண்ணை உயிருக்குயிராக நேசிக்கிறீர்கள். பெற்றோர் தான் இடைஞ்சலாக இருக்கிறார்கள். உங்களாற் பெற்றோரை வெறுக்க முடியவில்லை. பெற்றோரில் மிகுந்த பாசம் வைத்துள்ளீர்கள்'' என்றான் கஜேந்திரன். அவர்கள் சிறிது நேரம் பேசிவிட்டு வெளியே வந்தனர். தணிகாசலம் தன்னுடன் வந்த கஜேந்திரனைக் கேட்டார்; ''எங்கே சோதிடம் படித்தாய்?''.

“சோதிடப் புத்தகங்களை வாசிப்பேன். நான் அங்குஷன் ஐயாவுக்குச் சொன்னது சோதிடமல்ல. நான் அவருடன் நெருங்கிப் பழகுவதால் தனது குடும்ப வரலாற்றைச் சொன்னார். தாயும் தகப்பனும் தான் தனது மனைவியுடன் தன்னைச் சேரவிடாது தடுத்து வைத்திருப்பதாகச் சொல்லிக் கவலைப்பட்டார். அதனால் தாயும் தந்தையுமிருந்த போது உண்மையைச் சொன்னேன். எனது வார்த்தைகள் அவர்களது மனதை உறுத்தும். அறிவுடையவர்களின் மனம் எந்நாளும் மகிழ்ச்சியாக இருத்தல் வேண்டும். அவர்களை மதித்துச் செயற்பட வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்” என்றான் கஜேந்திரன்.

**538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.**

சான்றோர் புகழ்ந்து சொல்லிய செயல்களைப் போற்றிச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாது மறந்தவர்களுக்கு ஏழு பிறவியிலும் நன்மை இல்லை.

## அழிந்தவரை நினை

தணிகாசலம் திகைத்துப் போனார். ‘இந்தச் சிறு வயதில் கஜேந்திரனுக்கு இத்தனை திறமைகள் இருக்கா” என்று வியப்படைந்தார்.

“ஏனோ தெரியவில்லை அங்குஷனுக்கு என்னைப் பிடித்து விட்டது. அவர் என்னைத் தன்னை வந்து அடிக்கடி சந்திக்குமாறு சொல்வார். கொழும்பில் குடும்பத்தினருடன் சந்தோசமாக இருக்க வேண்டிய அவர் ஏன் இங்கு வந்து தனிமையில் வாடுகிறாரென நினைப்பேன். மிகவும் நல்லவரான அவர் தனது மனைவி பிள்ளைகளை இங்கு அழைத்து வந்திருக்கலாமென்று நினைப்பேன். நாலைந்து தினங்கள் நான் அவரைச் சந்திக்காவிட்டால், அவர் என்னைத் தேடி வந்து விடுவார். அப்படி ஒரு நெருக்கம் எம்மிடையே ஏற்பட்டு இறுதியில் நட்பாகியது. அதனால் அவர் தனது வாழ்க்கையில் நடந்த அந்த துர்ப்பாக்கிய சம்பவத்தை எனக்குச் சொன்னார்.அவர் காதலித்துத் தான் திருமணம் செய்தார். அந்தப் பெண் வசதி குறைந்தவள். இவருடன் வைத்தியசாலையில் சிற்றூளியராக வேலைபார்த்தவள். அதனால் அங்குஷனது பெற்றோர்அவளை வெறுத்தனர் பெற்றோர் மீது அளவு கடந்த பாசத்தை வைத்திருக்கும் அங்குஷன் அதனால் தான் பட்டணத்தை விட்டுக் கிராமத்திற்கு வந்தார். இங்கு வந்ததும் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தனது மனைவி பிள்ளைகளை அழைத்து வர விரும்பினார். ஆனால் விநாயகரத்தினம் சம்மதிக்கவில்லை. இப்பொழுது தொலைபேசியில் தான் குடும்பம் நடத்துகின்றனர். நான் காதலைத் தெய்வீகமானது என்று நினைப்பவன். இறைவன் தான் இருவரையும் இணைத்து வைப்பதாக நம்புபவன். அதனால் தான் சாஸ்திரம் பார்ப்பது போல அவரது துயர வாழ்க்கையை எடுத்துச் சொன்னேன். அதைக் கேட்டு விநாயகரத்தினம் திகிலடைந்து போனார். விரைவில் அவர்களைச் சேர்த்து வைப்பார் என்று நம்புகிறேன்” என்றான் கஜேந்திரன்.

“நீ பொல்லாத ஆள்” என்று கூறி விடை பெற்றார் தணிகாசலம்.

அன்று மாலை விநாயகரத்தினம் அங்குசனதும் அங்குசனது இளையமகனினதும் குறிப்புடன் கஜேந்திரனது வீட்டுக்கு வந்தார். கஜேந்திரன் அவரை அதிர்ச்சியுடன் வரவேற்றான்.

“தம்பி, காலையில் அங்குஷனது குறிப்பைக் கேட்டனீர். அவனது இளையமகளின் குறிப்பையும் கொண்டு வந்துள்ளேன் பார்த்துச் சொல்லும்” என்றார் விநாயகரத்தினம்.

கஜேந்திரன் அங்குஷனது குறிப்பை வாங்கிப் பார்த்தான்; “ இவர் பிறக்கும் போதே தாய்க்குக் கரைச்சல் குடுத்திருப்பா ரே.... தாய் தப்பியது பெரும் புண்ணியம்...”

“ஓம் தம்பி... ஓம் தம்பி... சரியாய்க் கஷ்டப்பட்டுட்டாள். சத்திர சிகிட்சை செய்து தான் எடுத்தது” என்றார் விநாயகரத்தினம்.

கஜேந்திரனுக்குச் சிரிப்பு வந்தது. அங்குஷன் தனது வரலாறு முழுவதையும் அவனுக்குக் கூறியிருந்தார்.

“நல்ல செல்லமாக வளர்த்தீர்கள். இவரது பலன் தான் உங்களைத் தொழிலில் முன்னேற்றியது. இப்ப கடுங் காலம். அது தான் குடும்பத்தைப் பிரித்திருக்கு. வாற ஆனி மாதம் குரு மாறுகிறார். பின்பு புரட்டாதி மாதம் சனி வக்கரிக்கிறார். அதற்கு முன்பு இருவருஞ் சேரப்பலன் இருக்கிறது. அப்படிச் சேராவிட்டால் உயிரிழப்பு ஒன்றைத் தவிர்க்க முடியாது. அங்குஷன் ஐயாவின் மனைவியின் சாதகம் நல்ல சாதகம். அவருக்கு முப்பத்தி நான்கு வயதில் ஒரு கண்டமிருக்கு. மனைவி கூட இருந்தால் அவளது தாலியின் வலிமை அவரது உயிரைக் காப்பாற்றும். இருவரும் பிரிந்திருந்தால் முற்றாகப் பிரிய வேண்டியது தான். நாம் மகிழ்வுடன் பிறருக்குத் துன்பஞ் செய்தால் பின் அழுது கொண்டு அவற்றை அனுபவிக்க வேண்டும். நீங்கள் உங்கள் மருமகளை ஏழை என்று நினைக்கிறீர்கள். உலகில் பெரும்பான்மையானோர் ஏழைகளாகப் பிறந்து தான் பணக்காரராகிறார்கள்”.

“உண்மை தான் தம்பி. எனது தந்தை ஒரு கூலியாகத் தான் வாழ்ந்தவர். எனது மனைவியின் பலனும், அங்குஷனின் பலனும் தான் என்னை உயர்த்தியது” என்றார் விநாயகரத்தினம்.

“ஒவ்வொருவரும் தாம் தேடிய பணத்தின் வலிமையால் மகிழ்ச்சியடைந்து கர்வங் கொள்கின்ற போது, அத்தகைய மகிழ்ச்சியால் கர்வங் கொண்டு தமது கடமைகளை மறந்து அழிந்தவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும். உங்களது நண்பர்கள் பலர்... ஏன் பரமேஸ்வரன் கூட பணத்தின் வலிமையால் கர்வங் கொண்டு அழியவில்லையா? தயவு செய்து அங்குஷன் ஐயாவின் எதிர்காலங்கருதி அவரை அவருடைய மனைவியுடன் சேர்த்து வையுங்கள். உங்களது மகன் துன்பத்தால் அழிந்தால், உங்களுக்கும் அதில் பங்குண்டு என்பதை மறந்து விட்டீர்களா...? பிள்ளைகள் தாய் தந்தையரை நேசிப்பது போலப் பெற்றோரும் பிள்ளைகளை நேசித்தல் வேண்டும்” என்றான் கஜேந்திரன் விநாயகரத்தினம் சிலையாக அமர்ந்திருந்தார்.

**539. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.**

மகிழ்ச்சியால் செருக்குக் கொண்டு கடமையை மறந்திருக்கும் போது, அவ்வாறு மறந்திருந்த காரணத்தால் முன்பு அழிந்தவரை நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

## கைகூடுவது எளிது

“பெற்றோரின் வளர்ப்பைப் பொறுத்துத்தான் பிள்ளைகளின் நடத்தை உருவாகிறது. அங்குஷன் உங்களின் மீதுள்ள அன்பு காரணமாகவே தான் காதலித்துத் திருமணஞ் செய்ததன் அன்பு மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்து தனியே வாழ்கிறார். நீங்கள் மிகவும் அன்பாக வளர்த்தால் அங்குஷன் உங்கள் மீது உயிரையே வைத்திருக்கிறார். உங்களது சொல்லை வேதவாக்காக நினைத்தொழுகுகிறார். அவர் பெற்றோரின் அன்புக்கும் பாசத்திற்கும் கட்டுப்பட்ட ஓர் அருமையான மகன். யோசித்துப் பாருங்கள், அவர் ஒரு நல்ல தந்தையா? அவர் தனது பிள்ளைகளுக்கு எவற்றைச் செய்தார். உங்கள் செயல்களால் உங்கள் மீது அன்பு வைத்த அங்குஷன் மேல், அவரது பிள்ளைகள் அன்பு வைப்பார்களா? அவரைத் துரோகியென்று அவை கூறாதா....? பிற்காலத்தில் பிள்ளைகள் அவரை மதிப்பார்களா? யோசித்துப் பாருங்கள். அங்குஷனின் இளைய மகனின் குறிப்பு அவ்வளவு நல்லதாக இல்லை. சிறுவயதிலேயே பெருங் குற்றங்கள் செய்யக் கூடியவனாக இருப்பான்”.

விநாயகரத்தினம் எதுவும் பேசாது எழுந்து சென்று விட்டார். அன்று மாலை கஜேந்திரன் தணிகாசலத்தைக் கண்டு நடந்தவற்றைச் சொன்னான்.

“பாவம் நல்ல மனிதன். நாம் கதைத்தால் அங்குஷன் உனக்குக் கூறியதெல்லாம் வெளியாகி விடும். நீயே தொடர்ந்து முயற்சி செய். ஒருவன், தான் அடைய எண்ணியதைத் தொடர்ந்து எண்ணி, விடாது முயன்று வந்தால், அவனது எண்ணம் எளிதாகக் கைகூடும் என்பார்கள். நீ நாம் நினைப்பதைப் போலச் சாதாரண மனிதனில்லை. தொடர்ந்து முயற்சி செய்” என்று கூறினார்.

மறு நாள்க் காலை விநாயகரத்தினம் மருமகளின் குறிப்பையும் அங்குஷனின் மூத்தமகனின் குறிப்பையும் கொண்டு வந்தார்.

“ஐயா, அங்குஷன் ஐயாவின் மனைவியின் குறிப்பு மிகவும் நல்லது. அவர்களுக்குக் கல்யாணமான அன்று உங்களுக்குப் பெரும் நன்மை ஏற்பட்டிருக்க வேண்டுமே... யோசித்துப் பாருங்கள்...”

“ஓம் தம்பீ.... இவனது திருமணநாளன்று நான் பெரியதொரு ஒப்பந்தத்தை யப்பான் நாட்டுத் தொழிலதிபருடன் செய்தேன். அதனால் நல்ல வருமானம் வருகிறது.”

“உங்களது மூத்த பேரனின் பலனுக்கு நீங்கள் இன்னும் ஆறு மாதத்துக்குள் வெளிநாடொன்றில் உங்கள் தொழிற்சாலையின் கிளையைத் திறக்கப் போகிறீர்கள். கிரகங்கள் நன்றாக இருந்தாலும், சேர்ந்திருந்தால் தான் பலன் இருக்கும். அங்குஷன் ஐயா வெளிநாடொன்றிற்குப் புலமைப்பரிசில் கிடைத்துப் போகும் சந்தர்ப்பமிருக்கு. அவரின் இராசிக்கு மூத்த மகன் அவருக்கு அருகில் இருந்தால் கிடைக்காதனவெல்லாம் கிடைக்கும்”.

“அப்படியே தம்பீ.... வெளிநாடொன்றில் எமது கிளையைத் திறக்கும் நோக்கம் எமக்கிருக்கு. ஆனால் இழுபறிப்படுது..” என்றார் விநாயகரத்தினம்.

“மூத்த பேரனைக் கூட்டியாருங்கோ மூன்று மாதத்துள் உங்கள் எண்ணம் நிறைவேறும” என்றான் கஜேந்திரன்.

“எதை வைத்துக் கொண்டு சொல்கிறீர்” என்று கேட்பார் விநாயகரத்தினம்.

“ஐயா இரண்டாம் இடத்தில் குருவும் சந்திரனும் சேர்ந்திருக்கிறார்கள். ஒன்பதாம் இடத்தில் சனியும் சூரியனும் சேர்ந்திருக்கினை. நினைத்தது நடக்க வேண்டும்”.

“சரி தம்பி நான் வாறன்” என்று புறப்பட்டார் விநாயகரத்தினம்.

வாரம் ஒன்று கழிந்தது. அன்று விநாயகரத்தினம் கஜேந்திரனது வீட்டுக்கு வந்தார்; “தம்பி நீ வயதில் குறைந்தவணெண்டாலும் பெரிய அறிவாளி; நிபுணன் நேற்றுக் கொழும்புக்குச் சென்று அங்குஷன் தனது மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்து வந்துவிட்டார். இன்று வெளிநாட்டில் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான அனுமதிக்கடிதம் வந்து விட்டது” என்று கூறி விட்டுச் சென்றார்.

அவர் சென்ற பின் அங்குஷன் வந்து கஜேந்திரனுக்கு நன்றி சொன்னார்; “கஜன் இந்த உதவியை நான் என்னுடைய உயிர் உள்ள வரை மறக்க மாட்டன்” என்றார்.

அவர் சென்ற பின்பு கஜேந்திரன் மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றான். அங்கே தணிகாசலம் இருந்தார். அவனைக் கண்டதும் அவருக்குச் சிரிப்பு வந்தது; “விநாயகரத்தினம் உன்னுடைய சாத்திரத்தைப் புகழுறார் சுவாமியாருக்குப் பக்கத்திலை இரு” என்றார்.

“பாவம் அங்குஷன். இரண்டு வருடங்களுக்குப் பிறகு சேர்ந்திருக்கிறார். ஒருவன் தான் அடைய எண்ணியதைத் தொடர்ந்து எண்ணி, விடாது முயன்று வந்தால், அவன் எண்ணிய எண்ணம் கைகூடாமல் விடாது. அங்குஷனையும் மனைவி பிள்ளைகளையும் சேர்த்து வைக்க விரும்பினன். மகா கணபதியின் அருளால் கைகூடி விட்டது” சிரித்தான் கஜேந்திரன்.

**540. உள்ளிய எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்.**

ஒருவன் தான் அடைய எண்ணியதை விடாமல் எண்ணி, சோர்வில்லாமல் முயன்று வந்தால், அவன் எண்ணியதை அடைதல் மிகவும் எளிதாகும்.

## சிறந்த நீதி

கஜேந்திரனுக்கு ஒரு விபரீதமான ஆசை திடீரென மனதில் முளைத்தது. அதை அவன் அன்று மாலை கடற்கரையில் சந்தித்து வித்தியாவுக்குச் சொன்னான்; “ அன்பே எனக்கொரு ஆசை மனதில் இன்று திடீரென முளைத்து

விட்டது. உம்மை நான் கவிதையால் ஆராதிக்க வேண்டும். அதை விட அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களைப் படித்த பின் அதே போல அன்று வாழ்ந்த அரசர்களின் வீரச் செயல்களை எனது கற்பனையில் எழுத வேண்டும்''.

வித்தியா அவனை விசித்திரமாகப் பார்த்தாள். பின்பு சொன்னாள்; ''நல்லது அப்ப நானினி வீட்டில் இருந்து தவஞ் செய்ய வேண்டியது தான். அங்குஷனுக்குச் சாத்திரம் பார்த்தபின் வீடு முழுக்கச் சனம் குவிந்திருக்கு. சுனாமி வேலை, சமையல் வேலை, ஊர்த்தொண்டு துரவு படிப்பு இதெல்லாம் போதாதென்று கதையும் எழுதப் போறியளோ.....?'' சினந்தாள்.'

''உம்முடைய அழகு; எனது காதல் வெறி யாவும் ஆயிரமாண்டுகளுக்குப் பின்பும் நினைத்திருத்தல் வேண்டும். உமது நினைவுகள் காற்றில் எவ்வேளையிலும் கலந்திருக்க வேண்டும். தயவு செய்து சம்மதம் தாரும். நீர் விரும்பாத எதையும் நான் செய்ய மாட்டன்.''

கஜேந்திரனைச் சில கணங்கள் பார்த்தாள் வித்தியா. அவனது கண்களில் தேங்கி நின்ற உணர்வுகள் அவளை விழுங்கின; ''சரி எழுதுங்கோ, ஆனால் அடிக்கடி என்னைச் சந்திக்க வேண்டும்'' சிணுங்கினாள்.

''உம்மைச் சந்தித்தால் தான் கதையே பிறக்கும்'' கட்டியணைத்தான். வெகு நேரமாக அவன் பேசவில்லை. இருண்ட பின்பு இருவரும் பிரிந்தனர்.

இரவு நீண்டு விரிந்து கொண்டிருந்தது. கட்டிலில் நித்திரை வராமல் புரண்டு கொண்டிருந்தான். கஜேந்திரன் இரவு மலர் மெல்ல வாடத் தொடங்கிய போது கஜேந்திரன் பேனாவைத் திறந்தான்.

அன்று போல என்றும் பருத்தி மலை அரசன் சுந்தரசேனன் என்றும் குழம்பியதில்லை. முதலமைச்சர் சிவபூரணனும் தளபதி வீரபாண்டியனும் நிலா முற்றத்தில் யோசனையுடன் உலாவிக் கொண்டிருந்த அரசனைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவனால் நம்ப முடியாத செய்தியென்று உண்மையென நிரூபிக்கப்பட்டு விட்டது. இனித் தீர்ப்பு வழங்குவதே அவனது முடிவு.

''அரசே! நள்ளிரவு கடந்து விட்டது. இதில் யோசிக்க என்ன உள்ளது? யாராக இருந்தாலும் அவர்கள் செய்த குற்றத்தை ஆராய்ந்து, இரக்கம் காட்டாது நடுவு நிலைமையில் நின்று தண்டனை அளிப்பதே சிறந்த நீதி நெறியாகும். இது அரசனுடைய நீதியை உலகிற்குக் காட்டுமே தவிர பந்த பாசங்களை வெளிப்படுத்தாது. நாட்டின் தலைவன் என்பவன் தன்னுடைய தலையைப் பலி கொடுக்கக் கூடியவனாக இருத்தல் வேண்டும் என்று எமது நூல்கள் கூறுகின்றன. நீதிக்காக எம்மூதாதையினர் தமது உயிரையும் பலிகொடுத்த வரலாற்றைத் தாங்கள் அறியவில்லையா? அந்த வரலாறுகளை இந்தச் சம்பவம் மீறி விடவில்லை. அரசர்களுக்கு உறவினராக இருப்போர் எந்தத் தியாகத்தையும் செய்யாமல் பதவிகளில் அமர நினைக்கிறார்கள். நீதிக்குப் பிறம்பான செயல்களிலீடுபட்டு நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறார்கள். இவை வெளியிலிருந்து ஒருவன் செய்தால் ஆராயாமலே தண்டனை அளிக்கப்பட்டு விடும். உங்கள் அன்புக்குப் பாத்திரமான மனைவி யொருத்தியின் மகன் என்பதால் தானே சிந்திக்கிறீர்கள். அவன் மகத நாட்டு அரசனுடனும் எமது காலாட்படைச் சேனாதிபதியுடனும் சேர்ந்து நாட்டைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினான் என்பது எமக்குத் தெரியும். அத்துடன் அச் சதி நடவடிக்கையில்

உங்கள் இரண்டாவது மனைவியும் சம்பந்தப்பட்டிருக்கிறாள்'' உணாச்சி வசப்பட்டார்தளபதி வீரபாண்டியன்.

''அரசே! மிகவும் இரகசியமாகச் செயற்பட்ட இந்தச் சதிச் செயலைக் கண்டு பிடித்தவன் வேலழகன். அவன் சிறந்த ஒற்றன். இதில் தகுந்த நடவடிக்கை உடனே எடுக்காவிட்டால் உங்கள் மனைவியும் மகனும் நாட்டை விட்டுத் தப்பிச் சென்று விடுவார்களெனத் தளபதி நினைக்கிறார். அவர்கள் தப்பிச் சென்றால் பலவிபரீதங்கள் நாட்டில் உருவாகும். அவரது ஆதரவாளர்கள் கலகஞ் செய்வார்கள். அவர்களை அடக்குவதெல்லாம் வீணாண காரியங்கள்..'' முதலமைச்சர்கள் சிவபூரணன் கூறிக் கொண்டிருக்கும்போது சுந்தரசேனன் குறுக்கிட்டான்; ''தளபதியாரே என்னுடன் உமது தந்தையார் பணிபுரிந்தார். எனது தந்தையாருடன் உமது பாட்டனார் பணிபுரிந்தார். குடும்பமாகப் பணிபுரிந்தும் என்னை உங்களுக்குப் புரியவில்லையா..? எனக்கு வேலழகனின் மேல் பூரண நம்பிக்கை உண்டு. அதனால் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து சிறையில் அடைத்து விட்டேன். இனித்தண்டனை வழங்க வேண்டியது தான். அவர்களுக்கு மரணதண்டனை வழங்குவதென்றும் தீர்மானித்தாயிற்று. பட்டத்தரசி பிள்ளைகளில்லாததால் அவனைத் தனது பிள்ளையாக நினைக்கிறார். அவனுக்கு ஆட்சியுரிமையை வழங்குமாறு அடிக்கடி கேட்கிறார். அதைத் தான் யோசித்தேன்'' என்றான்.

''நான் ஆசசரியப்படவில்லை. உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். மக்கள் உங்களைப் புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி உங்கள் கொள்கையில் இருந்து மாறமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். பரம்பரை பரம்பரையாக நீதி நெறி தவறாது ஆண்டு வந்த பரம்பரைக்கு நீங்கள் இழுக்குத் தேட மாட்டீர்களென்றும் தெரியும். உங்கள் தந்தையார் தனது இளைய மகனின் நடத்தையில் சந்தேகங் கொண்டு அவனுக்குத் தண்டனை அளித்த போது சொன்னவார்த்தைகளை எனது தந்தையார் அடிக்கடி கூறுவார்; ''தளபதியாரே குற்றஞ் செய்தவன் யாராக இருந்தாலும் அக்குற்றத்தின் தார்ப்பரியத்தை ஆராய வேண்டுமே தவிர குற்றஞ் செய்தவனின் உறவு முறைகளை ஆராயக்கூடாது; இரக்கம் காட்டக் கூடாது; நடுவு நிலையில் இருந்து தண்டனை அளிப்பதே அரசநீதி'' என்றவராம்.

''யாவும் எனக்குத் தெரியும். பொழுது விடிந்ததும் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட அனைவர்க்கும் மரணதண்டனை வழங்குங்கள்'' என்று ஆணையிட்டான் சுந்தரசேனன்.

**541. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்து செய் வ.்.தே முறை.**

யாராக இருந்தாலும் அவர்கள் செய்த குற்றத்தை ஆராய்ந்து இரக்கம் காட்டாமல், நடுவுநிலைமை தவறாமல் தக்க தண்டணை அளிப்பதே சிறந்த நீதி நெறியாகும்.

## நம்பிவாழ்பவை

அந்தப்புரத்திற்குச் சுந்தரசேனன் வந்தான். சந்தணமரத்தில் பலநுட்பமான வேலைப்பாடுகளமைந்த கட்டிலில் போடப்பட்டிருந்த பஞ்சனை மெத்தையில்

குப்புறப்படுத்திருந்தாள் கௌசல்யகுமாரி. இனிமையான வீணை இசை இசைக்கப்பட்டுக் கொண்டிருந்த அந்தப் புர மாளிகையில் வீணை இசையை விடப் பலமாக ஒலித்துக் கொண்டிருந்தது கௌசல்யகுமாரியின் விம்மல் ஒலி. அவள் மகத நாட்டு இளவரசி. மகத நாட்டின் மீது சுந்தரசேனன் படையெடுத்து வென்ற பொழுது அவளைப் படைவீரா்கள் கைது செய்தனா். “அவள் தான் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும், தன்னோடு வளா்ப்பவன் மகதநாட்டு மன்னன் வேட்டைக்குச் சென்ற போது காட்டில் அனாதவராக நின்ற சிறுவன் என்றும். அவனை அரசா் காட்டிலிருந்து எடுத்து வந்ததால் அரண்மனையில் இருக்கிறான” என்றும் சொன்னாள்.

சுந்தரசேனனின் மூத்த மனைவிக்குப் பிள்ளைகளில்லாததால், அவன் பின் கௌசல்ய குமாரியைத் திருமணஞ் செய்து கொண்டான். கௌசல்யகுமாரி அரசனுக்குப் பிள்ளைகளில்லாததால், தனது வளா்ப்பு மகனான கௌதமனுக்கு முடிசூட்டும்படி அடிக்கடி கேட்டு வந்தாள்.

சுந்தரசேனனின் தம்பியின் மகன் வீரசேனன் குதிரைப்படைத் தளபதியாக இருந்தான். சிறுவயதிலேயே போர்ப்பயிற்சிகள் அனைத்தும் பெற்று வீரனாகத் திகழ்ந்தமையால் அவனுக்கு முடிசூட்டுவதென்று சுந்தரசேனன் நினைத்திருந்தான். இதனால் கௌசல்யகுமாரிக்கும் சுந்தரசேனனுக்கும் அடிக்கடி பிரச்சனைகள் வரும்.

இந்த வேளையில் தான் கௌதமன் அந்நாட்டிலுள்ள சில இளைஞா்களுடன் சோ்ந்து சுந்தரசேனனுக்கு எதிராகப் படை திரட்டி அவனை வெல்லச் சமயம் பாா்த்திருந்தான். தனது பஞ்சனைக்கு அருகில் அரவங்கேட்டு மெல்ல எழுந்தாள் கௌசல்யகுமாரி. அவளது கண்கள் சிவந்து வீங்கியிருந்தன.

“உங்களுக்கு இப்போ திருப்பிதானே. எல்லோருமாகச் சோ்ந்து எனது மகனைக் கொன்று விட்டீா்கள். நீதியில்லாத முறையில் எனது மகனைக் கொன்ற நீங்கள் கடவுளால் கட்டாயம் தண்டிக்கப்படுவீா்கள்”.

சுந்தரசேனன் பலமாகச் சிரித்தான்; “எது நீதி, எது அநீதி என்று எனக்குத் தெரியும். ஒற்றா்கள் பலா் கௌதமனின் நடவடிக்கைகளைப் பற்றித் தீர விசாரித்த பின்பு சொன்ன தகவல்களை வைத்தே நான் தீா்ப்புக் கூறினேன். தாய்நாட்டின் நன்மைக்காகச் சகலவற்றையும் துறக்கவும், உயிரையும் தியாகஞ் செய்யவும் வீரா்கள் தயாராக இருத்தல் வேண்டும். அதைவிடுத்து எதிரிகளோடு சோ்ந்து சூழச்சிகள் செய்தால் நானல்ல எந்த அரசனும் மரணதண்டனை தான் வழங்குவான். உலகில் உள்ள உயிா்கள் யாவும் மழையை நம்பி வாழ்கின்றன. குடிகள் அனைவரும் அரசனுடைய செங்கோலை நம்பி வாழ்கிறாா்கள். மழை இல்லாவிட்டால் நாட்டிலுள்ள நீா் நிலைகள் யாவும் வற்றி விடும். அரசன் நீதியானவனாக இல்லா விட்டால் நாட்டு மக்கள், எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாதவா்களைப் போலவே வாழ்வாா்கள். கிராமங்கள் பலவற்றில் அடிக்கடி கொள்கைகள் இடம்பெறுகின்றன. சென்றவாரம் அமைச்சா் ஒருவரின் உறவினரின் வீட்டுக்குச் சென்ற கொள்கையா்கள் அவா்களை ஆயுத முனையில் மிரட்டி பல இலட்சரூபா பெறுமதியான வைரங்களையும் வைடூரியங்களையும் தங்கத்தையும் கொள்ளையிட்டுச் சென்று விட்டனா். அந்தக் கொள்ளையா்களிற் சிலரை எமது ஒற்றா்கள் கண்டறிந்துள்ளனா். அவா்கள் எல்லோரும் கௌதமனின் நண்பா்கள். நாட்டில் கொள்ளை அடிப்பதில் அரைவாசிப் பொருட்களை கௌதமன் கொள்ளை அடிப்பவா்களுக்குக் கொடுத்து விடுவான். அதனால் கொள்ளையா்கள் மிகவும் உற்சாகமாகத் தொழிற்பட்டனா். கொள்ளையிட்ட பின் பொருட்களைப்

பங்கீடு செய்யும் போது ஏற்பட்ட தகராற்றில் அவர்கள் ஒருவனை இரகசியமாகக் கொன்று புதைத்து விட்டனர். அந்தவிஷயம் மெல்ல ஊரில் பரவ ஆரம்பித்தது. அத்துடன் உனது செல்வாக்கினால் தான் அவன் துணிவுடன் செயற்பட்டான். அதனால் மக்கள் என்மீதும் எனது செங்கோல் மீதும் சந்தேகப்பட்டனர். குடிகள் அனைவரும் அரசனின் செங்கோலை நம்பியே வாழ்கின்றனர். அரசன் இருக்கிறான், தீமைகளை ஒளிப்பான் என்று நம்பும் மக்கள் அரசன் தான் தீமைகளைச் செய்கிறான் என்று நினைத்தால் அதைப்போல பாதகம் வேறு எதுவும் இல்லை. எனது பரம்பரையினர் நீதி தவறாது ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களுக்கு இழுக்கேற்படும் வகையில் நான் நடக்க மாட்டேன். உனக்குள்ள துன்பம் எனக்குத் தெரியும். நீ கௌதமனுக்கு முடி சூட்ட விரும்பினாய். அது எப்படிச் சாத்தியமாகும். எனக்குப் பிள்ளையில்லா விட்டால் எமது வம்சத்தில் வந்த ஒருவனிடம் தான் நான் அரசுரிமையை ஒப்படைத்தல் வேண்டும். அது தான் முறை. அதைத்தான் நாட்டு மக்களும் விரும்புவார்கள்''. என்றான் சுந்தரசேனன்.

**542. வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி.**

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன. அதே போல, குடிமக்கள் எல்லோரும் அரசனது செங்கோலை நம்பி வாழ்கின்றனர்.

## அடிப்படை

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் சங்காபிஷேகம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நூற்றிற்கு மேற்பட்ட அந்தணர்கள் வரிசையாக இருந்து வேதமோதிக் கொண்டிருந்தனர். அந்த ஓசை மிகவும் பெரிதாகக் கேட்டது. ராகசுத்தத்துடன் அவர்கள் ஓதும் வேகத்தை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தான் சுந்தரசேனன். அவனுக்கருகில் பட்டத்தரசி சகுந்தலாதேவி அமர்ந்திருந்தாள். நூற்றுக்கு மேற்பட்ட தவில் வித்துவான்கள் மேளம் அடித்துக் கொண்டிருந்தனர். ஓம குண்டத்தில் சொரியப்பட நெய்யின் வாசம் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது.

அப்போது முதலமைச்சர் சிவபூரணன் மன்னரின் அருகே வந்து அமர்ந்தார்; ''அரசே நாட்டில் உள்ளஅத்தனை கோயில்களிலும் தங்கள் பிறந்த நாளான இன்று சங்காபிஷேகம் செய்யுமாறு கட்டளையிட்டுருக்கிறேன். நீங்கள் ஒவ்வொரு ஊரிலுமுள்ள ஒவ்வொரு கோயிலுக்காவது சென்று சுவாமியைத் தரிசித்தல் வேண்டும். அத்துடன் மக்களும் இன்று உங்களைப் பார்க்க விரும்புவார்கள். அந்தணர்களும் ஆவலோடு இருப்பார்கள்'' என்றார்.

சுந்தரசேனன் புன்னகைத்தான்; ''நான் எனது பிறந்ததினத்தை மறந்தாலும் நீர் மறக்க மாட்டீர்''.

''எப்படி அரசே அதை மறப்பது. தங்களின் பிறந்ததினத்தை நினைத்து மக்கள் மகிழல் வேண்டும். தாங்கள் நீதி தவறாது ஆட்சி செய்வதை மக்கள் உணர்ந்து போற்ற வேண்டும், அத்துடன் மக்களுக்கேற்பட்ட குறைகளை எடுத்துக் கூற வேண்டும். தாங்கள் உரியவர்களுக்குப் பரிசுகள் கொடுத்தல் வேண்டும். இதை விட இன்னும் எவ்வளவோ இருக்கு'' என்று கூறிக்கொண்டிருந்த

முதலமைச்சரை சுந்தரசேனன் பார்த்துக் கொண்டிருந்தான்; ''அரசே, அந்தணர் ஓதும் வேதத்திற்கும் அறத்திற்கும் அடிப்படையாக இருந்து உலகைக் காப்பது அரசனது செங்கோல். செங்கோல் தவறுமானால் நாடு உருப்படமாட்டாது. பசியும் பட்டினியும் நோயும் பிணியும் தான் வாட்டும். மழை பொழியாது. பசுக்கள் பால் சுரக்காது. கொள்ளையும் கொலையும் நாட்டில் மலிந்து விடும்'' என்றார் முதலமைச்சர்.

சங்காபிஷேகம் செய்த குருக்கள் அரசனுக்கு திருநீறு கொடுத்தார்; ''அரசே ஒரு நாட்டின் செங்கோல் எப்படியிருக்கிறது என்று எமது நாட்டுள் நுழையும் அன்னியனொருவன் அந்நாட்டிலுள்ள கோயில்களையும் பாடசாலைகளையும் கொண்டு கணக்கிட்டு விடுவான். மன்னன் நீதிநெறி தவறாது ஆண்டால் தான் மக்கள் மகிழ்வுடன் கோயிலுக்கு வருவார்கள். பெரும் பெரும் விழாக்கள் செய்வார்கள். இன்று எமது கிராமத்தில் உள்ள அத்தனை அந்தணர்களும் மக்களும் கோயிலுக்கு ஏராளமான பொருட்களுடன் வந்துள்ளனர். மகா கணபதிக்கு நூற்றுக்கு மேற்பட்ட கிடாரங்களில் நிரப்பப்பட்ட பாலால் அபிஷேகம் செய்தோம். நெய் ,தானியங்கள், இளநீர், கரும்பு போன்றன மலை போலக் குவிந்துள்ளன. இவையெல்லாம் உனது செங்கோலின் சிறப்பை பறை சாற்றுகின்றன. ஒரு நாடு சிறக்க வேண்டுமானால் அறம் சிறக்க வேண்டும். அறஞ் செழித்தால் அந்தணர்கள் மகிழ்வுடன் வேதமோதுவார்கள். அந்தணர்கள் வேதமோதவும், அறஞ்சிறக்கவும் வழி வகுப்பது மன்னனது செங்கோலாகும். உனது மூதாதையரது காலத்தில் அந்தணர்கள் வேதமோதினர். அறஞ் சிறந்து விளங்கியது. அதை நீ பின்பற்றுவதால் மாதம் மும்மாரி பொழிகிறது. மக்கள் மகிழ்வுடன் வாழ்கிறார்கள். எங்கே நீ கௌத்தமனுக்கு ஆட்சியுரிமையை வழங்கி விடுவாயோ என்று பயந்தேன். நீ உனது செங்கோலின் மகிமையால் நீதியை நிலை நாட்டிவிட்டாய். நீ நீடுழி வாழ்ந்து, மக்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வாழ்த்தினார்.

அப்பொழுது குறுநில மன்னன் சிங்கராஜன் தனது பட்டத்தரசியுடனும் நூற்றுக்கு மேற்பட்ட குதிரை வீரர்களுடனும் வந்து மகா கணபதி ஆலய முன்றலில் இறங்கினான். பருத்தி மலை வீரர்கள் அணிவகுத்து நின்று மரியாதையுடன் அவனை வரவேற்றனர்; ''அரசே! இன்று உனது நாட்டினுள்ளால் வரும் போது பார்த்தேன் கோயில்களிலெல்லாம் அந்தணர்கள் வேதமோதிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் மகிழ்வுடன் உனது நாமத்தை உச்சரித்து உனக்கு ஆசி வேண்டி வணங்குகிறார்கள். அந்தணர் ஓதும் வேதத்திற்கும் அறத்திற்கும் அடிப்படையாக இருந்தது உலகைக் காப்பது அரசனது செங்கோலாகும். இன்று நாட்டில் உள்ள கோயில்களின் சிறப்பைக் கண்டு மகிழ்ந்தேன்'' என்று கூறியவாறு தான் கொண்டு வந்த பரிசுப் பொருட்களை சுந்தரசேனனிடங் கொடுத்தார். வீரர்கள் விதம் விதமான நவரத்தினங்களையும் மாணிக்கங்களையும் இரத்தினங்களையும் கூடைகளில் சுமந்து வந்து கொடுத்தனர்.

**543. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்**
**நின்றது மன்னவன் கோல்.**

அந்தணர் ஓதும் வேதத்திற்கும், அறத்திற்கும் மூலமாக நின்று உலகத்தைக் காப்பது மன்னனுடைய செங்கோலாகும்.

## உலகம் நடக்கும்

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட அலங்கார மேடையில் இருந்த சிங்காசனத்தில் சுந்தரசேனனும் பட்டத்தரசி சகுந்தலாதேவியும் அமர்ந்திருந்தனர்.

‘‘சுந்தரசேனனை மகாராஜா வாழ்க! வளமுடன் வாழ்க!!’’ என்று மக்கள் எழுப்பிய கோசம் வானைப் பிளந்தது.

‘‘அரசே! நீ நீடூழி வாழ்ந்து எம்மையெல்லாம் கண் போலக் காத்தல் வேண்டும். நான் துன்பமுற்று வந்த வேளை எனது துன்பத்தைப் போக்கி எனக்கு வாழ்வளித்த தெய்வம் நீ. இன்னும் நூறாண்டு வாழ வேண்டும்’’ என்று ஒரு மூதாட்டி வாழ்த்தினாள்.

‘‘விவசாயிகளின் தலைவனே! நாட்டில் உள்ள விவசாயிகள் அனைவரையும் பாகுபாடின்றிக் காத்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் தினமுஞ் செய்து வருகிறாய். உழவர்கள் நெல்லை வருடம் முழுக்கப் பயிடுகிறார்கள். போதியளவு நீர் அவர்களுக்குக் கிடைக்கிறது. விவசாயிகள் எல்லாத் தானியங்களையும் விழைவிக்கிறார்கள். கரும்பும் தேனும் நிறையக் கிடைக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் நீ குடி மக்களை அணைத்துக் கொண்டு நல்லாட்சி புரிவதே’’ என்றான் ஓர் உழவன்.

‘‘அரசே! நாட்டின் தேவையை விடப் பத்து மடங்கு பாலைப் பசுக்கள் தருகின்றன. அவற்றை சிற்றரசுகளுக்கு விற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்’’ என்றான் ஒரு பண்ணையாளன்.

அதைக் கேட்ட சிங்கராஜன் சொன்னான்; ‘‘அரசே எமது நாட்டிற்குப் பால்தேவை’’

‘‘சிங்கராஜனின் நாட்டிற்குத் தேவையான பாலை அனுப்புங்கள். அவனிடம் பணம் பெற வேண்டாம். பண்ணையாளர்கள் வர்த்தக அமைச்சரிடம் பணம் பெறுங்கள்’’ என்றான் சுந்தரசேனன்.

‘‘அரசே! தாங்கள் செய்யும் உதவிகள் மூலம் வெளிநாட்டு வர்த்தகம் மேலோங்கியுள்ளது. எமது நாட்டில் விளையும் பொருட்களுக்கு அயல் நாடுகளில் நல்ல மதிப்பிருக்கிறது. எமது நாடு சகல வழிகளிலும் தன்னிறைவடைந்திருப்பதால், அயல் நாட்டில் விழையும் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியவில்லை. அதனால் வர்த்தகர்களாகிய நாம் கஷ்டப்படுகிறோம். எமக்கு மானியம் தரவேண்டும்’’ என்றான் ஒரு வர்த்தகன்.

சுந்தரசேனன் பலமாகச் சிரித்தான். நாடு தன்னிறைவடைந்திருப்பதை நினைக்க அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது; ‘‘தேவையானளவு மானியங்கள் வழங்க முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார்’’ என்றான் மன்னன்.

‘‘அரசே எமது நாட்டில் நெய்யப்படும் உடைகளுக்கு அயல்நாடுகளில் நல்ல மதிப்பிருக்கிறது. எனவே எமது ஆடை நெய்யும் ஆலைகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்’’ என்றான் ஒரு ஆடை நெய்பவன்.

‘‘அப்படியே செய்கிறேன்’’ என்ற சுந்தரசேனன் முதலமைச்சரைப் பார்த்துச் சொன்னான்; ‘‘குடிமக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி நல்லாட்சி புரியும் அரசனைப் பின்பற்றி உலகம் நடக்கு மென்று பெரியவர்கள் கூறக்கேட்டிருக்கிறேன். அதனால் உமது தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழுவொன்றை உருவாக்கி, எமது நாட்டு மக்களின் மனதில் உள்ள குறைகளை கேட்டறியுங்கள். எனது நாட்டில் வாழும் எந்த ஒரு குடிமகனும் எந்தக் குறையுமில்லாமல் வாழவேண்டும்.’’

முதலமைச்சர் பூரித்துப் போனார். அவர் சுந்தரசேனனது தந்தையிருக்கும் காலத்திலும் முதலமைச்சராகக் கடமைபுரிந்தவர். அவரும் நீதி நெறிதவறாமல் ஆட்சி புரிந்து வந்தார். ஆனால் சுந்தரசேனன் பல விஷயங்களில் அவரை விட திறமையாகச் செயற்படுவதை அவர் அடிக்கடி பார்த்திருக்கிறார். கௌசிகனது விஷயத்தில் தான் அவர் சற்றுத் தடுமாறினார். கௌசல்யகுமாரி பல விதமாயங்கள் தெரிந்தவள். சுந்தரசேனனை அசையவிடாது தனது கைப்பிடிக்குள் வைத்திருந்தாள். அவன் கோபித்தால் கூட அவள் கோபிக்க மாட்டாள். கோபித்தாலும் அன்று இரவு கொஞ்சிக் குலாவி அவனை வசீகரித்து விடுவாள். அதனால் சுந்தரசேனன் அவளது கைக்குள்ளே இருந்தான். அதனால் அவன் கௌசல்யகுமாரியின் பேச்சைக் கேட்டு நீதி தவறுவான் என்று நினைத்திருந்தார். அவர் எதிர்பாராதவாறு கௌசிகனுக்கு மரணதண்டனை கொடுத்ததோடல்லாமல் கௌசல்ய குமாரியின் பிடியை விட்டு மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்தது. அதனால் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

‘‘மக்கள் மகிழ்வாயிருந்தால் மன்னனும் மகிழ்வுடன் இருப்பான். மக்கள் மகிழ வேண்டுமானால் அரசன் மக்களை அரவணைத்து அரசாட்சி செய்ய வேண்டும்’’ என்றான் சுந்தரசேனன்.

**544. குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

குடிகளை அன்போடு அனைத்து அவர்களின் குறைகள் யாவற்றையும் தீர்த்து அரசாளுகின்ற அரசனின் பாதங்களைப் போற்றி பின் பற்றி நிற்கும் உலகு.

## ஒருசேர இருப்பவை

அன்று விஷேடமாக அரசவை கூட்டப்பட்டது. முப்படைத்தளபதிகளும் முதலமைச்சரும் ஏராளமான விவசாயிகளும் அங்கு கூடியிருந்தனர்.

‘‘அவசரகால நிலையைப் பிரகடணப்படுத்த வேண்டிய நிலைக்கு நான் ஆட்படுத்தப்பட்டுள்ளேன். வழக்கத்தை விட மழை அதிகமாகப் பெய்தமையால் நீர் நிலைகள் யாவும் நிரம்பி விட்டன. நீர் வீணாகக் கூடாதென்பதற்காக குளத்தில் தேங்கிய நீரைத் திறந்து கடலுக்குள் விடுவதில்லை வருடத்தில் இருமுறை நெல்விதைக்கும் உழவர்கள் இவ்வருடம் மூன்று முறை நெல்லை விதைத்துள்ளனர். அத்துடன் மாரிகாலத்தில் விதைக்கப்படும் மேட்டு நிலங்கள் யாவும் மும்முறையும் விதைக்கப்பட்டமையாலும், பெருந்தொகையான காடுகளைவெட்டி அழித்து நெல்லை விதைத்தாலும் விளைச்சல் பெருகிவிட்டது. தற்பொழுது விளைந்த நெல்லை அறுவடை செய்ய முடியவில்லை. போர்க்காலம் போலச் சில நாட்களுக்கு நாம் செயற்பட வேண்டும். முப்படைத்தளபதிகளும்

முப்படையைச் சேர்ந்த வீரர்களை வயலுக்கு அழைத்துச் சென்று அறுவடை செய்தல் வேண்டும். இதை வீரர்கள் அவமானமாகக் கருதாது சேவையாகக் கருதிப் பணியாற்ற வேண்டும்'' என்றான் சுந்தரசேனன்.

முப்படைத்தளபதிகளும் எதுவும் பேசவில்லை. காலாட்படைத்தளபதி வீர பாண்டியன் மற்றைய இரு தளபதிகளும் எதுவும் பேசாமலிருந்ததால் சொன்னார்; "அரசே படைவீரர்கள் எந்த நேரத்திலும் எந்த வேலையையும் செய்யக் கூடியவர்களாகவே இருத்தல் வேண்டும். இது ஒன்றும் புதுமையானதல்ல. தங்களது தந்தையின் காலத்தில் விளைந்த நெல்லை அறுவடை செய்ய முப்படை வீரர்களாலும் முடியவில்லை. அதனால் அவர் சிற்றரசுக்குட்பட்ட மக்களில் பெரும்பான்மையானவர்களை இரண்டு மடங்கு கூலி கொடுத்து அறுவடை செய்தவர். அதனால் எமது வீரர்கள் அதை அவமானமாகக் கருதமாட்டார்கள். அத்துடன் நீதி முறைப்படி நல்லாட்சி நடத்தும் அரசனுடைய நாட்டில் பருவமழையும் குறைவில்லாத விளைவும் ஒருசேர நிறைந்திருப்பது புதுமையானதல்ல. எனவே எமது வீரர் நாளையிலிருந்து அறுவடை வேலையில் ஈடுபடுவார்கள்''.

மற்றைய இரு தளபதிகளும் வீரபாண்டியன் சொன்னதை ஏற்றுக் கொண்டனர். முதலமைச்சர் சொன்னார்; "எமது முப்படை வீரர்களும் இரண்டு மாதங்களுக்குக் கடுமையாகப் பணிபுரிந்தாலும் அரைவாசி அறுவடையைக் கூட முடிக்கமாட்டார்கள். அயல் நாட்டிலிருந்து கூலியாட்களை வரவழைத்தால் நல்லது. பருவமழை தொடங்க இன்னும் ஒரு மாதமே உள்ளதால் அயல் நாடுகளிலிருந்து கூலியாட்களை உடனே வரவழைத்தல் வேண்டும். அத்துடன் இப்பொழுதே நெற்களஞ்சியங்கள் நிறைந்து விட்டன. அதனால் மேலும் பல நெற் களஞ்சியங்களை உருவாக்குதல் வேண்டும். அத்துடன் அயல்நாடுகளில் உள்ள நெல்லுக்குற்றும் ஆலைகளை வாடகைக்கு அமர்த்தி நெல்லைக் குற்றிக் கப்பல்மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்புதல் வேண்டும். சிங்கராஜனிடம் பெரிய கப்பல்கள் உள்ளன. அவற்றில் வெளிநாடுகளுக்கு அரிசியை உடன் அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்''.

பருத்திமலையில் கப்பல் வாணிபஞ் செய்பவனான உலகநாதன் சொன்னான்; "அரசே எமது நாட்டிலிருந்து பொருட்களைக் கொண்டு செல்லலாமே தவிர அங்கிருந்து எந்தப் பொருட்களையும் நாம் இங்கு கொண்டு வர முடியாது. எல்லாத் தானியங்களும் இங்கு விளைவிக்கப்படுகின்றன. மற்றைய பொருட்கள் யாவும் இங்கு உற்பத்தியாகின்றன. அத்துடன் பிற நாடுகளை விட எல்லாப் பொருட்களும் இங்கு மலிவாகக் கிடைக்கின்றன. அதனால் கப்பல் கூலியாக இரண்டு மடங்கு பணம் தருதல் வேண்டும்.''

''அதில் நியாயமிருக்கிறது அரசே. அடுத்த முறை விவசாயிகளை இரண்டுமுறை மட்டுமே விதைக்க அனுமதித்தல் வேண்டும். அத்துடன் குறிக்கப்பட்ட நிலத்தில் தான் நெல்லை விதைக்க அனுமதித்தல் வேண்டும். இல்லாவிட்டால் உற்பத்திப் பொருட்களைத் தீயிட்டு அழிக்க வேண்டிய நிலை உண்டாகும்.'' என்றார் முதலமைச்சர் சிவபூரணன்.

சுந்தரசேனன் எதுவும் பேசாது எழுந்து நெடுநேரம் உலாவினான். அவனால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. போரானால் உடனே முடிவெடுக்கும் மன்னன் அன்று முடிவெடுக்க முடியாது உலவியதால் அனைவரும் செய்வதறியாது திகைத்துப் போயிருந்தனர்.

“மக்களைத் தானியங்களை உற்பத்தி செய்யக்கூடாதென்று சொல்வது துரோகம். முறைப்படி நல்லாட்சி புரியும் அரசனுடைய நாட்டில் பருவமழையும் குறையாத விளைவும் உண்டாவது ஆச்சரியமானதல்ல. அதனால் வேறு வழி வகைகளை ஆலோசிக்க வேண்டும்” என்றான் உலகநாதன்.

**545. இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட**
**பெயலும் விளையுளும் தொக்கு.**

நீதி வழுவாது, அரசாளும் அரசனது நாட்டில் பருவ மழையால் நிறைந்த விளைவு ஏற்படும்.

## வெற்றிக்குதவுவது

“அரசே! நல்லூரில் இன்று இனந்தெரியாத மூவர் கொல்லப்பட்டுள்ளனர். இருவர் பரதேசிகள். வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்து உண்பவர்கள். ஒருவர் தவசி. எமது நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் நிஷ்டையில் இருப்பவர். அவர் பலருக்கு சோதிடம் பார்த்துச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்வதை வேதவாக்காக மக்கள் நம்புவார்கள். அப்படியிருக அவர் கொலையுண்டதை நினைக்க ஆச்சரியமாக உள்ளது. எனினும் புலன் விசாரனைக்கு உத்தரவிட்டுள்ளேன். ஆரம்பத் தகவல்களின் படி அவர்கள் அரண்மனையைப் பற்றி விசாரித்ததாக மக்கள் சொல்கிறார்கள்” என்றார் முதலமைச்சர் சிவபூரணன்.

“அவர்கள் மங்களபுரி நாட்டின் ஒற்றர்கள் என்று மக்கள் பேசியதை நானும் அறிந்துள்ளேன். எனினும் அவர்கள் உண்மையில் ஒற்றர்கள் தானா என்பதைத் தீவிரவிசாரித்த பின்பே அரசனால் தான் தண்டனை வழங்கப்படுதல் வேண்டும். அது தான் நீதி. மக்கள் நீதியை தம்கையில் எடுக்க அனுமதிக்கக் கூடாது. உடனே அச்சம்பவத்தைப் பற்றி ஆராய்ந்தறிந்து குற்றஞ் செய்தவர்களைக் கைது செய்து நீதிமன்றிற்குக் கொண்டு வாருங்கள்” சுந்தரசேனன் கட்டளையிட்டான்.

“அப்பொழுது அங்கே ஒற்றவன் ஒருவன் வந்து அரசனை வணங்கி நின்றான்; “சொல்” என்றான் சுந்தரசேனன்.

“அரசே கொலை செய்யப்பட்ட மூவரும் மங்களபுரி நாட்டின் ஒற்றர்கள். பரதேசியாக வந்தவர்களுள் ஒருவன் படைத்தளபதி. மற்றய இருவரும் ஒற்றர்கள். மங்களபுரி மன்னன் முன்பும் எம்முடன் போர் தொடுத்துத் தோல்வியடைந்தவன். போர் வீரர்கள் எல்லோரும் தமது ஆயுதங்களை வைத்து விட்டு அரிவாள்களுடன் கடந்த மூன்று மாதகாலமாக அறுவடை செய்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சியில்லை; அத்துடன் அவர்கள் அறுவடையி லீடுபட்டிருப்பதால் போருக்குத் தயாராக இருக்க மாட்டார்கள் என்று மங்கள புரி மன்னன் நந்திதேவன் தவறாக நினைத்து விட்டான். அதற்குக் காரணமானவன் தளபதி விஜயசிங்கன். விஜயசிங்கன் கௌசல்ய குமாரி அம்மையாரின் இனத்தவன். அத்துடன் கௌத்தமன் உயிருடன் இருந்த காலத்தில் அவனுடன் நட்புப் பூண்டு அடிக்கடி அவனது நண்பன் அரவிந்தன் என்ற பெயரில் அரண்மனைக்கு வந்து செல்பவன். அவன் சமீபநாட்களாக பிச்சைக்கார வேடமிட்டு அரண்மனைக்கும் வந்து சென்றிருக்கிறான். இது பற்றி ஏற்கனவே

நாம் தங்களுக்கு அறிவித்துள்ளோம்...'' ஒற்றன் பேசுவதை நிறுத்தி விட்டு மன்னனைப் பார்த்தான்.

சுந்தரசேனன்; ''மேலே சொல்'' என்றான்.

''மன்னா, தளபதி விஜயசிங்கன் எமது நாட்டிலுள்ள இளைஞர் சிலருக்கு மாணிக்கங்களையும் இரத்தினங்களையும் கொடுத்துத் தனது திட்டத்தை மெல்லக் கூறியிருக்கிறான். சில இளைஞர்கள் தாம் உதவி செய்வதாகக் கூறி அவர்களை இரவு வரும்படி கூற, அவர்கள் மூவரும் வந்திருக்கின்றனர். அவ் இளைஞர்கள் மூவரையும் கட்டி விட்டு தமக்கிருக்கும் நாட்டுப் பற்றைப் பற்றிச் சொல்லி அதை எழுதி வாங்கி மங்கள புரி மன்னன் நந்திதேவனுக்கு அனுப்பி விட்டு மூவரையும் கொலை செய்து விட்டார்கள். அந்த இளைஞர்கள் யார் என்று எம்மால் கண்டு பிடிக்கமுடியவில்லை. யாரைக் கேட்டாலும் தமக்குத் தெரியாது என்கிறார்கள். நந்திதேவனது அரண்மனையிலிருந்து தான் இத்தகவல்களைப் பெற முடிந்தது''.

''அந்தளவிற்கு எமது ஒற்றர்கள் பலவீனமாகி விட்டார்களா?இதை அனுமதிக்க முடியாது. நாளை இதைப் போல வேறு பல சம்பவங்களும் இடம்பெறலாம். நாட்டில் தண்டனை வழங்கும் உரிமை அரசனுக்கு மட்டும் தான் உண்டு. அதை எல்லோரும் உணரல் வேண்டும். தளபதியாரே உடனே சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சபைக்குக் கொண்டு வாருங்கள்'' என்றான் சுந்தரசேனன். அவனது முகம் கோபத்தாலும் சிவந்தது.

''மன்னா! கோபங் கொள்ளாதீர்கள். ஒரு அரசனுக்கு வெற்றி பெற்றுத் தருவது போர் வீரர்களும் கூரிய ஆயுதங்களுமல்ல; நீதி நெறி தவறாது சிறப்பாக ஆட்சி செய்யும் முறைதான் என்றும் வெற்றியைத் தேடித் தரும். மக்களுக்கு தமது நாட்டுக்குள் அந்நியர் புகுவது விருப்பமில்லை. பருத்திமலை மக்கள் எல்லோரும் வீரமானவர்கள். மதிநுட்பம் படைத்தவர்கள். அந்நிய நாட்டு ஒற்றர்களைத் தாமே கண்டுபிடித்துத் தண்டனை வழங்கிவிடுவார்கள். அதனால் நாம் அங்கு செல்லக்கூடாது என்று எதிரிகள் நினைக்க வேண்டு மென்பதற்காக இதைச் செய்திருக்கிறார்கள். இதை எமது ஒற்றர்களாலும் கண்டு பிடிக்க முடியாது'' என்றார் சிவபூரணன்.

''இதை அனுமதிக்க முடியாது'' என்று கோபத்தால் கர்ஜித்தான் சுந்தரசேனன்.

**546. வேல்அன்று வென்றி தருவது; மன்னவன்
கோல்அதூஉம் கோடாது எனின்.**

ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது வேல் அல்ல, மன்னனது நீதி தவறாத ஆட்சி முறையே ஆகும்.

### காப்பாற்றுபவை

அரசசபையில் வெகு நேரம் அமைதி நிலவியது. சுந்தரசேனன் சிங்காசனத்தால் எழுந்து அங்குமிங்கும் உலாவினான். பின் சொன்னான்; ''எனது தந்தையார் எனக்கு முடிசூட்டு முன்பு சொன்ன வார்த்தைகள் இன்னும் எனக்கு நினைவில் இருக்கின்றன. அவர் சொன்னார்; ''மகனே அரசன் சட்டங்களை

உருவாக்குகிறான். மக்களெல்லோரும் செம்மறியாடுகளைப் போல அச் சட்டங்களை முடிந்த முடிவாக ஏற்று நடக்கவேண்டு மென்று எண்ணாதே. ஏனெனில் மக்களின் முன்னேற்றத்திற்காகத் தான் நீ எதையும் செய்தல் வேண்டும். உனது கட்டளையை எல்லோரும் ஏற்று நடக்க வேண்டுமென எண்ணாதே. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நெகிழ்ந்து கொடுத்து ஆட்சியை நடத்து. அரசன் எம்மையெல்லாம் காப்பாற்றுவான், அரசனை நீதி நெறி தவறாத நல்லாட்சி காப்பாற்றும் என்றே மக்கள் நினைத்து வாழ்கிறார்கள். அந்த நினைப்பு மாறக்கூடாது. மாறினால் உனது வீழ்ச்சி ஆரம்பமாகி விட்டது என்று தான் அர்த்தம். அரசன் மக்களை வழிநடத்த வேண்டும். மக்கள் அடிபணியாது அரசனை அனுசரித்து நடத்தல் வேண்டும். தேவைப்படும் போது இடப்படும் சட்டங்கள் சந்தர்ப்பங்களுக்கேற்ற மாதிரி மாற்றியமைக்கப்படல் வேண்டும். பிடிவாதமும், செருக்கும், மனநெகிழ்ச்சியில்லாத தன்மையும் உடைய அரசனின் ஆட்சியில் கலகங்கள் தான் தினமும் உருவாகும். இதை நீ எந்த நாளும் நினைவில் வைத்துக்கொள். மகனே, நீ முதலில் மனிதனாக இருந்து சிந்தித்துப் பார். பின் அரசனாகச் செயற்படு. ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழிவகைகளைக் கொண்டு கட்டளையிடு. நீ அரசன், நீ வாழ்ந்து மறைந்த பின் உனக்குப் பின்னால் ஓர் அழியாத வரலாறு இருத்தல் வேண்டும்;'' என்றவர் நாட்டில் நடக்கும் இத்தகைய சம்பவங்கள் மக்களை அச்சுறுத்தும். இது பின் வளர்ந்து பாரிய விழைவுகளை உண்டாக்கும்''.

''மன்னா! கோபங் கொள்ளாது அமைதியாக இருங்கள். நீங்கள் நினைப்பது போல அது பெரிய விடயமாக இருந்தால் கூட நீங்கள் கோபப்பட்டு அவசர முடிவுகளை எடுத்தல் கூடாது. நான் வீரர்கள் பலரையும், ஒற்றர்கள் பலரையும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் அனுப்பியுள்ளேன். அவர்கள் நல்ல முடிவுடன் வருவார்கள்'' என்றார் தளபதி.

அவர் அப்படிச் சொன்ன போதும் சுந்தரசேனனின் மனம் ஆறுதலடையவில்லை; ''மக்கள் கீழ்படிவதற்கு முதலில் கற்றுக் கொள்ளல் வேண்டும். அரச கட்டளைப்படி கொலை செய்வது பாரதூரமான குற்றம். அச்சட்டத்தை மதித்துக் கீழ் படிந்து நடந்து கொள்ள இளைஞர்கள் முதலில் கற்றுக் கொள்ளல் வேண்டும். இதை விட்டு விட்டு தாமே நீதிவான் என்றெண்ணிச் செயற்படும் முறையை என்னால் அங்கீகரிக்க முடியாது. எதிரியாக இருந்தாலென்ன பகைவனாக இருந்தாலென்ன மக்களாக இருந்தாலென்ன சட்டம் மாறாதென்பது தங்கள் எவருக்கும் புரியாததல்ல. இந்த நிலையை வளர விடக்கூடாது. இந்நிலை வளர்ந்தால் பின் எல்லோரும் நீதிவானாகி விடுவார்கள். அரச சபையோ நீதிமன்றோ தேவையில்லாதனவாகி விடும்'' என்றான்.

''உண்மை தான் அரசே. இச்செயலை செய்தவர்களுக்கு அது யாராக இருந்தாலும் சரி தகுந்த தண்டனையைக் கொடுங்கள்'' என்றார் தளபதி. அதை முதலமைச்சரும் ஒப்புக் கொண்டார். அதனால் சுந்தரசேனனது ஆத்திரம் கொஞ்சங் கொஞ்சமாக குறைந்து கொண்டு வந்தது.

''எந்த மக்களையும் புறக்கணிக்காது. அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தமையால் தான் இப்படியான செயலொன்று நடந்துள்ளதாக நான் கருதுகிறேன். எமது எழுற்சிக்கான காரணம் அதுதான். எமது நாட்டில் சகல மக்களுக்கும் போதியளவு உணவு கிடைக்கிறது. கல்வி வசதி கிடைக்கிறது. அத்துடன் வசதிகளைக் கொண்ட வீடுகளும் அவர்களிடம் உண்டு. நல்லாட்சி

நடைபெறுவதால் அவர்கள் சகல வசதிகளையும் அனுபவிக்கிறார்கள். அயல் நாட்டவர்களால் எமது அரசனுக்கு எந்த விதப் பாதிப்பும் ஏற்படக்கூடாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். தங்கள் தந்தை சொன்னதை நான் தங்களுக்கு நினைவு படுத்துகிறேன்; ''ஆட்சி செய்யும் அரசன் நீதி நெறியின் படி ஆட்சிபுரிந்து உலகத்தையெல்லாம் காப்பாற்றுவான். அரசனை அவனது ஆட்சிமுறை காப்பாற்றும்'' என்று நினைத்துத் தங்கள் மீது கொண்ட அளவற்ற அன்பாலும் பாசத்தாலும் அப்படி நடந்து விட்டதாகச் செய்திகள் சொல்கின்றன. அரசர் கோபந்தணிந்து இவற்றை ஆராய வேண்டும்'' என்றார் சிவபூரணன்.

**547. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்.**

உலகத்தை அரசன் காப்பாற்றுவான்.; அரசனை ,நீதி நெறி முறை தவறாத ஆட்சி காப்பாற்றும்.

### நிலைகுலைபவன்

''மக்கள் தாம் விரும்பிய போது அரசனைச் சந்தித்துக் குறைகளைக் கூறுதல் வேண்டும். அதை அரசன் பொறுமையாக இருந்து ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆராயாது தீர்ப்பு வழங்கும் அரசன் எதிரிகளில்லாமலே கெட்டழிந்து போவானெனத் தர்மசாஸ்திரம் கூறுகிறது. இவற்றை அறியாதவனல்ல நான். இருந்தும் மக்கள் இப்படி நடந்து கொண்டதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மனிதமேம்பாடு, உலக நன்மை என்பனவற்றைக் கருத்திற் கொண்டே அரசனான நான் எனது செயல்களைச் செய்தல் வேண்டும். காலம், செயல், காரணகாரியங்கள், கடமை என்பவற்றைப் பொறுத்தே ஒரு செயலுக்கான தீர்ப்பை வழங்குதல் வேண்டும். எவனொருவன் சிந்திக்காது தன்னால் யாவற்றையும் செய்ய முடியுமென்று நினைக்கிறானோ அத்தகையவன் வாழ்க்கையில் பல முறை ஆபத்துகளுக்குள்ளாகிறான். யாரொருவன் தனக்கு ஒன்றும் தெரியாது என்று பயந்தபடி இருக்கிறானோ அத்தகையவன் தோல்வியை அடைகிறான். அவ்வாறு ஒவ்வொருவனும் நினைவுகளுக்கு ஏற்பவே அவன் பயனடைகிறான். அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைத் தான் அவரவர்கள் செய்தல் வேண்டும். அது தான் அரசநீதி'' என்றான் சுந்தரசேனன்.

''வாழ்க்கையில் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய பணிகள் எவைஎவை யென்று மக்களுக்குத் தெரியும். நாட்டின் மீதுள்ள அதீத பற்றுக் காரணமாகவும், அரசனின் மீதிருந்த பற்றுக் காரணமாகவும் தான் இவ் விபரீதம் நடந்து விட்டது'' தளபதி கூறிக் கொண்டிருக்கும் போது சுந்தரசேனன் குறுக்கிட்டான்; ''உங்கள் பேச்சைப் பார்க்கும் போது செய்தவர்கள் அனைவரையும் தங்களுக்குத் தெரியும் போலத் தோன்றுகிறது''.

''ஆம் அரசே! இந்த நாட்டில் ஒரு துரும்பு அசைந்ததால் கூட எமக்குத் தெரியாமல் அசையாது. செய்தவர்கள் ஆத்திரமிகுதியால் ஆராயாது செய்து விட்டனர். அதற்கான தண்டனையையும் பெறச் சித்தமாக இருக்கிறார்கள். ஆனால், அரசர் இவ்விஷயத்தில் கருணை காட்டுதல் வேண்டும்'' இருந்தார் தளபதி.

“ஆம் அரசே, அந்த நேரம் உண்டான தாய் நாட்டுப்பற்றும், அரசர் மேலிருந்த விசுவாசமும் மற்றெல்லாவற்றையும் மறைத்து விட்டன. செய்தவர்கள் எமது அன்புக்குப் பாத்திரமான ஒற்றர்களான. வேலழகன், மதிசூதனன், சேரன் ஆகிய மூவரும் தான். அவர்களை அழைத்து வாருங்கள்” என்றார் முதலமைச்சர்.

மூவரும் அரசனால் மிகமிக விரும்பப்படுபவர்கள். அவர்கள் வந்து சபையில் நின்றதும் அதிர்ச்சியால் தடுமாறினான் சுந்தரசேனன். வேலழகன் ஒற்றுப் பார்த்து வந்து கூறியவை எவையும் இது வரை பிழைத்ததில்லை.

வேலழகன் சுந்தரசேனனை நிமிர்ந்து பார்த்தான். அவனது தோள்கள் துடித்தன; “அரசே! உங்களை நான் நேசிக்கிறேன். அதை விடத் தாய் நாட்டை விசுவாசிக்கிறேன். இவர்கள் மீது எனக்குச் சந்தேகமிருந்தது. அதனால் எனது வேடத்தை மாற்றி அவர்களுடன் சேர்ந்து கொண்டேன். நேற்றுத்தான் இவர்களின் சுயரூபம் எனக்குத் தெரிய வந்தது. இவர்களுக்குப் பின்னாற் சிலர் செயலாற்றுகின்றனர். இவர்களைத் தப்பவிட்டால் நாட்டிற்குப் பெருந்தீமை உண்டாகும். இவர்கள் இரவு கௌசல்யகுமாரி அம்மையாருடன் தப்பிச் செல்லத்திட்டமிட்டிருந்தனர். அதைத் தடுக்க வேண்டுமானால் நான் போரிட்டே ஆக வேண்டும். போரிட்டேன். இதை அறிந்த மதிசூதனனும் சேரனும் வந்து விட்டனர். அவர்களைக் கொல்லாமல் கைது செய்யும்படி கூறியும் அவர்கள் கேட்கவில்லை” என்றான் வேலழகன்.

சபையில் இருந்த மக்கள் பலர் எழுந்து நின்றனர். மேலும் சபைக்கு வந்தனர்; “அரசே மக்கள் தங்கள் குறைகளை முறையிட நேரில் காண்பதற்கு இயலாத அரசனல்ல நீங்கள். அத்துடன் ஒரு செயலை நன்கு ஆராய்ந்து பார்த்துத் தான் தாங்கள் நீதி வழங்குபவர். இந்த விஷயத்திலும் அப்படியே நடந்து கொள்ளல் வேண்டும் இது தான் எமது விருப்பம்” என்றனர்.

சுந்தரசேனன் எதுவும் பேசாமல் இருந்தான்; “அரசே முன்பும் தங்களது தகப்பனாரின் ஆட்சியிலும் பாட்டனாரின் ஆட்சியிலும் இப்படியான சம்பவங்கள் நடைபெற்றன. தனது தாய் நாட்டின் நன்மைக்காகத் தமது உயிரைத் துறக்கத் துணிந்த வீரர்களை நாம் மதித்தல் வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில் முன்பு நடந்தவற்றை நாம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அதன் பின்பு தான் தீர்ப்புக் கூறுதல் வேண்டும்” என்றார் முதலமைச்சர்.

சுந்தரசேனனின் உதடுகன் மலர்ந்தன. பூரிப்புடன் சிரித்தான். மக்கள்; “அரசன் வாழ்க” எனக் கோசமிட்டனர்.

**548. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்**
**தண்பதத்தான் தானே கெடும்.**

மக்களின் குறைகளை நேரில் கேட்டறியாதவனாகவும், ஆராய்ந்து பாராமல் நீதி வழங்குபவனாகவும் உள்ள அரசன், பகைவர்கள் யாருமில்லாமலே கெடுவான்.

**மன்னனது கடமை**

‘‘வேலழகன் மீது நம்பிக்கை கொண்டதன் காரணமாகவும், இங்கு குற்றஞ் சாட்டப்படடிருப்போர் மூவரும் எந்நாளும் நாட்டிற்கும் அரசனுக்கும் விசுவாசமாக இருந்தமையாலும் எதிரிகள் தப்பியோடக்கூடிய சந்தர்ப்பமிருந்ததாலும் தான் அவர்கள் கொல்லப்பட்டனர் என்பதை நான் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு விடுதலையளிக்கிறேன். அத்துடன் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்கள் தாம் நீதியைக் கையிலெடுக்கக் கூடாது. இது இந்நாட்டில் நடைபெறும் கடைசிச் செயலாக இருக்கட்டும்’’ என்றான் மன்னன் சுந்தரசேனன்.

‘‘குடிமக்களுக்குப் பிறராலும் தன்னாலும் துன்பம் வராமற் காத்து, அதே சமயம் கொடிய செயல்களைச் செய்பவர்களைத் தண்டிப்பது ஆள்கின்றவனுக்குப் பழியாகாது. அது அவனது கடமை என்பதைத் தாங்கள் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்திருக்கிறீர்கள். முன்பும் மங்கள புரி அரசன் நந்திதேவன் எல்லைப்புறக் கிராமங்களில் உள்ள மக்களுக்குப் பல துன்பங்களைச் செய்தான். அதை அடக்கி மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்தீர்கள். உங்களால் இதுவரை எந்தவிதமான கஷ்டங்களையும் மக்கள் அனுபவிக்கவில்லை. ஆனால் தற்பொழுது சில பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. தங்களது இரண்டாவது மனைவியின் வளர்ப்பு மகன் கௌத்தமனின் செயல்களுக்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் கௌசல்யகுமாரியவர்கள். கௌத்தமனும் அவனது கூட்டத்தினரும் தண்டிக்கப்பட்ட போதும் அதன் சூத்திரதாரியான கௌசல்யகுமாரி தண்டிக்கப்படவில்லை. அதனால் அவளால் மக்களுக்குக் கேடுண்டாகும். கொடிய செயல்கள் பலவற்றைச் செய்த அவள் கட்டாயம் தண்டிக்கப்ப வேண்டியவள். அது உங்களுக்குப் பழியல்ல கடமை என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். அநீதியை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். எல்லாத் தீமைகளையும் எதிர்த்துப் போட வேண்டும். யார் குற்றஞ் செய்தாலும் குற்றஞ் செய்தவர்களின் குலம், தொழில், இனம் என்பற்றை ஆராயாது குற்றத்தை ஆராய்ந்து தீர்பளிக்க வேண்டுமென்று தர்மசாஸ்திரம் கூறுகிறது. அரசனானவன் உறவு முறைகளைப் பார்த்தால் மகத்தான காரியங்கள் எவற்றையும் செய்ய முடியாது. எது வந்தாலென்ன; யாரழிந்தாலென்ன நான் கடமைகளை மறக் மாட்டேன் என்று கூறுவது தான் நீதியான அரசனின் இயல்பு’’ என்று முதலமைச்சர் கூறிக் கொண்டிருக்கையில் அமைதியாகச் சிரித்தான் சுந்தரசேனன். அவனது சிரிப்பைப் புரிந்து கொள்ள முடியாது சற்றுத் தடுமாறினார் சிவபூரணன்.

‘‘நீங்கள் எமது அரசரைப்புரிந்து கொண்டது இவ்வளவு தானா? நாட்டு மக்களின் நலனுக்காகத் தம் நலன்கள் யாவற்றையும் தியாகஞ் செய்த பரம்பரையில் உதித்தவர் தான் எமது மன்னர். தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களை எமது மன்னர் எப்பொழுதாவது வாய் திறந்து சொன்னதுண்டா...? அப்படியிருக்க முதுமையடைந்த முதலமைச்சர் வாக்குமாறி எதை யெதையோ வெல்லாம் பேசுகிறார். மன்னர் கௌசல்யகுமாரியைப் பிடித்து பாதாளச் சிறையிலடைத்துப் பல மணி நேரமாகிவிட்டது. குடிமக்களுக்குத் தன்னால் எந்தத் துன்பமும் வரக்கூடாதென்று நினைத்து நடப்பவர் எமது மன்னர். அது மட்டுமல்லாமல் பிறராலும் எமது மக்களுக்கு துன்பம் நேரக்கூடாது என்றும் நினைப்பவர். அத்துடன் குற்றச் செயல்களைச் செய்பவர்களைத் தண்டிப்பது தனது தலையாய கடமையென்றும் நினைப்பவர். இதை உணராமல் முதலமைச்சர் பேசுவது நகைப்புக்குரியது’’ என்று சொன்னார் தளபதி வீரபாண்டியன்.

சிவபூரணன் அதிர்ச்சியுடன் சுந்தரசேனனைப் பார்த்தார். மன்னன் அமைதியாகப் புன்னகைத்தபடி இருந்தான். அவனது முகத்தில் எந்தவிதமான மாற்றத்தையும்

காணவில்லை. நேற்றுவரை கௌசல்ய குமாரியின் அழகிலும் போதையூட்டும் வார்த்தைகளிலும் மயங்கி அவளே கதியென்று கிடந்த மன்னன் அவளைக் கைது செய்து சிறையிலடைத்தான்?'' அவரால் நம்ப முடியவில்லை.

சுந்தரசேனன் சிரித்தார். அவரது தந்தையார் அவர் முடிசூடு முன் கூறிய வார்த்தைகள் நினைவில் வந்தன; ''மகனே! சொந்தங்கள், உறவுகள் குற்றச் செயல்களில் ஈடுபடும் போது பலவீனப்படாதே. பலவீனானால் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியாது. அவ்வேளைகளில் தைரியமாக இரு; வலிமையுடன் முடிவை எடு. பொறுப்பு முழுவதையும் நீயே ஏற்றுக்கொள். நீயே நாட்டு மக்களது விதியைப்படைப்பவன் என்பதை உணர்ந்து செயற்படு. உனக்குத் தேவையான அனைத்துத் திறமைகளையும் உனக்குள் நீயே உருவாக்கிக் கொள். அடுத்தவரை நம்பாதே....'' அரசன் சிரித்துக் கொண்டே இருந்தான்.

**549. குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்**
**வடுஅன்று வேந்தன் தொழில்.**

குடிகளுக்குப் பிறராலும் தன்னாலும் துன்பம் வராமல் காத்து அவர்கள் செய்யும் குற்றங்களுக்குத் தகுந்த தண்டணை கொடுதல் ஆள்பவனுக்குப் பழியாகாது; அது அவனது கடமையாகும்.

## களையெடுத்தல்

சுந்தரசேனன் நினைத்துப்பார்த்தார். மகத நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற போது அந்தப்புரத்தில் செய்வதறியாது திகைப்படைந்திருந்தாள் கௌசல்யகுமாரி. வீரர்கள் அவளை அரசனின் படுக்கையறைக்குள்ச் சிறை வைத்திருந்தனர். சுந்தரசேனன் அவளை வந்து பார்த்தான். அவளில் குடி கொண்டிருந்த அழகு அவனைக்கிறங்க வைத்தது. திகைத்துத் திகிலடைந்து போயிருந்த அவளது கண்களில் மோகம் குடி கொண்டிருந்தது. அளவறிந்து கைதேர்ந்த சிற்பியால் செதுக்கப்பட்ட சந்தணச் சிலையைப் போல இருந்தாள் அவள். அதனால் சுந்தரசேனன் அவளைக் கைது செய்து அரண்மனைக்குக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். அவளை ஓர் வசதியான அறையில் தங்க வைத்து, அவளுக்கெனப் பல பெண்களைச் சேவகம் செய்யப் பணித்து, சகல வசதிகளோடும் பட்டத்தரசிபோல அவள் வாழ வசதிகள் பல செய்து கொடுத்தான். அவன் அவளைப் பார்ப்பதற்காக தினமும் வருவான். அவள் அவனுடன் பேசமாட்டாள். அவனைக் கண்டதும் உள்ளே சென்று கதவை மூடிப் விடுவாள். அரசன் பணிப்பெண்களோடு கதைத்து விட்டுச் சென்று விடுவான். நாட்செல்லச் செல்ல இருவருக்குமிடையே நெருக்க முண்டானது. பின் அவன் அவளே தஞ்சமென இருந்து விட்டான். பட்டத்தரசியை ஒரு வாரத்திற்கொரு முறையே சந்தித்து வந்தான்.

முதலமைச்சர் அவனுக்குப் புத்திமதிகள் கூறிக் களைத்து விட்டார். அவன் கௌசல்யகுமாரி மீது மோகமுற்றிருந்தாலும் தனது அன்றாடப் பணிகளில் சிரத்தையுடையவனாக இருந்தான். அவனது எந்த வேலையும் அதனாற் பாதிக்கப்படவில்லை. அதனால் முதலமைச்சர் பேசாதிருந்து விட்டார்.

கௌசல்யகுமாரி மாயங்கள் பலவும் அறிந்தவர். சுந்தரசேனன் நினைப்பவற்றை யெல்லாம் செயலில் முடித்துக் காட்டுவாள். அவனது விருப்பங்களை அவள் நிறைவேற்றத் தவறுவதில்லை. நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக அவன் களைத்துச் சோம்பயிருந்தாலும் அவள் அவனின் அருகில் வந்திருந்து மாஜாயாலங்கள் பலவும் புரிந்து அவனை உற்சாக முள்ளவனாக மாற்றி விடுவாள். அதனால் சுந்தரசேனன் வேலைப்பழுவால் களைத்திருக்கும் போதெல்லாம் அவளை நாடி வந்து விடுவான்.

அரசனின் மனநிலையை நன்கு புரிந்து வைத்திருந்த கௌசல்ய குமாரி அவனது பலவீனங்களைப் பல முறை தனக்குச் சாதகமாக்கிப் பல காரியங்களை முடித்திருக்கிறாள்.

"உண்மையில் கௌசல்ய குமாரி ஒரு தேவதை தான். நான் பலவீனப் பட்டிருக்கின்ற வேளைகளில் என்னை உயிர் வாழ வைத்தவள் அவள். மனிதனுக்கு மனஅமைதியை உண்டுபண்ணுவது தான் பெண்களின் தலையாய கடமை. களைப்புற்றிருக்கும் கணவன் உடனடியாக இன்பத்தைப் பெற வைக்க நல்லதொரு மனைவியால் தான் முடியும். அப்படிச் செய்யக்கூடிய பெண்கள் கௌசல்யகுமாரியைப் போலச் சிலர் தான் இருக்கிறார்கள்".

"அரசே! எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டாயிற்று. நான் நீங்கள் கௌசல்யகுமாரியைக் கைது செய்வீர்களெனக் கனவிலும் நினைக்கவில்லை. நம் மூதாதையரால் கட்டிக் காக்கப்பட்ட நீதி உங்கள் ஆட்சியில் தவறி விடுமோ என்று நினைத்தேன். நல்லவேளை பழியிலிருந்து தப்பி விட்டீர்கள்" என்றார் முதலமைச்சர்.

"அரசன், கொடிய குற்றங்களைச் செய்பவர்களுக்கு மரணதண்டனை வழங்கி, நீதியை நிலைநாட்டி நல்லோரைக் காப்பாற்றுவது, பயிர்களின் நன்மைக்காக உழவர்கள் களையைப் பிடுங்கி எறிவதற்குச் சமமாகும். இதையறியாதவனல்ல நான். பல வருடங்களுக்கு முன்பே கௌசல்ய குமாரியின் நடவடிக்கைகளை நான் அறிந்திருந்தேன். இருப்பினும் அவள் எனக்குச் சில உதவிகளைச் செய்திருக்கிறாள். அவள் அதைத் தன் நலங்கருதிச் செய்தாலும் அதனால் நான் மிகவும் பயனடைந்திருக்கிறேன். திருமணமான நான் இன்னொரு பெண் மீது காதல் கொள்வது தவறென்றாலும் எனக்குப் பிள்ளைகளில்லாததால் அவளுக்காவது ஒரு குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்த்தேன். அவள் என்னை ஏமாற்றி விட்டாள். தான் கர்ப்பமாக இருப்பதாகப் பல முறை கூறியிருக்கிறாள். அதை முதலில் நான் நம்பினேன். பிறகு காரணங்கள் சொல்வாள். ஆனால் அவள் கர்ப்பம் தங்காமலிருப்பதற்கு வைத்தியரிடம் மருந்து வாங்கி உண்டிருக்கிறாள். அவளின் மேலிருந்த மோகத்தின் காரணமாக நான் அவளைத் தண்டிக்க முடியாதவனாக இருந்தேன். அதற்காக நாட்டிற்குத் துரோகஞ் செய்ய என்னால் முடியவில்லை" என்றான் சுந்தரசேனன் அவனது குரல் கரகரத்தது.

### 550. கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல், பைங்கூழ் களைகட்டதனொடு நேர்.

அரசன், கொடிய செயல்களைச் செய்தவர்களுக்கு மரணதண்டனை வழங்குவது, பயிரைக் காப்பாற்ற உழவர்கள் களைகளைக் களைவதற்கு ஒப்பான செயலாகும்.

# *கொடியவன்*

மங்கள புரிமன்னன் தனது முதலமைச்சர் வெங்கடேசருடனும் சேனாதிபதி அரசகேசரியுடனும் மந்திராலோசனை நடத்திக் கொண்டிருந்தான்.

‘‘சேனாதிபதியாரே தளபதி விஜயசிங்கன் இல்லாதது எனது வலது கை இல்லாதது போல இருக்கிறது. பருத்திமலையில் உள்ள மக்களே இனங்கண்டு அவனைக் கொலை செய்திருக்கிறார்களென்றால் அவர்களது ஒற்றர்களின் திறமையை எப்படிப் போற்றுவது, நான் ஒற்றர்களை அனுப்பும் படிதான் விஜயசிங்கனுக்குச் சொன்னேன்.ஆனால் அவன் கேளாது தானே சென்றான்’’ கவலைப்பட்டான் நந்திதேவன்.

பருத்திமலையரசனின் இரண்டாவது மனைவி கௌசல்யகுமாரி நடத்தை சரியில்லாதவள். அவளுக்குத்தான் கௌசல்யன் பிறந்தான். அவள் கட்டுக்கதை யொன்றை அவிழ்த்து விட்டதால் அது உண்மையாகி விட்டது. முன்பு மகத நாட்டு மன்னர் சேரியில் இவளைக் கண்டு மையல் கொண்டார். அவள் நல்ல அழகி. அதனால் அவள் மன்னனை வசீகரித்து விட்டாள். அதற்கு முன்பு இளைஞன் ஒருவனோடு கொண்ட தொடர்பால் தான் குழந்தை பிறந்தது. பின் அவள் இன்னொருவனைத் திருமணம் செய்தாள். அதன்பின் தான் மகத நாட்டரசனின் ஆசை நாயகியானாள். இதெல்லாம் சுந்தரசேனனுக்குத் தெரியும். மோகங் காரணமாக அவனால் அவளை வெறுத் தொதுக்க முடியவில்லை. அதற்காகத் தனது குலமானத்தை கெடுக்கவும் அவன் விரும்பவில்லை. அவனைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத கௌசல்யகுமாரி அவன்மீது சந்தேகப்பட்டுத்தான் நமது தளபதி விஜயசிங்கனுடன் தொடர்பு கொண்டாள். அதுவிபரீதமாகி விட்டது. என்ன இருந்தாலும் தளபதியார் பருத்தி மலைப் பிரதேசத்துள் நுழைந்தது பிழைதானே’’ என்றார் முதலமைச்சர் வெங்கடேர்.

‘‘இராஜதந்திரங்கள் பல வகைப்பட்டன. அதில் இதுவும் ஒன்று. ஓர் ஒற்றனை அரசன் சந்தேகித்தால் கைது செய்து விசாரனை நடத்திய பின்புதான் தண்டனை வழங்குதல் வேண்டும். அத்துடன் ஒற்றனுக்குத் தண்டணை வழங்குமுன் அவனது நாட்டரசனுக்கு அறிவித்தல் வேண்டும்’’ என்று கோபத்துடன் சொன்னான் நந்திதேவன்.

‘‘வெங்கடேசர் சிரித்தார்; ‘‘உண்மைதான் மன்னா! அங்கு நடந்தது பெரும் தவறு. ஆனால் மதிநுட்பம் வாய்ந்த அந்நாட்டு ஒற்றர் படைத்தலைவனான வேலழகன் அதிகமேதாவி. அதனால் அரசன் என்ன செய்வானென்று அவனுக்குத் தெரியும். அதனால் தான் மற்றய இருவரைக் கொண்டு கொலை செய்வித்தான். இது இரண்டு காரணங்களுக்காக நடந்தது. ஒன்று விசாரனை நடந்தால் அவர்களை விடுதலை செய்தல் வேண்டும். இரண்டாவது இனிமேல் ஒற்றர்கள் யாராவது நாட்டுள் நுழைந்தால் இது தான் நடக்கும் என்பதை எமக்குச் செயல்மூலம் அறிவித்திருக்கிறார்கள்’’.

மன்னனும் சேனாதிபதியும் எதுவும் கூறவில்லை. அதனால் முதலமைச்சர் கூறினார்; ‘‘அரசே! ஆசைகளுக்கு ஆளாகி முறையற்ற செயல்களைச் செய்வோர் தண்டனைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள். அதே போல அதிக ஆசை கொண்டு முறையற்ற செயல்களால் துன்புறுத்தும் அரசன் கொலைத் தொழிலைச் செய்பவனை விடக் கொடியவனென்று நீதி நூல்கள் கூறுகின்றன. சுந்தரசேனன்

ஆசைகளுக்காளாகி முறையற்ற செயல்களால் குடி மக்களை எந்த வேளையிலும் கொடுமைப்படுத்தாததால் அவன் மீது மக்கள் அளவில்லாத அன்பை வைத்திருக்கிறார்கள். ஆனால் நமது நாட்டின் நிலைவேறு'' நிறுத்தினார் முதலமைச்சர்.

நந்திதேவன் முதலமைச்சரை நிமிர்ந்து பார்த்தான். வெண்பட்டுப் போல நரைத்திருந்த நீண்டதாடியை அவர் வருடிக் கொண்டிருந்தார். அவர் அவனது தந்தையின் காலத்திலிருந்து முதலமைச்சராக இருக்கிறார்.

''அரசே எமது நாட்டின் வேளாண்மை முன்னெனப் போதையும் விட தற்பொழுது மிகவும் பாதிப்படைந்துள்ளது. குளங்கள் ஆழமாக்கப்படவில்லை, வாய்க்கால்கள் செப்பனிடப்படவில்லை. அதனால் மழை நீர் முழுவதும் கடலை சென்றடைகிறது. மக்கள் உணவின்றி வாடுகிறார்கள். பருத்திமலையில் அமோக விளைச்சலேல்பட்டதால் வியாபாரிகள் அங்கே தானியங்களை வாங்கி வந்து இங்கு விற்பனை செய்கிறார்கள். சில சமயம் எமது நாட்டிற்குத் தானியங்களைக் கொண்டு செல்லக்கூடா தென்று சுந்தரசேனன் கட்டளையும் இடுவான். எனவே நாங்கள் சுந்தரசேனனோடு உறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு எமது ஒற்றர்கள் கொலை செய்யப்பட்டதைக் காரணமாகக் கொள்ளலாம்'' என்றார் முதலமைச்சர் வெங்கடேசர்.

நந்திதேவன் சிரித்தான். பின் ஆணவத்துடன் சொன்னான்; ''முதலமைச்சரே உமக்கு வயதாகி விட்டது. எனவே ஓய்வெடுத்துக் கொள்ளும் தளபதியும் இரண்டு ஒற்றர்களும் மக்களால் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதை வைத்துக் கொண்டு போர் தொடுப்பதை விடுத்து நட்புக் கொள்ளச் செல்கிறீர். நீர் மானத்தைக் காக்க ஆடை உடுத்தீரா... இல்லை....'' அவன் ஆவேசமாக கூறிக் கொண்டிருக்கும் போது முதலமைச்சர் குறுக்கிட்டார்; ''அரசே முறையற்ற ஆசைகள் விபரீதத்தில் தான் முடியும். பருத்திமலை மீது போர்த்தொடுப்பதை மங்களபுரி மக்களே விரும்பமாட்டார்கள். ஆசைகளுக்காளாகி முறையற்ற செயல்களால் மக்களைத் துன்புறுத்தும் அரசன் கொலைத் தொழிலைச் செய்பவனை விடக் கொடியவனாவான் என்பார்கள். எமது நாட்டில் மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடுகிறார்கள். அவர்களுக்குதவி செய்யாது வரிப்பணமாக பெருந்தொகைப் பணம் அறவிடப்படுகிறது. அதைக் கொடுக்க முடியாத மக்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். முதலில் அதற்கொரு வழி செய்தல் வேண்டும்'' என்றார் முதலமைச்சர்.

நந்திதேவனுக்குக் கோபம் அளவுக்கதிகமாக வந்தது. தீச்சுடர் கக்கும் விழிகளுடன் முதலமைச்சரைப் பார்த்தான்.

**551. கொலைமேற்கொண் டாரிற்கொடிதே அலைமேற்கொண்டு**
**அல்லவை செய்து ஒழுகும் வேந்து.**

முறையில்லாத செயல்களைச் செய்து குடிகளை வருத்துவதைத் தொழிலாகச் செய்யும் அரசன், கொலைத் தொழிலைச் செய்பவர்களை விடக் கொடியவன்.

## வழிப்பறிக் கள்ளன்

‘‘எந்த ஓர் அரசன் குடிகளின் நன்மையைப்பாராமல் ஆசைகளுக்காளாகி அவர்களைக் கொடுமைப்படுத்துகிறானோ, அத்தகைய அரசன் தன் ஆட்சிக் காலத்தில் எப்பொழுதும் ஆபத்துக்களை எதிர் நோக்கியவனாகவே இருப்பான். தனது நலன்கள் எவையும் பாதிக்கப்படக்கூடாது, மக்கள் எப்பாடுபட்டாலும் படட்டும் என்று ஓர் அரசன் நினைத்துத் தனது மகிழ்விற்காகக் காரியமாற்றினால், அவனது செங்கோல் கொடுங்கோலாக மாறி அவனைக் கொல்லும் என்பதை நீ அறியவில்லையா? வாழ்க்கையில் ஒவ்வொரு வருஞ் செய்ய வேண்டிய பணிகள் என்னவென்ன வென்று அரசனான நீ அறிந்திருத்தல் வேண்டும். பிரமச்சாரியப்பருவத்தில் எமது குல குருவிடம் நீ கற்றுக் கொண்டதெல்லாவற்றையும் மறந்து விட்டாயா? நீதி நெறி தவறாது ஆட்சி செய்யும் அரசனின் நாட்டைக் கைப்பற்ற நினைப்பதே நம் அழிவுக்குக் காரணமாகுமென்று நீ கற்கவில்லையா.... மன்னா! நான் உனது தந்தையைப் போன்றவன். இந்த நாட்டின் மீது அளவில்லாத பக்தி கொண்டவன். விஜயசிங்கன் ஒற்றனாகப் புறப்படும்போதே அந்தவிபரீதமான செயலில் இறங்க வேண்டாமென்று கூறினேன். உனது தந்தையார் எனது ஆலோசனைப்படி நடந்து கொள்வார். அதனால் தான் அவர் ஆண்டபோது மக்கள் எந்தக் குறைவுமில்லாமல் வாழ்ந்தனர். பகையரசர்கள் அவரது பெயரைக் கேட்டாலே நடுங்குவார்கள். ஆனால் இப்பொழுது அயல்நாட்டரசர்கள் உங்கள் நடத்தைகளை விமர்சித்துச் சிரிக்கிறார்கள். இவற்றைத் தெரிவிப்பது முதலமைச்சரான எனது கடமை. உண்மையானவற்றை கூறுபவர்களைப் பலருக்குப் பிடிப்பதில்லை.ஆனால் நேர்மையானவர்கள், கடமையை உயிராக நினைப்பவர்கள், நாட்டுப்பற்றாளர்கள் உண்மைகளை வெளிப்படையாகச் சொல்வார்கள். அவர்களால் நேர்மையீனமாக நடப்பவர்களுடன் ஒத்துழைக்க முடியாது. எனவே பருத்திமலை நாட்டுடன் போர் தொடுக்கும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டு மக்களின் நலனில் அக்கறை யெடுங்கள். மக்கள் மகிழ்வுடனிருந்தால் எந்த எதிரியாலும் எமது நாட்டைக் கைப்பற்ற முடியாது’’.

‘‘வயது சென்று விட்டதால் வாக்கு மாறிப் பேசுகிறீர்கள். பருவமழை பொய்த்ததால் போதியளவு தானியங்கள் விழையவில்லை. அதனால் அரசவைச் செலவுக்காக வரியை அதிகரித்துள்ளேன். வரியறவிடாமல் எப்படி உமக்கு நான் மானியம் வழங்குவது. மக்கள் கஷ்டப்பட்டாலும் அரசவை ஊழியர்களும் போர்வீரர்களும் கஷ்டப்படக்கூடாது. அவர்கள் கஷ்டப்பட்டால் எதிரிகளுக்கு வாய்ப்பாகி விடும்’’ என்றான் நந்திதேவன்.

‘‘நீதி நெறியின் படி நல்லாட்சி செய்யும் மன்னனுடைய நாட்டில் பருவமழையும் குறைவில்லாத விளைவும் ஒருசேர நிறைந்திருக்கும். என்று நீதி நூல்கள் கூறுகின்றன. உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் மழையை நம்பி வாழ்கின்றன. மழை அரசனின் செங்கோலைப் பார்த்துத் தான் பெய்யும். பருத்திமலையில் பருவமழை காலந்தவறாது பெய்கிறது. விளைச்சலும் அதிகமாக உள்ளது. அருகில் உள்ள நாட்டில் பெய்யும் மழை இங்கேன் பெய்யவில்லை. அதற்குக் காரணம் இங்கு மகிழ்ச்சியாக மக்கள் வாழவில்லை. மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தால் தான் கோயில்களில் நல்ல முறையில் பூசைகள் நடைபெறும். இன்று கோயிலுக்குச் செல்வோர் மன்னனின் நலம் வேண்டாது அவனை அழித்து எம்மைக் காப்பாற்று என்று கடவுளை வேண்டுகின்றனர். இது மிகப் பெரிய துன்பமான விஷயம்’’. என்றார் வெங்கடேசர்.

‘‘யாரும் எப்படி வேண்டுமானாலும் கடவுளைத் தொழட்டும். வரியறவிடுதலை நிறுத்த முடியாது’’ என்றான் நந்திதேவன்.

“அரசே செங்கோல் ஏந்தி ஆட்சி செய்யும் அரசன் முறையற்ற வழிகளில் குடிமக்களிடம் பொருள் பறிப்பது, கையில் வேலேந்தி நின்று வழிப்பறிக் கள்வன் பயணிகளிடம் பொருள் கொடு என்று பயமுறுத்திப் பறிப்பதைப் போன்றது. ஒரு முறை பருவமழை பொய்த்து விட்டது. வயல்கள் யாவும் அழிந்து விட்டன. உனது தந்தையார் அவ்வருடம் வரியாக எதையும் அறவிடாது எமது தானியக் களஞ்சியத்தில் இருந்த தானியங்களை மக்களுக்கு மானியமாகக் கொடுத்தார். மக்கள் மகிழ்வுடன் மன்னனை வாழ்த்தினர். கோயில்களில் பக்தியுடன் பூசை செய்தனர். மழை பொழிந்தது. அடுத்த முறை மக்களாகவே முன் வந்து தாம் மானியமாகப் பெற்ற தானியங்களைத் திருப்பிக் கொடுத்தார்கள். இது தான் அரசனின் பண்பு. இதை உணரல் வேண்டும்”.

சேனாதிபதியான அரசசேகரிக்கு முதலமைச்சர் கூறுவது நியாயமாகப்பட்டது. மக்கள் சொல்லொணாத்துயருறும் போது போர் செய்ய முடியாது என்பது அவருக்குத் தெரியும். அதைச் சொல்ல முடியாது தவித்தார். எனினும் சொல்லியே ஆக வேண்டும் என்று நினைத்தார்.

**552. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு.**

ஆட்சிக்குரிய செங்கோலை ஏந்தி அரசாளும் அரசன், குடிகளை வருத்திப் பொருள் கேட்பது, கையில் வேல் ஏந்தி நிற்கும் வழிப்பறிக் கள்வன் பயணிகளிடம் “பொருள் கொடு” என்று பய முறுத்துவதைப் போன்றது.

# தினந்தோறும் இழப்பு

“அரசே எமது முதலமைச்சர் கூறுவது அத்தனையும் உண்மை. இன்று எமது நாட்டு மக்கள் துன்பப்படுகிறார்கள். இதுவரை எமது நாடு கண்டிராத வறுமையை இப்பொழுது கண்டுள்ளது. கோயில்களில் பூசைகள் நடைபெறுவதில்லை. எமது ஆரசபரம்பரையினர் வழிபடும் சிவன் கோயிலில் ஆறு காலப் பூசை முன்பு நடைபெற்றது. தற்பொழுது தாங்கள் மானியத்தைக் குறைத்தால் ஒருநேரப் பூசையே நடைபெறுகிறது. அந்தணர்கள் பூசை செய்வதை விட்டு விட்டு வீடுகளுக்குச் சென்று இரந்து வாழ்கிறார்கள். மழையின்மையால் உழவர்கள் ஏர் கொண்டு உழவில்லை. உழவர்கள் ஏரைத் தூக்கியவளையில் கட்டி விட்டு அயல்நாடுகளுக்குச் சென்று கூலி வேலை செய்கிறார்கள். எமது நாட்டின் உழவர்களில் அதிகமானோர் பருத்திமலைக்குச் சென்று விட்டனர். அங்கு அவர்களுக்கு நல்ல கூலி கிடைக்கிறது..” என்று அரசகேசரி கூறிக் கொண்டிருக்கும் போது நந்திதேவன் குறுக்கிட்டான்; “என்ன? எமது உழவர்கள் பருத்தி மலைக்குச் சென்று விட்டார்களா? இது எனக்குத் தெரியாதே. இது பெரிய அவமானம். உடனே வீரர்களை அனுப்பி பருத்திமலைக்குச் சென்றவர்களின் விபரங்களைச் சேகரித்து அவர்கள் வந்ததும் கைது செய்து என்முன் நிறுத்துங்கள்” என்றான் கோபத்துடன்.

முதலமைச்சர் சிரித்தார்; “மன்னா! தனது நாட்டில் நடை பெறுபவற்றை நாள்தோறும் அறியாது ஆட்சி செய்யும் அரசன் நாள்தோறும் தன்நாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக இழப்பான். உங்களுக்கு நாட்டில் நடைபெறுவன என்னவென்று தெரியாது. அந்தளவில் நீங்கள் மக்களுடன் அன்னியப்பட்டு

விட்டீர்கள். அரசன் எந்தக் கேளிக்கைகளில் கலந்து கொண்டாலும் நாட்டில் நடக்கும் நன்மை தீமைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளல் வேண்டும். சிவன்கோயில் மானியத்தை ஏன் நிறுத்தினீர்களா?. எமது களஞ்சியத்தில் போதியளவு தானியங்கள் உள்ளன. மக்களுக்குக் கூட நாம் மானியம் வழங்கலாம். களஞ்சியக் காப்பாளர் உங்களுக்கு உண்மையான கையிருப்பைப்பற்றிச் சொல்லவில்லை. அவரின் வாயால் அதைக் கேட்பதை விடத் தாங்கள் களஞ்சியத்திற்குச் சென்று பார்வையிட்டிருத்தல் வேண்டும். உங்கள் தகப்பனாரின் காலத்தில் எந்தெந்தக் கிராமத்தில் எந்தெந்தப் பயிர்கள் பயிராகும் என்ற அட்டவணைவைத்திருந்தார். அத்துடன் தானியக் கொள்வனவு செய்யப்பட்ட விபரம் அவரிடம் எந்நேரமும் இருக்கும். நாள்தோறும் விநியோகிக்கப்பட்ட தானியங்களின் விபரமும் அவரிடம் இருக்கும். அதனால் களஞ்சியக் காப்பாளரிடம் கேளாமலே அவர் மானியங்களை வழங்க உத்தரவிடுவார். ஓர் அரசன் நாட்டில் நடைபெறுகின்ற மிகச் சிறிய சிறிய செயல்களைக்கூட அறிந்திருத்தல் வேண்டும். போர்க்காலத்தில் சிறு காயப்பட்ட வீரனும் அதற்கேற்ற சிகிட்சை பெறல் வேண்டும். இல்லாவிட்டால் சிறிய காயம் பெருத்து அவனது உயிரைப் பறித்தும் விடும். இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை மன்னா, உடனடியாக உழவர்களுக்கு மானியம் வழங்குங்கள். அதனால் அவர்கள் அயல் நாட்டிற்குச் செல்ல மாட்டார்கள்'' என்றார்.

''என்ன களஞ்சியத்தில் போதியளவு தானியங்கள் இருக்கின்றனவா?'' அதிர்ந்து போனான் நந்திதேவன்.

''மன்னா! நாட்டில் நடைபெறுகின்ற எதுவும் தெரியாதவராக நீங்கள் இருக்கிறீர்கள். போதியளவு நீரும் உணவும் கிடைக்காத பறவைகளும் விலங்குகளும் கூட நீரையும் உணவையும் தேடிப் பல மைல்கள் செல்கின்றன. மனிதர்கள் செல்ல மாட்டார்களா...? பருத்தி மலைக்குச் சென்ற மக்களை நீங்கள் கைது செய்ய முடியாது. ஏனென்றால் அங்கு சென்றவர்கள் இங்கு வரவில்லை. மக்களுடன் பறவைகளும் விலங்குகளும் அங்கு சென்று மகிழ்வுடன் வாழ்கின்றன.'' என்றார் தளபதி.

''இதற்காகத் தான் சொன்னேன், நாட்டில் நடைபெறும் நன்மை, தீமைகளை அறியாது ஆட்சி செய்யும் அரசன் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்நாட்டை இழப்பானென்று. நாட்டு நிலை இப்படியிருக்க எப்படிப் போர்த்தொடுப்பது'' என்று கேட்டார் வெங்கடேசர்.

''இவற்றை ஏன் முன்பு நீங்கள் எனக்குச் சொல்லவில்லை'' என்று கேட்டான் நந்திதேவன். முதலமைச்சரும் தளபதியும் சிலகணங்கள் எதுவும் பேசவில்லை. தளபதி முதலமைச்சரைப் பார்த்துச் சொல்லுமாறு தலையசைத்தார் ''மன்னா! அரசன் தினமும் மந்திரி பிரதானிகளைச் சந்தித்தல் வேண்டும். பிரதானிகள் சந்திக்க முடியா விட்டால் வீரர்களை அனுப்பி அவர்களை அழைத்து விசாரனை செய்தல் வேண்டும். ஆனால் நீங்கள் அப்படி நடப்பதில்லை. அத்துடன் முக்கிய விஷயங்கள் பேசவென்று நாம் வந்தாலும் உங்களைச் சந்திக்க முடிவதில்லை. மூன்று நாட்களாக முயன்று தான் இன்று சந்தித்துள்ளோம். அதுவும் ஒற்றர்கள் கொலை செய்யப்படாவிட்டால் தங்களைச் சந்திக்கவே முடியாது'' என்றார் வெங்கடேசர்.

**553.நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும்.**

தினமும் தனது ஆட்சியின் நன்மை தீமைகளை ஆராய்ந்து அதற்கேற்ற முறையில் நடவாத அரசன், நாள்தோறும் தனது நாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக இழப்பான்.

## ஒருசேர இழப்பு

‘‘மன்னா போர் தொடுக்கச் சொல்கிறீர்கள். போர் வீரர்கள் பலர் படைகளை விட்டுத் தப்பிச் சென்று விட்டனர். அனேகமான போர்வீரர்கள் உணவின்றிக் கஷ்டப்படுவதால் முறையான பயிற்சிகளை அவர்கள் பெற விரும்புகிறார்களில்லை. ஆயுதங்கள் யாவும் ஆயுதசாலையில் தேடுவாரின்றிக் கறள் பிடிக்கின்றன. ஆயுதங்களுடன் தப்பியோடிய படைவீரர்கள் ஆயுதங்களைக் காட்டி மிரட்டி கொள்ளைகளிலீடுபடுகிறார்கள். பொன்னும் மணியும் தானியங்களும் நிறைந்திருந்த எமது நாட்டில் இப்போது இவற்றைக் காண முடிவதில்லை. கொள்ளையும் கொலைகளும் மலிந்து விட்டன. சிறிய தொரு பொருளுக்காகக் கொலைகளைச் செய்யுமளவிற்கு மக்கள் கேவலமாகிவிட்டனர். இந்த நிலை ஆரோக்கியமானதல்ல’’.வேதனைப்பட்டார் முதலமைச்சர்.

‘‘பருவமழை பொய்த்தால் இவையாவும் நடப்பதுவழக்கம்தானே. இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள். பருவமழை பெய்தால் இடம்பெயர்ந்து சென்றவர்கள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பி விடுவார்கள். பருத்தி மலையில் எந்நாளும் வேலை இருக்குமா என்ன? அத்துடன் பருத்திமலை மக்கள் இங்கிருந்து சென்றவர்களை அடிமைகளாகத் தானே வைத்திருப்பர். அதனால் அவர்கள் இங்கு வந்து தான் தீர வேண்டும்’’ என்றான் நந்திதேவன்.

‘‘அரசே! தாங்கள் எதையும் சரியாகப்புரிந்து கொள்வதில்லை. பருத்திமலை அரசன் சுந்தரசேனன் மிகுந்த புத்திசாலி. தனது நாட்டில் தினமும் நடைபெறும் நன்மை தீமைகளை மட்டுமல்ல அயல் நாடுகளிலும் தினமும் நடைபெறும் நன்மை தீமைகளையும் அறிந்து கொள்வதில் வல்லவன். அத்துடன் முறையற்ற வழிகளில் குடிமக்களிடம் வரியறவிடுவதில்லை. இங்கிருந்து கூலிகளாகச் சென்ற மக்களை அவன் தனிமைப்படுத்தி, எல்லோருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளான். அவர்களது பிள்ளைகள் படிக்க வேறாகப் பாடசாலைகளும் கட்டிக் கொடுத்துள்ளான். அத்துடன் அவர்களிடம் வரிவாங்குவதில்லை. அவர்களுக்கு நல்ல இனப்பசுக்களும் ஆடுகளும் கொடுத்துள்ளான். காட்டு நிலத்தை வெட்டி ஒவ்வொருவருக்கும் நிலமுங் கொடுத்துள்ளான். அவர்கள் நீங்கள் நினைப்பதைப் போல இங்கு வரமாட்டார்கள்’’ என்றார் வெங்கடேசர்.

‘‘எமது மக்களுக்கு அவன் எப்படி வீடுகளைக் கொடுத்து அங்கு தங்கப் பண்ண முடியும். இது அரசியல் தர்மத்திற்கு புறம்பானது அல்லவா?’’ என்று சொன்னான் நந்திதேவன்.

‘‘அரசியல் தர்மத்தை முதலில் நீங்கள் தான் கைக்கொள்ளல் வேண்டும். நீங்கள் யாவற்றையும் ஆராய்ந்து செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது. அரசன் கொடுங்கோலனாகி ஆராயாமல் எதையுஞ் செய்தால், அவன் பொருளையும் குடிமக்களையும் ஒருசேர இழந்து விடுவான் என்று நீதி நூல்கள் கூறுகின்றன. அத்துடன் ஒரு நாட்டில் கடும் பஞ்சம் அல்லது தொழுநோய் ஏற்பட்டால் அந்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து அயல் நாடுகளுக்கு செல்லும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்ய வேண்டியது அந்தந்த நாட்டு

அரசர்களின் தலையாய கடமையாகும். அதற்கமைய பருத்தி மலை அரசன் நடந்துள்ளான். இது தர்மத்தை மீறிய செயலாகாது. அவன் எமது நாட்டிலிருந்து சென்றவர்களைத் தனிமைப்படுத்தி, இருப்பிட வசதிகளைச் செய்து கொடுத்துள்ளான். இங்கு பல்வேறு துன்பங்களை அனுபவித்த மக்கள் அங்கு நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதாக அறிகிறோம். இதனால் இங்குள்ள மக்களும் அங்கு செல்லப்புறப்படுகிறார்கள். அதனால் எல்லைப் புறத்தில் வீரர்களை அமர்த்தி அவர்களை நாட்டைவிட்டு வெளியேறாத முறையில் தடை செய்துள்ளேன்'' என்றார் தளபதி.

''அப்படியா...? நல்லது'' என்ற நந்திதேவனது மனதில் அச்சம் குடிகொண்டது; ''எனக்குத் தெரியாமல் தளபதி கட்டளையிட்டிருக்கிறார். இது விபரீதமாகி விடும். இதை அனுமதிக்கக்கூடாது'' என்று நினைத்தான்.

அதை அவனது முகபாவம் மூலம் அறிந்த தளபதி அரசகேசரி சொன்னார்; ''மன்னா! தினமும் பருத்திமலைக்குச் செல்லும் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டிருந்தது. தங்களைக் கண்டு முடிவெடுக்க நானும் முதலமைச்சரும் பல முறை முயன்றோம். தாங்கள் இளைய ராணியுடன் சுற்றுலாவுக்குச் சென்றிருந்தீர்கள். நான்கு தினங்களாகியும் நீங்கள் வரவில்லை. அதனால் இருவருமாகச் சேர்ந்து இந்த முடிவை எடுத்தோம்'' என்றார் தளபதி.

''பரவாயில்லை இப்படியான முடிவை எடுத்த உங்களை நான் பாராட்டுகிறேன்'' என்றான் நந்திதேவன். இருப்பினும் இனம்புரியாத ஒரு பயம் அவனது மனதில் புகுந்து குடி கொள்ள ஆரம்பித்தது. அத்துடன் தளபதி கூறிய வார்த்தைகள் அவனை மிரட்டின; ''கொங்கோலனாகி ஆராயாமல் எதையுஞ் செய்யும் அரசன் பொருளையும் குடிமக்களையும் ஒரு சேர இழப்பான்'' அவனது உடல் வியர்த்தது.

**554. கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்**
**சூழாது செய்யும் அரசு.**

ஆராயாமல் எதையும் செய்யும் கொடுங்கோலான அரசன், பொருளையும் குடிகளையும் ஒன்றாக இழப்பான்.

## ஆயுதம்

''அரசன் குடிமக்களின் நன்மைக்காக மட்டுமே வாழ்பவனாக இருத்தல் வேண்டும். போர் வீரர்கள் நாட்டின் நன்மைக்காகத் தம்முயிர்களைத் தியாகஞ் செய்தல் வேண்டும். நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதன்மூலம் தான் அரசன் நன்மைகளைப் பெற முடியும். இது தான் சிறந்த அரசனாவதற்கு வழி. அரசன் செய்யும் அருஞ் செயல்கள் மூலம் மக்கள் பலவிதமான நன்மைகளைப் பெற்று அனுபவித்தல் வேண்டும். இந்த உண்மையை நீ உனது வம்ச வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ள ஏன் தவறினாய்?. மக்களின் நன்மைக்காக உனது முன்னோர் பல தியாகங்களைச் செய்தனர். அதனால் இன்னும் அவர்கள் போற்றப்படுகின்றனர். இந்த உலகம் வாழ்வதற்காக உண்டானது. இன்பமாக வாழ்பவர்களுக்குத் தான் உலகம் சொந்தமானது. அதனால் தான் துன்பங்கள் வந்ததும் மக்கள் நாட்டை விட்டுத் தப்பியோடுகிறார்கள். அளவுக்கதிகமான

துன்பங்களேற்பட்டால் கொதித்தெழுவார்கள். அப்பொழுது யாராலும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது'' என்று வெங்கடேசர் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது வெளியே மக்கள் ஆராவாரஞ் செய்யும் சத்தம் கேட்டது. வீரன் ஒருவன் ஓடி வந்து அரசனைப் பணிந்து நின்றான்.

''அரசே! கோட்டைக்கு வெளியே ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்று ஆர்ப்பாட்டஞ் செய்கின்றனர். உடனடியாகத் தாங்கள் உங்களைச் சந்திக்க வேண்டுமாம்''.

''இப்பொழுது அவர்களைச் சந்திக்க முடியாதென்று சொல். வாசலில் காவலில் நிற்கும் வீரர்களை, அவர்களைத் துரத்தச் சொல். கோட்டைக் கதவுகளை மூடுங்கள்'' என்று உத்தரவிட்டான் நந்திதேவன்.

''மன்னா மக்கள் தங்கள் குறைகளை முறையிட நேரில் காண்பதற்கு இயலாதவனாக அரசன் இருந்தால், அவ்வரசன் பகைவரின்றித் தானே தன் நிலை குலைந்து கெடுவானெனப் பெரியவர்கள் கூறுவார்கள். எனவே மக்களிற் சிலரையாவது நேரில் சந்தியுங்கள். அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதைத் தாங்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். நீங்கள் ஒன்றை நினைக்க அவர்கள் வேறொன்றை நினைப்பார்கள்'' என்றார் வெங்கடேசர்.

''முதலமைச்சரே நீங்கள் சென்று சிலரை அழைத்து வாருங்கள்'' என்றான் நந்திதேவன்.

முதலமைச்சர் வெளியே சென்று சிலரை அழைத்து வந்தார். அவர்களுள் ஒருவன் சொன்னான்; ''அரசே எம்மாற் பசியைத் தாங்க முடியவில்லை. நான் சோறு உண்டு பத்துத் தினங்களாகின்றன. பசியால் எனது இரண்டு குழந்தைகள் இறந்து விட்டனர். எனது தகப்பனார் பசியால் வாடியிருக்கிறார். அவரது உயிர் ஊசலாடுகிறது. இதே நிலையில் தான் எம்முள் பலர் இருக்கின்றனர். எனவே எமக்கு உணவு தாருங்கள். இல்லாவிட்டால் விஷம் தாருங்கள். இரண்டிலொன்று இப்போது எமக்குத் தேவை.''

அவனை முதலமைச்சர் பார்த்தார். எலும்புக்கூடாக நின்றான் அவன். அவனை அவரால் பார்க்க முடியவில்லை.

''அரசே எம்மைப் பருத்தி மலைக்குச் செல்ல விடுங்கள். அங்கே சென்ற எமது இனத்தவர்கள் சொர்க்கத்தில் வாழ்பவர்களைப் போல வாழ்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து எழுதும் கடிதங்களை வாசிக்க எம்மால் முடியவில்லை. அவர்கள் இங்கு வாழ்ந்ததை விட நூறு மடங்கு சிறப்பாக வாழ்கின்றனர். எமக்கு உணவு வேண்டாம், உடை வேண்டாம், வேறு எதுவும் வேண்டாம். எம்மை வெளியேற அனுமதித்தாலே போதும்;'' என்றான் ஒருவன்.

''நன்றாக இருந்த எமது நாடு நாசமாய்ப் போய்விட்டது. நீரைப் போல் இருக்கும் கூழாக இருந்தாலும் எனது நாட்டிலிருந்தே நான் குடிக்க விரும்புகிறேன். மன்னா, தயவு செய்து உயிர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடு. இல்லாவிட்டால் உனது குலம்பூண்டோடு அழிந்து விடும்'' என்றான் இன்னொருவன்.

''சரி வெளியே செல்லுங்கள் நான் ஆவன செய்கிறேன்'' என்றான் மன்னன்.

‘‘அரசே! ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும’’ என்பார்கள். அரசனது கொடுமையைத் தாங்க முடியாமல் மக்கள் குமுறி அழுத கண்ணீர் அரசனது ஆட்சியை அடியோடு அழிக்கும் ஆயுதமாகும். எனவே உடனடியாக மக்களுக்கு உணவு வகைகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யுங்கள். இல்லாவிட்டால் பசியால் வாடும் மக்கள் உணவுக்களஞ்சியங்களைக் கொள்ளையிட ஆரம்பித்து விடுவார்கள். முன்பொரு முறை உங்களது பாட்டனாரது காலத்தில் பருவமழை பொய்த்து விட்டது. மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடினார்கள். அரசர் மீது நம்பிக்கையை இழந்தனர். அதை அறிந்த அரசர் உணவுக்களஞ்சியங்களைத் திறந்து விட்டார். மக்கள் அங்கே தானியங்கள் இல்லாமையால் மன்னர் மீது நம்பிக்கை கொண்டனர். தமது விதி அதுவென நினைத்துத் துன்பப்பட்டனர். ஆனால் இன்று அப்படியல்ல, தானியக்களஞ்சியங்களில் தானியங்கள் உண்டு. களஞ்சியக் காப்பாளர் பொய் சொல்கிறார். எனவே அதை ஆராய்ந்து செயலாற்றுங்கள்’’ என்றார் வெங்கடேசர்.

**555. அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர் அன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை.**

அரசனது கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாது மக்கள் வேதனைப் பட்டு அழுத கண்ணீர், அக் கொடுங்கோலானது ஆட்சியை அடியோடு அழிக்கும் படையாகும்.

## புகழ்இல்லை

‘‘இன்று பருத்தி மலை அரசன் சுந்தரசேனனின் புகழ் உலகெங்கும் கொடி கட்டிப் பறக்கிறது. அதற்குக் காரணம் அவனது ஒழுங்கான ஆட்சி முறையேயாகும். தனக்கு மிகவும் பிரியமானவளாக இருந்தபோதும் கௌசல்யகுமாரியின் மகன் தீய செயல்களிலீடுபட்டமையால் அவனுக்கும் அவனது தோழர்கட்கும் மரண தண்டனையைக் கொடுத்தார். அத்துடன் கௌசல்ய குமாரியைப் பிடித்துப் பாதாளச் சிறையில் அடைத்துள்ளார். ஆனால் அவளுக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டு விட்டதாக எமது ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் அவனது புகழ் மேலோங்கியுள்ளது. அத்துடன் அவன் நீதி நெறி தவறாது ஆட்சி செய்வதால் பருவமழை பொய்க்காமல் பெய்கிறது. அதனால் விளைச்சல் பெருகியுள்ளது. அங்கு அறுவடை செய்யக் கூலியாட்கள் இன்மையால் படைவீரர்கள் அறுவடை செய்கிறார்கள். அதுவும் போதாதென்பதால் அயல்நாடுகளிலிருந்து கூலியாக்களை வரவழைத்துள்ளான். அத்துடன் களஞ்சியங்கள் இல்லாததால் வியாபாரிகளுக்கு கடன் அடிப்படையில் தானியங்களைக் கொடுக்கிறார்கள். அத்துடன் பூகம்ப மேற்பட்ட விந்திய நாட்டிற்கு ஆறாயிரம் மூடை நெல்லும் தானியங்களும் கொடுத்துதவியுள்ளான். வீடு இழந்த ஐந்நூறு குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவும் அவன் முன் வந்துள்ளான். அதனால் அவனை உலகம் புகழ்கிறது’’ என்றார் தளபதி அரசகேசரி.

‘‘உங்களை இந்நாட்டு மக்களே இகழ்கிறார்கள். ஓர் அரசனது புகழை நிலை நிறுத்துவது அவனது ஒழுங்கான ஆட்சி முறையாகும். அதிலிருந்து அவன் தவறினால் அவனது ஏழேழு சந்ததியினரது புகழ் இல்லாமல் போய்விடும். உடனே மழை பெய்வதற்காகப் பூசைகள் செய்து கொடும்பாவி கட்டியிழுக்க

ஏற்பாடு செய்தல் வேண்டும். இங்குள்ள மக்கள் அனைவருக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கப்படல் வேண்டும். கோயில்கள் எல்லாவற்றிலும் ஆறுகாலப்பூசை நடைபெற ஏற்பாடு செய்தல் வேண்டும்.'' என்றார் வெங்கடேசர்.

''சரி அப்படியே செய்யுங்கள்'' என்றான் நந்திதேவன்.

மறுநாள் அரசனின் கட்டளைப் படி காரியங்கள் நடைபெற்றன. மழை வேண்டி மக்கள் கோயில்களில் பிரார்த்தனை செய்தனர்.

ஒரு வாரங்கழிந்தது நாட்டில் மழை பொழிந்தது. மக்கள் சந்தோசப் பட்டனர்; ''சேனாதிபதி அரசகேசரியாரும் முதலமைச்சர் வெங்கடேசரும் இருந்தமையால் தான் எமக்கு நிவாரணங் கிடைத்தது. கோயில்களில் பூசைகள் நடைபெற்றன. மன்னன் நாட்டைக் கவனிப்பதில்லை. தனது சுகபோக வாழ்விற்காக மக்களின் செல்வத்தை வீணாக்குகிறான்'' என்று மக்கள் பேசினர்.

அன்று சபை கூடியது. நந்திதேவன் பருத்தி மலைக்குச் சென்ற மக்களைத் திரும்பி வருமாறு பல முறை அழைப்பு விடுத்தும் அவர்கள் திரும்கி வரவில்லை.அதனால் அரசன் கவலைப்பட்டான்.

''அரசே! மக்கள் இங்கு வாழ்ந்ததிலும் பார்க்க பருத்தி மலையில் வசதிகளோடு வாழ்கிறார்கள். மழை பெய்தவுடன் இங்கு வந்து என்ன செய்வது? தொடர்ந்து மழை பெய்தல் வேண்டும். தாங்கள் அளவுக்கதிகமாக வரி விதித்துள்ளீர்கள் அதை நீக்குதல் வேண்டும். அத்துடன் நீங்கள் மக்களை அளவுக்கதிகமாக வருத்தி விட்டீர்கள். அதனால் மக்கள் தம்மை வரவழைப்பதற்குத்தான் சட்டங்களைத் தளர்த்தியுள்ளீர்களென்றும் தாம் நாடு திரும்பியதும் மீண்டும் கொடுமையாக நடந்து கொள்வீர்களென்றும் நினைக்கிறார்கள். மக்கள் தம்மை ஆள்பவனை நம்புதல் வேண்டும். மக்கள் செல்வச் செழிப்பை இழந்து, பொருட்களை இழந்து, வீடு வாசல்களைத் துறந்து பட்டினியால் வாடியபடி தெருக்களில் திரிந்தார்கள். அப்படியானவர்கள் தற்பொழுது தங்களின் மனம் மாறியதை நம்பமாட்டார்கள். எனவே நாம் செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகள் எல்லாவற்றையும் செய்வோம். மக்கள் தமக்கு விரும்பிய நேரம் திரும்பி வரட்டும்'' என்றார் முதலமைச்சர்.

''நான் தவறு செய்து விட்டேன். எனது மூதாதையர் மக்களை மதித்து அவர்களுக்குப் பிறராலும் தன்னாலும் தீமைகள் வராது காத்துக் கொண்டனர். ஆனால் நான் எனது இன்பங்களுக்காக நாட்டையும் மக்களையும் மறந்ததால் தான் இந்நிலைக்குட்பட்டேன். குடி மக்கள் மீது அன்பு செலுத்தி அணைத்து நடவாததால் தான் இவ்வளவும் நேர்ந்தன.'' கவலைப்பட்டான் நந்திதேவன்.

அரசனது சொல்லும் செயலும் முதல் அமைச்சருக்கு நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. மக்கள் கூறுவதைப் போல ஏமாற்றுக்காகவும் அவன் அப்படிச் சொல்வான். அப்படி முன்பும் பல விடயங்களில் அவன் சொன்ன படி செயற்படவில்லை. அதனால் மக்களை வரும்படி கூற அவர் தயங்கினார்.

''முதலமைச்சரே மக்களை நாட்டுக்கு அனுப்பும்படி சுந்தரசேனனுக்குத் தூதுவின் மூலம் அறிவியுங்கள். அவன் எமது மக்களைக் கட்டாயம் அனுப்பி வைக்க வேண்டும்'' என்றான் நந்திதேவன்.

**556. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அ∴து இன்றேல்
மன்னாவாம் மன்னர்க்கு ஒளி.**

அரசனது புகழை நிலை நிறுத்துவது அவனது நீதி தவறாத ஆட்சி முறையே ஆகும். அதிலிருந்து அவன் தவறினால் புகழ் இல்லாமல் போய் விடும்.

## அருளில்லாத ஆட்சி

அன்று மங்களபுரிநாட்டின் துறைமகத்திற்கு அந்நாட்டு வணிகன் ஏமநாதனது மூன்று கப்பல்கள் பொருட்களுடன் வந்து நின்றன. துறைமுக ஊழியர்கள் அக்கப்பல்கள் மூன்றையும் துறைமுகத்துள் நங்கூரமிட விடவில்லை. அதனால் மூன்று கப்பல்களும் துறைமுகத்திற்கு வெளியே வெகு தூரத்திற்குகப்பால் நங்கூரமிட்டிருந்தன. அதனால் ஏமநாதன் அரசவைக்கு வந்தான்.

அன்று சூறாவளி மையங் கொண்டிருந்தது. மாலையாவதற்குள் துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிட்டிருக்கும் கப்பல்களை துறைமுகத்துள் கொண்டு சென்று நங்கூரமிடல் வேண்டும். ஏமநாதன் அரசசபைக்கு வந்தபோது அரசன் சபையில் இருக்கவில்லை. முதலமைச்சர் வெங்கடேசரே இருந்தார்.

‘‘முதலமைச்சரே, சுந்தரசேனன் எமது நாட்டில் பஞ்சத்தால் வருந்தும் மக்களுக்காக மூன்று கப்பல்களில் உணவுப் பொருட்களை ஏற்றி அனுப்பியுள்ளான். கப்பற் கூலியையும் அவனே தந்துள்ளான். இன்று வானம் மப்பும் மந்தாரமாக உள்ளது. பலத்த காற்று வீசக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. எனவே துறைமுகத்துள் கப்பல்களை நங்கூரமிட அனுமதித்தல் வேண்டும்’’ என்றான்.

‘‘ஏமநாதா! உனது எண்ணம் எனக்குப் புரிகிறது. சுந்தரசேனனின் நல்லெண்ணமும் எனக்குப் புரிகிறது. ஆனால் நந்திதேவனின் குணம் உனக்குத் தெரியும் தானே. அவன் வறுமையைச் சாட்டி சுந்தரசேனன் தனது மக்களிடம் நற்பெயர் வாங்க விரும்புகிறான் என்று தான் நினைப்பான். எனவே மன்னனைக் கண்டு அவனுடன் பேசிய பின்பு கப்பல்களைத் துறைமுகத்துள் கொண்டு வந்து பொருட்களை இறக்கு’’ என்றார்.

‘‘மன்னர் எங்கே....? வானம் இருணடு கொண்டு வருவதைப் பார்க்கப் பயமாக உள்ளது’’ என்றான் ஏமநாதன்.

‘‘அவர் இளையராணியுடன் அந்தப் புரத்தில் இருக்கிறார். அவர் இளையராணியுடன் அந்தப்புரத்தில் இருக்கும்போது யாரும் உள்ளே செல்ல முடியாது’’ என்றார் முதலமைச்சர்.

‘‘மக்களைப் புறக்கணித்து விட்டு கேளிக்கைகளில் ஈடுபட்டதால் தான் இந்நாட்டிற்கு இத்தகைய கேடு வந்தது. மக்களுக்கு சிறந்த கல்வியையும், நல்ல உணவுகளையும் கொடுத்து, அவர்களை நல்ல முறையில் கவனித்தல் வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் உழைப்பாளிகள்; போர்வீரர்கள்; ஆசிரியர்கள் நாட்டைக் கட்டியெழுப்பும் தொழிலாளர்கள். அப்படிப்பட்டவர்கள் இன்று உணவில்லாமல் வாடுகிறார்கள். அடிமையாக வாழ்கிறார்கள். மன்னன் தனது மக்களைக் காப்பாற்ற முடியாவிட்டால் அரசாட்சியைத் துறக்க வேண்டும்.

இல்லாவிட்டால் மக்களை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டும். இரண்டையும் செய்யாமல் தனது இன்பங்களைக் குறைவின்றி அனுபவித்தால் என்னென்ன நடக்குமென்று தெரியுமா?'' ஏமநாதன் கோபத்துடன் கேட்டான்.

''எனக்குத் தெரியும். ஆனால் அரசருக்குத் தெரியவில்லையே. நீர் சற்றுப் பொறுத்திரு நான் அந்தப்புரத்திற்குச் சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றார் வெங்கடேசர்.

முதல் அமைச்சர் சென்று வெகுநேரமாகியும் அரசன் வரவில்லை. அதனால் ஏமநாதன் கப்பலைப் பருத்தி மலைத்துறைமுகத்திற்குக் கொண்டு செல்லுமாறு கப்பல்தலைவனுக்கு கட்டளையிட்டான். அரசனைச் சந்தித்து விட்டு வருவதாகக்கூறிச் சென்ற முதலமைச்சர் வருவாரெனப் பொறுமையுடன் காத்திருந்தான்.

வெகு நேரத்தின் பின் முதலமைச்சர் சோர்ந்து வாடிய முகத்துடன் அங்கு வந்தார்; ''ஏமநாதன், அரசர் இளையராணியுடன் கூடியிருக்கும் வேளையில் யாரையும் சந்திக்க மாட்டார். செய்தியை அந்தப்புரத்துப் பணிப்பெண்மூலம் சொல்லியனுப்பினேன். வெகுநேரத்தின் பின் அவள் வந்து நாளைக் காலையில் வந்து சந்திக்குமாறு சொல்லச் சொன்னதாகச் சொன்னாள்'' என்றார்.

''மழையில்லாவிட்டால் உலகம் எவ்வளவு பெருந்துன்பத்தை அடையுமோ, அது போல் அருளில்லாத அரசனது ஆட்சியால் மக்கள் பெருந்துன்பங்கள் பலவற்றை அனுபவிப்பார்கள். அரசன் ஆயுதபலத்தால் மக்களை ஒடுக்கலாமென நினைக்கிறான். அது நடைபெறாது. கலப்பை பிடித்து உழுத உழவர்களின் கைகள் சோர்ந்து விட்டன. மக்களைப் புறக்கணித்து ஒதுக்கிய மன்னன் நீண்ட காலம் வாழ்ந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை'' என்று கூறிவிட்டு எழுந்தான் ஏமநாதன். முதலமைச்சருக்குக் கவலையாக இருந்தது. அரசனது விபரீதமான போக்கால் 'அவன் நாட்டை இழக்கப் போகிறான்'' என்று நினைத்தார் முதலில் உதவும் நாடு தான் பின் இடம் பெயரும் மககளின் கஷ்டத்தைப் போக்கப்படையெடுக்கும்'' என்று நினைத்தார்.

**557. துளியின்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்**
**அளியின்மை வாழும் உயிர்க்கு.**

மழைத்துளி இல்லா விட்டால் உலகம் எத்தன்மை யாகுமோ, அத்தன்மையானதே நாட்டில் வாழும் குடி மக்களுக்கு அருளில்லாத அரசனின் ஆட்சி.

## வறுமையில் துன்பம்

ஏமநாதன் காலையில் அரசசபைக்கு வந்தான். அவன் வந்த போது முதலமைச்சரான வெங்கடேசரும் சபையில் இருக்கவில்லை. அவன் வெகுநேரம் சபையில் இருந்தான். அரசனைச் சந்திப்பதற்காக இன்றும் பலர் வந்திருந்தனர். வெகு நேரத்திற்குப் பின்பு வந்த வீரன் ஒருவன்; ''இன்று அரசர் சபைக்கு வரமாட்டார்'' என்று கூறிவிட்டு உடனே சென்று விட்டான். சபையில் இருந்த

பொதுமக்கள் சிலர் எழுந்து சென்றனர். சிலர் இருந்தனர். அரசன் வராவிட்டாலும் முதலமைச்சர் வருவார் என்ற நினைப்பில் அங்கு அமர்ந்திருந்தான் ஏமநாதன்.

ஒரு மணித்தியாலத்தின் பின் முதலமைச்சர் வந்தார். மரியாதைக்காக இல்லாவிட்டாலும் வயதிற்காகவாவது ஏமநாதன் எழுந்து மரியாதை செய்யவில்லை. அரசனுக்கு நிகரான வணிகன் அவன். அரசனிடம் உள்ள பொக்கிச அறையில் உள்ள பொக்கிசங்களை விட அவனிடம் அதிகமாக உண்டு.

‘‘வணக்கம் அமைச்சரே, காலையில் என்னைச் சந்திக்கச் சொன்ன அரசர் பகல் வேளை கடந்தும் சந்திக்க வரவில்லை. இது தானா உங்கள் அரசரின் இலட்சணம். பசியால் நலிந்து வாடும் மக்களைக் கவனிக்காது அரசன் அப்படி என்ன செய்கிறார். பருத்தி மலைக்குச் சென்ற மக்களை வரும்படி கூறினால் போதுமா? அவர்களின் நலன்களைக் கவனிக்க வேண்டாமா?’’

முதலமைச்சர் எதுவும் பேசவில்லை. அவரால் பேசமுடியவில்லை. அதனால் பேசாமல் இருந்தார். ஏமநாதன் சொன்னான்; ‘‘நமது நாட்டு மக்கள் உணவில்லாமல் வீதி வீதியாய் அலைவதைக் காணும் போது எனது உடல் பற்றி எரிகிறது. நான் பணக்காரனானது அவர்களால் தான். அவர்களது விளை பொருட்களை வாங்கிச் சென்று விற்றும், பிறநாடுகளிலிருந்து பொருட்களை வாங்கி வந்து அவர்களுக்கு விற்றுமே நான் பெரும் வணிகனானேன். அவர்களது பரிதாப நிலையைக் கண்டு பொறுக்க முடியாததால் தான் பருத்தி மலைக்குச் சென்று தானியங்களைக் கப்பலில் ஏற்றி வந்தேன். அவற்றை அரசனின் அனுமதியுடன் துறைமுகத்தில் இறக்கவே நான் விரும்புகின்றேன். அனுமதியில்லாமல் கடற்கரையில் இறக்கி மக்களுக்குக் கொடுக்க என்னால் முடியும். அதனால் மக்கள் மன்னருக்கெதிராகக் கிளர்ந்தெழுவார்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை. அரசனும் மக்களைப் போன்ற ஓர் உயிர்தானே. மன்னனுக்குள்ள உரிமைகள் யாவும் மக்களுக்கும் உண்டென்று அவர்கள் நினைத்து விட்டால் என்ன நடக்கும் மென்று உங்களுக்குத் தெரியும். முறையில்லாத அரசனது ஆட்சியில் வாழும் செல்வந்தர்களும் ஏழைகள் தான். அவர்கள் வறுமையில் வாழ்பவர்களை விடத் துன்பத்துடன் தான் வாழ்கிறார்கள். என்னால் ஒரு பிடி சோற்றை நிம்மதியாக உண்ண முடியவில்லை. சுற்றியிருப்போர் எனது வாடிக்கையாளர்களும் வறுமையால் வாடும் போது என்னால் எப்படி உண்ண முடியும்...’’ நீங்கள் அரசனோடு சேர்ந்து வயிறார உண்கிறீர்கள். என்னால் அப்படி உண்ண முடியவில்லை. தயவு செய்து அரசனிடஞ் சென்று நான் சொன்னவற்றைச் சொல்லுங்கள். இன்று அரசன் முடிவானதொரு பதிலைக்கூறா விட்டால் நான் இங்கிருந்து செல்ல மாட்டேன் என்றும் கூறுங்கள்’’ என்றான் ஏமநாதன்.

முதலமைச்சருக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அவன் அரசனோடு சேர்த்துத் தன்னையும் குறைகூறுவதை அவரால் பொறுக்க முடியவில்ல. எனினும் எதுவும் பேசாது எழுந்து சென்றார்; ‘‘முறையில்லாத அரசனது ஆட்சியின் கீழ் வாழும் மக்களுக்குச் செல்வம் உடையவர்களாக வாழ்வது, வறுமையில் வாழ்வதைவிடத் துன்பமானது’’ என்று ஏமநாதன் கூறியது அவரது காதுகளில் ஒலித்தது.

முதலமைச்சர் சென்று பலமணிநேரமாகியும் திரும்பி வரவில்லை. ஏமநாதனுக்குப் பசித்தது. காலையிலும் அவன் உணவு உண்ணவில்லை. அதனால் அவனுக்குத் தலைசுற்றியது. உடல் வியர்த்தது. தினமும் மூன்று

வேளை சாப்பிடும் எனக்கு இன்று காலையில் சாப்பிடாததால் தலைசுற்றுகிறது. இரண்டு மூன்று தினங்கள் உண்ணாது இருக்கும் ஏழைகள் பசியை எப்படித் தாங்குகிறார்கள்'' என்பதை நினைக்க அவனுக்கு மயக்கம் வருவது போல இருந்தது.

நேரஞ் சென்று கொண்டிருந்ததே தவிர அமைச்சர் வரவில்லை. அதனால் ஏமநாதன் எழுந்தான்; ''முறையில்லாத அரசனோடு கதைப்பது வீண். அவனைக் காத்துக் கொண்டிருப்பதிலும் பார்க்கச் சென்று விடலாம். அவன் வரமாட்டான். வந்தாலும் உருப்படியாக எதுவும் சொல்ல மாட்டான்'' என்று நினைத்தவாறு நடந்தான்.

**558. இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா**
**மன்னவன் கோல்கீழ்ப் படின்.**

நீதியில்லாத முறையில் ஆட்சி செய்யும் அரசனின் ஆட்சியின் கீழ் வாழும் மக்களுக்குப் பொருளில்லாத வறுமை நிலையை விடச் செல்வ நிலை துன்பமானதாகும்.

## பொய்க்கும்

வீட்டுக்கு வந்து உணவை உண்ட ஏமநாதன், வீட்டு முற்றத்தில் நின்ற வேப்பமரத்தின் கீழிருந்த சாய்வு நாற்காலியில் படுத்திருந்தான். அவன் சமீப நாட்களாக வீட்டில் சமைத்து தனது வீட்டுக்கு வரும் ஏழைமக்களுக் கொடுத்து வந்தான். ஏராளமான மக்கள் அன்று அவனது வீட்டுக்கு வந்தனர். பருத்திமலையிலிருந்து தரைமார்க்கமாக அவன் அரிசியையும் தானியங்களையும் கொண்டு வந்திருந்தான். அவற்றைச் சமைத்துச் சில தினங்களாக உணவு கொடுத்து வருகிறான்.

இரண்டு தினங்களுக்கு முன்பு சிறிதாகப் பெய்த மழையின் காரணமாக வெப்பம் அதிகரித்திருந்தது. இரண்டு நாட்களாக வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்ததே தவிர மழை பெய்யவில்லை. காற்றுத் தான் கடுமையாக வீசியது. அதனால் ஏமநாதன் முதல் நாள் கப்பல்களை மங்கள புரித்துறைமுகத்தின் உள்ளே செல்ல அனுமதிக்காததால் அவன் கப்பலைத் துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிடச் சொல்லிச் சொல்லியிருந்தான். முன்பு பருத்திமலைக்குத் திரும்பிச் செல்ல உத்தரவிட்ட போதும் காற்றுப் பலமாக வீசாதென்று உணர்ந்தமையால் அவன் கப்பலை பருத்திமலைத் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லவில்லை.

சாய்வு நாற்காலியால் எழுந்த ஏமநாதன் முதலமைச்சரின் வீட்டுக்குச் சென்றான். முதலமைச்சர் அவனை மகிழ்வுடன் அழைத்து ஆசனத்தில் இருத்தினார்; '' அரசனைச் சந்திக்க முடியவில்லை. நான் பகல் உணவை உண்ணாது மன்னரிடமிருந்து செய்தி வருமென்று காத்திருந்தேன். மன்னர் தலைநகரிலிருந்து சுமார் ஐம்பதுமைல் தொலைவில் இருக்கும் நந்தவனத்திற்கு இளையராணியுடன் சென்றமையால் அவரைச் சந்திக்க முடியவில்லை. அவருக்கு நாட்டின் நிலை பற்றி அக்கறையே இல்லை. நானும் சேனாதிபதியும் மக்களைப் பற்றிக் கூறினால் ஒப்புக்கு ஏதாவது கூறுகிறாரே தவிர நடைமுறைப்படுத்துவதில்லை. இளைய ராணி மிகவும் இளமையானவள். நல்ல அழகி. அவளின் அழகில் மயங்கி நாட்டையும் மக்களையும் மட்டும் அவர் மறக்கவில்லை, பட்டத்தரசியையும் பிள்ளைகளையும் மறந்து விட்டார்.

பட்டத்தரசியை அவர் சந்தித்து மாதக்கணக்காகி விட்டது. பட்டததரசி கவலையால் மாய்ந்து கொண்டிருக்கிறார்'' என்றார் முதலமைச்சர்.

''நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் அந்நாட்டில் வாழும் உழவர்களே ஆவர். அவர்கள் தமது தொழில்களைச் செய்யாது விட்டு விட்டார்கள். பருவமழை பொய்த்து விட்டது. இந்த வருடமும் பொய்த்தால் அரசருக்கு உணவு எங்கிருந்து வரும். மன்னரும் பருத்தி மலைக்குச் செல்ல வேண்டியது தான். நீர்வளமும் நிலவளமும் நிறைந்த எமது நாட்டில் அரசனின் முறையற்ற ஆட்சிகாரணமாக பருவமழை பொய்த்து விட்டது. அதனால் மக்கள் பசியால் வாடுகிறார்கள். இதைப் போக்க வேண்டும். ஆனால் அரசன் போக்க வேண்டிய எண்ணத்தை விட்டு விட்டு இளையராணியுடன் இன்பச்சுற்றுலா மேற்கொள்கிறார். அதை உணர்ந்து கொள்கிறாரும் இல்லை. கப்பலில் ஏற்றப்பட்ட உணவு மூன்று தினங்களாகக் கப்பலிலேயே உள்ளது. இதனால் கப்பலின் வாடகை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அதனால் தாங்கள் தானியங்களை இறக்கி மக்களுக்குக் கொடுக்க அனுமதித்தல் வேண்டும்'' என்றான் ஏமநாதன்.

''இது பற்றி நான் மூன்று முறை அரசனுக்குச் சொல்லியனுப்பி விட்டேன். ஆனால் அவன் பதில் கூறாது தான் நேரில் வந்து உன்னுடன் கதைப்பதாகச் கூறுகிறான். பருத்திமலை அரசன் சுந்தரசேனனுக்கும் எமது மன்னனுக்கும் பகையிருக்கிறது. அதனால் தான் தட்டிக்கழிக்கிறான் போலத் தெரிகிறது'' என்றா் முதலமைச்சர்.

''இதில் தட்டிக் கழிக்க என்ன இருக்கிறது?. வேண்டாமென்று சொன்னால் நான் திருப்பிக் கொண்டு சென்று கொடுத்து விடலாம். ஏற்கனவே கப்பலில் உணவை ஏற்றும் போது பருத்தி மலை அரசன் தூதுவர்கள் மூலம் எமது நாட்டரசனுக்குச் செய்தியனுப்பியதாகக் கூறுகிறார். தூதுவர்கள் வந்து கூறும் போது எமது அரசா் எதுவும் சொல்லாது செய்தியடங்கிய ஓலையை வாங்கியிருக்கிறார். அவ்வோலையை வாங்காது விட்டிருக்கலாம். அரசனது மனதில் ஈவிரக்கமில்லை. மக்களின் மீது அன்பில்லை; அக்கறையில்லை. அதனால் பருவமழை பொய்த்து விட்டது. பெய்த மழையை நம்பிச் சிலா் வயலை உழுது விதைக்கின்றனர். அதுவும் நட்டத்திற்கேயாகும். உள்ள தானியங்களையும் வயல்களில் விதைத்து விட்டார்கள். மழை பெய்யாவிட்டால் விவசாயிகளுக்கு நட்டமேற்படும். நீங்கள் இருந்து பாருங்கள் இன்னும் சில நாட்களில் மக்கள் கிளர்ந்தெழுவார்கள். அரசன் நாட்டை விட்டுத் தப்பியோடக் கூடிய நிலை தானாகவே உருவாகும்'' என்றான் ஏமநாதன். முதலமைச்சா் எதுவும் பேசாதிருந்தார்.

**559. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல்.**

அரசன் நீதி நெறி தவறி நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவ மழை தவறி மேகம் மழை பெய்யாமல் போகும்.

***குன்றும்***

அன்று சிவன் கோயிலில் நூற்றுக்கணக்கான அந்தணர்கள் கூடி, மழை வேண்டிச் சிவனுக்கு பாலாவிசேகம் செய்யத்தீர்மானித்தனர். முதல் நாள் ஏமநாதன் தலைமை யில் கூட்டம் நடைபெற்றது. ஏமநாதன் பூசைக்கு வேண்டியளவு பொருட்களைக் கொடுத்தான். பல மாதங்களுககுப் பின்பு

தேவைக்கு மிஞ்சியளவு பொருட்களை ஏமநாதன் கொடுத்தமையால் அந்தணர்கள் மகிழ்ந்தனர். பாலும் இளநீரும் தயிரும் அறுகம் புற்களும் பூக்களும் மாலைகளும் கொண்டு வரும்படி அந்தணர்கள் மக்களை வேண்டிக் கொண்டனர்.

மற்றய நாட்களிலென்றால் பூக்களும் இளநீரும் மலைகளாகக் குவியும். கிடாரம் கிடாரமாக பாலும் தயிரும் கொண்டு வந்து மக்கள் கொடுப்பார்கள். ஆனால் அன்று கூட்டத்தில் மக்கள் மௌனமாக இருந்தனர். அவர்களது முகம் கவலையால் கறுத்திருந்தது.

"அந்தணர்களே! எமது நாட்டில் பருவ மழை பொய்த்து விட்டது. மழைதான் ஒரு நாட்டின் உயிர் நாடி. அது பொய்த்து விட்டால் உலகம் படிப்படியாக அழிந்து விடும். இப்பொழுது மங்களபுரி தினமும் அழிந்து கொண்டே வருகிறது. நாட்டு மன்னனின் முறையற்ற ஆட்சியால் அமிர்தத்திற்கு ஒப்பான மழை நாட்டில் பெய்யவில்லை. மக்களுக்கு நல்ல நல்ல உணவு வகைகளை உற்பத்தி செய்து கொடுத்துத் தானும் சிறந்த உணவாவது தானே மழையின் சிறப்பு. அதனால் எமது நாட்டில் புல் பூண்டுகளெல்லாம் வெப்பத்தால் கருகி விட்டன. ஒரு பசும்புல்லின் தலையை இந் நாட்டில் காணமுடியவில்லை. நாங்கள் அறுகம்புல் லைத் தேடி நாடுமுழுவதும் செல்ல வேண்டியதாகவுள்ளது. மரங்கள் செடி கொடிகள் யாவும் பட்டு விட்டதால் நாம் பூக்களுக்கு எங்கே போவோம்?. பசுக்கள் உணவும் நீரும் இன்றி செத்துக் கொண்டிருக்கின்றன. பால் சுரக்கும் மடி வற்றி விட்டது. அரசன் முறைப்படி மக்களைக் காக்கா விட்டால் அந்த நாட்டில் பசுக்கள் பால் தருவதைக் குறைக்கும். அந்தணர்கள் அறமோதுவதை மறந்து விடுவார்கள் என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. அதனால் நாம் பூக்களுக்கும் பாலுக்கும் தயிருக்கும் இளநீருக்கும் எங்கே போவது. எல்லையில் வீரர்களில்லையானால் நாம் பருத்தி மலைக்குச் சென்று பெற்று வருவோம்" என்றான் ஒருவன்.

அன்று கோயிலில் பெரிய தொரு அன்னதானஞ் செய்யத்தீர்மானித்திருந்தான் ஏமநாதன். ஆனால் இதை அவன் யோசிக்கவில்லை. அதனால் சொன்னான்; "எல்லைப்படை விரர்கள் தற்பொழுது அரசனின் கட்டளைகளை ஏற்பதில்லை. திரவியங்களை வாங்கிக் கொண்டு மக்களை உள்ளே செல்லவும் வெளியே வரவும் அனுமதிக்கிறார்கள். நான் அவர்களுக்கு திரவியங்களைக் கொடுக்கிறேன். நீங்கள் இப்பொழுதே புறப்பட்டுச் சென்று தேவையானவற்றை யெல்லாம் பருத்திமலையில் வாங்கி வாருங்கள்" என்றான்.

நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் பருத்திமலைக்குப் புறப்பட்டனர்; "ஐயா, பெரியவரே தங்கள் பெரும் வணிகன். தாங்கள் இருப்பதால் தான் நாம் இந்தளவிலாவது வாழ்கிறோம். அரசன் நாட்டின் நினைவேயில்லாது நடந்து கொள்வதால் நாட்டின் சகல வளங்களும் குறைந்து விட்டன. எந்த நிலையில் உள்ளவர்களுக்கு நீரில்லாமல் உலக வாழ்க்கை நடைபெற மாட்டாது. வானம் பொய்த்ததால் நமது கலை, கலாச்சாரம், ஒழுக்கம் யாவும் கெட்டு விட்டன. அதனால் இதற்கொரு முடிவை வெகுவிரைவில் எடுத்தாக வேண்டும்". என்றார் ஓர் அந்தணர். இன்னொருவன்.

மறுநாள் அபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பருத்தி மலைக்குச் சென்ற மக்கள் தேவையானளவு பால், தயிர், இளநீர், கரும்பு, பூப்பளுடன் வந்தனர். அபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்தணர்கள் பக்தி

சிரத்தையுடன் வேதங்களை ஓதினர். மக்கள் பயபக்தியுடன் சிவனைத் தொழுதனர். அவர்களின் மனதில் மழை பெய்ய வேண்டு மென்ற எண்ணமே இருந்தது.

பூசை முடிந்ததும் மக்களுக்கு அறு சுவை உணவு வழங்கப்பட்டது. பல மாதங்களுக்குப் பின் சுவையுள்ள உணவுகளை மக்கள் மகிழ்வுடன் உண்டனர். ஏமநாதன் எல்லைப்படைவீரர்களுக்குத் திரவியங்களை அடிக்கடி கொடுத்து வந்தான் அதனால் மக்கள் தடையின்றி பருத்திமலைக்குச் சென்று வந்தனர். நாளடைவில் ஏமநாதனின் சொற்களையே மக்களும் வீரர்களும் கேட்டுச் செயற்பட ஆரம்பித்தனர். இதை அறிந்த முதலமைச்சர் மனதுள் கலங்கிய போதும் மன்னனுக்குச் சொல்லவில்லை.

**560. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்**
**காவலன் காவான் எனின்.**

நாட்டைக் காக்கும் அரசன் முறைப்படி நாட்டைக் காக்கா விட்டால், பசுக்கள் பால் தருவதைக் குறைக்கும். அந்தணர்கள் அறநூல்களை மறந்து போவர்.

## அரசனின் கடமை

அன்று மங்களபுரி நாட்டின் சபை கூடியது. முப்படைத்தளபதிகளும் முதலமைச்சரும் சேனாதிபதியும் பெரிய பெரிய அறிஞர்களும் அங்கிருந்தனர்.

‘‘ஏமநாதன் எமது நாட்டிற்குத் துரோகஞ் செய்கிறான். அவன் எல்லைக் காவற்படை வீரர்களுக்குப் பணம் கொடுத்து எமது நாட்டு மக்களைப் பருத்தி மலைக்கு அனுப்பிப் பொருட்களைத் தலைச் சுமையாகக் கொண்டு வரப்பண்ணுகிறான். அப்பொருட்களை விற்று அவன் சம்பாதிக்கிறான். நான் அவனது கப்பல்களைத் துறைமுகத்துள் நுளையவிடாது தடுத்தமையால் தான் அப்படிச் செய்கிறான். இது தேசத்துரோகம். உடனே அவனைக் கைது செய்து மரணதண்டனை நிறைவேற்றுங்கள்’’ என்று தனது வீரர்களுக்குக் கட்டளையிட்டான் நந்திதேவன்.

வீரர்கள் வெளியே சென்று வாசலில் நின்றனர்.

‘‘அரசே! ஒருவன் குற்றஞ் செய்தால் அவன் ஏன் அக்குற்றத்தைச் செய்தான்’’ அக்குற்றத்தின் தார்ப்பரியம் என்ன? என்பதை ஆராய்தல் வேண்டும். அதன் பின் அவன் மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாதபடி தகுந்த தண்டனை வழங்குவது அரசனின் கடமையாகும். ஆனால் ஏமநாதன் குற்றஞ் செய்ததாக நீங்கள் கூறுகிறீர்களே தவிர அவன் குற்றஞ் செய்தமைக்கான சாட்சிகள் எதுவும் இல்லை. எல்லைக் காவல் படை வீரர்களுக்கு அவன் பணங்கொடுத்து மக்களை அனுப்புகிறான் என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா? தற்போதய சூழ்நியைில் எல்லைப் படைவீரர்களை இலஞ்சம் வாங்கியதாகக் கூறிக் கைது செய்தால் அவர்கள் கலகத்தில் ஈடுபடுவார்கள். படை வீரர்களுக்குச் சம்பளமாக எதுவும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் எப்படி வாழமுடியும். அதனால் எல்லைப்படை வீரர்கள் பலர் பருத்தி மலைக்குச் சென்று விட்டனர். பல இடங்களில் தற்போது காவலுக்கு யாரும் இல்லை’’ என்றார் சேனாதிபதி அரசகேசரி.

நந்திதேவன் அதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனன். எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது சொன்னான்; ‘‘நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் ஒற்றர்கள் ஏமநாதன் பணங்கொடுத்து மக்களை பருத்திமலைக்கு அனுப்பிப் பொருட்களை கொள்வனவு செய்வதாகக் கூறுகின்றனர்.’’ என்றான் நந்திதேவன்.

‘‘ஏமநாதன் சிவன்கோயில் சங்காபிஷேகத்தன்று மக்களை பருத்திமலைக்கு அனுப்பி பால், தயிர், இளநீர், மலர்வகைகளை எடுத்து வந்தது உண்மையே தவிர பொருட்களைக் கொள்வனவு செய்ய மக்களை அனுப்பவில்லை’’ என்றார் வெங்கடேசர்.

‘‘அது குற்றந்தானே எல்லைப்படைவீரர்கள் காவலுக்கு நிற்க எப்படி மக்களால் அவர்களைக் கடந்து பருத்தி மலைக்குள் பிரவேசிக்க முடியும்’’ என்று கேட்டான் நந்திதேவன்.

குதிரைப்படைத் தளபதி சிரித்தார்; ‘‘மன்னா! குற்றஞ் செய்தவனின் குற்றம் என்ன என்பதைத் தக்கபடி ஆராய்ந்து அவனுக்குத் தகுந்த தண்டனை அளிப்பது அரசனது கடமை என்பது உங்களுக்குத் தெரியாதா..? அந்தத் தண்டனை நேரத்திற்கேற்ப மாறுபடும். பருத்திமலை ஒற்றனான வேலழகன் எமது தளபதி விஜய சிங்கனையும் இரு ஒற்றர்களையும் கொலை செய்த போது மன்னன் சுந்தரசேனன் எவ்வளவு கோபப்பட்டார் தெரியுமா...? ஆனால் அவன் செய்த குற்றத்தை அரசசபை தக்கபடி ஆராய்ந்து மீண்டும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதபடி அவனுக்கு எச்சரிக்கை செய்யுமாறு அரசனைக் கேட்டது. அரசன் அதன் படி நடந்து கொண்டான். அங்கே குற்றஞ் செய்தவனைச் சபையில் நிறுத்த முடிந்தது. இங்கே ஏமநாதனைச் சபையில் நிறுத்தி விசாரிக்க முடியுமா?’’ என்று கேட்டார்.

‘‘தற்பொழுது வீரர் பலர் ஏமநாதனின் வீட்டைக் காவல் செய்கின்றனர். அவர்களை மீறிச் சென்று அவனைக் கைது செய்ய எமது வீரர்களால் முடியாது. அதையும் மீறி அவனைக் கைது செய்தால் நாட்டில் குழப்பங்கள் உண்டாகும். அதனால் உள்நாட்டில் போர் வெடிக்கும். கலகத்தை அடக்க போர் வீரர்கள் இருக்க மாட்டார்கள்’’ என்றார் முதலமைச்சர்.

‘‘மக்களை மதித்து அவர்களின் குறைகளைத் தீர்ப்பவன் தான் அரசன். நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் அரசனது செங்கோலை நம்பியே வாழ்கிறார்கள். ஒரு அரசனுக்கு வெற்றி பெற்றுத் தருவது ஆயுதங்கள் அல்ல நீதி நெறி தவறாது ஆட்சி செய்யும் முறையாகும். நீதி நெறி தவறாது ஆளும் மன்னனால் தான் ஒருவன் செய்யும் குற்றத்தை நன்கு ஆராய்ந்து மீண்டும் மீண்டும் அக்குற்றத்தை அவன் செய்யாதபடி தகுந்த தண்டனையை வழங்க முடியும். மற்றவர்களால் முடியாது’’ என்றார் அரசகேசரியார்.

### *வெருவந்த செய்யாமை*

**561. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.**

ஒருவன் குற்றம் செய்தால் அதைத் தக்கவாறு ஆராய்ந்து மீண்டும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதபடி பொருத்தமான தண்டனையை வழங்குபவனே அரசன் ஆவான்.

## *தண்டிப்பு*

“நீதி நெறி தவறாது நாட்டை ஆண்டு வரும் எமது மன்னன் சுந்தரசேனன் வேலழகனின் குற்றச் செயலின் போது நடந்து கொண்டவிதமும், அவன் வழங்கிய தீர்ப்பும் பிழையானவை. அதை நான் மிகவும் கடுமையாக எதிர்க்கிறேன். இது நாட்டுக்கு மிகவும் அவமானத்தைத் தேடித் தரும் செயல். எதிர்காலத்தில் இச்செயலைக் கேள்விப்படுவோர் எமது உத்தமனான அரசரைக் கேவலமாகக் கருதிப் பரிகசிப்பார்கள். அதனால் மன்னன் இதைத் திரும்பவும் விசாரித்துத் தகுந்த தீர்ப்பு வழங்குதல் வேண்டும். ஒருவன் குற்றஞ் செய்தால், அவன் யாராக இருந்தாலும், அவன் மிகவும் திறமையானவனாக, மிகவும் முக்கியமான பொறுப்பிலிருந்தாலும் அவனது குற்றம் நன்கு ஆராயப்பட்டு மீண்டும் அவன் அக்குற்றத்தைச் செய்யாதபடி தண்டனை வழங்குவது அரசனது கடமையாகும். இதை எமது மன்னர் புறக்கணித்து, வேலழகன் தனது நாட்டின் தலை சிறந்த ஒற்றன் என்பதால் அவன் செய்யத்தகாத குற்றத்தைச் செய்தபோதும் அதைக் குற்றமாகக் கருதாது விடுதலை செய்து விட்டார். நாட்டை ஆளும் மன்னனைத் தவிர வேறு எவரும் நீதியைத் தமது கையில் எடுக்கக் கூடாதென்பதைக் குற்றஞ் செய்வோர் உணருமாறு அவ்வழக்கை ஆராய்ந்து தகுந்த தண்டனை வழங்கப்படல் வேண்டும்” என்றார் சபைக்கு ஆனந்தராஜர்.

சுந்தரசேனன் அவரிடந் தான் கல்வி கற்றவன்; போர்ப்பயிற்சிகளையும் பெற்றவன். அதனால் அவரது வாக்கை அவனால் மீற முடியவில்லை. முதலமைச்சரும் தளபதியும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் ஆனந்தராஜர் அவர்கள் கூறுவதைக் கேட்கவில்லை.” வேழலகன் செய்த குற்றத்தைத் தக்கபடி ஆராய்ந்து அவன் மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாத படி தண்டனை வழங்க வேண்டும் என்று கூறிவிட்டு அவையை விட்டு எழுந்து செல்ல முயற்சித்தார்.

சுந்தரசேனன் அவரது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான்; “குருவே நீங்கள் அறியாதது எதுவுமில்லை. வேழலகன் நல்லவன்; தாய் நாட்டின் மீதும் அரசனின் மீதும் அளவற்ற பாசமுடையவன். எனினும் அவன் நடந்து கொண்டது பிழை. நாட்டில் அரசனைத் தவிர தண்டனை கொடுக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. அப்படியிருக்க வேழலகன் நீதியைத் தனது கையில் எடுத்து அயல் நாட்டினர்க்கு தண்டனை வழங்கியது மகா தவறு. தவறு செய்தவன் தண்டிக்கப்படல் வேண்டும். அவன் தகுந்த தண்டனையைப் பெறாவிட்டால் மீண்டும் மீண்டும் இக்குற்றச் செயல்களைச் செய்வான். அத்துடன் வேழலகன் செய்த குற்றத்தை மன்னர் குற்றமாக ஏற்கவில்லை பாராட்டினார். அதனால் நாமும் அப்படிச் செய்யலாமென மக்கள் நினைத்தால் விபரீதமான பல நிகழ்வுகள் நடைபெறும். அதனால் என்னால் இதை மன்னிக்க முடியாது. அன்று முதலமைச்சரும் தளபதியாரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க தண்டனை வழங்காது விட்டேன். இப்பொழுது எனது குரு அதைப் பெரிய குற்றமாகக் கருதித் தண்டனை வழங்குமாறு நிர்ப்பந்திப்பதால் அவனுக்குக் கடுந்தண்டனை வழங்க நினைக்கிறேன். எனது குரு முக்காலமும் உணர்ந்தவர் அறிவாளி ஞானி எனவே அவரது சொல்லைத் தட்ட மாட்டேன்” கடுங்கோபமுற்றான் சுந்தரசேனன்.

முதலமைச்சரின் நெஞ்சு திக்திக் என்று அடித்தது; “ வயது சென்ற சபைக்குரு ஆனந்தராஜர் வாக்கு மாறியமையால் அலட்டுகிறார். அதை அறியாது மன்னர் கொதித்தெழுகிறார். இது எங்கே போய் முடியப் போகுதோ” என்று கலங்கினார்.

தளபதி வீரபாண்டியனும் ஆடிப் போனன்; “குருவின் முன் எதுவும் சொல்ல முடியாது. சொன்னாலும் அரசன் ஏற்க மாட்டான்” என்று நினைத்துக் கலங்கினார்.

வேலழகன் நடுங்கிய படி கைகட்டி வாய் பொத்தி நின்றான்; “ நீ செய்த குற்றத்திற்காக மரணதண்டனை விதிக்க வேண்டும். முதலமைச்சரும் தளபதியாரும் உன் மேற் கொண்ட நம்பிக்கையாலும், உனது திறமையாலும் நீதியை ஆராயாது உன்னை பெரும் வீரனாகக் கருதுகின்றனர். ஆனால் எமது குரு உன்னைக் குற்றவாளியாகக் கருதுகிறார். அவர் யாவும் அறிந்தவர்; ஞானி. அதனால் உனக்கு பெருந்தண்டணை தந்தாக வேண்டும். தகுந்த தண்டணை தராவிட்டால் மக்களும் உன்னைப் போலவே நடக்க முற்படுவர். அதனால் உனக்கு அதிகபட்சத் தண்டணை வழங்க வேண்டும். அது மரண தண்டனையாகக் கூட இருக்கலாம்” என்று கூறி விட்டு நிறுத்திய சுந்தரசேனன்; “நாட்டின் நன்மை கருதி உன்னை எச்சரித்து விடுதலை செய்கிறேன். இனிமேல் இப்படியான குற்றஞ் செய்தால் மரணதண்டணை வழங்குவேன்” என்றான்.

முதலமைச்சருக்குச் சிரிப்பு வந்தது. மன்னன் சாதுரியமாக குருவை ஏமாற்றியதை நினைத்துச் சிரித்தார்; “ஆட்சிப் பொறுப்பென்ற செல்வம் தம்மை விட்டு எப்போதும் நீங்காமல் இருக்க விரும்புகின்ற அரசன் குற்றஞ் செய்பவர்களை மிகக் கடுமையாகத் தண்டிப்பவன் போலக் காட்டிக் கொண்டு, மென்மையாகக் கண்டிப்பான்” என்று நினைத்தார் முதலமைச்சர்.

**562. கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்
நீங்காமை வேண்டு பவர்.**

ஆட்சிப் பொறுப்பு நீங்காமல் இருக்க வேண்டுமென்று நினைப்பவன் குற்றம் செய்தவனை கடுமையாகத் தண்டிப்பவன் போலக் காட்டி, அளவு மீறாமல் தண்டனை கொடுத்தல் வேண்டும்.

## உறுதியாக அழிவான்

“அரசே! முன்பை விட மங்கள புரியிலிருந்து மக்கள் அதிகளவில் நமது நாட்டுக்கு வருகிறார்கள். முகாங்கள் பல அமைத்துக் கொடுத்த போதும் அவை நிரம்பி வழிகின்றன. அவர்களைப் பராமரிக்க முடியவில்லை. அதனால் எமது படைவீரர்களை அனுப்பி எல்லைப்புறங்களைக் காவல் செய்தல் வேண்டும். மங்களபுரியின் எல்லையைக் காவல் செய்யும் படையினர் மக்களிடம் சிறு சிறு

பொருட்களை வாங்கிக் கொண்டு மக்களை உள்ளே விடுகிறார்கள். நேற்று மட்டும் ஆயிரத்து நான்கு குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து அறுநூற்று எண்பத்தாறு பேர் வந்துள்ளனர். இதற்கு முடிவு கட்டல் வேண்டும்'' என்றார் முதலமைச்சர்.

''நந்தி தேவனுக்கு ஏற்கனவே நாம் அறிவித்து விட்டோம். அவன் அதைப் பெரிதாக எண்ணாது தனது இன்ப வாழ்வை மடடும் நினைக்கிறான். மக்களை அவன் கவனிப்பதே இல்லை. வணிகனான ஏமநாதன் தான் பசியால் வாடும் மக்களுக்கு உணவு வகைகளைக் கொடுக்கிறான். முறையற்ற ஆட்சியால் பருவமழை அந்நாட்டில் பொய்த்து விட்டது. பசுக்கள் பால் கொடுப்பதைக் குறைத்து விட்டன. கோயில்களில் பூசைகளில்லாததால் அந்தணர்களும் எமது நாட்டுக்குள் வரத் தொடங்கி விட்டனர். சரித்திப் புகழ் வாய்ந்த சிவன் கோயிலே பூட்டப்பபட்டு விட்டது. இதையெல்லாம் கவனியாது மன்னன் தனது இன்பசுகததையே கவனிக்கின்றான். ஒரு வாரத்திற்கு முன் அவன் இளைய ராணியுடன் நந்தவனத்திற்குச் சென்றுள்ளான். இது வரை அவன் திரும்பவில்லை. மழையில்லாமல் மரஞ் செடி கொடிகளெல்லாம் வாடிச் சோர்ந்து பட்டும் வரும் வேளையில் நந்தவனத்தைப் புது மெருகூட்டுகிறான். அங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். மகத நாட்டிலிருந்து நீர் கொண்டு வரப்பட்டு நந்தவனத்திற்குப் பாய்ச்சப்படுகிறது. மக்களின் மனங்குளிர்ந்தால் தான் மழை பெய்யும் என்பதை அவன் இன்னும் உணரவில்லை. அதனால் மக்கள் எமது நாட்டுக்குள் நுழைகிறார்கள். அதைத்தடுப்பதற்கு நாம் அந்நாட்டின் மீது படை யெடுத்தல் வேண்டும்'' என்றார் தளபதி வீரபாண்டியன்.

சுந்தரசேனன் எதுவும் பேசாது சிலகணங்கள் யோசித்தான். பின்பு சிங்காசனத்தால் எழுந்து உலாவினான். மன்னன் அப்படிப் பேசாமலிருந்து உலாவினால் ஏதோ ஒரு முக்கிய முடிவு எடுக்கப் போகிறான் என்பது முதலமைச்சருக்குத் தெரியும்.

''அரசே இதில் யோசிப்பதற்கு எதுவும் இல்லை. மங்கள புரியைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்களை எம்மால் பராமரிக்க முடியாது. அத்துடன் நாம் ஏமநாதன் மூலம் மங்களபுரிக்கு அனுப்பிய மூன்று கப்பல் உணவுப்பொருட்கள் துறை முகத்திற்கு வெளியே பல நாட்கள் காத்திருந்து விட்டுத் திரும்பி எமது துறை முகத்திற்கு வந்து விட்டன. குடிமக்களுக்கு அஞ்சாமல் பல கொடுமைகளைச் செய்யும் அரசன் விரைவில் அழிந்து போவான் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. எனவே அம்மக்களைக் காப்பாற்ற வேண்டும். நாம் அந்நாட்டைக் கைப்பற்ற வேண்டுமானால் நாம் அந்நாட்டைக் கைப்பற்றுவது பெரிய காரியமல்ல எமது நூறு வீரர்கள் சென்றாலே போதும் அங்குள்ள வீரர்களும் மக்களுமாகச் சேர்ந்து அரசனை மிகவும் எளிதாகச் சிறைப்பிடித்து விடுவார்கள்'' என்றார் முதலமைச்சர்.

''குடிமக்கள் அஞ்சும்படியாகப் பல கொடுமைகளைச் செய்து வாழும் அரசன் அழிப்பவர்கள் இன்றியே அழிந்து போவான். எனவே முதலமைச்சர் கூறுவதைப் போல குதிரைப்படைத்தளபதி வீரசேனனின் தலைமையில் தெரிந்தெடுக்கப்பட்ட வீரர்கள் சிலரை அனுப்புவோம்'' என்றான் தளபதி வீரபாண்டியன்.

அப்பொழுதும் மன்னன் எதுவும் பேசவில்லை. அதனால் இருவர் கூறியதையும் மன்னன் ஏற்கவில்லை என்று முதலமைச்சர் நினைத்தார். அதனால் அரசன்

எதையோ சிந்திக்கிறான் என்று நினைத்துப் பேசாமல் இருந்தார். வெகுநேரத்திற்குப் பின் சுந்தரசேனன் முதலமைச்சரைப் பார்த்தான்.

''முதலமைச்சரும் தளபதியாரும் சொன்னவற்றைச் சிந்தித்துப் பார்த்தேன். தினமும் மங்களபுரியிலிருந்து ஏராளமான மக்கள் வருவதை நிறுத்துதல் வேண்டும். எமது மக்கள் கொஞ்ச நாட்களுக்குத்தான் உதவி செய்வார்கள். அதே போல அங்கிருந்து வந்தவர்களும் சில நாட்களுகுத்தான் ஒழுங்காக வாழ்வார்கள். அதனால் அம்மக்களைத் தமது சொந்த நாட்டிற்கு அனுப்புதல் வேண்டும். பசியாலும் பஞ்சத்தாலும் அழிந்து கொண்டிருக்கம் நாட்டைக் கைப்பற்றி எமது பரம்பரைக்கு இழுக்கைத்தேட நான் விரும்பவில்லை. நாம் அந்நாட்டின் மீது படையெடுத்தால் அறிஞர்கள் கேலி செய்வார்கள். அதற்காகத் துயருறும் மக்களைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதனால் ஏமநாதனுக்கு உதவி செய்வோம். அந்நாட்டுப் படைவீரர்களே அக் கொடுங்கோனைக் கொல்லட்டும். நாம் ஏன் வீண்பழிக்குள்ளாவான். உடனடியாக நமது வீரர்களை அனுப்பி ஏமநாதனைச் சபைக்கு அழையுங்கள். குடிமக்களுக்குக் கொடுமைகளைச் செய்யும் அரசன் உறுதியாக விரைவில் அழிந்து போவான் என்பதை உலகம் உணரல் வேண்டும்'' என்றான் சுந்தரசேனன்.

**563. வெருவந்த செய்துஒழுகும் வெங்கோலன் ஆயின்**
**ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.**

குடிமக்கள் அஞ்சும்படியாகக் கொடுமைகள் செய்து ஆளும் அரசன் விரைவில் அழிந்து போவது உறுதி.

## *ஆயுள் குறையும்*

அரசன் அப்படிச் சொல்வானென முதலமைச்சரும் தளபதியும் நினைக்கவில்லை. முதல் நாள் தளபதியைச் சந்தித்த முதலமைச்சர் மங்கள புரியின் மீது படையெடுத்துச் செல்ல வேண்டிய காரணங்களை விளக்கிச் சொன்னார். பல காலம் போர் செய்ய வேண்டுமென்ற விருப்பம் தளபதியின் மனதில் வெகு நாட்களாக இருந்து வந்தது. குதிரையில் ஏறி வீரர்களுடன் சவாரி செய்வது அவருக்கு மிகவும் பிடிக்கும். அதனால் கட்டாயம் போர் நடைபெறும் என்று அவர் நம்பியிருந்தார். ஆனால் அரசன் அப்படிச் சொன்னதும் அவரது மனம் வாடிச் சோர்ந்து விட்டது. அதை முதலமைச்சர் புரிந்து கொண்டார். சுந்தரசேனன் முடிவுகளைத் தானே எடுப்பான். எல்லோரும் சொல்வதை மிகவும் அவதானமாகக் கேட்பான். பின்பு சிங்காசனத்தால் எழுந்து உலாவுவான், அப்படி உலாவுவது ஓரிரு நிமிடங்களாகவும் இரக்கும், ஓரிரு மணித்தியாலங்களாகவும் இருக்கும். அன்று அவன் ஓரிரு நிமிடங்களே உலாவினான். அவன் முடிவெடுத்தால் முடிவெடுத்தது தான். அதை எந்தக் காரணங் கொண்டும் மாற்ற மாட்டான் என்பது அரசசபையில் உள்ள அனைவருக்கும் தெரியும் அதனால் பேசிப்பயனில்லை யென முதலமைச்சர்பேசாது இருந்தார். தளபதி வீரபாண்டியனின் மனம் சோர்ந்து விட்டது.

''நம்மை ஆள்கின்ற அரசன் கொடியவன் என்று குடிமக்கள் மனம் நொந்து கூறினால், அவ்வரசனின் ஆயுள் குறைவடைந்து அழிந்து விடுவானென எனது பாட்டனார் எனக்கு அடிக்கடி கூறுவார். அத்துடன் எனது குரு சொல்வார்; ''நாட்டு மக்கள் உணவில்லாமல் பசியாலும் பட்டினியாலும் வாடும் போது மன்னன் தனது

சுகபோகங்களை ஒதுக்கி வைத்து விட்டு மக்களது பசியைப் போக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவன் கோயில்களில் பெரும் பூசைகள் கூடச் செய்வதைத் தவிர்க்க வேண்டும். பசி என்பது அக்கினி, அது பொருட்களை மட்டுமல்ல மனிதனை, அவனது மனிதாபிமானத்தை, ஒழுக்கத்தை, ஏன் அவன் கற்ற கல்வியைக் கூடச் சுட்டெரித்து விடும். அதனால் மக்களின் பசியைப் போக்க வேண்டும். அயல் நாட்டவன் பலவீன முற்றிருக்கும் வேளையில் படையெடுப்பது வீரமுள்ளவனுக்கழகல்ல. அந்த நாட்டு மக்களைக் காப்பாற்றுதல் மனிதாபிமான முள்ள அரசனது கடமை. அதற்காக அவன் புத்திசாதுரியமாக நடந்து கொள்ள வேண்டுமே தவிர தனது வம்சமானத்தைக் கொடுக்கக் கூடாது. எப்பொழுதும் வீரனோடு மோதி வெல்ல வேண்டும். அது தான் குலத்தின் பெருமையைக் காப்பாற்றும்'' என்பார். அதனால் தான் ஏமநாதனுக்கு உதவி செய்து அவனைக் கொண்டு நாட்டைக் கைப்பற்றுவோம். இன்றுள்ள நிலையில் நந்திதேவனைக் கொல்ல அங்குள்ள குடி மகன் ஒருவனே போதும். அந்நிலையில் வீரம்படைத்த எமது தளபதி வீரபாண்டியர் அங்கு செல்லவேண்டுமா....? முதலமைச்சரே... சற்றுச் சிந்தித்தும் சொல்லும்'' சுந்தரசேனன் புன்னகைத்தான். அப்புன்னகையில் ஆயிரமாயிரம் அர்த்தங்கள் பொதிந்திருப்பதை முதலமைச்சர் உணர்ந்தார். சுந்தரசேனன் தான் எடுக்கும் முடிவை மாற்றாது அது சிறந்ததென்பதைக் காட்டுவதற்காக இப்படியான செயல்களைச் செய்வது வழக்கம். முதல் நாள் அவரும் தளபதியும் சந்தித்துக் கதைத்ததை அவர் அவனுக்குக் கூறியிருந்தார். அதனால் வீரபாண்டியன் மகிழ்வுடன் இருப்பதாகவும் சொல்லியிருந்தார். அதனால் அவர்களைத் திருப்திப் படுத்த அவன் அவ்வாறு கூறுகிறான் என்பது அவருக்குப் புரிந்தது. எனினும் அதைக் காட்டிக் கொள்ளாது சிரித்தார்.

''மன்னர் முக்காலமும் உணர்ந்தவர் நீதியான பரம்பரையில் உதித்தவர் சகலவற்றையும் ஆராய்ந்து முடிவெடுப்பதில் வல்லவர். அதனால் தான் மற்றய நாடுகளை விட எமது நாடு செல்வங்கொளிக்கும் நாடாக விளங்குகிறது. மக்கள் தமது அரசனைக் கொடியவன் என்று நினைத்தால் அம்மன்னனின் ஆயுள் முடிவடைந்து விட்டதென்று அர்த்தம். அதனால் மங்கள புரியைச் சேர்ந்த மக்களின் துயரத்தைப் போக்க மன்னர் எடுத்த முடிவு சரியானது. அதனால் மன்னருக்கும் மன்னரது பரம்பரையினருக்கும் நாட்டிற்கும் களங்கமேற்படாது. ஏமநாதன் தற்பொழுது தானியங்களைக் கொள்வனவு செய்வதற்காக எமது துறைமுகத்திற்கு வந்துள்ளதாகச் செய்தி யொன்று கிடைத்துள்ளது. வீரர்களை அனுப்பி அவனை அழைத்து வரலாம் என்றார் முதலமைச்சர்.

போரைப்பற்றிச் சிந்திக்காது திருந்த தனது மனதில் போரூக்கத்தை ஏற்படுத்தி விட்டு சாதாரணமாக மன்னனுடன் சேர்ந்து அவனது திட்டத்தைப் புகழும் முதலமைச்சர் மீது வீரபாண்டியனுக்குக் கோபம் கோபமாக வந்தது. சிரமம்பட்டு அதை அடக்கினார். எந்த வேளையிலும் அவரை நம்ப முடியாது, பிறர் முன்னிலையில் வீறாப்புடன் கதைப்பார். மன்னனைக் கண்டால் அடங்கி விடுவார் என்பது வீரபாண்டியனுக்குத் தெரியும் அதனால் அவர் தன் மீது தான் கோபங் கொண்டார்.

**564. இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாசொல் வேந்தன்**
**உறைகடுகி ஒல்லைக் கெடும்.**

'தம் அரசன் கொடியவன்' என்று குடிமக்களால் கூறப்படும் அரசன், தன் ஆயுள் குறைந்து விரைவில் அழிந்து போவான்.

# பேய்காக்கும் செல்வம்

மங்களபுரி தாக்கப்படப் போகிறது என்பதை அறிந்த அந்நாட்டின் முதலமைச்சரான வெங்கடேசர் திகைத்துப் போனார். பருத்திமலை அரசன் ஏமநாதனுக்குப் படையுதவி செய்தால் ஒரு மணிநேரத்துக்குள் மங்களபுரியைக் கைப்பற்றிவிடுவார்களென்று அவருக்குத் தெரியும். அதனால் அவர் செய்தியறிந்ததும் அரண்மனைக்குச் சென்றார். அவர் வருமுன் தளபதி அரசகேசரி அங்கிருந்தார்.

அரசன் இளையராணியுடன் எங்கோ சென்றுவிட்டதாக அந்தப்புரத்தில் இருந்த வீரன் ஒருவன் சொன்னான். முதலமைச்சரும் தளபதியும் அரண்மனையுள் சென்றனர். அரசகேசரியைக் கண்ட அந்தப்புரத்தைக் காவல் செய்யும் வீரர்கள் ஒதுங்கி வழிவிட்டனர். முதலமைச்சர் அந்தப்புரத்தை வியப்புடன் பார்த்தார். அரசனும் இளையராணியும் தங்கும் அறை இந்திரபுரிபோலக் காணப்பட்டது. அங்கு வைக்கப்பட்டிருந்த தளபாடங்களில் விலையுயர்ந்த முத்துக்களும் மாணிக்கக்கற்களும் பதிக்கப்பட்டிருந்தன. கதவில் மிகவும் நுட்பமான சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்தப்புரம் இந்திரலோகம் போலக் காணப்பட்டது. கடந்த ஒரு மாதகாலமாக முதலமைச்சர் அங்கு வரவில்லை. அரசனை முன்பென்றால் அந்தப்புரத்துக்குச் சென்று சந்திக்கலாம். இப்பொழுது அங்கு யாரும் செல்ல முடியாது. அவன் இளையராணியுடன் இருக்கும் வேளையில் அவள் அவனை வெளியே செல்ல அனுமதிக்க மாட்டாள். அன்று தளபதி அரசகேசரி வந்ததால் காவலுக்கு நின்ற வீரர்கள் எதுவும் பேசவில்லை.

இருவரும் அரண்மனை நந்தவத்துள் நுழைந்தனர். நந்தவனம் பச்சைப்பசேலென இருந்தது. அங்கு பூத்துக் குலுங்கிய வெளிநாட்டு ரோஜாப்பூக்கள் முதலமைச்சரின் கண்களைக் குத்தின. மக்கள் குடிப்பதற்கு நீரில்லாமல் குடங்களுடன் அலைகிறார்கள். கால்நடைகள் நீரின்றிச் செத்து மடிகின்றன. ஆனால் மன்னன் மதக நாட்டிலிருந்து நீர்கொண்டுவந்து செயற்கை நீரூற்றைன்றை உருவாக்கியிருக்கிறான் அதைப் பார்த்துக் கெதித்தார் வெங்கடேசர்.

எங்கும் தேடியும் மன்னனைக் காணவில்லை. முதலமைச்சரும் தளபதியும் ஆபரணசாலைக்கு வந்தனர். அதன் காப்பாளன் அவர்களைக் கண்டு பதறிப் போனான். அரசனும் அரசியும் ஆபரணசாலைக்குள் செல்லும்போது யாரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாதென்று செல்லிவிட்டுச் சென்றனர். முதலமைச்சருக்கு எதையும் சொல்லிச் சமாளிக்கலாம். ஆனால் தளபதிக்கு எதுவும் சொல்ல முடியாது. தளபதியை உள்ளே செல்லக்கூடாதென்றால்தளபதியே என்னைக் கொன்றுவிடுவார். உள்ளே விட்டால் அரசன் கொல்வான். என்ன செய்வதென்று தெரியாது தடுமாறினான் அவன்.

“அரசர் உள்ளே இருக்கிறாரா....?”

அவனால் பேசமுடியவில்லை. அவன் நடுங்கினான். பதில் சொல்லாத அவனைச் சில கணங்கள் உற்றுப் பார்த்த தளபதி பின் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார். முதலமைச்சர் அவருக்குப் பின்னால் சென்றார்.

உள்ளே சென்ற தளபதி திகைத்துப் போனார். அது ஒரு பெரிய மண்டபம். அம்மண்டபத்தின் சுவர்களில் பிரகாசமான மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. கண்காட்சிக்கு வைக்கப்பட்டவை போல ஆயிரக் கணக்கான ஆபரணங்கள் அங்கு இருந்தன. உள்ளே அரசனும் இளையராணியும் இருந்தனர். அவர்களின் உடலெங்கும் ஆபரணங்கள் மின்னின. விதம்விதமான ஆபரணங்கள். ஒவ்வொன்றினதும் பெறுமதியைக் கணக்கிட்டுக் கூறமுடியாது.

‘‘எளிதில் காணமுடியாதவனாகவும், இனிமையற்ற முகத்தையுடைய வனாகவும் உள்ள அரசனது பெருஞ் செல்வம் பேய் காத்து வைத்திருக்கும் புதையலைப் போன்றது’’ என்று நினைத்தார் முதலமைச்சர். அண்மைக் காலமாக யாரும் சந்திக்க முடியாத அரசனை வெளிநாட்டவர்கள் சந்தித்துப் பேசியதன் அர்த்தம் அவருக்கு இப்போது புரிந்தது.

இளையராணிக்கு பலவிதமான ஆபரணங்களை அணிந்து அழகுபார்த்துக் கொண்டிருந்த நந்திதேவன் அரவங் கேட்டுத் திரும்பினான். எதிரே வெங்கடேசரும் அரசகேசரியும் நிற்பதைக் கண்டதும் அவனது முகம் சிவந்தது. அளவுக்கதிகமாக கோபம் வந்தது ‘‘எனது அனுமதியில்லாமல் இங்கு உங்களை யார் வரச்சொன்னது?’’ கர்ஜித்தான்.

அரசகேசரி அவனது கோபத்திற்கு அஞ்சாது அவனை நிமிர்ந்து பார்த்தான். அவனது பார்வை நந்திதேவனுக்குப் பிடிக்கவில்லை ‘‘வீரர்களிடம் சொல்லியனுப்பியிருந்தால் வந்திருப்பேன். தளபதியானாலும் சரி முதலமைச்சரானாலும் சரி உத்தரவில்லாது அந்தப்புரத்திற்கு வருவது குற்றமானது என்று உங்களுக்குத் தெரியாதா…?’’ அதட்டினான் நந்திதேவன்.

‘‘அரசன் எங்கே சென்றுள்ளான் என்பது தமக்குத் தெரியாதென்று வீரர்கள் பலர் கூறியமையால் தேடிவந்தோம். நிலமை மோசமடைந்ததால் தான் வந்தோம்’’. என்றார் அரசகேசரி.

**565. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்**
**பேஎய்கண் டன்னது உடைத்து.**

எளிதில் காணமுடியாதவனவாகவும், இனிமையற்ற முகத்தை உடையவனகவும் இருக்கும் அரசனது பெருஞ் செல்வம், பேய் காத்திருப்பதைப் போன்ற தன்மையுடையது.

### அழியும் செல்வம்.

‘‘எல்லாம் எனக்குத் தெரியும். ஏமநாதன் எமது விரர்கள் சிலருடன் சேர்ந்து கிளர்ச்சி செய்யப் போகிறான் என்று தானே சொல்லப்போகிறீர்கள். ஏமநாதனால் அல்ல வேறு எவரால் கூட எமது நாட்டைக் கைப்பற்ற முடியாது. சுந்தரசேனன் தனது முப்படையுடன் வந்தாலும் அவனை அடித்து விரட்டக்கூடிய

படைபலத்துடன் தான் நான் இருக்கின்றேன். நீங்கள் கவலையை விட்டவிட்டு நிம்மதியாயச் சென்று தூங்குங்கள். உங்களை நம்பியா நான் ஆட்சி செய்கின்றேன். எனக்குத் துன்பமென்றால் அயல் நாடுகளிலிருந்து படைகள் வந்து சேரும்'' என்றான் நந்திதேவன் செருக்குடன்.

முதலமைச்சருக்கு அவமானமாக இருந்தது. சேனாதிபதியின் கைகள் துடித்தன. வாளை எடுத்து அவனைக் கண்ட துண்டமாக வெட்டுவோமா என்று நினைத்தார்.

'' அதை உணர்ந்த முதலமைச்சர் சொன்னார் ''எதற்கும் ஆத்திரப்படுவது அறிவீனம். மன்னா, நீங்கள் நினைப்பதைப் போல அயல்நாட்டு மன்னர்கள் ஆராயாது எமக்கு உதவி செய்ய மாட்டார்கள். மன்னா! எமது நாட்டின் நிலையைத் தாங்கள் முதலில் உணருதல் வேண்டும். எமது மக்கள் இன்று அனுபவிக்கும் துன்பங்களை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். எமது படைவீரர்களின் இன்றைய பலத்தை உணரவேண்டும். இத்துடன் சுந்தரசேனனது வலிமையை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். சுந்தரசேனன் மீது பகைகொண்ட மதகநாடு எம்முடன் உறவு கொண்டுள்ளதே தவிர போர் என்று வந்தால் அந்நாட்டு அரசன் எமக்குத் துணையாக வருவானென எதிர்பார்க்க முடியாது.'' வெங்கடேசர் பேசிக்கொண்டிருக்கும் போது நந்திதேவன் குறுக்கிட்டான் ''கௌத்தமனைக் கொலை செய்ததாலும் கௌசல்யகுமாரியைச் சிறையில் அடைத்ததாலும் மதகநாடு கொதித்துக் கொண்டிருக்கின்றது. அவர்களை எதிர்க்க காரணமின்மையால் தான் அந்நாட்டரசன் பொறுமையாக இருக்கிறான். பொறுத்திருந்து பாரும் என்ன நடைபெறுமென்று..''

வெங்கடேசர் சிறிது நேரம் பேசவில்லை. அவரால் பேசமுடியவில்லை ''மன்னா, எப்பொழுதும் ஓர் அரசன் தனது படைகளை மட்டும் நம்பத் தான் போரிடல் வேண்டும். மற்றைய நாட்டவர்களை நம்பக்கூடாது. அவர்கள் எமக்குதவுவதாக இருந்தால் ஏதாவது தமக்கு நன்மை இருந்தால் தான் உதவுவார். எமக்காகக் கதைப்பதாகக்கூறும் பல அயல்நாடுகள் சுந்தரசேனனுடன் நல்ல தொடர்புகளை வைத்திருக்கின்றன. மதகநாட்டில் விளைச்சல் மிகவும் குறைவு. அதனால் பருத்திமலையில் இருந்து தான் மிகவும் மலிவான விலையில் தானியங்களைக் கொள்வனவு செய்கிறார்கள். எம்முடன் அவர்கள் சேருவதாகக் கேள்விப்பட்டால் அவர்களுக்குப் பருத்திமலை அரசன் உணவுப் பொருட்களை அனுப்ப மாட்டான். உணவில்லாவிட்டால் மக்கள் கலகஞ் செய்வார்கள். அருகில் உள்ள சிவபுரிக்கு பருத்திமலையில் இருந்து பாயும் கங்கை நீரைக் கொடுத்துள்ளான். கங்கை நீரைத் தடைசெய்தால் சிவபுரியின் கமச் செய்கை பாதிக்கப்பட்டுவிடும். இப்படி ஒவ்வொரு அயல்நாடும் பருத்திமலை அரசனுக்குக் கடமைப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர்கள் எப்படி எமக்கு உதவி செய்வார்கள்…..?''

''முதலமைச்சரே முட்டாள்த் தனமாகக் கதைக்காதீர்கள். மகத நாட்டுடன் சேர்ந்து நான் பருத்திமலையைக் கைப்பற்றிவிட்டால் அயல்நாடுகள் முழுவதற்கும் எல்லா உதவிகளையும் செய்வேன். அந்த ஒப்பந்தத்தின் படிதான் நாம் இயங்குகின்றோம். நீர் போகலாம்'' என்றான் நந்திதேவன்.

முதலமைச்சர் எதுவும் பேசாமல் வெளியே வந்தார் ''என்னை முட்டாள் என்கின்றான். யார் முட்டாள் என்பது விரைவில் தெரியவரும். பருத்திமலை அரசனுக்கு எதிராக யாரும் இவனுக்கு உதவி செய்ய முன்வரமாட்டார்கள்.

கடுமையான சொற்களைப் பேசுபவனாகவும், இரக்கமில்லாதவனாகவும் உள்ள அரசனின் நிறைந்த செல்வம்நீடித்து நிற்காமல் அழிந்து விடும் என்பார்கள். ஆபரணமாளிகையில் விதம் விதமான ஆபரணங்களை வாங்கி வைத்து இளையராணிக்குச் சூடி அழகு பார்க்கிறார். மக்களை வருத்தி அளவுக்கதிகமாக வரி வசூலித்து சேர்த்து வைத்திருக்கும் திரவியங்களெல்லாம் விரைவாக அழியப் போகின்றன. அதை உணராது கடுமையான சொற்களைப் பாவித்து எம்மை ஏசும் இவன் உருப்படமாட்டான்'' என்றார் முதலமைச்சர்.

அரசகேசரிக்கு அவமானமாக இருந்தது ''உங்களையும் என்னையும் நாட்டு மக்களையும் இகழ்ந்து வன்சொற்கள் பேசிய நந்திதேவனை நான் சும்மாய் விடமாட்டேன். ஏமநாதனுடன் சேர்ந்து இவனைக் கொல்வேன்''. என்று கூறினான். பின் ''முதலமைச்சரே சுந்தரசேனன் ஏமநாதனுக்கு உதவி செய்ய முற்பட்டால் நாமிருவரும் ஏமநாதனின் பக்கஞ் செல்வோம்.இவன் தோற்கப்போவது உறுதி. மக்களையும் எம்மையும் மதியாத இவனுக்காக நாம் என் போரிடவேண்டும்''.

''உண்மை தான். ஏமநாதனைச் சந்திப்போம்''. என்றார் முதலமைச்சர்.

**566. கடுஞ் சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்**
**நீடுஇன்றி ஆங்கே கெடும்.**

கடுமையான சொற்களைப் பேசுபவனாகவும், இரக்க மில்லாதவனாகவும் இருப்பவனது நிறைந்த செல்வம் நீடித்து நிலைக்காமல் அப்பொழுதே அழிந்து போகும்.

## தேய்க்கும் அரம்

அன்று அவசரமாக மங்களபுரி அரசசபையைக் கூட்டியது மிகவும் அவசியமானதும் அவசரமானதுமான கூட்டம் என்று நந்திதேவன் அறிவித்திருந்தும் முதலமைச்சர் வெங்கடேசரும், சேனாதிபதி அரசகேசரியும் அரச சபைக்கு வரவில்லை. இருவரும் வராதது அவனுக்கு அவமானத்தைக் கொடுத்தது. அப்பொழுது ஒற்றர் படைத்தலைவன் வந்து சொன்னான் ''அரசே முதலமைச்சர் வெங்கடேசரும் சேனாதிபதி அரசகேசரியும் நாட்டை விட்டுச் சென்றுவிட்டனர். போர் வீரர்களில் சிலர் ஏமநாதனுடன் சேர்ந்து கிராமங்களில் கலவரங்களில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களில் நூறு பேரை எமது வீரர்கள் கைது செய்து வைத்துள்ளனர்'' என்று ஒற்றன் கூறிக்கொண்டிருக்கும் போது நந்திதேவன் ஆத்திரத்துடன் குறுக்கிட்டுச் சொன்னான் ''உடனே அவர்களைச் சிரச்சேதம் செய்யுங்கள். யாராக இருந்தாலும் எமநாதனைப் பற்றிக் கதைத்தால் அவர்களைப் பிடித்து விசாரணையின்றி சிரச்சேதஞ் செய்யுங்கள். யாருக்கும் கருணை காட்டாதீர்கள். அத்துடன் வெங்கடேசரது குடும்பத்தினரையும் அரசகேசரியின் குடும்பத்தினரையும் உடனே கைது செய்து பாதாளச் சிறையில் அடையுங்கள்''

''அவர்கள் குடும்பத்தினருடன் தலைமறைவாகி விட்டனர் மன்னா! அத்துடன் ஏமநாதன் மிகவிரைவில் சுந்தரசேனனின் உதவியுடன் எமது நாட்டின் மீது படையெடுக்கப்போகிறான். இந்த நேரம் நாட்டிற்கு விசுவாசமாக இருக்க

வேண்டியவர்கள் தலைமறைவானால் போரை எப்படி எதிர்கொள்ள முடியும்'' என்று கேட்டான் காலாட்படைத் தளபதி மணிமாறன்.

''அஞ்சத்தேவையில்லை. மகத நாட்டிற்கும் சிவபுரிக்கும் செய்தியனுப்பி விட்டேன். அவர்கள் எமக்கு உதவியாக வருவார்கள். யாரும் அஞ்சத் தேவையில்லை. சேனாதிபதியாக நான் கதிர்வேலவனை நியமிக்கின்றேன். முதலமைச்சராகக் கடம்பனாரை நியமிக்கின்றேன்'' என்றான் நந்திதேவன்.

''மிகவும் நன்றி மன்னா! அரசகேசரி முன்பே உங்களுக்கெதிராகப் பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டவன். நான் முன்பு உங்களுக்குப் பலமுறை கூறியும் தாங்கள் அரசகேசரி மீதிருந்த நம்பிக்கை மிகுதியால் அதை நம்பவில்லை. இப்படி நடக்குமென்று நான் முன்பே நினைத்தேன். படைவீரர்களின் சம்பளத்தை இரண்டு மடங்காக அதிகரியுங்கள். ஏமநாதனைப் பற்றிப் பேசுபவர்கள் யாராக இருந்தாலும் மரணதண்டனை விதிக்கப்படும் என்று முரசறைவியுங்கள். படைத்தளபதிகள் மூவருடனும் கலந்தாலோசித்துத் தங்கள் வெற்றியை உறுதிப் படுத்துகிறேன்''. என்றான் கதிர்வேலவன்.

''அரசே! அச்சம் கொள்ளாதீர்கள். அச்சம் தான் மரணம். மகத நாட்டிற்கும் சிவபுரிக்கும் தங்களின் சார்பில் நான் சென்று நிலமையை விளக்கிக் கூறிப்போதிய உதவி கோர என்னை அனுமதித்தல் வேண்டும். அன்பு, கருணை, ஆத்மீகம் ஆகியவற்றால் எதிரியை வெற்றி கொள்ள முடியாது. மிருக பலத்தால் மட்டும் தான் எதிரிகளை அழிக்க முடியும். மக்களை அடக்க முடியும் என்பதைத் தாங்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். கையில் கலப்பை பிடித்த உழவர்களெல்லாம் இப்போது சோம்பிக் கிடக்கின்றார்கள். அவர்களிடம் ஆயுதங்களைக் கொடுங்கள். வீட்டில் உள்ள அனைவரும் எதிரியைத் தாக்குவதற்குப் பயிற்சி பெறல் வேண்டும். அதனால் எல்லோரையும் இன்று முதல் பயிற்சிக்கு வரச் சொல்லுங்கள்''. என்றார் முதலமைச்சர் கடம்பனார்.

''அப்படியே ஆகட்டும். தளபதிகளே! உடனே மக்கள் பயிற்சி பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுங்கள். வயோதிபர்களைத் தவிர்ந்த மற்றெல்லோரும் போர்ப் பயிற்சி பெறுதல் அவசியம். தானியக் களஞ்சியங்களில் போதியளவு தானியங்கள் உள்ளன. அவற்றைத் தாராளமாக மக்களுக்கு வினியோகிக்க நடவடிக்கை எடுங்கள்''. என்றான் நந்திதேவன்.

பின் வரிசை ஆசனத்தில் அமர்ந்திருந்த அரசவைப் புலவர் தனது நண்பரான அந்தணருக்குச் சொன்னார் ''மக்கள் வெறுக்கின்ற கொடுமையான பேச்சும், அளவுக்கதிகமான தண்டனைகளும் அரசர்களின் வெற்றிக்குக் காரணமான வலிமையைத் தேய்க்கும் அரமாகும். முட்டாள்களின் மீது அளவுக்கதிகமான சுமைகளைச் சுமத்துதல் கூடாது. தானியக் களஞ்சியங்களில் தானியங்கள் அளவுக்கதிகமாக இருக்கும் போது அரசன் மக்களுக்குக் கொடுக்காது அவர்களைத் துன்பப்படுத்தி விட்டுப் போர்க்காலச் சூழ்நிலையில் கொடுப்பது புத்தி சாதூரியமாகாது. அத்துடன் நானறிந்த தகவல்களின் படி மகதநாட்டரசன் தனது தூதுவனைப் பருத்தி மலைக்கு அனுப்பிவிட்டான். என்ன செய்தி அனுப்பினான் என்று தெரியவில்லை. எதிரியின் பலத்தை அறியாது அவனோடு மோதுவது கல்லின் மீது தலையை இடிப்பதற்குச் சமம்''

**567. கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்**
**அடுமுரண் தேய்க்கும் அரம்.**

கடுமையான சொல்லும் அளவு கடந்த தண்டனையும் அரசனது வெற்றிக்குக் காரணமான வலிமையைத் தேய்க்கும் அரம் ஆகும்.

## சுருங்கும் செல்வம்

சபை கலைந்தது. அரசவைப் புலவரும் அந்தணரும் வெளியே வந்தனர். புலவருக்கு அரசன் அழியப்போகிறான் என்று தெரிந்தது ‘‘அந்தணரே எனக்கு எண்பது வயதாகிறது. நான் சிறுவனாக இருந்த காலத்தில் எனது தந்தையாருடன் அரசசபைக்கு வருவேன். அப்பொழுதே என்னால் கவிதை பாடமுடியும். நந்திதேவரின் பாட்டனாரின் ஆட்சிக் காலத்தில் நான் ஒரு நாள் அரசசபைக்குச் சென்றேன். அன்று பட்டத்தரசியின் பிறந்த தினம். புலவர்கள் பட்டத்தரசியைப் புகழ்ந்து பாடிப் பரிசில்கள் பெற்றனர். மார்கழி மாதம் பட்டத்தரசி பிறந்தார். எனக்கும் கவிதை ஒன்று பாடவேண்டும் போல இருந்தது. எனது தந்தையாரைக் கேட்டேன். ‘‘எழுந்து பாடென்றார்’’.

‘‘எழுந்தேன். சிறுவனான என்னை எல்லோரும் அதிசயமாகப் பார்த்தார்கள். அப்பொழுது மன்னரின் தந்தை இளவரசராக இருந்தார். எனது தந்தையார் நான் ஒரு கவிதையைப் பாடப்போவதாகச் சொன்னார்’’

‘‘மார்கழி என்றால் மகிழ்வின் உச்சம்
பாவையர் போற்றும் புனித மாதம்.
அதிலும் புனிதம் அதில் நீ முளைத்தது.
புனித கங்கையும் புடமிட்ட தீயும்
பங்குனித்திங்களில் பொங்கிப் புணர்ந்தது.
மார்கழி தன்னில் மதப்புடன் முகிழ்ந்த
மரகதத் தேரை மன்னவன் பெற்றான்.
அதனாலின்பம் பெற்றது உலகம்
அன்பு மருளும் விழிகள் பொழியும்
உதடுகள சைந்தால் உள்ளம் சிலிர்க்கும்
கன்னல் மொழியாள் கரங்கள் சிவக்க
அள்ளிக் கொடுப்பாள் அனைவரும் மகிழ’’

‘‘பாடிமுடிந்ததும் மன்னர் என்னைத் தூக்கித் தனது மடியில் வைத்து முத்தமிட்டார். பட்டத்தரசியார் அன்று எனக்கு அணிவித்த மரகத மாலை இது’’ என்று தனது கழுத்திலிருந்த மரகத மாலையைக் கழற்றி அந்தணரிடம் கொடுத்தார் புலவர்.

‘‘அருமையான விலையுயர்ந்த மாலை. நான் கேள்விப்பட்டேன்’’ என்றார் அந்தணர்.

‘‘சிறுவயது முதல் அரண்மனையில் செல்லப்பிள்ளையாக வளர்ந்த நான் என்றுமில்லாதவாறு இன்று கலங்கித் தவிக்கிறேன். மன்னரது தந்தையாரும் என்னில் அளவுக்கதிகமான அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். அவர்கள் என்னைப் புலவனாக நினைக்கவில்லை. தமது குடும்பத்தில் உள்ள ஒருவனாக நினைத்து அன்பு செலுத்தினர். அவர்கள் எல்லோரும் மிகவும் நல்லவர்கள்.

நந்திதேவன் தான் அவர்களது வம்சத்தைக் கெடுக்க வந்துள்ளான். பட்டத்தரசியும் நான்கு குமாரர்களும் இருக்க அவர் இளையராணியைத் திருமணஞ் செய்ய வேண்டுமா…? செய்தாலும் பரவாயில்லை. இவரது பாட்டனாருக்கு நான்கு மனைவிகள் இருந்தனர். இருந்த போதும் நாட்டை நீதிநெறி தவறாது ஆண்டு வந்தார். ஆனால் நந்திதேவன் நல்லவர்களின் பேச்சைக் கேட்பதேயில்லை. வெங்கடேசர் நல்லவர். அரசன் மீது பற்றும், பாசமும் உள்ளவர். அதேபோலத் தான் சேனாதிபதியாரும் நாட்டை விசுவாசிப்பவர். நேற்று ஏமநாதனை அழைத்துச் சுந்தரசேனன் வெகுநேரம் பேசியிருக்கிறான். அதைத் தெரிந்து கொண்ட முதலமைச்சரும் சேனாதிபதியாரும் மன்னனைத் தேடி அந்தரப்புரத்திற்குச் சென்றனர். அங்கே மன்னர் இல்லா மையால் அவர்கள் ஆபரணமாளிகைக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கு நந்திதேவன் இருவரையும் மிகவும் கேவலமாகப் பேசியுள்ளான். ஆட்சி புரியும் அரசன் அரசியல் செயல்களில் தனக்குத் துணையாக இருக்கும் அமைச்சர்,பிரதானிகளோடு கலந்து யோசிக்காமல் எந்த முடிவும் எடுக்கக்கூடாது. அத்துடன் அவர்கள் சொல்வதை அசட்டை செய்து அவர்களுடன் அர்த்தமின்றிக் கோபிக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அவனது வாழ்வு கெட்டுவிடும். நேற்று நடந்த சம்பவத்தை வெங்கடேசர் எனக்குச் சொல்லிக் கவலைப்பட்டார். மன்னர் அவரை அளவுக்கதிகமாக அவமானப் படுத்திவிட்டார். அதனால் தான் முதலமைச்சர் தலைமறைவாகியிருக்கிறார். கடைசி வரையும் அவர் ஏமநாதனுடன் சேரமாட்டார் என்றே நினைக்கிறேன். அத்துடன் சேனாதிபதியைப் பார்த்து "உமது படைவீரர்கள் எனக்குத் தேவையில்லை. நீரும் உமது படை வீரர்களும் சென்று தூங்குங்கள். நான் மகத நாட்டினதும் சிவபுரி நாட்டினதும் மன்னர் களுடனும் கலந்து பேசிப் பருத்திமலைப் படைகளை விரட்டுவேன்" என்றாராம். அதை மிகப்பெரிய அவமானமாகச் சேனாதிபதி நினைகிறார். அவர் கட்டாயம் ஏமநாதனோடு சேர்ந்துவிடுவார் என்று முதலமைச்சர் சொன்னார்".

"இருவரும் நல்லவர்கள் அத்துடன் வல்லவர்கள். இருவரையும் அரசர் பொறுத்த நேரத்தில் பகைத்திருக்கக் கூடாது" என்றார் அந்தணர்.

"இளையராணியின் மேலுள்ள மோகத்தால் மன்னர் ஆற அமர இருந்து நாட்டைப் பற்றி யோசிப்பதில்லை. மிக மிக இளவயதினை உடைய அவள் நல்ல அழகி. அதனால் அவளே தஞ்சமென மன்னர் நினைக்கிறார். அதனால் தான் நெடுங்காலமாகத் தனக்கு உற்ற துணைவர்களாகவுள்ள அமைச்சருடனும் முதலமைச்சருடனும் அர்த்தமின்றிச் சீற்றங்கொள்கிறார். இது பெரும் ஆபத்தில் தான் முடியப் போகிறது" கலங்கினார் புலவர்.

**568. இனத்து ஆற்றி எண்ணாத வேந்தன் சினத்து ஆற்றிச்**
**சீறின் சிறுகும் திரு.**

அமைச்சர் முதலான தனது இனத்தாருடன் கலந்து எண்ணாத அரசன், அர்த்தமின்றி கோபம் கொள்வானானால், அவனுடைய செல்வம் சுருங்கிப் போகும்.

### காத்துக் கொள்ளல்

புலவரும் அந்தணரும் மெதுவாக நடந்துகொண்டிருந்தனர். எங்கும் போர் வீரர்கள் ஆயுதங்களுடன் நடமாடிக் கொண்டிருந்தனர். புலவருக்கு போர்க்காலச்

சூழல் உருவாகிவிட்டதாகத் தோன்றியது. மக்கள் அச்சத்துடன் வீதிகளில் உலாவிக்கொண்டிருந்தனர்.

அந்தணர் தான் பூசை செய்யும் சிவன் கோயிலுக்குச் சென்றார். அது மிகவும் பழமை வாய்ந்த சிவன் கோயில். ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வேப்பமரத்தடியில் தானாக அச் சிவலிங்ம் தோன்றியதாகக் கதையுண்டு. அச்சிவன் மீது புலவர் அளவுக்கதிகமான பக்தியுள்ளவர். தினமும் காலையிலும் மாலையிலும் வந்து சிவனைத் தரிசிப்பார். சிவனின் மீது பல அந்தாதிகளைப் பாடிப் பரவசப்படுவார்.

''காலையில் சிவனை வணங்கினேன். சிவனை வணங்கினால் மனதிற்கு மகிழ்வாகவும் நிம்மதியாகவும் இருக்கும். ஆனால் இன்று எனது மனம் பரபரப்படைகிறது. தவிக்கிறது'' என்றவாறு கிணற்றடியில் கால் முகம் கழுவி விட்டுக் கோயிலினுள்ளே சென்றார் புலவர்.

''அந்தணருக்குப் புலவர் மீது அளவுகடந்த அபிமானமுண்டு. அதனால் சிவனது வாசற்கததவைத் திறந்துவிட்டார். உள்ளே எரிந்துகொண்டிருக்கும் தேங்காயெண்ணெய் விளக்கில் சிவன் பளபளவென ஒளிர்ந்தார். புலவர் தேவாரங்களைப் பாடினார்.

மக்கள் பலர் புலவரைக் கண்டதும் கோயிலுக்குள் வந்தனர். புலவர் அரசனுக்கு மிகவும் வேண்டியவர். அவைக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்பவர். அதனால் அவரிடம் செய்தியறியலாமெனப் பலர் வந்து குழுமினர். மக்களின் நோக்கம் புலவருக்குப் புரிந்தது. எனினும் அவற்றை எப்படி மக்களுக்குச் சொல்வது.

''புலவரே! நாட்டில் என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை. புதிதாக நியமிக்கப்பட்ட தளபதி மக்கள் எல்லோரையும் நகரின் மத்தியிலுள்ள விளையாட்டுத் திடலில் பயிற்சிக்காகக் கூடும்படி முரசறை விக்கிறார். போர் வரப்போகிறதா....?'' ஒரு குடிமகன திகிலுடன் கேட்டான்.

''போரை அரசர் விளையாட்டாகக் கருதிவிட்டார் போலத் தெரிகிறது. குடிமக்களிடம் ஆயுதங்களைக் கொடுத்துச் சில நாட்கள் பயிற்சி எடுப்பதன் மூலம் அவர்கள் வீரர்களாகிவிடுவார்களா...? முன்னதாகவே தக்க பாதுகாப்புக்களைச் செய்து கொள்ளமுடியாத அரசன் போர் வந்த காலத்தில் அழிந்து போவான் என்பதை அரசவைப் புலவரான தாங்கள் அரசனுக்கு உணர்த்தவில்லையா....? வீரம் மிகுந்த சேனாதிபதியையும் அறிவு மிக்க முதலமைச்சரையும் மாற்றி விட்டு நயவஞ்சகம் மிக்க கதிர்வேலவனைச் சேனாதிபதியாகவும் மூடரான கடம்பனாரை முதலமைச்சராகவும் நியமித்திருக்கின்ற அரசனை எப்படி நம்புவது'' என்று கேட்டான் இன்னொரு குடிமகன்.

புலவர் எதுவும் பேசவில்லை 'உண்மையை எப்படிச் சொல்வது. நான் எதைக்கதைத்தாலும் அது உண்மையான செய்தியென்று நினைத்து மக்கள் நம்பிவிடுவார்கள். அத்துடன் அச் செய்தி சில நிமிடங்களில் அரசனது காதுகளுக்கும் எட்டிவிடும். குடியானவன் சொல்வதைப்போல நயவஞ்சகனான கதிர்வேலவனும், மூடனான கடம்பனாரும் என்னைப் பற்றி தவறான கதைகளை

அரசனுக்குச் சொல்லிவிடுவார்கள். ஆராயாமலும் யோசனையின்றியும் நடக்கும் அரசன் என்னையும் சந்தேகப்படுவான்''. என்று நினைத்தார் புலவர்.

''புலவரே! உமக்குத் தெரியாதது எதுவும் இல்லை. தயவு செய்து சொல்லுங்கள்''. என்றான் முதலில் சொன்ன குடிமகன்.

''இன்று அரசசபைக் கூட்டத்தில் நான் கலந்துகொள்ளவில்லை. புதிய முதலமைச்சருடனும் புதிய சேனாதிபதியுடனும் முப்படைத் தளபதிகளுடனும் தான் அரசர் இரகசியமாக மந்திராலோசனை நடத்தினார்'' என்றார் புலவர்.

மக்களின் முகங்கள் வாடிக் கறுத்தன. அமைதியாக அவர்கள் வெளியே சென்றனர். அப்பொழுது அந்தணர் புலவரின் அருகே வந்து சொன்னார் ''புலவரே! மக்களின் மனதில் அளவுக்கதிகமான பீதி உண்டாகிவிட்டது. மக்கள் பலர் மூட்டை முடிச்சுக்களுடன் பருத்திமலையை நோக்கிச் செல்வதாக எனது மனைவி கூறுகிறாள். நானும் மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு பருத்திமலைக்குச் செல்லப்போகிறேன்''.

புலவர் அந்தணரைப் பார்த்தார். அவர் அளவுக்கதிகமாகப் பயந்திருக் கிறாரெனஅவரது முகம் காட்டியது ''நாட்டை ஆழும் அரசன் தினமும் பாதுகாப்பு எற்பாடுகளைக் கவனித்தல் வேண்டும். போர் வீரர்களுக்குத் தினமும் பயிற்சியளித்தல் வேண்டும். படைகள் எந்த நேரமும் உசாரான நிலையில் போருக்குத் தயாராக இருத்தல் வேண்டும். அவற்றையெல்லாம் விட்டுவிட்டு போர் வந்த பின் பாதுகாப்புக்களைச் செய்யலாமென்று நினைக்கின்ற அரசன் தன்னைக் காத்துக்கொள்ள முடியாது அழிந்து போவான். மக்கள் வீரமுள்ள அரசனிருந்தால் எக்கவலையும் படமாட்டார்கள்'' என்றார் புலவர்.

**569. செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்**
**வெருவந்து வெய்து கெடும்.**

முன்னதாகவே தக்க பாதுகாப்பைச் செய்து கொள்ளாத அரசன் போர் வந்த காலத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது அழிந்து போவான்.

### பாரமானவன்

''வெங்கடேசர் அறிவு மிக்கவர். பரம்பரை பரம்பரையாகவே அவரது குடும்பம் மங்களபுரியின் முதலமைச்சராக இருந்து வந்துள்ளது. மன்னரது தந்தை வெங்கடேசரோடு கலந்து ஆலோசிக்காது எந்தக்கருமங்களையும் செய்வதில்லை. ஒருமுறை மதகநாட்டரசன் சிவபுரி அரசனின் தூண்டுதலினால் மங்களபுரியின் கடற்பரப்பில் வரும் கப்பல்களையெல்லாம் கொள்ளையடித்து வந்தான். அது நந்திதேவனது தந்தையாருக்குக் கவலையைக் கொடுத்தது. எவ்வளவோ முயன்றும் கடற்கொள்ளையர்களைப் பிடிக்க முடியவில்லை. அதனால் மங்களபுரியின் கடற் பயணம் பாதிக்கப்பட்டது. வணிகர்கள் பொருட்களுடன் மங்களபுரிக்கு வரப்பயப்பட்டனர். அதனால் மன்னர் கவலைப்பட்டார். வெங்கடேசர் ஒற்றர்களை அனுப்பினார். கடலுள் அவர்களால் செல்லமுடியவில்லை. ஒரு நாட்டின் அரசன் தான் இப்படித் திட்டமிட்டு கொள்ளையில் ஈடபட்டு வருகிறானென நினைத்து மகத நாட்டிற்குத் தரைவழியாக அனுப்பப்பட்டு வந்த நெல்லை அனுப்பாது விட்டுவிட்டு கொள்ளையடிக்கப்படுவதாகக் கூறினார். அதை

மகதநாட்டு மன்னன் நம்பிவிட்டான். அதனால் சில ஒற்றர்களை பிரித்தானியர்கள் போல வேடமிட்டு மகத நாட்டிற்கு அனுப்பினார். சில ஒற்றர்கள் மகத நாட்டிற்குச் சென்று எல்லைப்புறக் கிராமங்களில் மக்களோடு மக்களாகத் தங்கிவிட்டனர். பல நாட்களின் பின்பு தான் ஒற்றர்கள் மூலம் மகதநாட்டு மன்னன் தான் மங்களபுரியின் உணவுக் கப்பல்களைக் கொள்ளையிடுகிறான் என்ற செய்தி வெங்கடேசருக்குக் கிடைத்தது. அதனால் ஆயுதங்களுடன் சிறந்த போர்வீரர்களை மங்களபுரிக்கு வரும் கப்பல்களுக்கு மாலுமிகளாக நியமித்தார். கொள்ளையர்கள் ஒரு நாள் மடக்கிப்பிடிக்கப்பட்டனர். அவர்களை வீரர்கள் மங்களபுரி அரசசபைக்குக் கொண்டு வந்து விசாரித்தனர். அவர்கள் மகத நாட்டரசனின் கைக்கூலிகளெனத் தெரிய வந்தது. மகதநாட்டு அரசனுக்குத் தெரிவிக்காது அவர்களைச் சிரச்சேதம் செய்யுமாறு வெங்கடேசர் உத்தரவிட்டார். இப்படிப் பலமுறை அவர்கள் பிடிக்கப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டனர். அத்துடன் மகதநாட்டுக் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமாகச் செல்லும் கப்பல்களை கடற்கொள்ளைக்காரர் என்ற பெயரில் வெங்கடேசர் கைப்பற்றிக் கப்பல்களைப் பறிமுதல் செய்தார். அத்துடன் மகதநாட்டிற்குத் தானியங்களையும் அனுப்பாது விட்டார். மகதநாட்டினர் தான் கடற்கொள்ளையர் என்று அயல்நாடுகளுக்கு இரகசியமாக அறிவித்துவிட்டு அயல்நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களைக் கொள்ளையிட்டார். அதனால் மகத நாட்டிற்குச் செல்லும் கப்பல் தலைவர்கள் பயப்பட்டனர். தனது செயலால் தான் வெங்கடேசர் திட்டமிட்டு இப்படிச் செய்திறார் என்பதை அறிந்த மகதநாட்டு மன்னன் கடற்கொள்ளையர்களை அடக்க மங்களபுரி அரசனின் உதவியை நடினான். அப்படித் திட்டமிட்டு எதிரிகளுக்குப் பெரும் நஷ்டமேற்படச் செய்ய வல்ல வெங்கடேசரை அரசன் அவமானப்படுத்தியது எவ்வளவு பிழை. அரசனுக்கு நல்ல இனத்தைவிடச் சிறந்த துணையில்லை தீயஇனத்தைவிட துன்பம் தரும் பெரும் பகை வேறு எதுவுமில்லை. அத்துடன் அறத்தை உணர்ந்தவராய்த் தம்மைவிட மூத்தவராக உள்ள அறிவுரையாளர்களின் தொடர்பை அரசன் ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமே தவிர அவர்களைப் பகைக்கக்கூடாது. அவர்களைப் பகைத்தால் தீமை அடையப்போவது அரசன் தான். தாம் கற்றதால் எதிர்காலத்தில் நடக்கப் போவதைக் கூறவல்ல அறிஞர்களின் தொடர்பை நாடு ஆபத்தில் உள்ள வேளையில் அறுத்துவிட்டு அறிவில்லாதவர்களை உயர்ந்த பதவிகளுக்கு நியமிப்பதும் ஆபத்தானது. அத்துடன் அவர்கள் பூமிக்குப் பாரமாக இருப்பார்களே தவிர உருப்படியாக எதையும் செய்யமாட்டார்கள். இதைக்கொடுங்கோலனான அரசன் உணரமாட்டான்'' என்றார் புலவர்.

அந்தணருக்குக் கவலையாக இருந்தது. வெங்கடேசர் முதலமைச்சராக இருக்கும் போது கோயிலுக்குக் குறைவில்லாமல் மானியங்களை அனுப்பி வைப்பார். தினமும் கோயிலுக்கு வந்து சிவனை வணங்கிவிட்டு அந்தணருடன் கலந்துரையாடுவார். அவரது குடும்ப நிலையை விசாரிப்பார். அவரது மூத்த மகன் கற்றுவிட்டு வயது வந்தபின்பும் தொழிலில்லாது இருந்ததை அறிந்து அவனுக்குத் தகுதியான வேலை கொடுத்தார். அத்துடன் கோயிலுக்கு வரும் பக்தர்களுடன்நட்புப்பூண்டு அவர்களது குடும்பநிலையைக் கேட்டறிவார். இதனால் நாட்டில் நடைபெறும் பல சம்பவங்களை அவர் உடனுக்குடன் அரசருக்குத் தெரிவித்து விடுவார். அதனால் நாட்டில் தீய செயல்களைச் செய்ய மக்கள் பயப்படுவார்கள். மக்களுடன் அவர் மகிழ்வுடன் பழகுவதால் மக்கள் அவரை மதித்துப் போற்றினார். அத்தகைய நற்பண்புகளையுடைய முதலமைச்சர் கோயிலுக்கு வராதது அந்தணருக்குக் கவலையை அளித்தது. அதனால் அவர் நலமாக வாழவேண்டுமெனச் சிவனை மனதாரப் பிரார்த்தித்தார்.

‘‘நல்லவர்களாகிய பெரியவர்களைப் பகைப்பதும், அவமானப்படுத்துவதும் எவ்வளவு ஆபத்தானது என்பதை நமது அரசர் உணரவில்லை. அத்தகையவர்க ளின் தொடர்பை விடுவது, பலரது பகையைத் தேடிக் கொள்வதைவிடப் பல மடங்கு தீமையைத் தரும். அரசரின் போக்கு எனக்கு மிகுந்த கவலையையும், அச்சத்தையும் தருகிறது. இந்நிலைமை நீடித்தால் விரைவில் பருத்திமலை அரசனின் உதவியுடன் ஏமநாதன் நாட்டைக் கைப்பற்றுவான்’’ என்றார் புலவர்.

‘‘ மக்கள் எத்தனை நாட்களுக்குக் கஷ்டப்படுவது. பசியால் வாடும் மக்களுக்காக ஏமநாதன் கொண்டு வந்த மூன்று கப்பல் உணவுப் பொருட்களையும் திருப்பியனுப்பியது எவ்வளவு கொடுமை. இப்பொழுதென்றாலும் பருத்திமலை அரசனுடன் நமது அரசர் நட்புப் பூண்டால் தனக்கு வரும் ஆபத்தி லிருந்து தப்பிக்கொள்ளலாம்...’’ என்று அந்தணர் கூறிக்கொண்டிருக்கும் போது புலவர் குறுக்கிட்டுச் சொன்னார் ‘‘மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதன்படி அரசன் தான் நினைத்தபடி நடக்கிறான். முதலமைச்சரையும் சேனாதிபதியையும் அவமதித்ததன் மூலம் அவன் தனக்குத் தானே ஆபத்தைத் தேடிக்கொண்டவனாவான். இனி அவனைக் காப்பாற்ற முடியாது. ஆபத்தின் எல்லையில் நிற்கின்றான். இன்றோ நாளையோ அல்லது இன்னும் சில நாட்களிலோ நந்திதேவனது ஆட்சி ஒழிக்கப்பட்டுவிடும்’’ என்று கூறிப்பெருமூச்சு விட்டார் புலவர்.

**570. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்; அதுவல்லது**
**இல்லை நிலக்குப் பொறை.**

கொடுங்கோலனான அரசன் கல்லாதவரையே தனது பாதுகாவலராக வைத்துக் கொள்வான். அதைப் போல் பூமிக்கும் பாரமானது வேறெதுகும் இல்லை.

**காரணம்.**

‘‘மங்களபுரியின் அரசசபை கூடியது. காலாட்படைத் தளபதி மணிமாறன் சேனாதிபதி கதிர்வேலவன் முதலமைச்சர் கடம்பனார் போன்ற நாட்டின் உயர் அதிகாரிகளுடன் நந்திதேவன் கலந்துரையாடிக் கொண்டிருந்தான்.

மூன்று தினங்களுக்கு முன்பு கடம்பநாட்டு அரசனுக்கு மகத நாட்டரசனுக்கும், சிவபுரி நாட்டரசனுக்கும் பருத்திமலை அரசன் சுந்தரசேனன் தனது படைகளின் உதவியுடன் ஏமநாதனைத் தலைவனாகக் கொண்டு எமது நாட்டின் மீது படையெடுக்கவிருக்கிறான் என்று இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உடனடியா எனக்குப் படைஅனுப்பி உதவி செய்யுங்கள் என்று தூதுவர்கள் மூலமாகச் செய்தி அனுப்பினேன். இதுவரை எவரும் அதற்குரிய பதிலை அனுப்பவில்லை’’ என்றான் நந்திதேவன்.

அவனது வார்த்தைகளில் துயரம் தோய்ந்திருந்தது. சபையோர் எவரும் பேசவில்லை. சிலகணங்கள் நிசப்தம் நிலவியது.

மன்னன் தொடர்ந்து பேசினான் ‘‘முன்பு எல்லா உதவிகளையும் அளிப்பதாக ஒப்புக்கொண்ட மூன்று நாட்டு அரசர்களும் இப்போது அசட்டையாக இருக்கின்றார்கள். எமது தூதுவர்களைச் செல்லுமாறும், தனது தூதுவர்கள் மூலம் சொல்லியனுப்புவதாகவும் சொல்லியனுப்பினார்கள். மூன்று நாட்கள்

கழிந்தும் எந்தச் செய்தியும் அனுப்பவில்லை. அதை நினைக்கக் கவலையாக உள்ளது''

''இன்னொரு முறை தூதுவர்களை அனுப்பிப் பாருங்கள். இல்லாவிட்டால் நான் சென்றுவர அனுமதி தாருங்கள்'' என்று கேட்டான் கதிரவேலவன்.

''அப்படித்தான் நானும் நினைத்தேன். நீ, வீரர்களை அழைத்துக் கொண்டு மூன்று நாடுகளுக்கும் சென்றுவா'' என்றான் நந்திதேவன்.

''மன்னா! சொல்கிறேன் என்று குறைநினைத்துக் கொள்ளாதீர்கள். அவர்கள் மூன்று தினங்கள் கழிந்தும் செய்தியனுப்பவில்லை என்றால் படைஅனுப்பும் எண்ணம் தமக்கில்லை என்பது தானே அர்த்தம். நாம் மீண்டும் தூதுவர்களை அனுப்பிச் செய்தி அறியலாமே தவிர சேனாதிபதியை அனுப்புவது முறையல்ல'' என்றார் புலவர்.

நந்திதேவன் புலவரை நிமிர்ந்து பார்த்தான். அவரது ஒளி பொருந்திய கண்கள் கலவரத்தை ஏற்படுத்தியது. அப்பொழுது சபையின் முன்பக்கத்தில் பலத்த ஆரவாரம் எழுந்தது. பல வீரர்கள் ஆயுதங்களுடன் விரைவாக அரசசபை நோக்கி வந்துகொண்டிருந்தனர். கதிரவேலவன் மெல்ல எழுந்து பிற்பக்கமாகச் சென்றான். வீரர்களின் முன்னால் வந்த ஏமநாதன் ''அனைவரையும் கைது செய்யுங்கள் என்றான். நந்திதேவனுக்குப் பாதுகாப்பளித்துக் கொண்டிருந்த வீரர்கள் ஆயுதங்களுடன் நந்திதேவனை நெருங்கி வந்தனர். நந்திதேவன் தனக்குப் பாதுகாப்பளிக்கவே அவர்கள் தன்னைச் சூழ்ந்து வருகிறார்களென நினைத்தான். ஆனால் அவ்வீரர்கள் அவனைக் கைது செய்தனர்.

''மார்த்தாண்டா. உன்னை நான் எவ்வளவு நம்பியிருந்தேன். நீயே இப்படி நடந்தால் மற்றவர்கள் என்ன செய்வார்கள்...?'' என்று கேட்டான்.

''நந்திதேவா!'' தன்னிடஞ் சேவகஞ் செய்தவன் தன்னைப் பெயர் சொல்லி அழைத்திருக்கிறானே என்று நினைத்துத் திகிலடைந்து போய் நின்றான் நந்திதேவன். ''நந்திதேவா கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற இரக்கம் என்னும் சிறப்பு மிக்க அழகு இருக்கின்ற காரணத்தினால் தான் இந்தப் பரந்த உலகம் அழியாமல் இருக்கிறது. நீ எமது நாட்டு மக்களுக்கு இரக்கமில்லாமல் எவ்வளவு கொடுமைகளைச் செய்தாய். மக்களும், பசுக்களும் நீரின்றி வாட, உனது பூஞ்செடிகளுக்கு மகத நாட்டிலிருந்து நீர் கொண்டுவந்து ஊற்றினாய். மக்கள் பசியால் வாட நீ உல்லாசப் பயணஞ் செய்தாய். உனது மனதில் இரக்கம் என்பது இல்லாமையாற் தான் இவையெல்லாம் நடந்தன. உனக்குச் செய்தியனுப்பிய மூன்று நாட்டுத் தூதுவர்களையும் நாம் கைது செய்துள்ளோம். மகத நாட்டரசனின் செய்தியைப் படிக்கிறேன் கேள் '' மங்களபுரி அரசர் நந்திதேவனுக்கு, தங்களின் இரக்கமில்லாத கொடுங்கோலாட்சிக்கு உதவ எமக்கு விருப்பமில்லை. பருத்திமலை பலம் மிக்க ஒரு நாடு. அங்கு சகல வளங்களும் உள்ளன. நாம் அவர்களிடமிருந்து ஏராளமான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கிறோம். அவர்கள் உணவை அனுப்பாவிட்டால் எமது நாட்டு மக்கள் பசியால் துன்பப்படுவார்கள். நீ இரக்கமில்லாது நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்தி வருகிறாய். எனவே நாட்டு மக்கள் உன்னை வெறுக்கிறார்கள். மக்கள் மீது இரக்கம் காட்டாத அரசனுக்கு ஆயிரம் ஆயிரம் படைவீரர்கள் துணையிருந்தாலும் எதிரிகளை வெல்ல முடியாது. மக்களே

படைகளாக மாறி எதிரிகளை அழிக்கத் தொடங்கினால் எந்த நாட்டுப்படையாலும் தாக்குப் பிடிக்க முடியாது. மக்கள் மீது இரக்கமில்லாத உனக்கு இரக்கம் காட்ட நான் விரும்பவில்லை'' எப்படி...?'' என்று கேட்டான் மார்த்தாண்டன்.

**571. கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை**
**உண்மையான் உண்டுஇவ் வுலகு.**

கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற இரக்கம் என்னும் மிகச் சிறந்த அழகு இருக்கின்றமையால் தான், இந்த உலகம் அழியாமல் இருக்கிறது.

## பூமிக்குச் சுமை

''அப்படியானால் இவ்வளவு காலமும் மகத நாட்டரசன் நடித்திருக் கிறானா..?'' ''சுந்தரசேனன், எமது நாட்டு இளவரசியான கௌசல்யகுமாரியை கடத்திச் சென்றுள்ளான். அவள் என்னைத் தான் விரும்பியிருந்தவள். நான் அவள் மீது உயிரையே வைத்திருந்தேன். ஆனால் சுந்தரசேனன் அவளின் மயங்கிப் பலாக்காரமாக அவளைக் கடத்திச் சென்று அடைத்து வைத்தான். பின்பு தன்னைத் திருமணஞ் செய்யுமாறு அவளைக் கேட்டிருக்கிறான். அவள் மறுத்துவிட்டாள். நாட் செல்லச் செல்ல கௌசல்யகுமாரியின் மேலிருந்த மோகத்தால் சுந்தரசேனன் பைத்தியக்காரனாகி விட்டான். அதன் பின் அவன் பலாத்காரமாகவே அவளை அடைந்தான். கடைசிவரையும் அவள் என்னை நினைத்துத் தான் வாழ்ந்தாள். சுந்தரசேனன் மோகப்பட்டானே தவிர கௌசல்யகுமாரியை அவன் விரும்பவில்லை. அதனால் அவளைத் தனியறையில் அடைத்து வைத்துத்தான் பெண்களைத் தெய்வமாகப் போற்றும் எமது நாட்டின் பெருமையை அவன் கெடுத்துவிட்டான். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் அவனைக் கொன்றே தீருவேன்'' என்று மகத நாட்டரசன் சொன்னது அவனின் காதில் ஒலித்தது.

''நந்திதேவா! நான் சொல்லியது பொய் என்றால் இந்தா ஓலை படித்துப்பார். மதகநாட்டு மன்னன் தனது கையாலேயே இதை எழுதியுள்ளான். உனக்கு அவனது கையெழுத்துத் தெரியும் இந்தா பார்'' என்று ஓலையை நீட்டினான் மார்த்தாண்டன்.

நடுங்கும் கையை நீட்டி அவ்வோலையை வாங்கிய நந்திதேவன் அதில் எழுதப்பட்ட எழுத்தைப் பார்த்தான். அது மதக நாட்டரசனின் எழுத்துத் தான். சந்தேகமில்லை. அவனது உடல் நடுங்கியது.

''வெளியே மக்கள் கூடி நின்று கோசமெழுப்பினர் ''நந்திதேவனைக் கைது செய்து விசாரணை நடத்துங்கள். எமது மன்னர் ஏமநாதன் வாழ்க.... வாழ்க...'' மக்கள் எழுப்பிய கோசம் விண்ணை அதிரச் செய்தது.

''மன்னா'' துயருடன் அழைத்தார் வெங்கடேசர். அவரால் பேசமுடியவில்லை. சில கணங்கள் தடுமாறினார். அவரது கண்களால் கண்ணீர் வழிந்தது ''மன்னா, உனது பரம்பரையினரது மானத்தைக் கெடுத்துவிட்டாய். உனது மூதாதையர் அனைவரும் மக்கள் மீது இரக்கம் கொண்டிருந்தனர்.

உனது பாட்டனார் மதிய உணவு உண்பது மூன்று மணிக்குப் பின்பு தான். ஏன் என்று தெரியுமா…?'' என்று கேட்டுவிட்டுச் சில கணங்கள் விம்மி விம்மி அழுதார் ''அது உனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் நீ இப்படி நடந்திருக்க மாட்டாய். அவர் நாட்டிலுள்ள அத்தனை மக்களும் சாப்பிட்ட பின்பு தான், தான் சாப்பிட வேண்டும் என்று சபதமெடுத்திருந்தவர். உண்ண உணவுக்கு வழியில்லாதவர்களுக்கென ஊரில் உள்ள கோயில்களில் அன்னதானம் செய்வதற்குரிய பொருட்களைக் கொடுத்திருந்தார். ஆனால் ஒரு நாளென்றாலும் அக்கோயில்களுக்கு உண்ண வழியில்லையென்று ஒருவர் கூட வரவில்லை. அப்படியிருந்தும் அவர் மூன்று மணிக்குப் பின் தான் சாப்பிடுவார். நாமெல்லோரும் எடுத்துக் கூறியும் அவர் சாப்பிட மறுத்துவிட்டார். அப்படியானவரின் வழியில் வந்த நீ இரக்கமில்லாமல் அளவுக்கதிகமான வரிகளை மக்கள் மீது திணித்துப் பலாக்காரமாக வசூலித்தாய். மக்கள் உணவுக்காகவும், விதைப்புக்காகவும் வைத்திருந்த தானியங்களை அறாவிலைக்கு விற்றுத்தான் உனக்குத் திறைகட்டினர். கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற இரக்கத்தால் தான் உலகம் இயங்குகின்றது. இரக்கமில்லாதவர்கள் உலகில் வாழ்வதென்பது பூமிக்குச் சுமையே தவிர வேறெந்தப் பயனுமில்லை. மிருகங்கள் பறவைகள் கூடத்தன் இனத்தின் மீது இரக்கம் காட்டுவதை நீ அறியவில்லையா. எமது நாட்டில் குட்டியீன்ற பூனையொன்று வாகனம் மோதியதால் இறந்துவிட்டது. அதன் குட்டிகளுக்கு அந்த வீட்டில் நின்ற நாய் பால்கொடுத்து வளர்த்ததையும், குரங்கொன்று வழியில் உணவின்றிக் கத்திய நாய்க்குட்டியைத் தூக்கிச் சென்று மரத்தில் வைத்துப் பால் கொடுத்ததையும் நீ அறியவில்லையா…? அப்படியிருக்க ஆறறிவு படைத்தநீ இரக்கமில்லாது எத்தனை மனித உயிர்களை வதைத்தாய். எத்தனை மிருகங்களைக் கொன்றாய். அந்தப் பாவம் தான் உன்னைச் சூழ்ந்தது. உனது பரம்பரையினரின் உப்பைத் தின்ற நான் உனக்கு எத்தனை முறை இவற்றைச் சொல்லியிருப்பேன். நீ கேட்டிருந்தால் இன்று இந்நிலை உனக்கு வந்திராது'' கலங்கினார் வெங்கடேசர்.

**572. கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃதிலார்**
**உண்மை நிலக்குப் பொறை.**

கண்ணோட்டத்தால் தான் உலகம் நடைபெறுகிறது. கண்ணோட்டம் இல்லாதவர்கள் பூமிக்குப் பாரமாக இருப்பார்களே தவிர அவர்களால் வேறு பயன்கள் இல்லை.

### பயனில்லாத கண்கள்

நந்திதேவன் கலங்கும் வெங்கடேசரைப் பார்த்தான். வெங்கடேசர் முன்பு பல முறை அவனுக்குப் புத்திமதிகள் கூறியிருக்கிறார் ''மன்னா! உனது பரம்பரை மிகுந்த கௌரவமுடையது. உனது தந்தையும் பாட்டனாரும் குடி மக்கள் அனைவரையும் தமது பிள்ளைகளாகவே கருதினர். குடிமக்களும் அவர்களைத் தமது தெய்வங்களாகத் தான் நினைத்தனர். உனது தந்தையாரை எந்தக் குடிமகனும் எந்தவேளையிலும் சந்திக்கலாம், ஒரு நாள் இரவு கொடிய நாகமொன்று கிராமத்தில் உள்ள வீடொன்றில் புகுந்து ஒரு சிறுவனைக் கடித்துவிட்டது. சிறுவன் உடனே விஷம் தலைக்கேறி மரணமடைந்து விட்டான். குடியானவனுக்கு ஒரேயொரு பிள்ளை தான். அவன் அந்த நடுச்சாம வேளையில் இறந்த தனது மகனின் உடலைத் தூக்கிக் கொண்டு அரசசபைக்கு வந்துவிட்டான். அரசர் பதறிப்போனார். நடுக்கிராமத்துள் காட்டில் வசிக்க

வேண்டிய அந்தக் கொடிய நாகம் எப்படி வந்ததென்று அனைவரையும் விசாரித்தார். அத்துடன் கிராமம் தோறும் வைத்தியர்கள் இருக்கின்றார்கள். அந்த வைத்தியர்களால் சிறுவனைக் காப்பாற்ற முடியாதென்றால் அவர்கள் கற்ற கல்வியால் என்ன பயன்? என்று கேட்டார். அவரது கேள்விக்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை''.

''அந்தச் சிறுவனின் மரணம் அரசரை வெகுவாகப் பாதித்துவிட்டது. அதனால் அவர் அந்தச் சிறுவன் இறந்ததற்குக் காரணம் நான் தான் என்று கூறி அன்று முதல் இரவு உணவை உண்ணாது விட்டுவிட்டார். வீரர்கள் இரவு வேளைகளில் வீடுகளுக்குச் சென்று பாம்புகள் இருக்கின்றனவா என்று தேடிப் பார்க்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அவர் இறக்கும் வரைக்கும் இரவு உணவை உண்பதில்லை. அப்படிப்பட்ட இரக்க சிந்தை மிக்க தகப்பனுக்குப் பிள்ளையாகப் பிறந்த நீ, மக்கள் மீது இரக்கமில்லாது எத்தனை கொடுமைகளைச் செய்தாய். மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெறும் குடும்பத்தினருக்கு மானியம் இல்லையென்று நீ அறிவித்தால் கொல்லப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை உனக்குத் தெரியுமா…? உனது தந்தையார்பதினாறு பிள்ளைகளைப் பெற்ற குடும்பத்தினரை அசைசபைக்கு அழைத்துக் கௌரவித்துத் தன்னுடன் சமமாக இருத்தி அவர்களுக்கு உணவு கொடுத்தார். பின் பரிசும் அளித்தார். அப்படியிருக்க நீ செய்த செயல்களை எண்ணிப் பார். எமது குடும்பம் பரம்பரை பரம்பரையாக உனது குடும்பத்தின் உப்பைத் தின்று வளர்ந்தது. அதனால் தான் சொன்னேன். உனக்குப் பிடிக்காவிட்டால் தண்டனையைக் கொடு'' என்ற வார்த்தைகள் ஒலித்தன.

''அரசே! இப்பொழுது நீ பதவியை இழந்தாலும் எனக்கு அரசன் நீ தான். நீ என்னைக் கொன்றாலும் கொன்றுவிடுவாய் என்று நினைத்துத் தான் தலைமறைவாகியிருந்தேன். சேனாதிபதி அரசகேசரியை நீ அளவுக்கதிகமாக அவமானப்படுத்தியதால் அவர் பருத்திமலைக்குச் சென்றுவிட்டார். பருத்திமலை அரசன் மிகவும் நல்லவன். இரக்கம் மிகுந்தவன். ஆசை இல்லாதவன். குடிமக்களை அன்பாக நேசிப்பவன். அதனால் தான் தான் படையெடுத்து வந்து உன்னை வெற்றி கொள்ள நினைக்கவில்லை. அத்துடன் உனது இரக்கமில்லாத போக்கால் பயந்த வீரர்கள் உனக்கு விசுவாசமுள்ளவர்களைப் போல நடித்துக் கொண்டார்களே தவிர உன்மீது அன்பு வைக்கவில்லை. மாத்தாண்டனுக்கும் ஏமநாதனுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. உன்னைப் பழிவாங்க வேண்டுமென்று சமயம் பார்த்திருந்த அவன் சமயம் வந்ததும் உன்னைக் கைது செய்துவிட்டான். மன்னா! பாட்டோடு பொருந்தாத இசையால் பயன்இல்லை. பாட்டோடு பொருந்தாத இசை கஞ்சிக்குள் இருக்கும் கற்களைப் போன்றது. அதே போல இரக்கமில்லாத கண்களால் பயனில்லை'' என்றார் வெங்கடேசர்.

''மணிபல்லவா, உடனடியாக நந்திதேவனையும் அவனது சகாக்களையும் கைது செய்து பாதாளச் சிறையில் அடையுங்கள்'' என்று கட்டளையிட்டான் ஏமநாதன். போர்வீரர்கள் அரண்மனைக்குள்ச் சென்று தேடுதல் நடத்தினர். அவர்கள் கதிர்வேலவனையும் கடம்பனாரையும் கைது செய்து ஏமநாதனின் முன் கொண்டு வந்தனர்.

''கதிர்வேலவா, உன்னால் தான் நந்திதேவன் இந்த நிலைக்கு வந்தவன். நீ உனது சுயநலத்திற்காக மன்னனை ஏமாற்றியதை நானறிவேன். மக்கள் பசியால் வாடும் போது நான் கப்பல்களில் உணவு கொண்டு வந்தேன். அக்கப்பல்களைத் துறைமுகத்துள் நுழையவிடக்கூடாதென நீ சொன்னதால் தான்

நந்திதேவன் கப்பல்களைத் துறைமுகத்துக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. அதனால் உனக்கு பல இலட்சம் ரூபா ஆதாயமாகக் கிடைத்தது. வணிகனான உனக்கெதற்குச் சேனாதிபதிப் பதவி. நீ வாணிபஞ் செய்யும் போது எத்தனை திருகுதாளங்களைச் செய்திருக்கிறாய். மகத நாட்டரசனுடன் சேர்ந்த நீ எத்தனை கப்பல்களைக் கொள்ளையிட்டிருக்கிறாய். கப்பலையும் பொருட்களையும் இழந்த சில வணிகர்கள் கடன் தொல்லையைத் தாங்கமுடியாது தற்கொலை செய்து கொண்டமை உனக்குத் தெரியும். அவர்களது மரணவீட்டிற்குச் சென்று சொற்ப நிதியுதவி செய்து அக்குடும்பத்தினரினதும் நாட்டு மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றாய். இன்று வரை அக்குடும்பத்தினரும் நாட்டு மக்களும் உன்னைப் போற்றிப் புகழ்கிறார்கள். அதனால் உனக்குக் கடுந்தண்டனை தரவேண்டும்''. கர்ஜித்தான் ஏமநாதன்.

**573. பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்; கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.?**

பாவோடு பொருந்தாத இசையால் பயன் இல்லை. அது போல இரக்கமில்லாத கண்களால் பயன் இல்லை.

### பயனில்லை

கதிர்வேலவனது உடல் நடுங்கியது. ஏமநாதனின் கப்பலொன்றையும் அவன் பொருட்களுடன் கடத்திச் சென்றவன். அதனால் ஏமநாதன் தன்னைக் கொல்லாமல் விடமாட்டான். என்று நம்பினான்.

''கடம்பனாரே! வெங்கடேசர் மிகுந்த அறிவாளி. மதிநுட்பம் வாய்ந்தவர். அப்படியொருவர் முதலமைச்சராக இருக்கவேண்டிய இடத்தில் நீர் எப்படியிருக்கலாம்?. மன்னன் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டி அவனைத் தீயவழியில் செல்லாமல் காப்பது தான் நல்லவர்களின் கடமை. அதனால் நீர் அரசன் செய்யும் தீய செயல்களுக்கெல்லாம் காரணமாக இருந்ததோடு தீய செயல்களைச் செய்யவும் ஊக்குவித்தீர். உமக்கு விரோதமானவர்களை இரக்கமின்றி அரசனின் துணையுடன் பழிவாங்கினீர். மாயப்பனின் அழகான மூன்று பெண்கள் மீது நீர் மையல் கொண்டீர். சிவன் கோயில் திருவிழாவிற்கு வந்த மாயப்பனின் மூத்த மகளைக் கடத்திச் சென்று உம்முடைய மிருக இச்சையைத் தீர்த்தீர். அதை அறிந்த மாயப்பன் நியாயம் கேட்க வந்தபோது போர் வீரர்களுடன் சேர்ந்து இரவோடு இரவாக அவனைக் கடத்திச் சென்று கொலை செய்து இரகசியமாகப் புதைத்தீர். பின் மகளால் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்க முடியாது மாயப்பன் ஊரைவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டான் என்று கதைகட்டி விட்டீர்கள். இவைகள் செய்வது தான் முதலமைச்சரின் இலட்சனமோ..? உமது முகத்தில் உள்ளவை போலக் காணப் பட்டாலும் இரக்கமில்லாத கண்களால் என்ன பயன்..? உமது மகளுக்கு இப்படி ஒரு நிலை வந்திருந்தால் நீர் பொறுப்பீரா? உமது கண்களால் கண்ணீர் வழியாதா..? மனிதன் என்பவன் இரக்கமுள்ளவனாக இருக்கவேண்டும். இரக்கமில்லாத உயிர்களை அசைவற்ற உணர்வற்ற கற்கள் என்றே கூறவேண்டும்''. என்றான் ஏமநாதன்.

கடம்பனாருக்கு வியர்த்துக் கொட்டியது. பயத்தால் உடல் நடுங்கியது "எனக்கு இந்த நாட்டைக் கைப்பற்றி ஆளவேண்டுமென்ற நினைப்பு ஒருபோதும் வந்ததில்லை. நான் உங்களைப்போல அரண்மனையிலும் அந்தப்புரத்திலும் வசித்தாலும் மக்களோடு மக்களாக இணைந்திருந்தவன். அதனால் மக்கள் பட்ட வேதனைகள் முழுவதும் எனக்குத் தெரியும். அவர்கள் படும் வேதனைகளைக் கண்டு எனது கண்கள் இரத்தக் கண்ணீர் வடித்தன. மனிதன் தன்னைப் பற்றியே சதா நினைத்துக் கொள்ளும் சுயநலம் தான் மனிதனின் இருதயத்தை இரும்பாக்கி அவனை இரக்கமில்லாதவனாக்குகிறது. நானும் எனது குடும்பத்தினரும் தான் வாழவேண்டும், மற்றவர்களெல்லோரும் ஏழைகளாகத் துன்பப்பட வேண்டும் என்று நினைப்பதால் தான் நமது நாட்டில் இத்தனை கொடுமைகளும் நடைபெற்றன. உன்னால் ஒருவனுக்கு உதவி செய்ய முடியாது விட்டாலும் பரவாயில்லை அவனுக்குத் துன்பஞ் செய்யாமல் இரு, அவனைக் கெடுக்க நினைக்காதே என்று முதலமைச்சராக வரத்தெண்டித்த உனக்குத் தெரியாதா…?" ஏமநாதன் எரிமலையாக வெடித்தான்.

கடம்பனார் நடுநடுங்கினார். "ஏமநாதன்" என்று அவரது நா உச்சரிக்க முயல அவர் தனது நாவைக் கடித்து அடக்கிவிட்டு "மன்னா, உங்களுக்கு யாரே தவறுதலாகக் கூறிவிட்டார்கள். நான் எக்குற்றமுஞ் செய்யவில்லை" கடம்பனார் பேசிக்கொண்டிருக்கும் போது போர்வீரனொருவன் அவரின் முன்னால் வந்தான் "கடம்பனாரே எங்கே எனது முகத்தைப் பார்த்துச் சொல்லும் பார்ப்போம். நீர் மாயப்பனை மட்டுமா கொலை செய்தீர். வீரசொக்கன், சிவபரணன் ஆகியோரைக் கொலை செய்யும்படி என்னிடம் பணம் தரவில்லையா..?"

கடம்பனார் ஆடிப்போனார். அவர்களிருவரையும் கொலை செய்யும்படி அவனுக்குப் பெருந்தொகையான பணம் கொடுத்தது அவரது நினைவுக்கு வந்தது "பயப்படாதீர்கள் நான் அவர்கள் இருவரையும் கொலை செய்யவில்லை. இந்த நாட்டை விட்டுத் தப்பிச் செல்லும்படி சொன்னேன். அவர்கள் இன்னும் சில தினங்களில் வந்து நீர் செய்தவற்றையெல்லாம் சொல்வார்கள்" என்றான்

கடம்பனாரின் உடல் நடுங்கத் தொடங்கியது. இனித் தப்பமுடியாதென்று நினைத்தார்.

"முகத்தில் உள்ள கண்கள் கருணை மிக்கனவாக இருத்தல் வேண்டும். அக்கண்கள் மக்கள் படும் துன்பத்தைக் கண்டு கலங்கவேண்டும். அத்துன்பங்களைத் தீர்ப்பதற்கான செயல்களைச் செய்ய வேண்டும். அப்படியில்லாத கண்கள் முகத்தில் இருப்பதால் என்ன இலாபம்?. எதுவும் இல்லை. இரக்கமுள்ளவன் தான் மனிதன். தீய செயல்களைச் செய்வதில் சக்தியைச் செலவிடாமல், அமைதியுடனும் இரக்கத்துடனும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டால், ஒருவன் எந்தளவிற்கு உயர்வடைவான் என்பதற்கு ஏமநாத மன்னரே சாட்சியாவார். அவையில்லாவிட்டால் அழிந்து போவார் என்பதற்கு நீங்களே உதாரண புரிஷர்களாக இருக்கிறீர்கள்" என்றார் வெங்கடேசர்.

**574. உளபோல் முகத்துளவன் செய்யும் அளவினால்**
**கண்ணோட்டம் இல்லாத கண்?**

இரக்கமில்லாத கண்கள் முகத்தில் இருப்பவை போலத் தோன்றினாலும் அவற்றால் எந்தப் பயனும் இல்லை.

**புண்கள்.**

ஒரு வாரத்தின் பின் மங்களபுரி அரசசபை கூடியது. ஏமநாதன் மங்களபுரியைக் கைப்பற்றிய பின் நந்திதேவனையும் அவனது சகாக்களையும் பிடித்துப் பாதாளச் சிறையில் அடைத்தான். ஒருவார காலமாக நாட்டின் அபிவிருத்தி வேலைகளைக் கவனித்தான். பருத்திமலையில் இருந்து பலகப்பல்களில் உணவுப் பொருட்களும், மக்கள்களுக்குத் தேவையான உபகரணங்கள், உடைகளும் வந்திறங்கின. மங்களபுரியின் மக்கள் மிகவும் குதூகலமாக இருந்தனர். பருத்திமலைக்கு இடம்பெயர்ந்து சென்ற மக்களெல்லாம் திரும்ப வந்து மங்கள புரியில் குடியேறினர். ஒரு வருட காலமாகப் பெய்திருந்த மழை பெய்ய ஆரம்பித்தது. மக்கள் குதூகலத்துடன் விதைப்பில் ஈடுபட்டனர்.

அன்று சபை கூடியதும் நந்திதேவனை அரசசபை விசாரணை செய்தது "நந்திதேவா, நீ மங்கள புரி மக்களுக்கு அளவுக்கதிகமான துன்பங்களைச் செய்துள்ளாய். அரசன் முறைதவறி ஆட்சி செய்தானேயானால் பருவ மழை பொய்க்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உண்மை. உனது ஆட்சிக் காலத்தில் பெய்யாத மழை ஓயாமல் பெய்கிறது. நாட்டிலுள்ள குளங்கள் யாவும் நிரம்பி விட்டடன. அங்கு நிறைந்த நீர் மூலம் மூன்று போக நெற்செய்கை செய்யலாம். மக்கள் சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் கலப்பையைத் தூக்கித் தோளில் வைத்துவிட்டனர். மூன்று மாதங்களுக்குள் சகல பயிர்களும் உண்டாகிவிடும். உனது ஆட்சி கலைக்கப்பட்டதால் இயற்கையே மிகவும் மகிழ்ந்துள்ளது. அப்படியானால் மக்கள் எவ்வளவு மகிழ்வார்கள் தெரியுமா..?" என்று கேட்டான் ஏமநாதன்.

"அரசன் மக்களுக்கு நன்மைகள் செய்பவனாக இருத்தல் வேண்டும். மங்களபுரியின் வாழ்விற்காக அரசன் தன்னைத்தானே தியாகஞ் செய்ய வேண்டும். அரசன் மக்களுக்கு நன்மை செய்வதன் மூலம் அவன் தனக்குத் தானே நன்மை செய்பவனாவான் என்று நீதி நூல்கள் கூறுகின்றன. பருத்திமலை அரசன் மக்கள் மீது அளவுக்கதிகமான இரக்கம் கொண்டிருப்பதால் தான் நீ அனுப்பிய ஒற்றர்களை மக்களே அடித்துக் கொன்றனர். இங்கு நாட்டு மக்கள் உன்னை அடித்துக் கொலை செய்யவேண்டுமென்று வாசலில் கோசமெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உன்னைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்கிறார்கள். இதிலிருந்து நீ செய்த கொடுமைகள் எவ்வளவு என்று உனக்குத் தெரியும்" என்றான் மாத்தாண்டன்.

"அரசே! நந்திதேவன் பல கொடுமைகளை இரக்கமின்றிச் செய்துள்ளான். எனினும் அவன் மீது இரக்கம் கொண்டு அவனுக்கு மரணதண்டனையளிக்காது ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்குங்கள். அவன் இரக்கமில்லா விட்டாலும் அவனது மூதாதையார் மிகவும் நல்லவர்கள். நல்ல முறையில் ஆட்சி செய்தவர்கள். இவனது தந்தையாரின் காலத்தில் தான் உச்சுவில் குளம் வெட்டப்பட்டது. அவன் மூலம் இன்று பத்தாயிரம் ஏக்கருக்கு நீர் பாச்சப்படுகிறது. அக்குளத்தை நல்லமுறையில் பேணினால் நாம் நெல்லை ஏற்றுமதி

செய்யலாம். உச்சுவில் குளம் கடந்த பதினைந்து வருடங்களாக புணரமைக்கப்படாததாலும் நீர்ப்பாசனக் கால்வாய்கள் திருத்தப்படாமையாலும் தான் எமது விவசாயம் பாதிக்கப்பட்டது. நான் மன்னருக்கு கடந்த ஐந்து வருடமாக அக்குளத்தைப் புணரமைப்புச் செய்யுமாறு கூறிவந்தேன். அந்தக்குளத்தைப் புனரமைப்புச் செய்திருந்தால் அரசருக்கு இந்த நிலையேற்பட்டிருக்காது. மன்னா! ஒருவனது கண்களுக்கு ஆபரணம் என்று சொல்லப்படுவது இரக்கமே ஆகும். இரக்கமில்லாத கண்கள் புண்கள் என்றே கருதப்படும். புதிய மன்னரின் கண்களில் இரக்கம் பூத்திருக்கிறது. அதனால் தான் மக்கள் படும் துன்பங்களைக் கண்டு இரங்கினார். அவருக்கு பழைய மன்னர் எத்தனையோ துன்பங்களைச் செய்த போதும் பொறுத்திருந்த அவர் மக்கள்படும் துன்பங்களைக் கண்டு இரங்கியமையால் தான் இந்த நிலை ஏற்பட்டது. கருணை மிக்க மன்னரே! தயவு செய்து நந்திதேவனுக்கு மரணதண்டனை அளிக்காதீர்கள்'' கெஞ்சினார் வெங்கடேசர்.

''கண்ணோட்டத்தால் தான் உலகம் இயங்குகிறது. கண்ணோட்டம் இல்லாதவர்கள் பூிக்குப் பாரமாகவே இருப்பார்கள் என்று அறிஞர்கள் கூறுவார்கள். நந்தி தேவன் இவ்வளவு காலமும் பூமிக்குப் பாரமாக இருந்தது போதும். இவன் செய்த கொடுமைகளுக்கு இவன் உயிருடன் இருக்கக்கூடாது. இவனை மக்களிடமே ஒப்படையுங்கள். அவர்கள் தண்டனையைக் கொடுக்கட்டும்''என்றான் அரசகேசரி.

''வெங்கடேசரே, தாங்கள் மீண்டு முதலமைச்சராகப் பதவியேற்பதாக இருந்தால், நான் நந்திதேவனைச் சிறையில் அடைக்கின்றேன்'' என்றான் ஏமநாதன்.

''மன்னவனே! நான் முதலமைச்சராகப் பதவியேற்றால் என்னை இரக்கமில்லாதவனென்பார்கள். துரோகி என்பார்கள். நான் அவர்களது வம்சத்திற்குக் கடமைப்பட்டவன். அதனால் நான் முதலமைச்சராகக் கடமை ஏற்றால் என்னை வரலாறு பழிக்கும்'' என்றார் வெங்கடேசர்.

**575. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதின்றேல்
புண்ணென்று உணரப்படும்.**

ஒருவனது கண்ணுக்கு ஆபரணம் கண்ணோட்டம் என்னும் இரக்கமே; இரக்கமில்லாத கண்கள் புண்கள் என்றே கருதப்படும்.

## மரம்

''அன்பு, கருணை, தியாகம், அகிம்சை, தொண்டு முதலியனவே மனிதப் பண்புகளாகும். ஓர் அரசனுக்கு இவை யாவும் இருத்தல் வேண்டும். இவை நெஞ்சில் இல்லாத மனிதன் மனிதத்தன்மை உடையவனாக இருக்க மாட்டான். அப்படியிருக்க இவையில்லாத அரசன் எப்படியிருப்பான். ஓர் அரசன் பிரம்மச் சாரியப்பருவத்தில் அரச குருவின் வீட்டில் தங்கியிருந்து அரசனுக்குரிய பண்புகள் யாவற்றையும் கற்பது வழக்கம். அவற்றைப் படித்தவன் அதன் படி நடக்க வேண்டும். இக் குணங்கள் இயற்கைக் குணங்களாகத் திகழ வேண்டும். அதே குணங்கள் அரச சபையில் அரசனுக்குத் துணையாக இருக்கும். அமைச்சர்களுக்கும் பிரதானிகளுக்கும் இருத்தல் வேண்டும். அப்படியிருந்தால் தான் அரசன் தவறிழைக்கும் போது சுட்டிக் காட்டித் திருத்தலாம். முன்பு

அவையிலிருந்தோரின் சொற்களை அரசன் கேட்காவிட்டாலும் அவர்கள் அரசனது தீய செயல்களுக்குத் துணை போகவில்லை. பின்பு அரசனால் நியமிக்கப்பட்டவர்கள் அரசன் தீமை செய்யாவிட்டாலும் தமது தேவைகளுக்காக அரசனைத் தீமைகள் பலவும் செய்யுமாறு தூண்டிக்கொண்டே இருந்தனர். அதனால் தான் அரசன் விரைவாகப் பதவியிழந்தான். அதானல்தான் வெங்கடேசர் மீண்டும் முதலமைச்சராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இது துரோகமாகாது. ஏனெனில் மக்கள் எல்லோரினதும் ஏகோபித்த விருப்பம் அது. நாட்டு மக்களுக்கு வெங்கடேசர் எந்த வேளையிலும் துரோகஞ் செய்யவில்லை. அதே போல மன்னருக்கும் துரோகஞ் செய்யவில்லை. நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டுமென அவர் விரும்பினால் மீண்டும் முதலமைச்சுப் பதவியை ஏற்றல் வேண்டும். நான் இரக்கமுள்ளவன். அதனால் யாரையும் பழிவாங்க மாட்டேன். பறவைகள், விலங்குகள் கூட இரக்கம் மிக்கனவாக இருக்கின்றன. அவை தமது இயல்பான குணங்களை அனுசரித்து நடக்கின்றன. மனிதன் மட்டுமேன் நல்ல குணங்களை விட்டு விட்டு தீய குணங்களைக் கைக் கொள்ளல் வேண்டும். மனிதன் எந்த உயரிய குணத்தைக் கைக் கொள்ளா விட்டாலும் மனிதநேயம் என்று சொல்லப்படுகின்ற இரக்க குணத்தை மனதில் இருத்தல் வேண்டும். அந்தக் குணமுடையவர்களுக்கு உயர்வு தானாக வந்தடையும். உயிர்களை இணைக்கும் பாலம் இரக்கம் தான். இரக்கப்படும் மனிதன் கடவுளாகிவிடுவான். எனவே இரக்க சிந்தனையுள்ள வெங்கடேசர் மீண்டும் முதலமைச்சராக வேண்டும்'' என்றான் ஏமநாதன்.

''வெங்கடேசர் எதுவும் பேசவில்லை. அவரது மனம் போராடியது. அவரால் முடிவெடுக்க முடியவில்லை. அதனால் ஏமநாதன் சொன்னான் ''வெங்கடேசரே, இரக்கம் கொள்ளவேண்டிய கண்கள் இருந்தும் இரக்கம் கொள்ளாதவர்கள் மண்ணோடு இருக்கும் மரத்தைப் போன்றவர்கள்''.

முதலமைச்சர் சிரித்தார் ''அப்போ நான் மரமா…?''

''மரமாகிவிடாதீர்கள் என்று சொல்கிறேன்''. என்றான் ஏமநாதன்.

''வெங்கடேசரே, நீங்கள் யாவும் அறிந்தவர். நந்திதேவனது தந்தையாரை வழிநடத்தியவர். எமது நாட்டை அந்நியர் கைப்பற்றினால் தான் நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். கைப்பற்றியவன் எமது நாட்டவன். அத்துடன் மக்கள்படும் துன்பங்களைக் கண்டு மனம் இரங்கியமையால் தான் அரசபதவியை ஏற்றுள்ளான். அவன் விரும்பிப் படைசேர்த்துப் போராடி நாட்டைக் கைப்பற்றவில்லை. மக்களும் போர் வீரர்களும் கிளர்ந்தெழுந்து போரிடாமல், இரத்தஞ் சிந்தாமல் தான் நாட்டைப் பிடித்தனர். அரசன் மாறியிருக்கிறானே தவிர மற்றயவை எதுவும் மாறவில்லை. எனவே தாங்கள் முதலமைச்சராகப் பதவியை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.'' என்றான் அரசகேசரி.

''வெங்கடேசர் கேட்டதற்காக நான் நந்திதேவனைப் பாதாளச் சிறையில் அடைக்கிறேன்'' என்றான் ஏமநாதன்.

''வெங்கடேசரால் முடிவெடுக்க முடியவில்லை. அவர் தவிப்பதைக் கண்ட ஏமநாதன் சொன்னான் ''வெங்கடேசரே, தாங்கள் இப்போது தங்களது முடிவைச் சொல்லவேண்டாம். வீட்டுக்குச் சென்று ஆறுதலாக முடிவெடுங்கள். பாரதக் கதையில் கர்னன், கண்ணன், பீஸ்மர், தருமன் முதலியோர் எடுத்த முடிவுகளை நினைத்துப் பாருங்கள். அவர்கள் எடுத்த முடிவுகளால் தான் தர்மம்

நிலைத்தது. கண்ணன் எடுதத்த முடிவுகள் பலவும் பிழையானவை பக்கச்சார்பானவை என்று இன்றும் கூடச் சிலர் வாதாடுகின்றனர். தர்மத்தைக் காக்க உயர்ந்தவர்கள் சில பிடிக்காத முடிவுகளை எடுக்கத்தான் வேண்டும். வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து அந்நடைமுறை வழக்கிலிருக்கிறது. அது புதுமையானதல்ல'' என்றான் ஏமநாதன். அப்பொழுதும் வெங்கடேசர் பதில் கூறாது யோசித்துக் கொண்டிருந்தார்.

**576. மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்.**

இரக்கம் கண்ணோடு பொருந்தி இருந்தும் இரக்கம் கொள்ளாதவர்கள், மண்ணோடு இருக்கும் மரத்தைப் போன்றவர்கள்.

### கண்ணுள்ளவர்கள்

அன்று பருத்திமலையின் முதலமைச்சர் சிவபூரணன் மங்களபுரிக்கு ஏமநாதனின் அழைப்பை ஏற்று வந்திருந்தார். மங்களபுரி முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் விழாக்கோலம் பூண்டிருந்தது. குதிரை வண்டியில் வந்த சிவபூரணனையும் வீரர்களையும் மங்களபுரியின் எல்லையில் வைத்து ஏமநாதனும் முதலமைச்சர் வெங்கடேசரும் சேனாதிபதி அரசகேசரியும் ஆயிரக் கணக்கான மக்களும் வரவேற்று, செங்கம்பளம் வீதியெங்கும் விரித்து அரண்மனைக்கு அழைத்து வந்தனர். வீதியெங்கும் மகரதோரணங்களாலும் மாலைகளாலும் சோடனை செய்யப்பட்டிருந்தது. வீடுகள் தோறும் கும்பம் வைத்து மலர்மாலை சூடி மக்கள் முதலமைச்சரையும் வீரர்களையும் கோலாகலமாக வரவேற்றனர். சந்திகளில் நடன மாதர்கள் கூடிநின்று நடனமாடினர். மேளவாத்தியங்கள் விண்ணதிர ஒலித்தன. ஒவ்வொரு வீடும் திருமண வீடுபோல அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோயில்களில் சிவபூரணன் இறங்கிச் சுவாமியை வணங்கினார். அந்தணர்கள் அவருக்கு நல்லாசிகள் வழங்கும்படி மூலமூர்த்திகளை வேண்டிப் பூசை செய்தனர்.

சுந்தரசேனன் சிவபூரணனிடம் ஏராளமான பொன்னும் மணியும், இரத்தினங்களும் ஏமநாதனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். அவற்றைப் பணியாட்கள் சுமந்து வந்தனர். அரசசபைக்கு முன்னால் ஏராளமான மக்கள் குழுமி நின்று மகிழ்ச்சியாரவாரஞ் செய்து வரவேற்றனர். மதகநாட்டு மன்னனும் சிவபுரி மன்னனும் சிவபூரணனை வரவேற்க மங்களபுரிக்கு வந்திருந்தனர்.

''பருத்திமலை என்ற பேரரசின் மன்னரின் சார்பில் எமது நாட்டிற்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டிருக்கும் முதலமைச்சரே வருக... வருக. தங்களை வரவேற்பதில் மங்களபுரி மன்னான நானும் மக்களும் மகிழ்ச்சியடைகிறோம். காருண்ணியம் மிக்க முதல் அமைச்சரே வருக! வருக! எமது மக்கள் பட்ட வேதனையைக் கண்டு இரக்கம் கொண்டு பல்வேறுபட்ட உதவிகளைச் செய்த மகாபுரிசரே வருக! வருக! தங்களுடனும் தங்கள் நாட்டுடனும் நாம் கொண்ட நட்பு அளப்பரியது'' என்று வாழ்த்திய ஏமநாதன் சிவபூரணனுக்கு மலர்மாலை சூடிக்கௌரவித்தான்.

சிவபூரணன் மங்களபுரியின் அரசசபைக்கு வந்தார். அவரை அழகிய நடன மாதர் நூறு பேர் நடனமாடி வரவேற்று ஆசனத்தில் அமர்த்தினர். நடனமாடினர். வெங்கடேசரும் அரசகேசரியும் அவரை வணங்கி மலர்மாலை சூடிக் கௌரவித்தனர்.

‘‘எமது அரசசபை இன்று பெருமிதம் அடைகிறது. எமது நாட்டு வரலாற்றில் பருத்திமலை அரசரின் தூதுவராக முதலமைச்சர் ஒருவர் வருவது இதுவே முதற்தடைவ. பருத்திமலை அரசர் எமது நாட்டு மக்கள் படும் வேதனையைக் கண்டு இரங்கி அவ்வப்பொழுது பலதரப்பட்ட உதவிகளைச் செய்து வந்தார். எமது நாட்டு மக்கள் பசிக்கொடுமையைத் தாங்க முடியாது பருத்தி மலைக்குச் சென்றபோது அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உணவழித்துத் தொழிலும் கொடுத்து இருப்பிட வசதிகளும் செய்து கொடுத்த பருத்திமலை அரசரின் காருண்ணியத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. எமது நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட போது தானாகவே முன்வந்து உதவிகள் பலவற்றை பருத்திமலை அரசன் செய்யாவிட்டால் எமது மக்களில் பலர் இறந்திருப்பார்கள். இரக்கமில்லாதவர்கள் கண்ணில்லாதவர்கள் என்று சொல்வார்கள். இரக்கமுடையவர்களுக்குத் தான் கண்கள் உள்ளன. பருத்திமலை அரசருக்கு இரண்டு கண்களல்ல ஆயிரம் கண்கள் உள்ளன. அவ்வளவும் இரக்கமுள்ளவை’’ என்றான் ஏமநாதன்.

‘‘பருத்திமலையின் முதலமைச்சரை மங்களபுரியின் முதலமைச்சரான நான் மரியாதையுடனும் மிகுந்த கௌரவத்துடனும் வரவேற்பதில் மகிழ்ச்சி யடைகின்றேன். பருத்திமலையரசரின் இரக்கம் மிகுந்த செயல்களால் தான் இன்று எமது நாட்டில் மழை பொழிந்து குளங்களெல்லாம் நிறைந்து வழிகின்றன. மங்களபுரியின் அரசனான சுந்தரசேனன் இரக்கம் மிக்கவர். குடிமக்களைத் தன் மக்களா மதிப்பதால் தான் அங்கே பருவமழை பொய்க்காமல் பெய்கின்றது. அவரின் கருணையுள்ளம் உதவியதால் தான் இப்பொழுது எமது நாட்டிலும் மழை பெய்கிறது. அதனால் அவருக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். அவர் செய்த சேவைகளை எண்ணி மகிழ்கிறோம். அவர் நோய் நொடியில்லாமல் இன்னும் நூறாண்டு காலம் வாழ்ந்து மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துகிறேன்’’ என்றார் முதலமைச்சர்.

ஒருவாரம் அவர் அங்கு தங்கி நின்றார். அந்த ஒரு வாரத்தையும் மக்கள் பெருவிழாவாகக் கொண்டாடினர்.

**577. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்; கண்ணுடையார்**
**கண்ணோட்டம் இன்மையும் இல்.**

இரக்கமில்லாத மனிதர் கண் இல்லாதவரே ஆவார்; இரக்கமுள்ளவர்களே கண்ணுள்ள மக்களாவர்.

### உரிமையான உலகம்

‘‘குடிமக்களுக்கு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது அரசனது கடமை. இந்த உலகத்தில் தான் சொர்க்கமும் நரகமும் இருக்கின்றன. நமது சமயத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் தான் சொர்க்கமும் நரகமும் நம் கண்களுக்குத் தெரியாத இடத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப் பெரும்பாண்மையான மக்கள் நம்பி ஏற்றுக் கொண்டுள்ளனர். மனிதர்கள் தத்தமது வீடுகளிலேயே இன்பத்தைப் பெறல் வேண்டும். அதற்கு நான் வழிவகுப்பேன். நீங்கள் கடந்த சில வருடங்களாக உங்களது வீட்டிலேயே நரகத்தை அனுபவித்தீர்கள். நரக உலகில் நேரத்திற்கு உணவு கிடையாது. உடைகள் கிடையாது. குடிக்கத் தண்ணீரும் கிடையாது. பசி வயிற்றை அக்கினியைப் போல எரிக்கும். குடும்பத்தினருக்கு உண்ண உணவு கிடைக்க மாட்டாது. கால்நடைகளுக்குத் தீவனம் இராது. எமது கண்முன்னாலேயே

மனைவி, மக்கள், தாய், தந்தையர் நோய்வாய்ப்படுவார். இறப்பர். துன்பங்களைத் தாங்க முடியாது அவதிப்படுவார். இவை தான் நரக உலகில் நடப்பவை. அவை கொடுங்கோலான ஆட்சியிலும் நடைபெறும். நீங்கள் செய்த பாவத்திற்கான தண்டனையை அனுபவித்துவிட்டீர்கள். இனி இன்பந்தான். இப்பொழுது முதல் நீங்கள் இன்பந்தரும் சொர்க்கத்தில் வாழப்போகிறீர்கள். உங்களால் செய்யமுடியாத காரியங்கள் எதுவுமில்லை. என்னால் எதுவும் செய்யமுடியுமென்று நினைப்பவன் மலையைத் தூக்கித் தோளில் வைத்துவிடுவான். அதனால் உற்சாகமாகத் தொழிலைச் செய்யுங்கள். உங்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் நான் செய்வேன்'' என்றான் ஏமநாதன்.

''மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் ''மன்னர் வாழ்க'' என்று கோசமிட்டனர். ஒரு மனிதனின் ஆற்றல் மனதில் தான் உண்டு. நம் நாட்டில் பெரும் பெரும் சாதனைகளைச் செய்த மாவீரர்களை நினைத்துப் பாருங்கள். அவர்களைப் போல என்னாலும் செய்யமுடியுமென்று மனதில் நினையுங்கள். தளராது உழையுங்கள். சொர்க்கம் உங்களுக்கு அருகில் வரும். திடமான மனம் தான் வாழ்க்கையை அமைக்கின்றது. உயர்த்தி வைக்கின்றது. எனவே மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு தொழிலைத் தொடங்குங்கள். வெற்றி யடைவீர்கள்'' என்றான் ஏமநாதன்.

அடுத்துப் பருத்திமலை முதலமைச்சர் சிவபூரணன் மக்கள் மத்தியில் பேசினார் ''உங்கள் அரசர் அருமையான பல கருத்துக்களைச் சொன்னார். அதன்படி நடவுங்கள். எமது நாடு முன்னேறியது மக்களின் அயராத உழைப்பினால் தான். எந்தத் துறையிலும் நம்பிக்கையுடன் உழைத்தால் அத்துறையில் முன்னேறலாம். தமது கடமையாகிய தொழில் கெடாமல் இரக்கமுள்ளவர்களாக இருப்பவர்களுக்குத் தான் இவ்வுலகம் சொந்தமானதாகும். தொழில்களைத் திடமான மனத்துடன் முயன்று செய்யலாம். ஆனால் வெற்றி கிடைக்க வேண்டுமானால் இரக்கமிருத்தல் வேண்டும். இரும்பு போன்ற பலமுள்ள பாறையை உடைத்தால் மிகவும் நல்ல நீரைப் பெறலாம். அதுபோலப் பலமுள்ள மனதில் இரக்கம் இருத்தல் வேண்டும். பருத்திமலை அரசர் இரக்கமுள்ளவராக இருந்தமையால் தான் நீங்கள் வாழ்ந்தீர்கள். அவருடைய இரும்பு மனம் இழகாவிட்டால் நீங்கள் எல்லோரும் பட்டினியால் இறந்திருப்பீர்கள். நந்திதேவனது மனம் இரங்காமல் இருந்ததால் தான் நாட்டில் மழை பெய்யவில்லை. பஞ்சமும் பசியும் தலைவிரித்தாடியது. அதனால் நந்திதேவனுக்கு இந்த உலகில் உரிமையில்லாமல் போய்விட்டது. தனது கடமையாகிய தொழில் கெடாமல் இரக்கமுள்ளவர்களாக இருப்பவர்களுக்குத் தான் உலகம் சொந்தமானது என்பதை நீங்கள் ஏமநாதன் மூலம் அறிந்து கொண்டீர்கள்'' என்றார் சிவபூரணன்.

மக்களின் முகங்களில் என்றுமில்லாதவாறு மகிழ்ச்சி தாண்டவமாடியது ''மன்னர் இரக்கம் மிக்கவர் என்பதை அவரது வார்த்தைகள் புலப்படுத்துகின்றன. அவர் வணிகராக இருந்த காலத்திலும் இரக்கம் மிக்கவராக இருந்தமையால் தான் தனது கப்பல்களில் பொருட்களை ஏற்றி வந்து இரகசியமாக மக்களுக்குக் கொடுத்தவர். மன்னனது மனதில் நிரம்பியிருந்த இரக்கம் தான் இந்த நாட்டு மக்களை வாழ வைத்தது. இரக்கமுள்ள மனதில் தான் கடவுள் வாழ்வார். தங்கத்தாலான அரண்மனை கட்டி, தங்கத்தால் சிம்மாசனமிட்டு ஒருவன் இருந்தாலும் அவன் இரக்கமில்லாதவனாக இருந்தால் அவன் மகிழ்ச்சியாக இருக்க மாட்டான். எந்நேரமும் துன்பப்பட்டுக் கொண்டே இருந்து தங்கக்

கோட்டையையும் தங்கச் சிம்மாசனத்தையும் இழந்துவிடுவான். எமது மன்னரது மனம் தங்கம். அதனால் நீங்கள் மகிழ்வுடன் வாழ்வீர்கள்'' என்றார் அரசகேசரி. மக்கள், மனம் மகிழ்ந்து கோசமெழுப்பினர்.

**578. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை உடைத்துஇவ் வுலகு.**

தம் தம் கடமையாகிய தொழில் கெடாமல் இரக்கம் உடையவராக இருக்கவல்லவர்களுக்கே, இந்த உலகம் உரிமை உடையது.

## சிறந்த குணம்.

அன்று அரசசபை கூடியபோது நந்திதேவன் தமக்குச் செய்த தீமைகளைப் போர் வீரர்களும் பிரதானிகளும் மக்களும் முறையிட வந்திருந்தனர். நந்திதேவனின் இளையராணி போர்வீரர்களைப் போல மாறுவேடம்பூண்டு தப்பிச் சென்றுவிட்டாள். அவள் செல்லும் பொழுது ஆபரணசாலையில் இருந்த விலையுயர்ந்த ஆபரணங்களை மூட்டையாகக் கட்டிக் கொண்டு போய்விட்டாள். அவளைக் கைது செய்வதற்காக மங்களபுரி வீரர்கள் நாடுமுழுவதும் தேடிக் கொண்டிருந்தனர்.

''அரசே! இளையராணி நாட்டைவிட்டு வெளியே செல்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. அவளால் பருத்திமலைப் பக்கம் செல்லமுடியாது. சிவபுரிக்கு அல்லது மகதநாட்டிற்குத் தான் செல்லவேண்டும். இரண்டு நாடுகளிலும் எல்லைப்புறங்கள் மூடிடப்பட்டதால் அவளால் அங்கு சென்றிருக்க முடியாது. மங்களபுரிக்குள் தான் எங்கோ ஒளித்திருக்கிறாள். படைவீரர்கள் எப்படியும் இரண்டு மூன்று நாட்களில் அவளைக் கைது செய்வார்கள்'' என்றார் சேனாதிபதி அரசகேசரி.

ஏமநாதன் முதலில் ஒரு வணிகனை அழைத்தான் '' அரசே! நான் ஒரு வணிகனென்பது தங்களுக்குத் தெரியும். எனது குணத்தைப்பற்றியும் நன்கு தெரியும். போர் வீரரைக் கள்வர் கூட்டமாக்கி நந்திதேவன் எனது சொத்துக்களையெல்லாம் கொள்ளையடிக்கப் பண்ணிவிட்டான். கோடீஸ்வரனாக இருந்த நான் தற்பொழுது சாப்பாட்டிற்கே கஷ்டப்படுகிறேன்'' என்றான்.

அடுத்து ஒரு வயோதிபர் வந்து சொன்னார் ''அரசே! எனது மகன் வைத்தியன். ஒரு நாள் மூவர் வந்து அரசருக்கு நோய் வந்துள்ளதென்றும் வந்து பார்த்து மருந்து கொடுக்குமாறும் கூறி அவனை அழைத்துச் சென்றனர். ஆறு மாதங்கள் கடந்தும் அவன் வீடு வந்து சேரவில்லை. அரசரைக் கேட்டால் தாம் அப்படி யாரையும் அனுப்பவில்லையென்று கூறுகிறார். விரைவில் தேடித் தருகிறேன் என்றும் சொன்னார். ஆனால் இன்றுவரை அவர் தேடித்தரவில்லை'' அழுதார்.

அடுத்து இன்னொருவர் வந்தார் வரும் போதே அவர் விம்மி விம்மி அழுதபடி வந்தார். அவரால் கதைக்க முடியவில்லை. அதனால் அவர் விக்கி விக்கிச் சொன்னார் ''அரசே எனது மகள் நல்ல அழகி. அவளின் அழகில் மயங்கிய பலர் அவளைத் திருமணஞ் செய்ய விரும்பினர். நான் அவளை விரும்பிய ஒருவனுக்கு திருமணஞ் செய்து கொடுக்கத் தீர்மானித்து

திருமணத்திற்கான நாளையும் குறித்தேன். ஒருநாள் சிவன் கோயிலுக்கு அவள் சென்ற போது கதிர்வேலவன் கண்டுவிட்டான். அன்று பிடித்தது நாசம். அவன் அடிக்கடி வீட்டுக்கு வரத் தொடங்கினான். அதனால் எனது மகளை எனது சகோதரனின் வீட்டில் கொண்டு சென்று விட்டேன். அவன் அங்கு சென்று அவளைக் கடத்திக் கொண்டு போய்விட்டான். இன்றுவரை அவளைப் பற்றிய செய்தி எதையும் எம்மால் அறியமுடியவில்லை''. அழுதார்.

அடுத்து ஐந்து குடிமக்கள் ஒன்றாக வந்தனர். ஒருவன் சொன்னான் ‘‘அரசே! நாங்கள் ஐந்துபோர் ஒன்றாக வந்துள்ளோம். ஐந்து பேரின் பிள்ளைகளும் நண்பர்கள். இளைஞர்களாகையால் துடிதுடிப்புடன் இருந்தனர். ஒருநாள் நந்திதேவனது நண்பனான மணிமாறன் மக்களைத் துன்புறுத்தியபோது ஐந்து பேரும் அவனுடன் வாக்குவாதப்பட்டனர். வாக்குவாதம் கைகலப்பில் முடிந்தது. அன்று இரவு வீட்டிற்கு வந்த இனந்தெரியாதோர் ஐந்துபேரையும் கடத்திச் சென்றுவிட்டனர். இது நடந்து ஆறு மாதங்கள் கடந்து விட்டன. தயவு செய்து எமது பிள்ளைகளைத் தேடித் தாருங்கள்'' என்றான்.

ஏமநாதனுக்குத் துக்கமாக இருந்தது ‘‘நாட்டில் எவ்வளவு தீமைகள் நடைபெற்றிருக்கின்றன. வந்திருக்கும் மக்கள் கூட்டத்தைப் பார்த்தால் இன்னும் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும் போலத் தெரிகின்றது'' என்று நினைத்தான் ஏமநாதன்.

‘‘முதலமைச்சரே, தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்தவர்களிடத்திலும் இரக்கம் காட்டி அக்குற்றத்தையும் பொறுத்துக் கொள்வது சிறந்த குணம். எனவேநந்திதேவனை மன்னியுங்கள்'' என்றீர்கள். நான்கு பேர் கூறியவற்றையே என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. கூடி நிற்கும் ஆயிரக் கணக்கான மக்கள் இன்னும் என்னென்ன கொடுமைகளைச் சொல்லப் போகின்றார்களோ'' என்றான் ஏமநாதன்.

‘‘இதை விடப் பெரும் பெருங் கொடுமைகள் பல இருக்கின்றன'' என்று நினைத்தார் வெங்கடேசர்.

‘‘தண்டனைக்குரிய ஓரிரு குற்றங்களைச் செய்தவனை இரக்கம் காட்டி மன்னிப்பது இரக்கமுள்ளவனின் பண்பு என்பதை ஒத்துக் கொள்கிறேன். நந்திதேவனும் அவனது கூட்டத்தினரும் எவ்வளவு கொடுமைகளை மக்களுக்குச் செய்திருக்கிறார்கள். அவர்களை எப்படி மன்னிப்பது?'' என்று கேட்டான் ஏமநாதன்.

**579. ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்**
**பொறுத்து ஆற்றும் பண்பே தலை.**

தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்தவர்கள் மீதும் இரக்கம் காட்டி, அக் குற்றத்தைப் பொறுத்துக் கொள்வது சிறந்த பண்பாகும்.

**நாகரிகம்**

முதலமைச்சர் வெங்கடேசர் மகிழ்வுடன் நந்தவனத்தில் இருந்தார். மெல்லிய நறுமணம் நிறைந்த தென்றற் காற்று அவரது உடலை வருடிக் கொண்டே இருந்தது. அரண்மனைக்குரிய நந்தவனம் அது. முன்பு நந்திதேவன் முக்கியமான முடிவுகளையெடுப்பதனால், முக்கியமானவர்களை அங்கு தான் அழைத்துச் சொல்வான். கடந்த பல மாதங்களாக அங்கு அவர் வரவில்லை. நந்தவனத்தில் பலவகையான மலர்கள் மலர்ந்து காற்றில் அசைந்தன் ‘‘இந்த மலர்களுக்குள்ள அழகும் நறுமணமும் உலகில் வேறெதற்கும் இல்லை’’ என்று நினைத்தவாறு மெல்லக் கண்மூடினார். இதமான காற்று, மனதை மீட்டும் நறுமணம். சிலகணங்கள் கண்களை மூடி அவற்றை அனுபவித்தார். அருகில் யரோ வரும் காலடியோசை கேட்டது. மெல்லக் கண் வழித்தார். எதிரே அரசகேசரியார் நின்றார். மகிழ்வான மெல்லிய முறுவலொன்று அரசகேசரியின் உதடுகளில் பிறந்து அசைந்தது.

‘‘நண்பரே, நிம்மதியாகவும் மிகவும் மகிழ்ச்சியாகவும், உல்லாசமாகவும் இருக்கிறீர்கள் போலத் தோன்றுகின்றது. அதற்குக் காரணம் யாது? அரசர் தான் பேசவேண்டியவற்றை முன்பே உமக்குத் தெரிவித்து விட்டாரோ….?’’ என்று கேட்டார் அரசகேசரி.

முழுமையான புன்னகையைத் தவழ விட்ட வெங்கடேசர் சொன்னார் ‘‘பலவருடங்களுக்குப் பின்பு மகிழ்ச்சியாக இருக்கின்றேன். அரசன் நல்லவனாக இருந்ததால் மகிழ்வுக்குக் குறைவிராது. அரசர் எதையுஞ் சொல்லவில்லை. அமைச்சரே உமது உயிர் நண்பர் நந்தவனத்திற்கு வருவார். அவருடன் கதைத்துக் கொண்டிரும். சில முக்கியமான முடிகள் எடுக்கவேண்டியுள்ளது. நான் வருகிறேன்’’ என்றார். இங்கே முடிவு என்று பிரச்சினைப்பட்டு, சினந்து ஆராயாது முடிவெடுக்கப்படுவதில்லையே. அப்படியான நிலையிருந்தால் தான் கவலை கொள்ளல் வேண்டும்’’ என்றார் வெங்கடேசர்.

‘‘ எவ்வளவு காலத்திற்குப் பிறகு நாம் நல்லதொரு சூழ்நிலையில் சந்திக்கிறோம். உயிர் நண்பர்களான நாம் சந்தித்துக் கதைத்தால் நந்திசேனன் சந்தேகப்படுவான். தனக்கெதிராகச் சதி செய்கிறோம் என நினைப்பான். மக்கள் அவனைப்பற்றிக் கேவலாமாகக் கதைப்பதை நன்மை கருதிச் சொன்னால் அதை நம்பாது, நாம் தான் தன்னைப் பற்றிக் கதைகட்டி யாரோ கதைப்பதைப் போலக் கூறுகிறோம் எனச் சொல்வான். தீமைக்கு அஞ்சாதவர்கள் மானம் மரியாதையைப் பற்றிச் சிந்திக்க மாட்டாதவர்கள், மானத்திற்கு அஞ்சுவோர் தீயவற்றைக் கதைப்பதாகக் கேள்விப்பட்டால் உயிரை விட்டுவிடுவார்கள். நமது அரசர் மிகவும் நல்லவர், நம்பிக்கைக்குரியவர் இரக்கமுள்ளவர் எல்லோரும் மதிக்கின்ற நாகரிகமான கண்ணோட்டத்தை உடையவர். தம்முடன் நன்கு பழகியவர்கள் தம் கண்ணெதிரே நஞ்சினை இட்டுக் கொடுத்தாலும் அதை மகிழ்வுடன் பெற்று உண்ணக்கூடியவர். அப்படியான உத்தமரின் கீழ்ப் பணிபுரியும் எமக்கென்ன துன்பம்’’ என்றான் அரசகேசரி.

‘‘நேற்றிரவு மாறுவேடத்தில் நகர் வலம் வந்த மன்னர் எனது வீட்டுக்கு வந்தார். வியாபாரி போல வேடமிட்டு வந்த அவரை என்னால் அடையாளங் காணமுடியவில்லை. அவரை ஆசனத்தில் அமர்த்திக் கதைத்தேன். விலையுயர்ந்த பல நவரத்தின மாலைகளைக் காட்டி அவற்றை அரசர் வாங்குவாரா எனக்கேட்டார். நான் காலையில் அரண்மனைக்கு வாருங்கள்.இன்று இரவு இங்கே தங்குங்கள்’’ என்றேன்.

“வணிகர் சிரித்தார். பின் “ஏன் கள்வர்கள் அதிகமாக இங்கு இருக்கிறார்களா…? வணிகன் ஒருவன் முதலமைச்சரின் வீட்டில் தங்குவது அழகல்ல” என்றார்.

“ஐயையோ எமது நாட்டில் திருடர்களே இல்லை. மன்னனின் நீதியான ஆட்சி திருடர்களை ஒழித்து விட்டது. நீங்கள் வழி தெருவெங்கும் பயப்படாமல் தங்கலாம்”. என்றேன். வணிகர் தனது வேஷத்தைக் கலைத்தபோது தான் மன்னர் எனப்புரிந்து கொண்டேன்.

“வீட்டுக்கு வந்தவர்களுக்கு குடிப்பதற்கு ஏதாவது கொடுப்பதில்லையா..? நான் களைத்து விட்டேன்” என்றார்.

“நான் கொடுத்த பானத்தை வாங்கிக் குடித்தார். நந்திசேனனென்றால் அப்படிக் குடிப்பானா..?” என்று கேட்டார் வெங்கடேசர்.

அரசகேசரி சிரித்தார் “நண்பரே நம்பிக்கை வேண்டும். மக்களில் பலர் தமக்கு மருந்து மாயம் செய்துவிடுவார்களெனப் பயந்து கொடுத்த பானத்தை முதலில் நிலத்தில் ஊற்றிவிட்டுத் தான் குடிப்பார்கள். எல்லோரையும் மதித்து நடக்கும் இரக்கம் மிக்கவர்கள் தன்னுடன் அன்பாகப் பழகும் ஒருவர் தன் கண்ணெதிரே நஞ்சைக் கொடுத்தாலும் வாங்கிக் உண்பார்கள். அது அவர்களது பண்பு. பண்பு மிகுந்த அரசன் உமது வீட்டில் பானத்தைக் குடிக்காமல் சென்றிருந்தால் தான் அது ஆய்வுக்குரியது” என்றார் அரசகேசரி.

**580. பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.**

எல்லோராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புபவர், தன்னுடன் நெருங்கிப் பழகியவர் தமக்கு நஞ்சு இட்டுக் கொடுத்தாலும் அதை வாங்கி உண்பர்.